மஹாகவி காளிதாஸரின்

# அபிக்ஞான சாகுந்தலம்

## நாடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# अभिज्ञानशाकुन्तलम् ।

மஹாகவி காளிதாஸரின்

# அபிக்ஞான சாகுந்தலம்

**நாடகம்**

சம்ஸ்கிருத மூலம்

தமிழ் மொழிபெயர்புடன் கூடியது

பதிப்பாசிரியர் :

**பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்**

சிரேஷ்ட விரிவுரையாளர், சம்ஸ்கிருதத்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**வெளியீடு**

ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்

முன்னேஸ்வரம்

சிலாபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாகவி காளிதாஸரின் அபிக்ஞான சாகுந்தலம் / பதிப்பாசிரியர் : பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் / முதற்பதிப்பு : 2019 / வெளியீடு : ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவாஸ்தானம், முன்னேஸ்வரம், சிலாபம். / பக்கம் : viii + 247 / தாள் : 70கி. / பிரதிகள் : 300 / அச்சு : குரு பிறிண்டேர்ஸ் 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

ISBN : 978 - 955 - 0877 - 51 -5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## I

சம்ஸ்கிருத இலக்கிய மரபில் நாடக இலக்கியம் த்ருஷ்ய காவியம்; எனச் சிறப்புப் பெறுகின்றது. "த்ருஷ்ய காவியம்" எனப்படும் நாடகம் பத்துவிதமான பிரிவுகளையுடையது. அவை பற்றி நாடகவியல் நூலான தனஞ்ஜயனின் தசரூபகம் விரிவுபடக் கூறுகின்றது. மஹாகவி காளிதாஸரது சம்ஸ்கிருத இலக்கிய ஆளுமைகளுள் சிறந்து விளங்குவது "அபிஞ்ஞான சாகுந்தலம்" எனும் நாடகமாகும். சம்ஸ்கிருத இலக்கியச் சிறப்பினை மேற்குலக நாட்டவர்கள் வியந்து நோக்குவதற்குரிய இலக்கிய வகைகளுள் இந்நாடகத்தின் இலக்கியச் செழுமையே சிகரமாய் அமைந்தது. இந்நாடகத்தின் மூலத்துடன் தமிழ்மொழிபெயர்ப்பினையும் ஒன்றிணைத்த வடிவமுடையதே இந்நூலாகும்.

## II

சம்ஸ்கிருத இலக்கிய மரபில் செம்மொழி சம்ஸ்கிருத இலக்கியத்திற்குச் சிகரமாய் விளங்கும் சிறப்புடையவர் மஹாகவி காளிதாஸன் ஆவார். இவரது படைப்புக்கள் உவமைச் சிறப்புடையவை; கவிநயம் மிக்கவை; உயர்ந்த ஆளுமை மிக்க மொழி நடையுடையவை. சிறந்த கருத்தாழம் உடையவை; இத்தகைய சிறப்புடைய காளிதாஸரது நாடக ஆக்கங்கள் மூன்றாகும். அவற்றுள் ஒன்றே அபிக்ஞான சாகுந்தலம் எனும் நாடகமாகும். இந்நாடகம் ஏழு அங்கங்களைக் கொண்டது.

இந்நாடகத்தின் கதாபாத்திரத்தில் கதாநாயகன் துஷ்யந்த மன்னனும் கதாநாயகி சகுந்தலையுமா கதாநாயகன் துஷ்யந்தன் புரூவம் சத்தில் சுமதியின் மகன் ஆவான். சகுந்தலை விஸ்வாமித்ர முனிவருக்கும் மேனகைக்கும் பிறந்தவளாவாள். தாய் மேனகை கண்வாச் சிரமத்தின் அருகில் விட்டுச் சென்றதால் அக்குழந்தையை சகுந்தலைப் பறவைகள் பாதுகாத்து வந்தன. அதனால் அப்பெண் குழந்தை சகுந்தலை என அழைக்கப்பட்டாள். துஷ்யந்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலையின் குழந்தைக்கு மரீசிமுனிவர் "சர்வதமனன்" எனப் பெயரிட்டார். இவனே "பரதன்" என நாட்டையாண்டு வந்தான். இதன் காரணமாகவே இந்தியதேசம் "பாரத வர்ஷம்" என்றும் "பரத கண்டம்" என்றும் பெயர் பெற்றது சந்திர வம்சத்தவர்களான இவரது வழித்தோன்றலே பாண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கதையின் மூலங்கள் மஹா பாரத்திலும் பத்ம பராணத் திலும் இடம் பெறுகின்றன.

## III

இந்நாடகத்தில் ஆண், பெண் ஆகிய இருபாலகர்களும் பாத்தி ரங்களாக விளங்கும் அதேவேளை அரசர்களும், ஆச்சிரமவாசிகள் ஆகியோரும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இவர்களைவிட தேவருலகைச் சேர்ந்த பாத்திரங்களும் இடம் பெறுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

பாத்திரங்களின் மொழிநடை தனித்துவமுடையதாக பின் பற்றப்படுகின்றமை இந்நாடகத்திற்கான தனித்துவமாகும்.

மேடை நாடகம் எனும் தன்மையிலும் காட்சிகளுக்கு ஏற்ற வகையில் நிகழ்வுகள் அமைந்து விளங்குவது இந்நாடகத்திற்கான தனித்துவம் மிக்க சிறப்பாக அமைகின்றன.

## IV

இந்நாடகம் சிருஸ்கார ரஸத்தை பிரதானமாகக் கொண்டது. அதேவேளை ஒவ்வொரு யாத்திரங்களின் பாத்திரச்சுபை, பேச்சுத் திறன், காட்சிகளின் ஒழுங்கமைப்பு என்பன இந்நாடகத்தின் காதற் சுவையின் பரந்த பரிணாமத்தை தெளிவுபடுத்தும் தன்மைய தாகின்றன.

## V

அபிக்ஞான சகுந்தலம் எனும் நாடகம் சம்ஸ்கிருதத்தில் பல்வேறு உரைகளைக் கொண்டு விளங்குகின்றன. அவற்றுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகவதத்தரின் உரை சிறப்புடையது. ஆங்கிலத்தில் பலரும் பல்வேறு விதமான மொழி பெயர்ப்புக்களை எழுதியுள்ளனர். அவற்றுள் மூல நூலுடன் வெளிவந்தனவும், தனியாக வெளிவந்த னவுமுள்ளன. இந்நாடகத்திற்கான மூலம் பல்வேறு விதமான பாட பேதங்களைக் கொண்டு விளங்குது சுட்டிக் காட்டத்தக்கது.

இந்நாடகத்திற்கான தமிழ்மொழி பெயர்ப்புக்களும் பல எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் சுவாமி சுத்தானந்தபாரதியார் *(1939)* C.S சச்சிதானந்த தீக்ஷிதர் *(1949)* க. சந்தானம் *(1953)* நவாலியூர் சோ. நடராஜன் *(1962)*, மறைமலையடிகள் *(1963)* ஆகி யோருடையவை சுட்டிக்காட்டத்தக்கன.

இலங்கையில் சம்ஸ்கிருத இலக்கிய வடிவங்களை காலத்திற்கு காலம் பல்வேறு அறிஞர்கள் தமிழ் மொழிக்கு மொழிபெயர்ந்து வந் துள்ளனர். அவற்றுள் **அபிக்ஞான சாகுந்தலம்** எனும் நாடகத்தை தமிழில் நவாலியூர் சோ. நடரஜன் **சாகுந்தலம்** என மொழி பெயர்ந்துள்ளார். அதனை விட சம்பந்தன் **சாகுந்தல காவியம்** *(1987)* என புதிய இலக்கிய வடிவம் ஒன்றைப் படைத் துள்ளார்.

## VI

அபிக்ஞானசாகுந்தலம் நாடகம் எனும் இந்நூல் சம்ஸ்கிருத இலக்கிய மூலத்தையும் அதற்கு ஏற்ப ஒரே பார்வையில் தமிழ் மொழி பெயர்ப்பு வடிவத்தையும் தருவதற்கு முயற்சிப்பதாக அமைந் துள்ளது. நவாலியூர் சோ. நடராஜன் அவர்களது மொழிப் பெயர்ப்பைத் தழுவியிருந்தாலும் மூல நூலின் பாட பேதங்களும் மொழிபெயர்ப்புப் பல இடங்களில் மாறுபாடுகளையும் மாற்றங் களையும் கொண்டமைந்துள்ளன. அவ்விதம் இல்லாது ஏற்புடைய தன்மையில் மூலநூல் வடிவத்தை தமிழில் பொருளுணரும் தன்மையில் வெளிப்படுத்தமுற்படுகின்றது. அவ்வகையில் இந் நூலுக்கான மூல நூலாக C.R Devadhar அவர்களது பதிப்பினை அடிப்படையாகக் கொண்டு அம்மூலத்தை அவ்விதமே கொள் வதோடு அதற்கான தமிழ் மொழிபெயர்ப்பும் இடம் பெறுவதாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VII

மொழிபெயர்ப்பு எனும் நிலையில் மூலநூலில் உள்ள அனைத்து விடயங்களையும் மொழி பெயர்ப்பில் வெளிக்கொணர முடியாது. எனினும் ஓர் அம்சமாக பொருளை வெளிப்படுத்த முனைவதே இம்மொழிபெயர்ப்பு முயற்சியாகும்.

## VII

இந்நூலில் உருவாக்கத்தின் போது பலரும் உதவினர். அவர் களுள் அச்சுப்பிழையினைப் பார்த்து உதவியவர்களுள் செல்வி. அ. திவ்யகலா அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

இந்நூலை பல்வேறு சிரமங்களுடன் கணணிவடிவ அமைப்பில் வெளிக்கொணர்ந்த குரு பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினர்க்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

சம்ஸ்கிருத நாடகத்ததை தமிழில் கற்கவிளையும் மாணவர் களுக்கும் ஆர்வலர்களுக்குமான ஓர் முதன் முயற்சிப்படைப்பில் ஏற்படத்தக்க குறைகளை அறிஞர் உலகத்தினரிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். அவை தொடர்ந்து வரும் ஏனைய மொழி பெயர்ப்புக்களிலும் பதிப்புக்களிலும் சீர்செய்யப்படும்.

இந்நூலை முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்ன நாத சுவாமியின் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றேன்.

**ச.பத்மநாபன்**

பிரதமகுருவும் தர்மகர்த்தாவும்
ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்
08.03.2019.

சிரேஷ்ட விரிவுரையாளர்,
சம்ஸ்கிருத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடக பாத்திரங்கள்

## (நாடக மாந்தர்)

## ஆண்பாலார்

துஷ்யந்தன் - அத்தினாபுரி மன்னன்
மாடவியன் - விதூஷகன்
சர்வதமனன் (பரதன்) - மன்னவன் மகன்
சோமராதன் - மன்னனுடைய பரோகிதன்
சூதன் - தேர்ப்பாகன்
வாதாயணன் - கஞ்சுகி.
இரைவதன் - வாயில்காப்போன்
வைதாளிகர் - பாணரிருவர்
சியாளன் - ஊர் காவற்றலைவன்
சூசகன், ஜானுகன் - இரு ஊர்காவலர்
கரபகன் - மன்னனின் தாயார் (கோப்பெருந்தேவி)
மாதலி - இந்திரனுடைய தேர்ப்பாகன்
காசிபர் (கண்ணுவர்) - சகுந்தலையின் வளர்ப்புத் தந்தை குலபதி)
சார்ங்கரவன் - காசிபர் சீடர்
சாரத்துவதன் - காசிபர் சீடர்
கௌதமன் - சீடன்
நாரதன் - சீடன்
சீடன் - சீடன்
மாரீசன் - தேவரிஷி
காலவன் - மாரிசருடைய சீடன்
சூத்திரதாரன் - நாடகத் தயாரிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்பாலார்

| | | |
|---|---|---|
| சகுந்தலை | - | விஸ்வாமித்திரர்க்கும் மேனகைக்கும் பிறந்தவள். காசிப குலபதியின் வளர்ப்புப்பிள்ளை |
| அனசூயை | - | அவளுடைய தோழி |
| ப்ரியம்வதை | - | அவளுடைய தோழி |
| கௌதமி | - | காசிபராச்சிரமத்து தவ மூதாட்டி. |
| பாமிருதிகை | - | துஷ்யந்த மன்னனின் சோலைக் காவலர் |
| மதுசரிகை | - | துஷ்யந்தன் மன்னனின் சோலைக் காவலர் |
| சதுரிகை | - | மன்னவன் தாதி. |
| யவனீ | - | மன்னவன் காட்டுக் காவலர் |
| பிரதிகாரி | - | மன்னவன் வாயிற் காவல் |
| அதிதி | - | மரீசியின் மனைவி |
| நடி | - | சூத்திரதாரன் மனைவி |

நாடகத்தில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் : துருவாசர், இந்திரன், சயந்தன், கௌசிகன், மேனகை, நாரதர், மித்திரவசு, பிசுனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

अथ

# अभिज्ञानशाकुन्तलम् ।

# அபிக்ஞான சாகுந்தலம்

## நாடகம்

சம்ஸ்கிருத மூலம்

தமிழ் மொழி பெயர்ப்புடன் கூடியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

अथ

# अभिज्ञानशाकुन्तलम् ।

या सृष्टिः स्रष्टुराद्या वहति विधिहुतं या हविर्या च होत्री
ये द्वे कालं विधत्तः श्रुतिविषयगुणा या स्थिता व्याप्य विश्वम् ।
यामाहुः सर्वबीजप्रकृतिरिति यया प्राणिनः प्राणवन्तः
प्रत्यक्षाभिः प्रपन्नस्तनुभिरवतु वस्ताभिरष्टाभिरीशः ॥ १ ॥

( नान्द्यन्ते )

सूत्रधारः—( नेपथ्याभिमुखमवलोक्य । ) आर्ये, यदि नेपथ्यविधान-मवसितम् , इतस्तावदागम्यताम् ।

( प्रविश्य )

नटी—अज्जउत्त, इयं म्हि । आणवेदु अज्जो को णिओओ अणुचिट्ठीअदु त्ति । आर्यपुत्र, इयमस्मि । आज्ञापयत्वार्यः को नियोगोऽनुष्ठीयतामिति ।

सूत्रधारः—आर्ये, अभिरूपभूयिष्ठा परिषदियम् । अद्य खलु कालिदासग्रथितवस्तुना नवेनाभिज्ञानशाकुन्तलाख्येन नाटकेनोपस्थातव्यमस्माभिः । तत्प्रतिपात्रमाधीयतां यत्नः ।

नटी—सुविहिदप्पओअदाए अज्जस्स ण किं पि परिहाइस्सदि ।
सुविहितप्रयोगतयार्यस्य न किमपि परिहास्यते ।

सूत्रधारः—आर्ये, कथयामि ते भूतार्थम् ।

आ परितोषाद्विदुषां न साधु मन्ये प्रयोगविज्ञानम् ।
बलवदपि शिक्षितानामात्मन्यप्रत्ययं चेतः ॥ २ ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிக்ஞான சாகுந்தலம்

1.1 படைக்குங் கடவுளின் முதற் படைப்பாகிய நீர், விதிப்படி செய்த வேள்வியிற் சொரிந்த அவிப்பாகத்தைத் தாங்குந் தீ, அவ்வேள் வியைச் செய்யும் இயமானன், காலத்தை ஆக்கும் இருசுடர், செவிப் புலனுக்கு விடயமாகும் ஒலிக்கு நிலைகளானாய் விசுவமெங்கும் நீக்க மற நிறைந்திருக்கும். ஆகாயம், எல்லா வித்துக்கும் உற்பத்தித்தான மென்று புலவோர் புகழும் பூமி உயிருக்கு உயிர்ப்பாயிருக்கும் பிராணன் என்ற எண்வகை வடிவங்களுடன் விளங்கும் இறைவன் உங்களைக் காக்க.

*(வாழ்த்துரை முடிவில்)*

சூத்திரதாரன் : (கோலமண்டபத்தைப் பார்த்து) அம்மணி! ஒப்பனை முடிந்தால் இங்கே சற்று வாருங்கள்.

நடிகை : ஐயனே! இதோ வந்தேன். என்ன செய்யவேண்டும், சொல்லுங்கள் ஐயா.

சூத்திரதாரன் : நங்காய்! கல்வியால் நிரம்பியவர்கள் கூடியது இச்சபை. இன்று காளிதாசன் இயற்றிய அபிஞான சாகுந்தலம் என்ற புதிய நாடகத்தை நடத்த வேண்டும். ஆதலால் நடிகர் ஒவ்வொருவரைப் பற்றியுங் கவனஞ் செலுத்துவாயாக.

நடிகை : எல்லா நடிப்புகளுக்கும் நீங்களே நல்ல ஏற்பாடு களைச் செய்து விட்டீர்கள் இனி என்ன குறையிருக் கப்போகிறது.

சூத்திரதாரன் : இருந்தாலும் அம்மணி, ஒரு உண்மையைச் செல்கிறேன் கேள்.

1.2 அறிவாளிகள் நல்லதெனக் கூறவேண்டும். அதுவரை என் நாடக ஞானத்தைச் சிறந்தெனெக்கருத மாட்டேன். எவ்வளவு சிறந்த தேர்ச் சியுடையவர்களானாலும் தம்மில் மனத்தளர்ச்சியடைவது உலக இயற்கையல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

नटी—अज्ज, एवं णेदम्। अणन्तरकरणिज्जं दाव अज्जो आण-वेदु। आर्य, एवमेतत्। अनन्तरकरणीयं तावदार्य आज्ञापयतु।

सूत्रधारः—किमन्यदस्याः परिषदः श्रुतिप्रसादनतः। तदिममेव तावदचिरप्रवृत्तमुपभोगक्षमं ग्रीष्मसमयमधिकृत्य गीयताम्। संप्रति हि

सुभगसलिलावगाहाः पाटलसंसर्गसुरभिवनवाताः।
प्रच्छायसुलभनिद्रा दिवसाः परिणामरमणीयाः॥ ३॥

नटी—तह। तथा। (इति गायति।)

ईसीसिचुम्बिआइं भमरेहिं सुउमारकेसरसिहाइं।
ओदंसयन्ति दअमाणा पमदाओ सिरीसकुसुमाइं॥ ४॥

इषदीषच्चुम्बितानि भ्रमरैः सुकुमारकेसरशिखानि।
अवतंसयन्ति दयमानाः प्रमदाः शिरीषकुसुमानि॥ ४॥

सूत्रधारः—आर्ये, साधु गीतम्। अहो रागबद्धचित्तवृत्ति-रालिखित इव सर्वतो रङ्गः। तदिदानीं कतमत्प्रकरणमाश्रि-त्यैनमाराधयामः।

नटी—णं अज्जमिस्सेहिं पढमं एव्व आणत्तं अहिण्णाणसउन्दलं णाम अपुव्वं णाडअं पओएण अधिकरीअदुत्ति। नन्वार्यमिश्रैः प्रथममेवाज्ञप्तमभिज्ञानशाकुन्तलं नामापूर्वं नाटकं प्रयोगेणाधिक्रियतामिति।

सूत्रधारः—आर्ये, सम्यगनुबोधितोऽस्मि। अस्मिन्क्षणे विस्मृतं खलु मया। कुतः।

तवास्मि गीतरागेण हारिणा प्रसभं हृतः।
एष राजेव दुष्यन्तः सारङ्गेणातिरंहसा॥ ५॥

(निष्क्रान्तौ।)

इति प्रस्तावना।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிகை : அப்படியா? சரி இனி என்ன ஆக வேண்டும்; கட்டளையிடுங்கள்.

சூத்திரதாரன் : வேறென்ன ஆகவேண்டும்; இச் சபையின் காதுகுளிர இதோ தோன்றியிருக்கும் இன்பமான முதுவேனிற் காலத்தைப் பற்றிப் பாடு;

1.3 இக்காலத்தில் தெளிந்த நீரில் முழுகுதல் இனிமை தரும்; பாதிரி மலரளைந்து வரும் கானகக் காற்று நறுமணம் வீசும்; அயர்ந்து நித்திரை கொள்ளச் செய்யும் மரநிழல்; பகல் முதிர்ந்து கனிந்தால் உண் டாகும்அழகிய மாலைக்காலம் ஆனந்தமூட்டும்.

நடிகை : அப்படியே! (பாடுகிறாள்)

1.4 சுரும்பு வாய் வைத்து சீரிஷ மலர் அரும்பைக் கருணையுடன் எடுத்து இளமங்கையர் காதணி செய்வர்.

சூத்திரதாரன் : பேஷ் ! அருமையான பாட்டு; உன் இன்னிசையினால் உள்ளத்தைப் பறிகொடுத்த இச்சபையோர் எழுதிய சித்திரம் போல அசைவற்றிருப்பதைப பார். இவர்கள் மகிழும்படி இனி என்ன நாடகத்தை நடிப்போம்.

நடிகை : அதற்குள் மறந்து விட்டீர்களா? சற்று முன்னர் தானே அபிஞான சாகுந்தலமென்ற நாடகத்தை நடிக்க வேண்டுமென ஆணையிட்டீர்கள்.

சூத்திரதாரன் : நல்லவேளையாக ஞாபகப்படுத்தி விட்டாய்; உன் இனியபாட்டு அதற்குள் எல்லவற்றையும் மறக்கச் செய்து விட்டது.

1.5 துஷ்யந்த மன்னனை வலிந்து இழுத்துச் சென்ற மானைப் போல உன் இன்னிசையும் என் உள்ளத்தை வலிந்து இழுத்துக் கொண்டு போய் விட்டது.

*(இருவரும் போகின்றார்கள்)*

**முகவுரை முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( ततः प्रविशति मृगानुसारी सशरचापहस्तो राजा रथेन सूतश्च । )

सूतः—( राजानं मृगं चावलोक्य । ) आयुष्मन्,

कृष्णसारे ददच्चक्षुस्त्वयि चाधिज्यकार्मुके ।
मृगानुसारिणं साक्षात्पश्यामीव पिनाकिनम् ॥ ६ ॥

राजा—सूत, दूरममुना सारङ्गेण वयमाकृष्टाः । अयं पुनरिदानीमपि

ग्रीवाभङ्गाभिरामं मुहुरनुपतति स्यन्दने बद्धदृष्टिः
पश्चार्धेन प्रविष्टः शरपतनभयाद्भूयसा पूर्वकायम् ।
दर्भैरर्धावलीढैः श्रमविवृतमुखभ्रंशिभिः कीर्णवर्त्मा
पश्योदग्रप्लुतत्वाद्वियति बहुतरं स्तोकमुर्व्यां प्रयाति ॥ ७ ॥

( सविस्मयम् । ) कथमनुपतत एव मे प्रयत्नप्रेक्षणीयः संवृत्तः ।

सूतः—आयुष्मन्, उद्घातिनी भूमिरिति मया रश्मिसंयमनाद्रथस्य मन्दीकृतो वेगः । तेन मृग एष विप्रकृष्टान्तरः संवृत्तः । संप्रति समदेशवर्तिनस्ते न दुरासदो भविष्यति ।

राजा—तेन हि मुच्यन्तामभीशवः ।

सूतः—यदाज्ञापयत्यायुष्मान् । ( रथवेगं निरूप्य ) आयुष्मन्, पश्य पश्य ।

मुक्तेषु रश्मिषु निरायतपूर्वकाया
निष्कम्पचामरशिखा निभृतोर्ध्वकर्णाः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அரசன் பாகனோடு கையில் வில்லும் அம்பும் ஏந்திய வாறு புள்ளிமானைத் தொடர்ந்து வருகின்றான். )

பாகன் : (அரசனையும் மானையும் பார்த்து) நீடு வாழ்வீர்!

1.6 பொய்யிலாக் கணைவில் தாங்கிப்
புள்ளிமான் தொடரும் கோலம்
கையிலே பினாக மேந்துங்
கடவுளின் காட்சி தானோ.

அரசன் : சாரதி ! இம்மான் எம்மை நெடுந்தூரம் இழுத்து விட்டது. இன்னும் இதோ பார்.

1.7 கழுத்தை வளைத்துப் பின்னால் நம் தேரையே பார்த்துப் பார்த்து அழகாகச் செல்கிறது. எங்கே அம்பு வந்து விழுந்து விடுமோ என்ற பயத்தினால் பின்னுடலை இழுத்து முன்னுக்கு நுழைத்துக் கொண்டு செல்கிறது. இளைப்பினால் திறந்த வாயிலிருந்து பாதி புசித்த புல்லை வழி நெடுகச் சிந்திச் செல்கிறது. உயரத்துள்ளிப் பாய் வதைப் பார்த்தால் நிலத்திலன்று, பெரும்பாலும் ஆகாய வெளியிற்றான் பறந்து செல்கிறதோ! (வியப்புடன்) ஆகா! நான் அதை நெருங்கி வந்தும், அது என் பார்வைக்கு எட்டாமற் போய் விட்டதே.

பாகன் : நீடு வாழ்வீர்! பாதை கரடுமுரடாயிருந்ததால் நானே தேரின் வேகத்தைக் குறைத்துவிட்டேன். அதனாற்றான் மான் அவ்வளவு தூரம் போய்விட்டது. இப்போது நிலம் சம தரையாயிருப்பதால் விரைவில் அதை அடைவோம்.

அரசன் : சரி இனிக் கடிவாளத்தைத் தளர்த்தி விடு

பாகன் : கட்டளை மகாராஜா(தேரின் வேகத்தைக்காட்டி) நீடுவாழ்வீர்! இதோ பாருங்கள் பாருங்கள்,

1.8 குதிரைகளின் வேகத்தை. கடிவாளம் தளர்ந்ததும், நமது குதிரைகள், மானின் வேகத்தைக் கண்டு பொறாத னவாய், உடம்பின் முன்பாகத்தைநேராக நீட்டி, நெற் றியிற் கவரி அசையாமல்,காதுகளை நேராக நிறுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

आत्मोद्धतैरपि रजोभिरलङ्घनीया
धावन्त्यमी मृगजवाक्षमयेव रथ्याः ॥ ८ ॥

राजा—( सहर्षम् । ) सत्यम् । अतीत्य हरितो हरींश्च वर्तन्ते वाजिनः । तथा हि

यदालोके सूक्ष्मं व्रजति सहसा तद्विपुलतां
यदर्धे विच्छिन्नं भवति कृतसंधानमिव तत् ।
प्रकृत्या यद्वक्रं तदपि समरेखं नयनयो-
र्न मे दूरे किंचित्क्षणमपि न पार्श्वे रथजवात् ॥ ९ ॥

सूत, पश्यैनं व्यापाद्यमानम् । ( इति शरसंधानं नाटयति । )

( नेपथ्ये । )

भो भो राजन्, आश्रममृगोऽयं न हन्तव्यो न हन्तव्यः ।

सूतः—( आकर्ण्यावलोक्य च । ) आयुष्मन्, अस्य खलु ते बाणपथवर्तिनः कृष्णसारस्यान्तरे तपस्विन उपस्थिताः ।

राजा—( ससंभ्रमम् । ) तेन हि प्रगृह्यन्तां वाजिनः ।

सूतः—तथा । ( इति रथं स्थापयति । )

( ततः प्रविशत्यात्मना तृतीयो वैखानसः । )

वैखानसः—( हस्तमुद्यम्य । ) राजन्, आश्रममृगोऽयं न हन्तव्यो न हन्तव्यः ।

न खलु न खलु बाणः सन्निपात्योऽयमस्मिन्
मृदुनि मृगशरीरे पुष्पराशाविवाग्निः ।
क्व बत हरिणकानां जीवितं चातिलोलं
क्व च निशितनिपाताः वज्रसाराः शरास्ते ॥ १० ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம்புகள் எழும்பிய தூசிப் படலத்தைக் கூட முந்திக் கொண்டு பாய்கின்றன.

அரசன் : (உற்சாகத்துடன்) ஆம், பரிதியில் குதிரைகள் எம்மாத் திரம்?

1.9. இந்திரனுடைய குதிரைகள் கூட இவற்றுக்கு எதிர் நிற்குமா? தேரின் விரைவினால் கண்ணுக்குச் சிறிதாய்த் தெரிந் தவை நொடிப் பொழுதில் பெதாய்த் தெரிகின்றன. பிரிந் துள்ளவை பொருந்திக் காண் கின்றன. வளைந்தவை நேராகக் காட்சி தருகின்றன. தூரம், சமீபம் என்ற வித்தி யாசமே ஒரு கணத்தில் இல்லாமற் போகிறது. பாகனே ! இதோ அதைக் கொன்றேன். (அம்பைக் குறிவைக் கின்றான், திரைக்குப்பின்னால்)

ஓ ! அரசனே ! கொல்லாதே, கொல்லாதே, அது ஆச்சிரமத்து மான்.

பாகன் : (காதுகொடுத்துக் கேட்டு நோக்கி) நீடுவாழ்வீர் ! அதோ தங்கள் அம்புக்கும் புள்ளி மானுக்குமிடையில் துறவிகள் வருகிறார்கள்.

அரசன் : விரைவாக அப்படியானால் கடிவாளத்தை இழுத்துக் குதிரைகளை நிறுத்து.

பாகன் : அப்படியே (தேரை நிறுத்துகிறான், ஒரு துறவி இரண்டு மாணாக்கர்களுடன் வருகிறான்).

துறவி : (கையைத் தூக்கி) அரசனே ! இது ஆச்சிரமத்து மான் இதைக் கொல்லாதே,

1.10. அது தகாது. மலர்க்குவியலில் நெருப்புப் பொறியைப் போடுவது போல, இந்த மானின் மிருதுவான உடலில் உனது கணையை எய்தல் தகுமா? தகாது, தகாது வச்சிரம் போல் வலியை உடைய உன் சரமெங்கே? இம் மட மானின் மெல்லிய உயிரெங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

तत्साधुकृतसंधानं प्रतिसंहर सायकम् ।
आर्तत्राणाय वः शस्त्रं न प्रहर्तुमनागसि ॥ ११ ॥

राजा—एष प्रतिसंहृतः । ( इति यथोक्तं करोति । )

वैखानसः—सदृशमेतत्पुरुवंशप्रदीपस्य भवतः ।

जन्म यस्य पुरोर्वंशे युक्तरूपमिदं तव ।
पुत्रमेवंगुणोपेतं चक्रवर्तिनमाप्नुहि ॥ १२ ॥

इतरौ—( बाहू उद्यम्य । ) सर्वथा चक्रवर्तिनं पुत्रमाप्नुहि ।

राजा—( सप्रणामम् । ) प्रतिगृहीतम् ।

वैखानसः—राजन्, समिदाहरणाय प्रस्थिता वयम् । एष खलु कण्वस्य कुलपतेरनुमालिनीतीरमाश्रमो दृश्यते । न चेदन्यकार्यातिपातः, तत्प्रविश्य प्रतिगृह्यतामातिथेयः सत्कारः । अपि च ।

रम्यास्तपोधनानां प्रतिहतविघ्नाः क्रियाः समवलोक्य ।
ज्ञास्यसि कियद्भुजो मे रक्षति मौर्वीकिणाङ्क इति ॥ १३ ॥

राजा—अपि संनिहितोऽत्र कुलपतिः ।

वैखानसः—इदानीमेव दुहितरं शकुन्तलामतिथिसत्काराय नियुज्य दैवमस्याः प्रतिकूलं शमयितुं सोमतीर्थं गतः ।

राजा—भवतु । तामेव द्रक्ष्यामि । सा खलु विदितभक्तिर्मां महर्षेः कथयिष्यति ।

वैखानसः—साधयामस्तावत् । ( इति सशिष्यो निष्क्रान्तः । )

राजा—सूत, चोदयाश्वान् । पुण्याश्रमदर्शनेन तावदात्मानं पुनीमहे ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.11. தொடுகணை மீட்பாயைய துணையிலார் புரக்கவன்றிக் கொடுவினை யறியார்மீது குறித்திடல் கொடுமை கண்டாய்.

அரசன் : இதோ அம்பை வாங்கிக் கொண்டேன்.(அவ்வாறு செய்கிறான்)

துறவி 1.12. புருகுலத்துக்கு விளக்கே! இது தங்களுக்குத் தக்க செயலே, புருகுலம் பிறந்தநிற்குப் பொருந்துமிச் செயல் காணைய திருமலி புதல்வர்ப் பெற்றுத் திசையவ னாள்வன் வாழி.

மற்றிருவர் : (கைகளைத்தூக்கி) சக்கரவர்த்தியான ஒரு மகனைத் தடையின்றிப் பெறுவாய்.

அரசன் : (கைகூப்பி) தங்கள் வாக்கை ஏற்றேன்.

துறவி : மன்ன! நாம் வேள்வித்தீக்கு விறகு சேர்க்கப்போகிறோம். அதோ மாலினி ஆற்றங்கரையில், குலபதியான கண்ணு வமுனவரது ஆசிரமம் தெரிகிறது. வேறு கருமம் இல்லை யானால் அங்கே சென்று விருந்துபசாரம் பெறுவீராக.

1.13. தவந்தரு செல்வர் போற்றுந் தடையிலாவினிய வேள்வி அவங்கெடக்காக்குநின் கையாண்மையை நன்று காண்பாய்.

அரசன் : இப்பொழுது குலபதி அங்கே இருப்பாரா?

துறவி : இப்பொழுதான் தன் மகள் சகுந்தலையை அதிதிக் கடமைகளைச் செய்ய நியமித்துவிட்டு, சகுந்தலைக்கு விதிவசத்தாலுண்டான கெடுதிக்கு சாந்தி செய்யச் சோமதீர்த்தத்திற்குச் சென்றிருக்கிறார்.

அரசன் : நன்று, அவளை நான் சென்று பார்க்கிறேன். நான் செய்யும் வழிபாட்டை அவள் முனிவருக்குக் கூறட்டும்.

துறவி : நாம் விடைபெற்றுக் கொள்கிறோம் (மாணவருடன் போகின்றார்)

அரசன் : சாரதி! குதிரைகளை நடத்து, புனித ஆசிரமத்தைத் தரிசித்து நாமும் புனிதமடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

सूतः—यदाज्ञापयत्यायुष्मान्। ( इति भूयो रथवेगं निरूपयति। )

राजाः—( समन्तादवलोक्य। ) सूत, अकथितोऽपि ज्ञायत एव यथायमाभोगस्तपोवनस्येति।

सूतः—कथमिव।

राजा—किं न पश्यति भवान्। इह हि

नीवाराः शुकगर्भकोटरमुखभ्रष्टास्तरूणामधः
प्रस्निग्धाः क्वचिदिङ्गुदीफलभिदः सूच्यन्त एवोपलाः।
विश्वासोपगमादभिन्नगतयः शब्दं सहन्ते मृगा-
स्तोयाधारपथाश्च वल्कलशिखानिष्यन्दरेखाङ्किताः ॥१४॥

अपि च।

कुल्यांभोभिः पवनचपलैः शाखिनो धौतमूला
भिन्नो रागः किसलयरुचामाज्यधूमोद्गमेन।
एते चार्वागुपवनभुवि च्छिन्नदर्भाङ्कुरायां
नष्टाशङ्का हरिणशिशवो मन्दमन्दं चरन्ति ॥ १५ ॥

सूतः—सर्वमुपपन्नम्।

राजा—( स्तोकमन्तरं गत्वा। ) तपोवननिवासिनामुपरोधो मा भूत्। अत्रैव रथं स्थापय। यावदवतरामि।

सूतः—धृताः प्रग्रहाः। अवतरत्वायुष्मान्।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகன் : நீடுவாழ்வீர்! தங்கள் சித்தம். (மறுபடியும் இரத்தத்தை ஓட்டும் பாவனை செய்கிறான்)

அரசன் : (நாலா பக்கமும் பார்த்து) சாரதி! ஒருவருஞ் சொல்லா மலே இது தபோவனமென்று தெரிகிறது.

பாகன் : எப்படி?

அரசன் : ஏன் நீ கவனிக்கவில்லையா?

1.14. இளங்கிள்ளைகளுறையும் மரப் பொந்திலிருந்து வீழ்ந்த புல்லரிசி மரத்தடியில் சிந்திக்கிடக்கிறது. நெய் கசிந்து மினுங்கும் பாறைகள் இங்குதிப் பழம் நசக்கிய இடமி தெனக் கூறிக்கிடக்கின்றன.தேர் அரவத்தைக் கேட்கும் அச்சமின்றி இச்சைப்படி மானினம் நடமாடுகின்றது. நனைந்த மரவுரிகளிலிருந்தும் சொட்டிய நீர்த்துளியினால் உண்டான கோடுகள் நீரோடைக்குச் செல்லும் வழியைக் காட்டிக்கிடக்கின்றன.

மேலும் அதோ!

1.15. மெல்லென்ற தென்றல் வீச, கால்வாய்களின் நீரில் உண் டாகும் சிற்றலை மரவேர்களை அலசும். ஓமப்புகை யினால இளந்தளிர்களின் ஒளி மாறுகிறது. இதோ தருப் பைப் புல்லின் குருந்து அறுக்கப்பட்ட உபவனத்தில் அச்ச மின்றி மான்குட்டிகள் மெல்ல மெல்ல உலாவிப் புல் மேய்கின்றன.

பாகன் : நீங்கள் கூறுவது முற்றும் சரி.

அரசன் : (சிறிது தூரம் சென்று) இத்தவக்காட்டிலுள்ளார்க்கு எவ்வகைத் தொந்தரவுங் கூடாது. தேரை இங்கேயே நிறுத்து. நான் இறங்குகிறேன் .

பாகன் : இதோ நிறுத்தினேன் நீடுவாழ்வீர், இறங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—( अवतीर्यात्मानमवलोक्य च । ) सूत, विनीतवेषेण प्रवेष्टव्यानि तपोवनानि नाम । इदं तावद्गृह्यताम् । ( इति सूतस्याभरणानि धनुश्चोपनीय । ) सूत, यावदाश्रमवासिनः प्रत्यवेक्ष्याहमुपावर्ते तावदार्द्रपृष्ठाः क्रियन्तां वाजिनः ।

सूतः—तथा । ( इति निष्क्रान्तः । )

राजा—( परिक्रम्यावलोक्य च । ) इदमाश्रमद्वारम् । यावत्प्रविशामि । ( प्रविश्य । निमित्तं सूचयन् । )

शान्तमिदमाश्रमपदं स्फुरति च बाहुः कुतः फलमिहास्य ।
अथवा भवितव्यानां द्वाराणि भवन्ति सर्वत्र ॥ १६ ॥

( नेपथ्ये । )

इदो इदो सहीओ । इत इतः सख्यौ ।

राजा—( कर्णं दत्वा । ) अये, दक्षिणेन वृक्षवाटिकामालाप इव श्रूयते । यावदग्रे गच्छामि । ( परिक्रम्यावलोक्य च । ) अये, एतास्तपस्विकन्यकाः स्वप्रमाणानुरूपैः सेचनघटैर्बालपादपेभ्यः पयो दातुमित एवाभिवर्तन्ते । ( निपुणं निरूप्य । ) अहो, मधुरमासां दर्शनम् ।

शुद्धान्तदुर्लभमिदं वपुराश्रमवासिनो यदि जनस्य ।
दूरीकृताः खलु गुणैरुद्यानलता वनलताभिः ॥ १७ ॥

यावदिमां छायामाश्रित्य प्रतिपालयामि । ( इति विलोकयन्स्थितः । )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : (இறங்கித் தன்னை நோக்கி) தபோவனத்தில் ஆடம் பரமின்றித்தானே செல்ல வேண்டும். இதோ இவற்றைப் பிடி (அணிகளையும் வில்லையும் பாகன் கையிற் கொடுத்து) அவ்வாசிரமத்துறைவோரைக்கண்டு திரும்பு வதற்குள் குதிரைகளைக் குளிப்பாட்டியவை.

பாகன் : அப்படியே (பாகன் போகிறான்).

அரசன் : (சுற்றிப் பார்த்து) இதோ இவ்வாச்சிரம வாயில் உள்ளே செல்வோம் (நுழைந்து சகுணம் உணர்ந்து).

1.16. அமைதி நிறைந்தது இவ்வாச்சிரமம்; இருந்தும் என் கையோ துடிக்கிறது. இவ்விடத்தில் இதன் பயன் எங்கனம் கை கூடும். எப்படியும் வரவேண்டியது எங்கிருந்தாலும் வந்தே தீரும்.

*(திரைக்குப் பின்னே)*

இவ்வழி ! இவ்வழி ! தோழிகாள்.

அரசன் : (காதுகொடுத்துக் கேட்டு) ஆகா! மரச் சோலையின் தென்புறத்தில் பேச்சொலி போல் கேட்கிறதே, அங்கே போவோம். (போய்ப்பார்த்து) என்ன ! இவர்கள் தாபச கன்னியர், தத்தம் சக்திக் கேற்ற குடங்களை ஏந்திக் கொண்டு இளஞ்செடிகட்குத் தண்ணீர் ஊற்ற இங்கே வருகின்றார்கள். (உற்றுப்பார்த்து) என்ன இனிய காட்சி,

1.17. இவ்வன கன்னியரின் அழகு அந்தப்புரத்திற்கூடக் கிடைப்பது அரிதாதலால் பூஞ்சோலையில் வளரும் கொடியை காட்டுக் கொடி வென்றுவிட்டதென்றே கூற வேண்டும். இம்மரநிழலில் இருந்து அவர்கள் வரவை எதிர்பார்பேன் (பார்த்துக்கொண்டே நிற்கிறான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ ततः प्रविशति यथोक्तव्यापारा सह सखीभ्यां शकुन्तला । ]

**शकुन्तला—इदो इदो सहीओ ।** इत इतः सख्यौ ।

**अनसूया—हला सउन्दले, तुवत्तो वि तादकस्सवस्स अस्समरुक्खआ पिअदरत्ति तक्केमि । जेण णोमालिआकुसुमपेलवा वि तुमं एदाणं आलवालपूरणे णिउत्ता ।** हला शकुन्तले, त्वत्तोऽपि तातकाश्यपस्याश्रमवृक्षकाः प्रियतरा इति तर्कयामि । येन नवमालिकाकुसुमपेलवा त्वमप्येतेषामालवालपूरणे नियुक्ता ।

**शकुन्तला—ण केअलं तादणिओओ एव्व । अत्थि मे सोदरसिणेहो वि एदेसु ।** ( इति वृक्षसेचनं रूपयति । ) न केवलं तातनियोग एव । अस्ति मे सोदरस्नेहोऽप्येतेषु ।

**राजा—कथमियं सा कण्वदुहिता । असाधुदर्शी खलु तत्रभवान्काश्यपः, य इमामाश्रमधर्मे नियुङ्क्ते ।**

**इदं किलाव्याजमनोहरं वपु-**
**स्तपःक्षमं साधयितुं य इच्छति ।**
**ध्रुवं स नीलोत्पलपत्रधारया**
**शमीलतां छेत्तुमृषिर्व्यवस्यति ॥ १८ ॥**

**भवतु । पादपान्तरित एव विश्वस्तां तावदेनां पश्यामि ।** ( इति तथा करोति । )

**शकुन्तला—सहि अणसूए, अदिपिणद्धेण वक्कलेण पिअंवदाए णिअन्तिदम्हि । सिढिलेहि दाव णं ।** सखि अनसूये, अतिपिनद्धेन वल्कलेन प्रियंवदया नियन्त्रितास्मि । शिथिलय तावदेतत् ।

**अनसूया—तह ।** ( इति शिथिलयति । ) तथा ।

**प्रियंवदा—**( सहासम् । ) **एत्थ पओहरवित्थारइत्तअं अत्तणो जोव्वणं उवालह । मं किं उवालम्भेसि ।** अत्र पयोधरविस्तारयितृ आत्मनो यौवनमुपालभस्व । मां किमुपालभसे ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முன் சொன்னபடியே நீர்க்குடத்துடன் சகுந்தலை தோழிமார் இருவருடன் பிரவேசிக்கிறாள்)

சகுந்தலை : இதோ இவ்வழியே வாருங்கள், தோழிகாள் !

அனசூயை : தோழி சகுந்தலை! உன்னைக் காட்டிலும் இவ்விளஞ் செடிகளிடத்துத்தான் உன் தந்தை கண்ணுவருக்கு நிறைந்த அன்பு உண்டு போலும் , இல்லாவிட்டால் நவ மல்லிகை போல மென்மையுடைய உன்னை அச்செடிக்கு நீரூற்ற நியமித்திருப்பாரா?

சகுந்தலை : என் தந்தையின் ஏவலால் மாத்திரம் இப்படி நான் செய்ய வில்லை. இவைகளிடத்து எனக்குச் சகோதரவாஞ்சை கூட உண்டு.

(செடிகளுக்கு நீர் ஊற்றுவதுபோல நடிக்கிறாள்)

அரசன் : இவளா கண்ணுவமுனிவருக்கு மகளாகக் கூடியவள்? அம்முனிபுங்கவருக்கு உண்மையில் விவேகமென்பது கொஞ்சமுமில்லையா? இருந்தால் இவளையுமா இந்த ஆசிரம வேலையில் நியமிப்பார்.

1.18. கைபுனைந்தியற்றுக் கவின்பெறு வனப்புள்ள இவ்விள நங்கையை அம்முனிவர் தவப்பணி செய்ய இயைவித்தமை, குவளை மலரின் மெல்லிதழ் விளிம்பால் சமிதைக்கொடியை அறுக்கத் துணிந்தமை போலாகும். சரி, இம்மரங்களின் மறைவி லிருந்து கொண்டே தாராளமாக அவளைப் பார்ப்பேன். (அவ்வாறே நடிக்கிறான்)

சகுந்தலை : சகி, அனசூயா, இந்த மரவுரியைப் பிரியம்வதை இறுக்க மாகக் கட்டிவிட்டாள். தயவுசெய்து இதைத் தளர்த்திவிடு.

அனசூயை : அப்படியே ! (தளர்த்துகிறாள்)

பிரியம்வதை : (புன்னகையுடன்) என்னை எதற்கம்மா கோபித்துக் கொள் ளுகிறாய். உன்னைப் பருக்கச்செய்த உன் இளமை யையே கடிந்துகொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—सम्यगियमाह ।

इदमुपहितसूक्ष्मग्रन्थिना स्कन्धदेशे
स्तनयुगपरिणाहाच्छादिना वल्कलेन ।
वपुरभिनवमस्याः पुष्यति स्वां न शोभां
कुसुममिव पिनद्धं पाण्डुपत्रोदरेण ॥ १९ ॥

अथवा काममननुरूपमस्या वपुषो वल्कलं न पुनरलंकारश्रियं न पुष्यति । कुतः ।

सरसिजमनुविद्धं शैवलेनापि रम्यं
मलिनमपि हिमांशोर्लक्ष्म लक्ष्मीं तनोति ।
इयमधिकमनोज्ञा वल्कलेनापि तन्वी
किमिव हि मधुराणां मण्डनं नाकृतीनाम् ॥ २० ॥

शकुन्तला—( अग्रतोऽवलोक्य । ) एसो वादेरिदपल्लवङ्गुलीहिं तुवरेदि विअ मं केसररुक्खओ । जाव णं संभावेमि । ( इति परिक्रामति । ) एष वातेरितपल्लवाङ्गुलीभिस्त्वरयतीव मां केसरवृक्षकः । यावदेनं संभावयामि ।

प्रियंवदा—हला सउन्दले एत्थ एव्व दाव मुहुत्तअं चिट्ठ । हला शकुन्तले, अत्रैव तावन्मुहूर्तं तिष्ठ ।

शकुन्तला—किंणिमित्तं । किंनिमित्तम् ।

प्रियंवदा—जाव तुए उवगदाए लदासणाधो विअ अअं केसररुक्खओ पडिभादि । यावत्त्वयोपगतया लतासनाथ इवायं केसरवृक्षकः प्रतिभाति ।

शकुन्तला—अदो क्खु पिअंवदा सि तुमं । अतः खलु प्रियंवदासि त्वम् ।

राजा—प्रियमपि तथ्यमाह शकुन्तलां प्रियंवदा । अस्याः खलु

अधरः किसलयरागः कोमलविटपानुकारिणौ बाहू ।
कुसुममिव लोभनीयं यौवनमङ्गेषु संनद्धम् ॥ २१ ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : சரியாகச் சொன்னாள்

1.19. இப்பெண்! வெளிறிய புற இதழ் மூடிய அரும்பு போல இவளுடைய பரந்த இரு கொங்கை களையும் மூடித் தோளிற்கட்டப்பட்டிருக்கும் மரவுரி அழகிய இளமேனியை மறைத்திருக்கிறது. எழில் நலம் கனிந்த இவள் மேனிக்கு மரவுரி பொருந்தாது என்பது உண்மையே. ஆனால் அதுகூட இவளின் இழகை எடுத்துக்காட்டுகிறது.

1.20. பாசி சூழ்ந்து கிடந்தாலும் பங்கயம் அழகு குன்றாது. களங்கமிருந்தாலும் சந்திரனின் அழகு அதனால் பிரகாசிக்கிறது. மனதை மயக்கும் இம்மங்கையும் மரவுரியிற்கூட அழகுடன் விளங்குகிறாள். இயற்கை அழகுடைய ஒன்றுக்கு எதுதான் அழகு செய்யாது?

சகுந்தலை : (முன்னால் நோக்கி) காற்றில் அசையும் தளிராகிய விரல்களால் இம்மகிழமரம் என்னை அழைக்கிறது. அதைச் சிறிது சென்று பார்ப்போம். (அவ்வாறே செல்கிறாள்)

பிரியம்வதை : தோழி ! சகுந்தலை அங்கேயே சற்று நில் பார்ப்போம்.

சகுந்தலை : எதற்காக ?

பிரியம்வதை : ஆம், மகிழமரத்திற் கொடிபடர்ந்திருப்பது போலல்லவா இருக்கிறது நீ அதன் பக்கத்தில் நிற்பது.

சகுந்தலை : பிரியம்வதை ! இனிமையாகப் பேசுபவள் என்ற பெயர் உனக்குத் தகும்.

அரசன் : இனிமை மாத்திரமன்று, பிரியம்வதை சொல்வது உண்மையுங்கூட,

1.21. அதரங்களோ இளந்தளிர்கள் கைகள் கோமளமான மெல்லிய கிளைகள் அங்க மெல்லாம் மலர் போன்ற இளமை பூத்துக் குலுங்குகிறதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**अनसूया—हला सउन्दले, इअं सअंवरवहू सहआरस्स तुए किदणामहेआ वणजोसिणित्ति णोमालिआ। णं विसुमरिदा सि।** हला शकुन्तले, इयं स्वयंवरवधूः सहकारस्य त्वया कृतनामधेया वनज्योत्स्नेति नवमालिका। एनां विस्मृतवत्यसि।

**शकुन्तला—तदा अत्ताणं वि विसुमरिस्सं।** (लतामुपेत्यावलोक्य च सहर्षम्।) **हला, रमणीए क्खु काले इमस्स लदापाअवमिधुणस्स वइअरो संवुत्तो। णवकुसुमजोव्वणा वणजोसिणी, बद्धपल्लवदाए उवभोअक्खमो सहआरो।** (इति पश्यन्ती तिष्ठति।) तदात्मानमपि विस्मरिष्यामि। हला, रमणीये खलु काल एतस्य लतापादपमिथुनस्य व्यतिकरः संवृत्तः। नवकुसुमयौवना वनज्योत्स्ना, स्निग्धपल्लवतयोपभोगक्षमः सहकारः।

**प्रियंवदा—**(सस्मितम्।) **अणसूए, जाणासि किंणिमित्तं सउन्दला वणजोसिणीं अदिमेत्तं पेक्खदित्ति।** अनसूये, जानासि किंनिमित्तं शकुन्तला वनज्योत्स्नामतिमात्रं पश्यतीति।

**अनसूया—ण क्खु विभावेमि। कहेहि।** न खलु विभावयामि। कथय।

**प्रियंवदा—जधा वणजोसिणी अणुरूवेण पाअवेण संगदा अवि णाम एव्वं अहं वि अत्तणो अणुरूवं वरं लहेअंति।** यथा वनज्योत्स्नानुरूपेण पादपेन संगता, अपि नामैवमहमप्यात्मनोऽनुरूपं वरं लभेयेति।

**शकुन्तला—एसो णूणं तुह अत्तगदो मणोरधो।** (इति कलशमावर्जयति।) एष नूनं तवात्मगतो मनोरथः।

**राजा—अपि नाम कुलपतेरियमसवर्णक्षेत्रसंभवा स्यात्। अथवा कृतं संदेहेन।**

**असंशयं क्षत्रपरिग्रहक्षमा**
**यदार्यमस्यामभिलाषि मे मनः।**
**सतां हि संदेहपदेषु वस्तुषु**
**प्रमाणमन्तःकरणप्रवृत्तयः॥ २२॥**

**तथापि तत्त्वत एनामुपलप्स्ये।**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனசூசை : சகி ! சகுந்தலா ! இந்த இள மாமரத்தைச் சுயம்வரஞ் செய்து கொண்ட நவமல்லிகைக்கு வன நிலா என்று பெயர் வைத்தாயல்லவா ? அதை மறந்துவிட்டாயா ?

சகுந்தலை : மறந்து விட்டேனா ? அப்படியானால் என்னையே மறந்தேன் (அக்கொடியண்டை போய்ப்பார்த்து) மனத்திற்கினிய இப்பருவகாலத்தில் இக்கொடியும், மரமும் ஒன்றுகூடிவிட்டன. புதுமலர் பூத்து இளமை கனிந்து நிற்கிறது இவ்வன நிலா. இளமாந்தரு, நெருங்கிய இளந்தளிர் வீசிப் போகம் விரும்பி நிற்கிறது.

பிரியம்வதை : (புன்னகையுடன்) அனசூயே! பார்த்தாயா? வன நிலாவையே நின்று நெடுநேரம் பார்க்கிறாளே சகுந்தலை ஏன் என்று தெரிந்ததா ?

அனசூயை : தெரியாதே ! நீயே சொல்லேன்.

பிரியம்வதை : வன நிலாவுக்கு ஏற்ற நாயகன் கிடைத்தான். எனக்கும் அப்படிக் கிடைத்தாலோ என்று தான்.

சகுந்தலை : அதுதான் உன் மனோரதம்.

(குடத்தைக் கவிழ்த்து நீர் வார்க்கிறாள்)

அரசன் : ஆமாம் ! கண்ணுவருக்குப் பெண்ணாகப் பிறந்தாளே ! இவள் அவருக்கு வேறு வருணத்தாயிடம் பிறந்திருப்பாளோ?

1.22. ஒருபோதும் இருக்காது . இவள் அரசர்க்கு ஏற்றவளே !அதிற் சந்தேகமில்லை. அல்லாவிட்டால் என் உயர்ந்த உள்ளம் இவளிடம் எப்படிச் செல்லும்? சந்தேகமான காரியங்களில் மேன் மக்களின் உள்ளப் போக்கே அவர்களுக்கு நல்வழி காட்டும். அதுவே பிரமாணம் இருந்தும் இவளைப்பற்றி அறிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**शकुन्तला**—( ससंभ्रमम् । ) **अम्मो । सलिलसेअसंभमुग्गदो णोमालिअं उज्झिअ वअणं मे महुअरो अहिवट्टइ ।** ( इति भ्रमरबाधां रूपयति । ) अम्मो । सलिलसेकसंभ्रमोद्गतो नवमालिकामुज्झित्वा वदनं मे मधुकरोऽभिवर्तते ।

**राजा**—( सस्पृहं विलोक्य । )

**यतो यतः षट्चरणोऽभिवर्तते**
**ततस्ततः प्रेरितलोललोचना ।**
**विवर्तितभ्रूरियमद्य शिक्षते**
**भयादकामापि हि दृष्टिविभ्रमम् ॥ २३ ॥**

**अपि च ।** ( सासूयमिव । )

**चलापाङ्गां दृष्टिं स्पृशसि बहुशो वेपथुमतीं**
**रहस्याख्यायीव स्वनसि मृदु कर्णान्तिकचरः ।**
**करौ व्याधुन्वत्याः पिबसि रतिसर्वस्वमधरं**
**वयं तत्त्वान्वेषान्मधुकर हतास्त्वं खलु कृती ॥ २४ ॥**

**शकुन्तला**—**ण एसो धिट्ठो विरमदि । अण्णदो गमिस्सं ।** ( पदान्तरे स्थित्वा सदृष्टिक्षेपम् । ) **कधं इदो वि आअच्छदि । हला, परित्ताअध मं इमिणा दुव्विणीदेण दुट्ठमहुअरेण अहिहूअमाणं ।** न एष धृष्टो विरमति । अन्यतो गमिष्यामि । कथमितोऽप्यागच्छति । हला, परित्रायेथां मामनेन दुर्विनीतेन दुष्टमधुकरेणाभिभूयमानाम् ।

**उभे**—( सस्मितम् । ) **काओ अम्हे परित्तादुं । दुस्सन्दं अक्कन्द । राअरक्खिदव्वाइं तवोवणाइं णाम ।** के आवां परित्रातुम् । दुष्यन्तमाक्रन्द । राजरक्षितव्यानि तपोवनानि नाम ।

**राजा**—**अवसरोऽयमात्मानं प्रकाशयितुम् । न भेतव्यं** ( इत्यर्धोक्ते । स्वगतम् । ) **राजभावस्त्वभिज्ञातो भवेत् । भवतु । एवं तावदभिधास्ये ।**

**शकुन्तला**—( पदान्तरे स्थित्वा । सदृष्टिक्षेपम् । ) **कधं इदोवि मं अणुसरदि ।** कथमितोऽपि मामनुसरति ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலை : அம்மாடீ! நீர்வாக்கக் கலைந்த ஒரு வண்டு இந்த நவமல்லிகைக் கொடியைவிட்டு, என் முகத்தையே வட்டமிடுகிறதே ! (வண்டால் வருந்து பவள்போல் நடிக்கிறாள்)

அரசன் : (ஆர்வத்தோடு பார்த்து)

1.23. எங்கெங்கே வண்டு சுற்று கிறதோ அங்கெல்லாமிவள் கண்களும் வட்டமிடுகின்றன. புருவத்தை நெரித்துக் கொண்டு மருளும் கண்கள் காதலறியாதன வாயிருந்தும், பயத்தினால் அக்காதற் பார்வையைப் பழகுகின்றன.

மேலும்,

1.24. கடைபுரளத்துடிக்கும் கண்ணிணைகளை அடிக்கடி தொடுகிறாய். செவியை அணுகி மெல்லெனக்காதல் மொழியைக் குசுகுசுக்கிறாய். கையை எடுத்து உன்னைக் கலைக்கும் போது காதலின்பக் களஞ்சியமான இதழமுதைப் பருகுவாய். வண்டே! இவளே அறியும் ஆராய்ச்சியில் நாம் தோல்வியடைய நீயோ அக்கருமத்தில் வெற்றி கண்டாய்.

சகுந்தலை : இப்பொல்லாத வண்டு என்னை விடமாட்டேன் என்கிறதே! நான் வேறிடம் போகிறேன். (ஓரடி பின்சென்று நின்று பார்த்து) என்ன! இங்கேயும் வருகிறதே! ஐயோ! தோழிகள்! இப்பொல்லாத வண்டிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்!

இருவரும் : (சிரித்து கொண்டு) காப்பாற்றுவதற்கு நாங்கள் யார்? துஷ்யந்தனைக் கூப்பிடு. தபோவனங்களைக் காக்கும் பொறுப்பு அவருடையது தான்.

அரசன் : என்னை வெளிப்பத்த இதுவே தருணம். அஞ்சாதே! அஞ்சாதே! (என்று தனக்குள் பாதி கூறிக்கொண்டு) என் அரசத் தன்மை புலப்பட்டு விடுமோ; ஆதலால் நான் இப்பொழுது இப்படிச் சொல்வேன்.....

சகுந்தலை : (ஓர் அடி அப்புறம் விலகி நின்று பார்த்து) இங்கேயும் இந்த வண்டு தொடருகிறதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—( सत्वरमुपसृत्य । ) आः ।

कः पौरवे वसुमतीं शासति शासितरि दुर्विनीतानाम् ।
अयमाचरत्यविनयं मुग्धासु तपस्विकन्यासु ॥ २५ ॥

( सर्वा राजानं दृष्ट्वा किंचिदिव संभ्रान्ताः । )

अनसूया—अज्ज, ण क्खु किंपि अच्चाहिदं । इअं णो पिअसही महुअरेण अहिहूअमाणा कादरीभूदा । ( इति शकुन्तलां दर्शयति । ) आर्य, न खलु किमप्यत्याहितम् । इयं नः प्रियसखी मधुकरेणाभिभूयमाना कातरीभूता ।

राजा—( शकुन्तलाभिमुखो भूत्वा । ) अपि तपो वर्धते ।

( शकुन्तला साध्वसादवचना तिष्ठति । )

अनसूया—दाणिं अदिधिविसेसलाहेण । हला सउन्दले, गच्छ उडअं । फलमिस्सं अग्घं उवहर । इदं पादोदअं भविस्सदि । इदानीमतिथिविशेषलाभेन । हला शकुन्तले, गच्छोटजम् । फलमिश्रमर्घमुपहर । इदं पादोदकं भविष्यति ।

राजा—भवतीनां सूनृतयैव गिरा कृतमातिथ्यम् ।

प्रियंवदा—तेण हि इमस्सिं पच्छाअसीदलाए सत्तवण्णवेदिआए मुहुत्तअं उवविसिअ परिस्समविणोदं करेदु अज्जो । तेन ह्यस्यां प्रच्छायशीतलायां सप्तपर्णवेदिकायां मुहूर्तमुपविश्य परिश्रमविनोदं करोत्वार्यः ।

राजा—नूनं यूयमप्यनेन कर्मणा परिश्रान्ताः ।

अनसूया—हला सउन्दले, उइदं णो पज्जुवासणं अदिधीणं । एत्थ उवविसम्ह । ( इति सर्वा उपविशन्ति । ) हला शकुन्तले, उचितं नः पर्युपासनमतिथीनाम् । अत्रोपविशामः ।

शकुन्तला—( आत्मगतम् । ) किं णु क्खु इमं पेक्खिअ तवोवणविरोहिणो विआरस्स गमणीअम्हि संवुत्ता । किं नु खल्विमं प्रेक्ष्य तपोवनविरोधिनो विकारस्य गमनीयास्मि संवृत्ता ।

राजा—( सर्वा विलोक्य । ) अहो समवयोरूपरमणीयं भवतीनां सौहार्दम् ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : (விரைவாய் முன்வந்து)

1.25. பௌரவ மன்னன் தீயாரை அடக்கி உலகைப் புரக்கும் பொழுது இங்கே பாவமறியாத இத்தாபச கன்னியரிடம் குறும்பு செய்பவன் யாரடா?

(எல்லாரும் அரசனைப் பார்த்துச் சற்றே கலக்கமடைகின்றனர்)

அனசூயை : அப்படியொன்றும் ஆபத்தில்லை. ஐயா! இவள் எங்கள் இனிய தோழியை (சகுந்தலையைக்காட்டி) ஒரு வண்டு துன்பப்படுத்திப் பயமுறுத்துகிறது.

அரசன் : (சகுந்தலையைப் பார்த்து ) தவம் வளர்கிறது. போலும்!

(சகுந்தலை கலக்கத்தாற் பேசாது நிற்கிறாள்)

அனசூயை : ஆம். தங்கள் வரவால் தவம் வளர்கிறது. சகி சகுந்தலை! இதோ குடிசைக்கு ஓடிப் போய் பூவும், பழமுங்கலந்த அர்க்கியம் கொண்டுவா.

இதோ கால் கழுவ நீர்.

அரசன் : இனிமையான உங்கள் பேச்சே சிறந்த விருந்தோம்ப லாயிற்று.

பிரியம்வதை : அப்படியானால், ஐயா! அடர்ந்த நிழலாற் குளிர்ந் திருக்கும் இந்த ஆலமரத்தடியிலுள்ள மேடை மீது இருந்து இளைப்பாறுங்கள்.

அரசன் : நீங்களும் இந்த வேலையாற் களைப்படைந்திருப்பீர்கள்.

அனசூயை : தோழி! சகுந்தலை! எமது விருந்தினரை உபசரிப்பது நம் கடமை. ஆதலால் நாமும் இங்கே உட்காருவோம்.

சகுந்தலை : (தனக்குள்) இவரைக் கண்டதும், இத்துற வாச்சிரமத் துக்குப் பொருந்தாத ஓர் உணர்ச்சி என் மனதில் உண்டாகிறதே!

அரசன் : (எல்லோரையும் பார்த்து) ஒத்த வயசும் அழகுமுடைய உங்களுடன் நட்புக் கொள்வது மனதுக்கு எவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**प्रियंवदा**—( जनान्तिकम् । ) **अणसूए, को णु क्खु एसो चउर-गम्भीराकिदी महुरं आलवन्तो पहाववन्तो विअ लक्खीअदि।** अनसूये, को नु खल्वेष चतुरगम्भीराकृतिर्मधुरमालपन्प्रभाववानिव लक्ष्यते ।

**अनसूया**—**सहि, मम वि अत्थि कोदूहलं। पुच्छिस्सं दाव णं।** ( प्रकाशम् । ) **अज्जस्स महुरालावजणिदो वीसम्भो मं मन्तावेदि। कदमो अज्जेण राएसिणो वंसो अलंकरीअदि, कदमो वा विरह-पज्जुस्सुअजणो किदो देसो, किंणिमित्तं वा सुउमारदरो वि तवो-वणगमणपरिस्समस्स अत्ता पदं उवणीदो।** सखि, ममाप्यस्ति कौतूहलम् । पृच्छामि तावदेनम् । आर्यस्य मधुरालापजनितो विश्रम्भो मां मन्त्रयते । कतम आर्येण राजर्षेर्वंशोऽलंक्रियते, कतमो वा विरहपर्युत्सुकजनः कृतो देशः, किंनिमित्तं वा सुकुमारतरोऽपि तपोवनगमनपरिश्रमस्यात्मा पदमुपनीतः ।

**शकुन्तला**—( आत्मगतम् ) **हिअअ, मा उत्तम्म । एसा तुए चिन्तिदाइं अणसूआ मन्तेदि ।** हृदय, मोत्ताम्य । एषा त्वया चिन्तितान्य-नसूया मन्त्रयते ।

**राजा**—( आत्मगतम् । ) **कथमिदानीमात्मानं निवेदयामि, कथं वात्मापहारं करोमि। भवतु। एवं तावदेनां वक्ष्ये ।** ( प्रकाशम् । ) **भवति, यः पौरवेण राज्ञा धर्माधिकारे नियुक्तः सोऽहमविघ्नक्रियो-पलम्भाय धर्मारण्यमिदमायातः ।**

**अनसूया**—**सणाधा दाणिं धम्मआरिणो।** सनाथा इदानीं धर्म-चारिणः ।

( शकुन्तला श्रृङ्गारलज्जां रूपयति । )

**सख्यौ**—( उभयोराकारं विदित्वा । जनान्तिकम् । ) **हला सउन्दले, जइ एत्थ अज्ज तादो संणिहिदो भवे।** हला शकुन्तले, यद्यत्राद्य तातः संनिहितो भवेत् ।

**शकुन्तला**—**तदो किं भवे।** ततः किं भवेत् ।

**सख्यौ**—**इमं जीविदसव्वस्सेण वि अदिधिविसेसं किदत्थं करिस्सदि।** इमं जीवितसर्वस्वेनाप्यतिथिविशेषं कृतार्थं करिष्यति ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியம்வதை : (புறத்தே) அனசூயை! இவர் யார்? கட்டமைந்த கம்பீரமான தோற்றம். இனிமையான பேச்சு. பெரிய இடத்து ஆசாமி போலத் தெரிகிறதே.

அனசூயை : ஆமா. எனக்கும் அறிய ஆவலாய்த்தானிருக்கிறது. சரி அவரைக் கேட்டால் தெரிந்து விடுகிறது. இதிலென்ன? (உரத்து) தங்கள் இனிய பேச்சுத் துணிவை உண்டாக் குகிறது. தாங்கள் எந்த அரசமுனியின் குலத்துக்கு விளக்கானீர். எந்த நாடு தங்கள் பிரிவால் வருந்துகிறது? இளமை கனியுந்தங்கள் திருக்கோலம், இத்தபோவ னத்தை நாடி வரும் வருத்தத்துக் குள்ளானது எதனாலோ?

சகுந்தலை : (தனக்குள்) மனமே! பதறாதே! நீ கேட்க நினைத்ததை இந்த அனசூயை கேட்டுவிட்டாள்.

அரசன் : (தனக்குள்) என்னை எப்படி வெளிப்படுத்துவேன்? மறைத்துக் கொள்வது எப்படி? சரி. இப்படிச் சொல்வோம். (உரக்க) நல்லாய்! தரும அதிகாரியாய்ப் பௌரவ வேந்தன் என்னை நியமித்திருக்கிறான், அறத்தழைக்கும் இவ்வாச்சிரமத்தில் துறவோர்க்கு இடையூறுண்டோ வென்று பார்க்கவே இங்கு வந்தேன்.

அனசூயை : அப்படியானால் அறத்துக்கு அருங்காவல் கிடைத்து விட்டது.

(சகுந்தலை நாணாத்தாற் கண்புதைக்கிறாள்)

தோழிகள் : (சகுந்தலை, துஷ்யந்தன் ஆகிய இருவரின் நிலையையுங் கவனித்து) தோழி சகுந்தலை! அப்பா இப்பொழுது இங்கே இருப்பாரானால்........

சகுந்தலை : இருந்தால் என்னவாம்?

தோழிகள் : தம் உயிரினுமினிய பொருளைக் கொடுத்தாவது இவ்விருந்தை உபசரிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

शकुन्तला—तुह्मे अवेध। किं पि हिएअ कदुअ मन्तेध। ण वो वअणं सुणिस्सं। युवामपेतम्। किमपि हृदये कृत्वा मन्त्रयेथे। न युवयोर्वचनं श्रोष्यामि।

राजा—वयमपि तावद्भवत्योः सखीगतं किमपि पृच्छामः।

सख्यौ—अज्ज, अणुग्गहो विअ इअं अब्भत्थणा। आर्य, अनुग्रह इवेयमभ्यर्थना।

राजा—भगवान्काश्यपः शाश्वते ब्रह्मणि स्थित इति प्रकाशम्। इयं च वः सखी तदात्मजेति कथमेतत्।

अनसूया—सुणादु अज्जो। अत्थि को वि कोसिओत्ति गोत्तणामहेओ महाप्पहावो राएसी। श्रृणोत्वार्यः। अस्ति कोऽपि कौशिक इति गोत्रनामधेयो महाप्रभावो राजर्षिः।

राजा—अस्ति। श्रूयते।

अनसूया—तं णो पिअसहीए पहवं अवगच्छ। उज्झिदाए सरीरसंवड्ढणादीहिं तादकस्सवो से पिदा। तमावयोः प्रियसख्याः प्रभवमवगच्छ। उज्झितायाः शरीरसंवर्धनादिभिस्तातकाश्यपोऽस्याः पिता।

राजा—उज्झितशब्देन जनितं मे कौतूहलम्। आ मूलाच्छ्रोतुमिच्छामि।

अनसूया—सुणादु अज्जो। गोदमीतीरे पुरा किल तस्स राएसिणो उग्गे तवसि वट्टमाणस्स किंपि जादसङ्केहिं देवेहिं मेणआ णाम अच्छरा पेसिदा णिअमविग्घकारिणी। श्रृणोत्वार्यः। गौतमीतीरे पुरा किल तस्य राजर्षेरुग्रे तपसि वर्तमानस्य किमपि जातशङ्कैर्देवैर्मेनका नामाप्सराः प्रेषिता नियमविघ्नकारिणी।

राजा—अस्त्येतदन्यसमाधिभीरुत्वं देवानाम्।

अनसूया—तदो वसन्तोदारसमए से उम्मादइत्तअं रूवं पेक्खिअ—( इत्यर्धोक्ते लज्जया विरमति ) ततो वसन्तोदारसमये तस्या उन्मादयितृ रूपं प्रेक्ष्य—

राजा—परस्तादवगम्यत एव। सर्वथाप्सरःसंभवैषा।

अनसूया—अह इं। अथ किम्।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலை : போங்கள்!மனதில் என்னவோ நினைத்துக் கொண்டு பேசுகிறீர்கள்.உங்கள் பேச்சை இனி நான் கேட்மாட்டேன்.

அரசன் : நானும் உங்கள் தோழியைப் பற்றிக் கொஞ்சம் கேட்க விரும்புகிறேன்.

தோழியரிருவர்: ஐய, தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்.

அரசன் : ஆமா. காசிபர் என்றும் பிரமச்சாரியாயிற்றே. உங்கள் தோழி அவருக்கு எப்படி மகளாவாள்?

அனசூயை : ஐயனே! கேட்டருள். கௌசிகன் என்ற குலப் பெயருடைய பெரும் புகழுடைய அரச முனிவர் ஒருவர் இருக்கிறார்.

அரசன் : ஆமா. கேள்விப்பட்டிருக்கிறேன்.

அனசூயை :அவர்தான் நமது தோழியின் தந்தை, அவராற் கைவிடப்பட்ட இவளை எடுத்து வளர்த்த காரணத்தால் காசிப முனிவரும் இவளுக்குத் தந்தையானார்.

அரசன் : "கைவிடப்பட்ட இவளை"என்றதும் எனது ஆவல் அதிகரிக்கிறது. முதலிலிருந்து கதையைக் கேட்க விரும்புகிறேன்.

அனசூயை : ஐய, கேட்டருள். முன்னொரு காலத்தில், கௌதமி ஆற்றங்கரையில் கௌசிகர் கொடுந்தவமியற்றினார். அதைக் கண்டு எப்படியோ அச்சமடைந்த தேவர்கள், மேனகையென்ற தெய்வமாதை அவருடைய தவத்துக்கு இடையூறு செய்ய அனுப்பினர்.

அரசன் : மற்றவர் செய்யும் தவத்தைக் கண்டு தேவர்கள் அஞ்சுவது இயற்கை தான். அப்புறம் .............

அனசூயை : பின்னர் இனிய இளவெனிற் காலத்தில் மனத்தை மயக்கும் அவளது பேரழகைக் கண்டு ........

(இவ்வாறு அரைவாசி சொல்லி நாணத்தாற் பேச்சை நிறுத்தி விடுகிறாள்.)

அரசன் : அப்புறம் நடந்ததெல்லாம் தெரிந்ததுதானே. நிச்சயமாக இவள் தெய்வ அரம்பையின் மகள் தான்.!

அனசூயை : வேறென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—उपपद्यते ।

मानुषीषु कथं वा स्यादस्य रूपस्य संभवः ।
न प्रभातरलं ज्योतिरुदेति वसुधातलात् ॥ २६ ॥

( शकुन्तलाधोमुखी तिष्ठति । )

राजा—( आत्मगतम् । ) लब्धावकाशो मे मनोरथः । किंतु सख्याः परिहासोदाहृतां वरप्रार्थनां श्रुत्वा धृतद्वैधीभावकातरं मे मनः ।

प्रियंवदा—( सस्मितं शकुन्तलां विलोक्य नायकाभिमुखी भूत्वा । ) पुणो वि वत्तुकामो विअ अज्जो । पुनरपि वक्तुकाम इवार्यः ।

( शकुन्तला सखीमङ्गुल्यातर्जयति । )

राजा—सम्यगुपलक्षितं भवत्या । अस्ति नः सच्चरितश्रवण-लोभादन्यदपि प्रष्टव्यम् ।

प्रियंवदा—अलं विआरिअ । अणिअन्तणाणुओओ तवस्सि-अणो णाम । अलं विचार्य । अनियन्त्रणानुयोगस्तपस्विजनो नाम ।

राजा— इति सखीं ते ज्ञातुमिच्छामि ।

वैखानसं किमनया व्रतमाप्रदाना-
द्व्यापाररोधि मदनस्य निषेवितव्यम् ।
अत्यन्तमात्मसदृशेक्षणवल्लभाभि-
राहो निवत्स्यति समं हरिणाङ्गनाभिः ॥ २७ ॥

प्रियंवदा—अज्ज, धम्मचरणे वि परवसो अअं जणो । गुरुणो उण से अणुरूववरप्पदाणे संकप्पो । आर्य, धर्मचरणेऽपि परवशोऽयं जनः । गुरोः पुनरस्या अनुरूपवरप्रदाने संकल्पः ।

राजा—( आत्मगतं सहर्षम् । ) न दुरवापेयं खलु प्रार्थना ।

भव हृदय साभिलाषं संप्रति संदेहनिर्णयो जातः ।
आशङ्कसे यदग्निं तदिदं स्पर्शक्षमं रत्नम् ॥ २८ ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : அப்பொழுதே நினைத்தேன்.

1. 26. மனிதருள் எவ்வாறு இப்பேரழகு பிறக்கும்? பொற்கதிர்ப் பேரொளி கொண்ட மின்னற் கொடி பூமியிலிருந்து தோன்றுமா?

*(சகுந்தலை முகங் கவிழ்ந்து நிற்கிறாள்)*

அரசன் : (தனக்குள்) என் எண்ணம் கைகூடி விட்டது. இருந்தும் மனதுக்கியைந்த மணவாளனைத் தேடுகிறாளென்று தோழிகள் பரிகாசமாகக் கூறியவை என் மனத்துக்குக் கவலையைக் கொடுக்கின்றன.

பிரியம்வதை : (புன்முறுவலோடு சகுந்தலையைப் பார்த்துப் பின்னர் அரசனை நோக்கி) மீண்டும் ஏதோ கூற விரும்புகிறீர் போலிருக்கிறது.

*(சகுந்தலை தன் தோழிக்கு விரலைக் காட்டித் தடுக்கிறாள்.)*

அரசன் : நங்காய்! சரியாக அறிந்து கொண்டாய். நல்லவர்களின் உத்தம வரலாற்றைப் பற்றி அறியும் ஆவலால் மற்றுமொரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

பிரியம்வதை : சங்கோசம் வேண்டாம். நாம் துறவிகள். தாராளமாகக் கேளுங்கள்.

அரசன் : 1.27. மன்மதனுடைய வியாபாரங்களுக்கு முற்றும் மாறான இத்தவ ஒழுக்கம் இவளுக்கு வதுவை செய்யும் வரையிற்றானா? அன்றிதன் கண்களையொத்த மடமான்களுடன் கூடி என்றும் இங்கேயே காலங்கழிக்கப் போகிறாளா?

பிரியம்வதை : ஐயா, அற ஒழுக்கத்திற்கூட இவள் பிறரைச் சார்ந்தேயிருக்கிறாள். தகுந்த மணாளனைத் தேடிக் கொடுப்பது தான் எம் குருவின் சங்கற்பம்.

அரசன் : (தனக்குள் மகிழ்ச்சியுடன்) என் ஆசையை நிறை வேற்றுவது கஷ்டமன்று.

1.28. ஐயம் தீர்ந்தது அஞ்சலை நெஞ்சமே
வெய்ய தீயென வெண்ணிய வெம்பொருள்
செய்ய மாமணி சென்னியிற் சூடுதற்
குய்யு நன்னெறி யுண்டினி யஞ்சலை!

ஐயம் நீங்கிவிட்டது. நெஞ்சமே பயப்படாதே தீயென்று எண்ணிய இப்பொருள் சூடுதற்கேற்ற மாணிக்கமென்பது தெளிவாகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

शकुन्तला—( सरोषमिव । ) अणसूए, गमिस्सं अहं । अनसूये, गमिष्याम्यहम् ।

अनसूया—किंणिमित्तं । किंनिमित्तम् ।

शकुन्तला—इमं असंबद्धप्पलाविणिं पिअंवदं अज्जाए गोदमीए णिवेदइस्सं । इमामसंबद्धप्रलापिनीं प्रियंवदामार्यायै गौतम्यै निवेदयिष्यामि ।

अनसूया—सहि, ण जुत्तं अकिदसक्कारं अदिधिविसेसं विसज्जिअ सच्छन्ददो गमणं । सखि, न युक्तमकृतसत्कारमतिथिविशेषं विसृज्य स्वच्छन्दतो गमनम् ।

( शकुन्तला न किंचिदुक्त्वा प्रस्थितैव )

राजा—( ग्रहीतुमिच्छन्निगृह्यात्मानम् । आत्मगतम् । ) अहो चेष्टाप्रतिरूपिका कामिजनमनोवृत्तिः । अहं हि

अनुयास्यन्मुनितनयां सहसा विनयेन वारितप्रसरः ।
स्थानादनुच्चलन्नपि गत्वेव पुनः प्रतिनिवृत्तः ॥ २९ ॥

प्रियंवदा—( शकुन्तलां निरुध्य । ) हला, ण दे जुत्तं गन्तुं । हला, न ते युक्तं गन्तुम् ।

शकुन्तला—( सभ्रूभङ्गम् ) किं णिमित्तं । किंनिमित्तम् ।

प्रियंवदा—रुक्खसेअणे दुवे धारेसि मे । एहि दाव । अत्ताणं मोचिअ तदो गमिस्ससि । ( इति बलादेनां निवर्तयति ) वृक्षसेचने द्वे धारयसि मे । एहि तावत् । आत्मानं मोचयित्वा ततो गमिष्यसि ।

राजा—भद्रे, वृक्षसेचनादेव परिश्रान्तामत्रभवतीं लक्षये । तथा ह्यस्याः

स्रस्तांसावतिमात्रलोहिततलौ बाहू घटोत्क्षेपणा-
दद्यापि स्तनवेपथुं जनयति श्वासः प्रमाणाधिकः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலை :(கோபங் கொண்டவள் போல்) அனசூயே! நான் போகிறேன்.

அனசூயை : ஏனம்மா?

சகுந்தலை : பயனில்லாத அசப்பியங்கள் பேசும் பிரியம் வதையைப் பற்றிக் கௌதமிப் பாட்டியிடம் கூறப்போகிறேன்.

அனசூயை : தோழி! உன்பாட்டில் போக நினைக்கிறாயே. நமது விருந் தினர்க்குச் செய்யவேண்டிய உபசாரங்களொன்றும் முடியவில்லையே.

(சகுந்தலை ஒன்றுஞ் சொல்லாமற் புறப்படுகிறாள்.)

அரசன் : 1.29. (அவளைப் பிடித்திழுக்க முயன்றும் தன்னை அடக்கிக் கொண்டு) காதல் வயப்பட்டோர் எண்ணம் அவர் செயலில் பிரதிபலிக்கிறது. முனிவர் மகளைப் பின் தொடர விரும்பிய என் மனம் விநயத்தால் திடீரெனத் தடுக்கப்பட்டது. இருந்த இடத்தைவிட்டு அசையாதிருந்த போதிலும் மனம் அவளைப் பின் தொடர்ந்து சென்று மீண்டும் திரும்பி விட்டது.

பிரியம்வதை : (சகுந்தலையைத் தடுத்து) தோழி நீ போவது பொருந்தாது.

சகுந்தலை : (புருவத்தை நெரித்து) ஏன்? எதனால்?

பிரியம்வதை : (வலிந்து அவளைத் தடுத்து) செடிகளுக்கு நீர் வார்ப்பதில் எனக்கு இரண்டு குடம் கடன் பாக்கியுண்டு; அதைத் தந்த பின் நீ போகலாம், சகி.

அரசன் : நல்லாய்; நீர் ஊற்றியதால் இவள் களைப்படைந்திருக் கிறாள் போலத் தெரிகிறது.

130. தோள்கள் தளர்ந்து போயின, நீர்க்குடந்தூக்கித் தூக்கி உள்ளங்கைகளிரண்டும் பெரிதும் சிவந்து போயின. இன் னுங்கூட பெருமூச்செறிவதால் மார்பு உயர்ந்தும் தாழ்ந்தும் துடிக்கிறது. முகத்திலரும்பி வழிந்தோடும் வியர்வைத் துளிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

बद्धं कर्णशिरीषरोधि वदने घर्माम्भसां जालकं
बन्धे स्रंसिनि चैकहस्तयमिताः पर्याकुला मूर्धजाः ॥ ३० ।

तदहमेनामनृणां करोमि । ( इत्यङ्गुलीययं दातुमिच्छति । )

( उभे नाममुद्राक्षराण्यनुवाच्य परस्परमवलोकयतः । )

राजा—अलमस्मानन्यथा संभाव्य । राज्ञः परिग्रहोऽयमिति राजपुरुषं मामवगच्छथ ।

प्रियंवदा—तेण हि णारिहदि एदं अङ्गुलीअअं अङ्गुलीविओअं । अज्जस्स वअणेण अणिरिणा दाणिं एसा । ( किंचिद्विहस्य । ) हला सउन्दले, मोइदासि अणुअम्पिणा अज्जेण, अधवा महाराएण । गच्छ दाणिं । तेन हि नार्हत्येतदङ्गुलीयकमङ्गुलीवियोगम् । आर्यस्य वचनेनानृणेदानीमेषा । हला शकुन्तले, मोचितास्यनुकम्पिनार्येण, अथवा महाराजेन । गच्छेदानीम् ।

शकुन्तला—( आत्मगतम् । ) जइ अत्तणो पहविस्सं । ( प्रकाशम् । ) का तुमं विसज्जिदव्वस्स रुन्धिदव्वस्स वा । यद्यात्मनः प्रभविष्यामि । का त्वं विसर्जितव्यस्य रोद्धव्यस्य वा ।

राजा—( शकुन्तलां विलोक्य, आत्मगतम् । ) किं नु खलु यथा वयमस्यामेवमियमप्यस्मान्प्रति स्यात् । अथवा लब्धावकाशा मे प्रार्थना । कुतः ।

वाचं न मिश्रयति यद्यपि मद्वचोभिः
कर्णं ददात्यभिमुखं मयि भाषमाणे ।
कामं न तिष्ठति मदाननसंमुखीयं
भूयिष्ठमन्यविषया न तु दृष्टिरस्याः ॥ ३१ ॥

( नेपथ्ये । )

भो भोस्तपस्विनः, संनिहितास्तपोवनसत्त्वरक्षायै भवत । प्रत्यासन्नः किल मृगयाविहारी पार्थिवो दुष्यन्तः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதிற் செறித்த அனிச்ச மலர் தடுத்து விட்டது. கட்ட விழ்ந்த மென்கூந்தலை ஒரு கையாற்றாங்கி நிற்கிறாள். ஆதலால் அவள் கடனை நானே தீர்த்து வைக்கிறேன். (தன் கணையாழியைக் கொடுக்க முயல்கிறான். இருவரும் அக் கணையாழியிலுள்ள பெயரைக் கண்டு ஒருவரையொருவர் பார்த்து நிற்கின்றனர்.)

அரசன் : வீணாக என்னை வேறொன்றும் கற்பனை செய்ய வேண்டாம். இது மன்னன் கொடுத்த பரிசு; நான் அரச உத்தியோகத்தன் என்பதை அறிக.

பிரியம்வதை : அப்படியானால் இதை நீங்கள் கழற்றி விடக் கூடாதே. உங்கள் சொல்லே நம் தோழியின் கடனைத்தீர்த்து விட்டது. (சற்றே புன்முறுவல் செய்து) சகி! சகுந்தலா! கருணை மிக்க இப்பெரியோனால் - அல்ல - இம்மகாராசனால் - நீ விடுதலையடைந்தாய். இனிப்போவாயாக.

சகுந்தலை : (தனக்குள்) நானே என் எஜமானியானால் (உரக்க) என்னைப் போகச் சொல்லவும் நிறுத்தவும் நீ யார்?

அரசன் : (சகுந்தலையைப் பார்த்துத் தனக்குள்) இவளிடத்து எனக்குள்ள காதல் என்னிடத்தும் இவளுக்கு இருக்குமோ? ஆயினும் என் விருப்பத்துக்கு இடமுண்டு போலும்.

1.31. நான் பேசும்போது தான் பேசாது என் பேச்சைக் காது கொடுத்து கேட்கிறாள். முகம் என்னை நோக்கிப் பாரா விட்டாலும் கண்கள் வேறோன்றையும் பார்ப்பதாகத் தெரியவில்லை.

(திரைக்குப் பின்னே)

ஓ! ஓ! துறவிகளே! இத்தபோவன விலங்குகளைக் காக்கத் தயாராய் நில்லுங்கள். துஷ்யந்த மன்னன் வேட்டையாடிக் கொண்டு இத்திசை வருகிறானாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

तुरगखुरहतस्तथा हि रेणु-
विटपविषक्तजलार्द्रवल्कलेषु ।
पतति परिणतारुणप्रकाशः
शलभसमूह इवाश्रमद्रुमेषु ॥ ३२ ॥

अपि च ।

तीव्राघातप्रतिहततरुः स्कन्धलग्नैकदन्तः
पादाकृष्टव्रततिवलयासङ्गसंजातपाशः ।
मूर्तो विघ्नस्तपस इव नो भिन्नसारङ्गयूथो
धर्मारण्यं प्रविशति गजः स्यन्दनालोकभीतः ॥ ३३ ॥

(सर्वाः कर्णं दत्वा किंचिदिव संभ्रान्ताः ।)

राजा—( आत्मगतम् । ) अहो धिक् । पौरा अस्मदन्वेषिणस्तपोवनमुपरुन्धन्ति । भवतु । प्रतिगमिष्यामस्तावत् ।

सख्यौ—अज्ज, इमिणा आरण्णअवुत्तन्तेण पज्जाउलम्ह । अणुजाणाहि णो उडअगमणस्स । आर्य, अनेनारण्यकवृत्तान्तेन पर्याकुलाः स्मः । अनुजानीहि न उटजगमनाय ।

राजा—( ससंभ्रमम् । ) गच्छन्तु भवत्यः । वयमप्याश्रमपीडा यथा न भवति तथा प्रयतिष्यामहे ।

(सर्वे उत्तिष्ठन्ति ।)

सख्यौ—अज्ज, असंभाविदअदिहिसक्कारं भूओ वि पेक्खणणिमित्तं लज्जेमो अज्जं विण्णविदुं । आर्य, असंभावितातिथिसत्कारं भूयोऽपि प्रेक्षणनिमित्तं लज्जावहे आर्यं विज्ञापयितुम् ।

राजा—मा मैवम् । दर्शनेनैव भवतीनां पुरस्कृतोऽस्मि ।

शकुन्तला—अणसूए अहिणवकुससूईए परिक्खदं मे चलणं । कुरवअसाहापरिलग्गं च वक्कलं । दाव परिपालेध मं जाव णं मोआवेमि ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.32. குதிரைக் குளம்புகளெழுப்பிய புழுதி, மாலை வெயிலிற் றோய்ந்து செந்நிறம் பொருந்தி, ஆசிரமத்து மரங்களில் நீர் வடியத் தொங்கும் மரவுரியாடைகளில் வெட்டுக்கிளிக் கூட்டம் போலப் படிகிறது.

1.33. தேரின் வரவைக் கண்டு மருண்ட யானையொன்று, மான் கூட்டங்களைக் கலைத்து, குத்திமுறித்த மருப்போடு வந்த மரக்கிளையைத் தாங்கிக் கொண்டு, காலிற் சிக்கிய படர் கொடிகள் வலைபோல் உடம்பைப் பின்னிக்கொள்ளத் தவத்தைக் குலைக்கும் இடையூறு உருவெடுத்தாற் போல வருகிறது.

(எல்லோரும் கேட்டுக் கலக்க மடைகின்றனர்.)

அரசன் : (தனக்குள்) அடடா! மோசம் வந்தது! என்னைத் தேடிவந்த நகரமாந்தர் இத்தபோவனத்தையே அல்லோல கல்லோலப் படுத்துகின்றனர்.போலும்!நல்லது! இனி நாம் திரும்பவேண்டியது தான்.

இருதோழிகள்: ஐய, இச்செய்தி எம்மைக் கலக்குகிறது. குடிசைக்குச் செல்ல விடை கொடுங்கள்.

அரசன் : (விரைந்து) அப்படியே செல்லுங்கள். ஆச்சிரமத்துக்கு எவ்வித தீங்கும் விளையாமல் நானே பார்த்துக் கொள்கிறேன்.

*(எல்லோரும் எழுந்து நிற்கின்றனர்)*

தோழியர் இருவர்: அதிதிக்குகந்த சற்காரங்களை நாம் செய்யாத படியால் ஐய, தாங்கள் மறுபடியும் ஒரு முறை இங்கு வரவேண்டு மென விண்ணப்பிக்க வெட்கப்படுகிறோம்.

அரசன் : இல்லைவே இல்லை. உங்கள் தரிசனமே எனக்குப் பெருமையைக் கொடுத்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

अनसूये, अभिनवकुशसूच्या परिक्षतं मे चरणम् । कुरबकशाखापरिलग्नं च वल्कलम् । तावत् परिपालयतं मां यावदेतन्मोचयामि ।

( इति राजानमवलोकयन्ती सव्याजं विलम्ब्य सह सखीभ्यां निष्क्रान्ता । )

राजा—मन्दौत्सुक्योऽस्मि नगरगमनं प्रति । यावदनुयात्रिकान्समेत्य नातिदूरे तपोवनस्य निवेशयेयम् । न खलु शक्नोमि शकुन्तलाव्यापारादात्मानं निवर्तयितुम् । मम हि

गच्छति पुरः शरीरं धावति पश्चादसंस्तुतं चेतः ।
चीनांशुकमिव केतोः प्रतिवातं नीयमानस्य ॥ ३४ ॥

( इति निष्क्रान्ताः सर्वे । )

इति प्रथमोऽङ्कः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலை : ஓ ! இத் தருப்பைப் புல்லின் கூரியமுனை என் காலிற் குத்தி விட்டதே. முல்லைக் கொடியில் என்மரவுரி மாட்டிக் கொண்டதே. இதை எடுக்கும் வரை நில்லுங்கள்.

(இதை வியாசமாய்க் கொண்டு தோழியரை நிறுத்தி நிறுத்தி அரசனைப் பார்த்துக் கொண்டே சகுந்தலை அவர்களுடன் போகிறாள்.)

அரசன் : நகரத்துக்குப் போகும் உற்சாகம் குறைந்து விட்டது. கூட வந்தவர்களைச் சென்று பார்த்து இத்தபோவனத்துக்குக் கண்மையில் கூடாரம் அமைக்க ஒழுங்கு செய்வேன். சகுந்தலையைப் பற்றியே என் மனம் செல்கிறது. வேறொன்றிலும் சிந்தை செல்லவிவ்லை. உடல் முன் செல்லுகிறது. உள்ளமோ காற்றுக்கெதிரே பிடித்துச் செல்லும் சீனப் பட்டுக்கொடிச் சீலைபோலப் பின்வாங்கு கிறது.

*(எல்லோரும் போகின்றனர்)*

**முதல் அங்கம் முடிந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# द्वितीयोऽङ्कः ।

( ततः प्रविशति विषण्णो विदूषकः । )

विदूषकः—( निःश्वस्य । ) भो दिट्ठं । एदस्स मिअआसीलस्स रण्णो वअस्सभावेण णिव्विण्णो म्हि । अअं मिओ अअं वराहो अअं सद्दूलो त्ति मज्झण्णे वि गिम्हविरलपाअवच्छाआसु वणराईसु आहिण्डीअदि अडवीदो अडविं । पत्तसंकरकसाआइं कडुआइं गिरिणईजलाइं पीअन्ति । अणिअदवेलं सुल्लमंसभूइट्ठो आहारो अण्हीअदि । तुरगाणुधावणकण्डिदसंधिणो रत्तिम्मि वि णिकामं सइदव्वं णत्थि । तदो महन्ते एव्व पच्चूसे दासीएपुत्तेहिं सउणिलुद्धएहिं वणग्गहणकोलाहलेण पडिबोधिदोम्हि । एत्तिएण दाणिं पि पीडा ण णिक्कमदि । तदो गण्डस्स उवरि पिण्डिआ संवुत्ता । हिओ किल अम्हेसु ओहीणेसु तत्तहोदो मिआणुसारेण अस्समपदं पविट्ठस्स तावसकण्णआ सउन्दला णाम मम अधण्णदाए दंसिदा । संपदं णअरगमणस्स मणं कहं वि ण करेदि । अज्ज वि से तं एव्व चिन्तअन्तस्स अच्छीसु पभादं आसि । का गदी । जाव णं किदाचारपरिक्कमं पेक्खामि । ( इति परिक्रम्यावलोक्य च । ) एसो बाणासणहत्थाहिं जवणीहिं वणपुप्फमालाधारिणीहिं परिवुदो इदो एव्व आअच्छदि पिअवअस्सो । होदु । अङ्गभङ्गविअलो विअ भविअ चिट्ठिस्सं । जइ एव्वं वि णाम विस्समं लहेअं । ( इति दण्डकाष्ठमवलम्ब्य स्थितः ) भो दृष्टम् । एतस्य मृगयाशीलस्य राज्ञो वयस्यभावेन निर्विण्णोऽस्मि । अयं मृगोऽयं वराहोऽयं शार्दूल इति मध्याह्नेऽपि ग्रीष्मविरलपादपच्छायासु वनराजीष्वाहिण्ड्यतेऽटवीतोऽटवीम् । पत्रसंकरकषायाणि कटूनि गिरिनदीजलानि पीयन्ते । अनियतवेलं शूल्यमांसभूयिष्ठ आहारो भुज्यते । तुरगानुधावनकण्डितसंधे रात्रावपि निकामं शयितव्यं नास्ति । ततो महत्येव प्रत्यूषे दास्याः पुत्रैः शकुनिलुब्धकैर्वनग्रहणकोलाहलेन प्रतिबोधितोऽस्मि । इयतेदानीमपि पीडा न निष्कामति । ततो गण्डस्योपरि पिण्डका संवृत्ता । ह्यः किलास्मास्ववहीनेषु तत्रभवतो मृगानुसारेणाश्रमपदं प्रविष्टस्य तापसकन्यका



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது அங்கம்

## ( மனச்சோர்வுடன் விதூஷகன் வருகிறான் )

விதூஷக : (பெருமூச்சுவிட்டு ) என்ன கர்மமப்பா ! இது ? வேட்டைப் பித்துப்பிடித்த இந்த ராஜாவோடு சேர்ந்து என்ன அலைச்சல் அப்பப்பா ! போதும் இவர் நட்பு "அதோ மான்" "இதோ காட்டுப்பன்றி" "உதோ புலி" என்று சொல்லிச் சொல்லி இந்தப் பட்டப்பகலிலே, பதை பதைக்கும் வெயிலிலே, காடுகாடாய்த் திரிகின்றேன். மரக்காடுதான் தங்க ஒரு நிழல்கூடக் கிடையாது. குடிக்கத் தண்ணீரா கிடைக்கிறது ! மலையருவியில் வரும் இலை யழுகிய தண்ணீர் கசப்பாய் வெதுவெதுப்பாய்க் கஷாயம் மாதிரியல்லவா இருக்கிறது. நேரத்துக்குச் சாப்பாடு கிடையாது. காலா காலத்தில் கிடைக்கும் உணவும் சூலத்தில் குத்தித் தீயில் வாட்டிய மாமிசந்தான். இரவில் தூக்கமே இல்லை. பகலெல்லாம் குதிரையில் சவாரி செய்து உடம்பு மூட்டெல்லாம் ஒரே வலி, அதிகாலை யிலேயே அந்த வேட்டுவ வேசி மக்கள் காட்டைக் கலைக்க போடும் கூச்சலால் முழிச்சுப்பிடுகிறேன். இம் மட்டில் முடிஞ்சுதா? கண்டத்தின் மேலே ஒரு பிண்டம் வெடிச்சிருக்கு, நேற்று எங்களை விட்டுப்பிரிந்து வேட்டை யாடுகையில் ஆச்சிரமத்தில் பிரவேசித்த மஹாராஜா கண்ணில் யாரோ சகுந்தலையென்றொரு தாபசக் கன்னி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

शकुन्तला नाम ममाधन्यतया दर्शिता । सांप्रतं नगरगमनस्य मनः कथमपि न करोति । अद्यापि तस्य तामेव चिन्तयतोऽक्ष्णोः प्रभातमासीत् । का गतिः । यावत्तं कृताचारपरिक्रमं पश्यामि । एष बाणासनहस्ताभिर्यवनीभिर्वनपुष्पमालाधारिणीभिः परिवृत इत एवागच्छति प्रियवयस्यः । भवतु । अङ्गभङ्गविकल इव भूत्वा स्थास्यामि । यद्येवमपि नाम विश्रमं लभेय ।

( ततः प्रविशति यथानिर्दिष्टपरिवारो राजा । )

**राजा—**

कामं प्रिया न सुलभा मनस्तु तद्भावदर्शनाश्वासि ।
अकृतार्थेऽपि मनसिजे रतिमुभयप्रार्थना कुरुते ॥ १ ॥

( स्मितं कृत्वा । ) एवमात्माभिप्रायसंभावितेष्टजनचित्तवृत्तिः प्रार्थयिता विडम्ब्यते । तद्यथा

स्निग्धं वीक्षितमन्यतोऽपि नयने यत्प्रेरयन्त्या तया
यातं यच्च नितम्बयोर्गुरुतया मन्दं विलासादिव ।
मा गा इत्युपरुद्धया यदपि सा सासूयमुक्ता सखी
सर्वं तत्किल मत्परायणमहो कामी स्वतां पश्यति ॥ २ ॥

**विदूषकः—**( तथा स्थित एव । ) भो वअस्स, ण मे हत्थपाआ पसरन्ति । ता वाआमेत्तएण जीआवइस्सं । भो वयस्य, न मे हस्तपादं प्रसरति । तद्वाङ्मात्रेण जापयिष्यामि ।

**राजा—**कुतोऽयं गात्रोपघातः ।

**विदूषकः—**कुदो किल सअं अच्छीइं आउलीकरिअ अस्सुकारणं पुच्छसि । कुतः किल स्वयमक्षीण्याकुलीकृत्याश्रुकारणं पृच्छसि ।

**राजा—**न खल्ववगच्छामि । भिन्नार्थमभिधीयताम् ।

**विदूषकः—**भो वअस्स, जं वेदसो खुज्जलीलं विडम्बेदि तं किं अत्तणो पहावेण । णं णईवेअस्स । वयस्य, यद्वेतसः कुब्जलीलां विडम्बयति, तत्किमात्मनः प्रभावेण । ननु नदिवेगस्य ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் துர் அதிர்ஷ்டம், தென்பட்டு விட்டாள். அவ்வளவு தான் ராஜா பட்டணத்துக்குத் திரும்புவதையே மறந்து விட்டார். இன்றைக்குக்கூட அவளுடைய சிந்தனையோடு தான் அவர் கண்விழித்தார். நான் என்ன செய்வேன்? காலைக்கடனெல்லா ம் முடித்துக் கொண்டால், மன்ன னைப் போய்ப்பார்ப்பேன். (சுற்றிப் பார்த்து) ஆ! கையில் வில் ஏந்தி வனமலர் மாலையணிந்த யவனப் பெண்கள் சூழ என் இனிய நண்பர் வருகிறார். சரி உடல் நொந்து சோர்வுற்றவன் போல நிற்போம். அப்படியாவது கொஞ்ச நேரம் ஓய்வு கிடைக்காதா? (தடியை ஊன்றி நின்றான்.)

(அரசன் முன்சொன்னவாறு பணிப்பெண்கள் புடைசூழ வருகிறான்)

அரசன் : 2.1 என் காதலியை அடைவது சுலபமில்லா விட்டாலும், அவள் காட்டிய குறிப்புகள் என் மனதில் நம்பிக்கையை உண் டாக்குகின்றன. நம் அன்பின் பலன் கைகூடாவிட்டாலும். பரஸ்பரக்காதல் மனத்துக்கு இன்பத்தைக் கொடுக்கிறது. (புன்முறுவல் செய்து) தன் காதலியின் மனநிலையைத் தன் சொந்த மனநிலையைக் கொண்டு எண்ணி மனப் பால் குடிப்பது காதலர்க்கு இயற்கைதானே புறத்தே பார்ப்பவள் போல

2.2 என்னையே பார்த்த மெல்லிய பார்வையும், நிதம்பத் தின் பாரத்தால் மெல்லென நடந்த உல்லாச நடையும், போகாதே என்று அவள் செலவைத் தடுத்த தோழிக்குக் கூறிய கோபப் பேச்சும், எல்லாம் என்னைக் குறித்தே செய்தனவோ? ஆ! காதல் வசப்பட்டவன் எங்கும் தனது கருத்தையே காண்கிறான்.

விதூஷக : (முன்னே நின்ற நிலையில்) ஓ! நண்ப ! பை காலை ஆட்ட அசைக்கக்கூட முடியவில்லை. தங்களுக்கு ஜே! என்று வாயால் மாத்திரம் சொல்லி விடுகிறேன்.

அரசன் : இந்தத் திமிர் உனக்கு எப்படி வந்தது. ஜயனே !

விதூஷக : கண்ணைக் குத்திவிட்டுக் கண்ணீர் ஏன் விடுகிறாய் என்று கேட்கிறீர்களே.

அரசன் : நீ சொல்வது எனக்குப் புரியவில்லையே, விளக்கமாய்ச் சொல்லப்பா.

விதூஷக : நாணல்புல்லு கோணங்கியாட்டம் போடறது சொந்த மகிமையினாலா? அல்லது ஆற்றின் வேகத்தினாலா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—नदीवेगस्तत्र कारणम् ।

विदूषकः—मम वि भवं । ममापि भवान् ।

राजा—कथमिव ।

विदूषकः—एव्वं राअकज्जाणि उज्झिअ एदारिसे आउलप्पदेसे वणचरवुत्तिणा तुए होदव्वं । जं सच्चं पच्चहं सावदाणुसरणेहिं संखोहिअसंधिबन्धाणं मम गत्ताणं अणीसो म्हि संवुत्तो । त्ता पसादइस्सं विसज्जिदुं मं एक्काहं वि दाव विस्समिदुं । एवं राजकार्याण्युज्झित्वैतादृश आकुलप्रदेशे वनचरवृत्तिना त्वया भवितव्यम् । यत्सत्यं प्रत्यहं श्वापदानुसरणैः संक्षोभितसंधिबन्धानां मम गात्राणामनीशोऽस्मि संवृत्तः । तत्प्रसादयिष्यामि विसर्जितुं मामेकाहमपि तावद्विश्रमितुम् ।

राजा—( स्वगतम् । ) अयं चैवमाह । ममापि काश्यपसुतामनुस्मृत्य मृगयाविक्लवं चेतः । कुतः ।

न नमयितुमधिज्यमस्मि शक्तो
धनुरिदमाहितसायकं मृगेषु ।
सहवसतिमुपेत्य यैः प्रियायाः
कृत इव मुग्धविलोकितोपदेशः ॥ ३ ॥

विदूषकः—( राज्ञो मुखं विलोक्य । ) अत्तभवं किं वि हिअए करिअ मन्तेदि । अरण्णे मए रुदिअं आसि । अत्रभवान्किमपि हृदये कृत्वा मन्त्रयते । अरण्ये मया रुदितमासीत् ।

राजा—( सस्मितम् । ) किमन्यत् । अनतिक्रमणीयं मे सुहृद्वाक्यमिति स्थितोऽस्मि ।

विदूषकः—चिरं जीअ । ( इति गन्तुमिच्छति ) चिरं जीव ।

राजा—वयस्य, तिष्ठ । सावशेषं मे वचः ।

विदूषकः—आणवेदु भवं । आज्ञापयतु भवान् ।

राजा—विश्रान्तेन भवता ममाप्यनायासे कर्मणि सहायेन भवितव्यम् ।

विदूषकः—किं मोदअखण्डिआए । तेण हि अअं सुगहीदो खणो । किं मोदकखण्डिकायाम् । तेन ह्ययं सुगृहीतः क्षणः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : ஆற்றின் வேகந்தான் அதற்கு காரணம்.

விதூஷக : அப்படித்தான் நானும்.

அரசன் : அதெப்படி ?

விதூஷக : நீர் உம்ம ராச்சிய காரியங்களை விட்டு விட்டு இந்த இருண்ட காட்டிலே வேடனைப்போல திரிவது உமக்குச் சரி, ஆனால் என்னைப் பொருத்தவரையில் நான் சத்திய மாகச் சொல்லிவிடுகிறேன். இந்தக் காட்டு மிருகங் களைக் கலைத்துக் கொண்டு ஓடி ஓடி என் உடம் பெல்லாம் நோவெடுத்து எலும்பெல்லாம் பொருத்துப் பொருத்தாய் விலகிவிட்டன. அதனால் உடம்பை அசைக் கக்கூட முடியவில்லை. அது நம்ம வசத்தில் இல்லை. ஆனபடியால் ஐயனே உங்களை மன்றாட்டமாய்க் கேட்கிறேன், ஒரு நாளைக்காவது அமைதியாய் ஆறியி ருக்க உத்தரவு கொடுங்கள்.

அரசன் : (தனக்குள்) இவனும் இப்படிச் சொல்லுகிறான். என் மனமோ கண்ணுவர் மகளையே நினைத்து நினைத்து வேட்டையை வெறுக்கிறது.

2.3 அம்புபூட்டிய வில்லின் நாணை இம் மான்கள் மீது இழுத்து எய்யத் திறமையில்லாமற் போய்விட்டது. என் காதலியுடன் கூட வாழ்ந்து அவளுக்கு மருண்ட பார் வையைக் கற்பித்த மான்களல்லவோ அவற்றை எப்படி அம்பினால் கொல்வது?

விதூஷக : (அரசன் முகத்தைப் பார்த்து) மனதில் நினைத்து முணு, முணுக்கிறீர்கள். அதாவது தேவயை. என்னால் காட்டில் அழுவதாகிவிட்டது.

அரசன் : (புன்சிரிப்புடன்) வேறேன்ன? தோழனுடைய சொல்லை தட்டக்கூடாதென்று நானும் நின்றுவிட்டேன்.

விதூஷக : சிரஞ்சீவியாயிருங்கள். நான் போய்வருகிறேன். (போக முயலல்)

அரசன் : நில் தோழா; நான் சொல்லி முடிக்கவில்லை.

விதூஷக : மகாராஜா கட்டளை.

அரசன் : நன்றாகத் தூங்கு; பின்னர் சுலபமானதொரு வேலையி ருக்கிறது. அதில் நீ எனக்கு துணைசெய்ய வேண்டும்.

விதூஷக : அதுவா! தெரியுமே. மோதகம் சாப்பிடுவது தானே! பேஷாக நான் துணை செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—यत्र वक्ष्यामि । कः कोऽत्र भोः ।

( प्रविश्य । )

दौवारिकः—[ प्रणम्य । ] आणवेदु भट्टा । आज्ञापयतु भर्ता ।

राजा—रैवतक, सेनापतिस्तावदाहूयताम् ।

दौवारिकः—तह । ( इति निष्क्रम्य सेनापतिना सह पुनः प्रविश्य । ) एसो अण्णावअणुक्कण्ठो भट्टा इदो दिण्णदिट्ठी एव्व चिट्ठदि । उवसप्पदु अज्जो । तथा । एष आज्ञावचनोत्कण्ठो भर्तेतो दत्तदृष्टिरेव तिष्ठति । उपसर्पत्वार्यः ।

सेनापतिः—( राजानमवलोक्य । ) दृष्टदोषापि स्वामिनि मृगया केवलं गुण एव संवृत्ता । तथा हि देवः

अनवरतधनुर्ज्यास्फालनक्रूरपूर्वं
रविकिरणसहिष्णु क्लेशलेशैरभिन्नम् ।
अपचितमपि गात्रं व्यायतत्वादलक्ष्यं
गिरिचर इव नागः प्राणसारं बिभर्ति ॥ ४ ॥

( उपेत्य । ) जयतु स्वामी । गृहीतश्वापदमरण्यम् । किमिति स्थीयते ।

राजा—मन्दोत्साहः कृतोऽस्मि मृगयापवादिना माठव्येन ।

सेनापतिः—( जनान्तिकम् । ) सखे, स्थिरप्रतिबन्धो भव । अहं तावत्स्वामिनश्चित्तवृत्तिमनुवर्तिष्ये । ( प्रकाशम् । ) प्रलपत्येष वैधेयः । ननु प्रभुरेव निदर्शनम् ।

मेदश्छेदकृशोदरं लघु भवत्युत्थानयोग्यं वपुः
सत्त्वानामपि लक्ष्यते विकृतिमच्चित्तं भयक्रोधयोः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : எங்கேயென்பதைச் சொல்லி விடுகின்றேன். ஏ! யாரங்கே?

(வாயில் காப்போன் பிரவேசிக்கிறான்)

வாயில் காப்போன் : (வணங்கி) கட்டளை! மகாராஜா!

அரசன் : ஏ! இரைவதகா! சேனாதிபதியை அழைத்து வா.

வாயில் காப்போன் : அப்படியே. (வெளியே சென்று சேனாதிபதியுடன் மறுபடி பிரவேசிக்கிறான்) மன்னர் பெருமான் இவ்விடம் நோக்கியபடி ஏதோ தங்களுக்கு கட்டளையிடக் காத்து நிற்கிறார். கிட்ட அணுகுங்கள்.

சேனாதிபதி : (அரசனைப்பார்த்து) வேட்டை தீயது எனக் கருதினாலும் நமது வேந்தனுக்கு அது நன்மையைச் செய்திருக் கிறது.

2.4 வில்நாணை ஓயாமல் இழுத்திழுத்து தழும்பேறிய முன் புறத்தையுடையதும், பரிதியின் வெம்மையைப் பொறுக்க வல்லதும், களைப்பென்பதே சிறிதுமறியாததும் மெலி வுற்றும் திடகாத்திரமுடையதுமான மலையிலே திரியும் யானை போலன்றோ வேந்தன் காட்சியளிக்கின்றான். (கிட்டப் போய்) வெற்றியுண்டாக வேந்தே! காட்டு விலங்கு களை வளைத்து விட்டோம். இனித் தாமதமேன்?

அரசன் : வேட்டை கூடாதென்று மாடவியன் கூறிய வார்த்தைகளால் உற்சாகம் குறைந்து விட்டது.

சேனாதிபதி : (புறத்தே) நண்பா! உன் சொற்களில் உறுதியாயிரு. நான் மன்னரின் மனதிற்கிசையப் பேசுகின்றேன். (உரக்க) இந்த மடையன் உளறிக் கொட்டட்டும். தாங்களே நிச்சயம் செய்யுங்கள்.

2.5 கொழுப்புக் கரைந்து வயிறு சுருங்கி இலகுவாக ஓடி ஆடும் தன்மையை சரீரம் பெறுகின்றது. மிருகங்களின் மனமும் பயத்தாலும் கோபத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

उत्कर्षः स च धन्विना यदिषवः सिध्यन्ति लक्ष्ये चले
मिथ्यैव व्यसनं वदन्ति मृगयामीदृग्विनोदः कुतः ॥ ५ ॥

विदूषकः—( सरोषम् ) अवेहि रे उच्छाहहेतुअ । अत्तभवं पकिदिं आपण्णो । तुमं दाव अडवीदो अडवीं आहिण्डन्तो णरणासिआलोलुवस्स जिण्णरिच्छस्स कस्स वि मुहे पडिस्ससि । अपेहि रे उत्साहहेतुक । अत्रभवान्प्राकृतिमापन्नः । त्वं तावदटवीतोऽटवीमाहिण्डमानो नरनासिकालोलुपस्य जीर्णऋक्षस्य कस्यापि मुखे पतिष्यसि ।

राजा—भद्र सेनापते, आश्रमसंनिकृष्टे स्थिताः स्मः । अतस्ते वचो नाभिनन्दामि । अद्य तावत्

गाहन्तां महिषा निपानसलिलं शृङ्गैर्मुहुस्ताडितं
छायाबद्धकदम्बकं मृगकुलं रोमन्थमभ्यस्यतु ।
विश्रब्धं क्रियतां वराहततिभिर्मुस्ताक्षतिः पल्वले
विश्रामं लभतामिदं च शिथिलज्याबन्धमस्मद्धनुः ॥ ६ ॥

सेनापतिः—यत्प्रभविष्णवे रोचते ।

राजा—तेन हि निवर्तय पूर्वगतान्वनग्राहिणः । यथा न मे सैनिकास्तपोवनमुपरुन्धन्ति तथा निषेद्धव्याः । पश्य ।

शमप्रधानेषु तपोवनेषु
गूढं हि दाहात्मकमस्ति तेजः ।
स्पर्शानुकूला इव सूर्यकान्ता-
स्तदन्यतेजोऽभिभवाद्वमन्ति ॥ ७ ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல உணர்ச்சிகளை அடைகிறது. அசையும் குறியில் பாணம் சென்றுதைக்கும் பொழுது வில்லாளிகட்குப் பெருமகிழ்ச்சியைத் தருகிறது. வேட்டை தீயதென்று சொல்வதெல்லாம் பொய். இதைப்போல் வேறொரு பொழுது போக்கு உண்டா ?

விதூஷக : கிளர்ச்சியைத் தூண்டும் நீர் தூரப்போம். மன்னன் தனது இயற்கை நிலையை அடைந்து விட்டார். வேண்டு மானால் நீர் காடுகாடாய்த் திரிந்து வேட்டையாடும் மனி தரின் மூக்குக்கு ஆசைப்பட்டுத் திரியும் கிழக்கரடியின் வாயில் அகப்பட்டு நாசமாய்ப்போம்.

அரசன் : நல்லது சேனாபதி! நாம் இருப்பது ஆசிரம பூமி ஆத லால் உங்கள் பேச்சு எனக்கு உடன்பாடான தன்று.

2.6 இன்று குளத்திலுள்ள நீரைக் கொம்புகளால் அடித்துக் கலக்கி எருமைகள் இச்சைபோல முழுகிக் குளிக்கட்டும். மர நிழலில் மான் கூட்டங்கள் மந்தை மந்தையாக அசை போட்டுக் கிடக்கட்டும். பன்றிக் கூட்டங்கள் குட்டையோ ரங்களிலுள்ள கோரைக் கிழங்குகளையும் கிண்டி உண்டு நிம்மதியாகக் காலங்கழிக்கப்படும். எனது இந்த வில்லும் நாண் தளர்ந்து ஓய்வு பெறப்படும்.

சேனாபதி : சித்தம் மகாராஜா !

அரசன் : முன்னர் சென்ற வேடர்களைத் திரும்பி வரச்செய். இத் தபோவனத்தில் எவ்வித இடையூறும் செய்யா வண்ணம் எனது சைனியத்துக்கு உத்தரவிடு.

2.7 சாந்தமே உருவான இத்தவச் செல்வரிடம் எரிக்கும் தன் மையுடைய நெருப்பும் மறைந்து கிடக்கிறது. தொடு வதற்கு இன்பம் பயக்கும் சூரிய காந்தக்கல் பரிதியின் ஒளிபட்டதும் நெருப்பைக் கக்குகிறதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**सेनापतिः**—यदाज्ञापयति स्वामी ।

**विदूषकः**—गच्छ भो दासीएपुत्त । धंसदु दे उच्छाहवुत्तन्तो
गच्छ भो दास्याःपुत्र । ध्वंसतां त उत्साहवृत्तान्तः ।

( निष्क्रान्तः सेनापतिः । )

**राजा**—( परिजनं विलोक्य । ) अपनयन्तु भवत्यो मृगयावेषम् । रैवतक, त्वमपि स्वं नियोगमशून्यं कुरु ।

**परिजनः**—जं देवो आणवेदि । ( इति निष्क्रान्तः । ) यद्देव आज्ञापयति ।

**विदूषकः**—किदं भवदा णिम्मच्छिअं । संपदं एदस्सिं पादवच्छाआए विरइदलदाविदाणदंसणीआए आसणे णिसीददु भवं जाव अहं वि सुहासीणो होमि । कृतं भवता निर्मक्षिकम् । सांप्रतमेतस्यां पादपच्छायायां विरचितलतावितानदर्शनीयायामासने निषीदतु भवान्, यावदहमपि सुखासीनो भवामि ।

**राजा**—गच्छाग्रतः ।

**विदूषकः**—एदु भवं । एतु भवान् ।

( इत्युभौ परिक्रम्योपविष्टौ । )

**राजा**—माठव्य, अनवाप्तचक्षुःफलोऽसि । येन त्वया दर्शनीयं न दृष्टम् ।

**विदूषकः**—णं भवं अग्गदो मे वट्टदि । ननु भावनग्रतो मे वर्तते ।

**राजा**—सर्वः कान्तमात्मीयं पश्यति । तामाश्रमललामभूतां शकुन्तलामधिकृत्य ब्रवीमि ।

**विदूषकः**—( स्वगतम् ) होदु । से अवसरं ण दाइस्सं । ( प्रकाशम् ) भो वअस्स, ते तावसकण्णआ अब्भत्थणीआ दीसदि । भवतु । अस्यावसरं न दास्ये । भो वयस्य, ते तापसकन्यकाभ्यर्थनीया दृश्यते ।

**राजा**—सखे, न परिहार्ये वस्तुनि पौरवाणां मनः प्रवर्तते ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனாபதி : தேவரீர் கட்டளைப்படியே.

விதூஷக : உன் ஜம்பமெல்லாம் இங்கே பலிக்காது மச்சான். வந்த வழியே போ.

(சேனாபதி போகிறான்)

அரசன் : (பரிசனங்களைப்பார்த்து) வேட்டை உடைகளைக் களையுங்கள். ஏ! இரைவதகா, நீயும் உன் தொழிலைப்பார்.

பரிசனம் : தேவரீர் கட்டளைப்படியே ! (போகிறார்கள்)

விதூஷக : ஒரு ஈ கூட இல்லாமல் கலைத்துவிட்டீர்கள். இனி மர நிழலில் கொடிகள் படர்ந்த நீலவிதானத்தின் கீழ் உள்ள அழகிய கல்லின் மேல் இருங்கள். நானும் சுகமாக இருப்பேன்.

அரசன் : சரி நீ முன்னாற்செல்.

விதூஷக : அப்படியே மகாராஜா. (இருவரும் சென்று அமர்கின்றனர்)

அரசன் : மாடாவியா! உன் கண்ணிருந்தும் அதனாற் பெறக்கூடிய பலனை நீ பெறவில்லை. அழகியதொரு காட்சியை நீ தவற விட்டுவிட்டாய்.

விதூஷக : இறைவா ! தாங்களே என்முன் காட்சியளிக்கும் பொழுது நான் அப்படி ஒன்றையும் தவறவிடவில்லையே !

அரசன் : எல்லோரும் தமக்கினிய பொருளில் மேன்மை காண் கிறார்கள். ஆசிரமத்துக்கு திலகம் போன்ற சகுந்தலையைப் பற்றியே நான் குறிப்பிடுகிறேன்.

விதூஷக : (தனக்குள்) சரி ஆகட்டும் இதற்கு நான் இடங்கொடேன். (உரக்க) ஆகா ! தோழரே! போயும் போயும் அந்தத் துறவி களையா காதலித்தீர்.

அரசன் : தோழா ! பூருவின் குலத்திற் பிறந்தவர்களது மனம் விலக் கப்பட்ட பொருளிற் செல்லாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

सुरयुवतिसंभवं किल मुनेरपत्यं तदुज्झिताधिगतम् ।
अर्कस्योपरि शिथिलं च्युतमिव नवमालिकाकुसुमम् ॥ ८ ॥

विदूषकः—( विहस्य )—जह कस्स वि पिण्डखज्जूरेहिं उव्वेजिदस्स तिन्तिणीए अहिलासो भवे, तह इत्थिआरदणपरिभाविणो भवदो इअं अब्भत्थणा । यथा कस्यापि पिण्डखर्जूरैरुद्वेजितस्य तिन्तिण्यामभिलाषो भवेत्, तथा स्त्रीरत्नपरिभाविनो भवत इयमभ्यर्थना ।

राजा—न तावदेनां पश्यसि येनैमवादीः ।

विदूषकः—तं क्खु रमणिज्जं जं भवदो वि विम्हअं उप्पादेदि । तत्खलु रमणीयं यद्भवतोऽपि विस्मयमुत्पादयति ।

राजा—वयस्य, किं बहुना ।

चित्रे निवेश्य परिकल्पितसत्त्वयोगा
रूपोच्चयेन मनसा विधिना कृता नु ।
स्त्रीरत्नसृष्टिरपरा प्रतिभाति सा मे
धातुर्विभुत्वमनुचिन्त्य वपुश्च तस्याः ॥ ९ ॥

विदूषकः—जइ एव्वं पच्चादेसो दाणिं रूववदीणं । यद्येवं प्रत्यादेश इदानीं रूपवतीनाम् ।

राजा—इदं च मे मनसि वर्तते ।

अनाघ्रातं पुष्पं किसलयमलूनं कररुहै-
रनाविद्धं रत्नं मधु नवमनास्वादितरसम् ।
अखण्डं पुण्यानां फलमिव च तद्रूपमनघं
न जाने भोक्तारं कमिह समुपस्थास्यति विधिः ॥ १० ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.8 பிறந்தது தேவமாதின் வயிற்றிலாம். முனிவருக்கு மகளாம் அவள் கைவிட்டதால் இவரிடம் சேர்ந்தாளாம். காம்பொடிந்த நவமல்லிகை மலர் எருக்கஞ் செடிமேல் விழுந்தது போல.

விதூஷக : (சிரித்துக் கொண்டு) பேரீச்சம் பழத்தைத்தின்றவன் புளியம் பழத்துக்கு ஆசைப்பட்டானாம். நன்றாயிருக் கிறது தோழரே! அரண்மையிலுள்ள நாரீமணிகளை விட்டு இந்த வழியில் உங்கள் ஆசை திரும்பியது !

அரசன் : அவளைப் பாராதபடியால் நீ அப்படிச் சொல்லுகிறாய்.

விதூஷக : தாங்களே வியக்கும் அந்தப்பொருள் உண்மையில் அழகுடையதாய்த் தானிருக்க வேண்டும்.

அரசன் : அதிகம் பேசிப் பயனென்ன ?

2.9 ஓவியத்தில் உருவை முன்னர் எழுதி அதற்குத் தான் உயி ரூட்டினானே? அழகையெல்லாம் தனித்தனி கற்பனை யிலே திரட்டிப் பின்னர் தான் அந்த உருவத்தைச் செய் தானே இந்தப் பிரமன்! அவனுடைய ஆற்றலையும் அழகின் பெருமை யையும் நினைக்கிற பொழுது பெண் ணழகின் பேரெல்லை அவளிடத்துத்தான் முடிகிறதா !

விதூஷக : ஓகோ! அப்படியானால் உலகத்துச் சுந்தரிகளெல்லா ரையும் இவள் வென்று விட்டாளாக்கும்.

அரசன் : அது மட்டுமன்று.

2.10 கிள்ளாத துளிர், மோவாத மலர், துளையாத மணி, சுவையாத புதுத்தேன், புண்ணியத்தின் திரண்டபயன், மாசற்ற அழகு, இவளை அனுபவிக்க விதியாரைத்தான் தேடித் திரிகிறதோ நானறியேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

विदूषकः—तेण हि लहु परित्ताअदु णं भवं । मा कस्स वि तवस्सिणो इङ्गुदीतेल्लचिक्कणसीसस्स हत्थे पडिस्सदि । तेन हि लघु परित्रायतामेनां भवान् । मा कस्यापि तपस्विन इङ्गुदीतैलमिश्रचिक्कण-शीर्षस्य हस्ते पतिष्यति ।

राजा—परवती खलु तत्रभवती । न च संनिहितोऽत्र गुरुजनः ।

विदूषकः—अध भवन्तं अन्तरेण कीदिसो से दिट्ठिराओ । अथ भवन्तमन्तरेण कीदृशस्तस्या दृष्टिरागः ।

राजा—निसर्गादेवाप्रगल्भस्तपस्विकन्याजनः । तथापि तु

अभिमुखे मयि संहृतमीक्षितं
हसितमन्यनिमित्तकृतोदयम् ।
विनयवारितवृत्तिरतस्तया
न विवृतो मदनो न च संवृतः ॥ ११ ॥

विदूषकः—णं क्खु दिट्ठमेत्तस्स तुह अङ्कं आरोहदि । ननु खलु दृष्टमात्रस्य तवाङ्कमारोहति ।

राजा—मिथःप्रस्थाने पुनः शालीनतयापि काममाविष्कृतो भावस्तत्रभवत्या । तथा हि ।

दर्भाङ्कुरेण चरणः क्षत इत्यकाण्डे
तन्वी स्थिता कतिचिदेव पदानि गत्वा ।
आसीद्विवृत्तवदना च विमोचयन्ती
शाखासु वल्कलमसक्तमपि द्रुमाणाम् ॥ १२ ॥

विदूषकः—तेण हि गहीदपाधेओ होहि । किदं तुए उववणं तवोवणं त्ति पेक्खामि । तेन हि गृहीतपाथेयो भव । कृतं त्वयोपवनं तपो-वनमिति पश्यामि ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதூஷக : அப்படியானால் முந்துங்கள் அரசே! அவளைப் போய்க் காப்பாற்றுங்கள். இங்குதித் தைலம் பூசிச் சிக்குப் பிடித்த தலையையுடைய எந்தத் துறவி கையில் அது விழுந்து விடுமோ.

அரசன் : நங்கையும் சுயாதீனமற்றவள். தந்தையும் வெளியே போய் விட்டார்.

விதூஷக : அப்படியானால் அவளுடைய கண்கள் காட்டிய காதல் எத்தகையதோ ?

அரசன் : ஆசிரமப் பெண்கள் இயற்கையாகவே அடக்கமுடையவர்கள். இருந்தும்

2.11 நான் பார்க்கும் போது அவள் தன் பார்வையைத் திருப்பிக் கொள்ளுகிறாள். காதலால் அரும்பிய புன்முறுவலை வேறு காரணத்தால் உண்டானதாக அவளுடைய விநயம் காட்டிக் கொள்ளுகிறது. எனவே அவளுடைய காதல் முற்றாக வெளிப்படவுமில்லை. முற்றாக மறைந்து போகவுமில்லை.

விதூஷக : ஆமாம் நீங்கள் பார்த்த மாத்திரத்திலேயே அவள் வந்து உங்கள் மடியில் ஏறி உட்கார்ந்து விடவில்லை யாக்கும்.

அரசன் : அவர்கள் ஒன்றாகப் புறப்பட்ட பொழுது தன்னுள்ளத்தில் அரும்பிய காதலை நாணத்தோடு புலப்படுத்தினாள்.

2.12 சில அடி தூரம் சென்றதும் , தருப்பை நுனி பாதத்தைக் குத்தி விட்டதென்று கூறிக்கொண்டு திடீரென்று நின்று என் பக்கம் திரும்பிப் பார்த்தாள். மரக்கிளையில் மரவுரி சிக்கியதாகப் பாசாங்கு செய்தாள்.

விதூஷகன் : இனி உணவு சேகரித்துக் கொண்டு இங்கேயே தங்கி விட வேண்டியயது தான். இந்தத் தவவனத்தை உபவனமாக்கி விட்டீர்கள். அவ்வளவு தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—सखे, तपस्विभिः कैश्चित्परिज्ञातोऽस्मि । चिन्तय तावत्केनापदेशेन सकृदप्याश्रमे वसामः ।

विदूषकः—को अवरो अवदेसो । णं तुमं राआ । णीवारच्छट्ठभाअं अम्हाणं उपहरन्तु त्ति । कोऽपरोऽपदेशः । ननु त्वं राजा । नीवारषष्ठभागमस्माकमुपहरन्त्विति ।

राजा—मूर्ख, अन्यद्भागधेयमेतेषां रक्षणे निपतति, यद्रत्नराशीनपि विहायाभिनन्द्यम् । पश्य ।

यदुत्तिष्ठति वर्णेभ्यो नृपाणां क्षयि तत्फलम् ।
तपःषड्भागमक्षय्यं ददत्यारण्यका हि नः ॥ १३ ॥

( नेपथ्ये । )

हन्त, सिद्धार्थौ स्वः ।

राजा—( कर्णं दत्त्वा । ) अये, धीरप्रशान्तस्वरैस्तपस्विभिर्भवितव्यम् ।

( प्रविश्य । )

दौवारिकः—जेदु भट्टा । एदे दुवे इसिकुमारआ पडिहारभूमिं उवट्ठिदा । जयतु भर्ता । एतौ द्वौ ऋषिकुमारौ प्रतीहारभूमिमुपस्थितौ ।

राजा—तेन ह्यविलम्बितं प्रवेशय तौ ।

दौवारिकः—एसो पवेसेमि । ( इति निष्क्रम्य ऋषिकुमाराभ्यां सह प्रविश्य । ) इदो इदो भवन्ता । एष प्रवेशयामि । इत इतो भवन्तौ ।

( उभौ राजानं विलोकयतः । )

प्रथमः—अहो दीप्तिमतोऽपि विश्वसनीयतास्य वपुषः । अथवोपपन्नमेतदृषिभ्यो नातिभिन्ने राजनि । कुतः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : நண்பா, துறவிகளிற் சிலர் என்னை அறிந்து கொண் டார்கள். மறுபடியும் இந்த ஆச்சிரமத்தில் பிரவேசிப் பதற்கு ஏதாவது உபாயத்தைச் சொல்லு.

விதூஷக : இதற்கென்ன உபாயம் வேண்டியிருக்கிறது. தாங்கள் அரசனல்லவா ?

அரசன் : அப்படியானால் ?

விதூஷக : காட்டில் விளைந்த தானியத்தில் ஆறிலொரு பாகம் அரசிறை கொடுங்கள் என்று சொல்லிக் கொண்டு தபோவ னத்திற்குத் தாங்களே செல்லலாம்.

அரசன் : முட்டாள்! இவர்களுக்கு அரசனாயிருப்பதால் மற்றொரு அரசிறை எனக்குக் கிட்டியுள்ளது. அது இரத்தினக் குவையிலும் மேலாக மதிக்கப்படத்தக்கது. பார்: 2.13 வருணத்தவர் அரசர்க்குக் கொடுக்குந்திறை அழியுந் தன்மை உடையது. ஆனால் வனவாசிகளான இத்த போதனர் கொடுக்கும் ஆறிலொரு பாகம் அழியாத் தன் மையுடையது. (திரைமறைவில்) ஆகா பலன் கிடைத்து விட்டது ! கருதிய பலன் கிடைத்து விட்டது.

அரசன் : (காது கொடுத்து) ஓ ! மிகச் சாந்தமான குரல் ! துறவிக ளுடைய குரல்தான்.

வா.கா : வெற்றி, வெற்றி அரசே ! இரண்டு இருடி குமாரர்கள் தங்களைக் காணக் கடைவாசலில் காத்து நிற்கிறார்கள்.

அரசன் : அவர்களைத் தாமதமின்றி உள்ளே விடு.

வா.கா : இதோ அழைத்து வருகிறேன். (வெளியே சென்று இருடிகுமாரருடன் வருதல்) இப்படி வாருங்கள். இந்த வழியே வாருங்கள்.

(இருவரும் அரசனைக் காணல்)

இரு.குமா : ஆகா ! என்ன ஒளி நிறைந்த மேனி கண்டார்க்கு நம் பிக்கை யூட்டும் தோற்றம் இது பொருத்தமுடையதே அர சனும் இருடிகளைப் போன்றவனே. ஏனெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

अध्याक्रान्ता वसतिरमुनाप्याश्रमे सर्वभोग्ये
रक्षायोगादयमपि तपः प्रत्यहं संचिनोति ।
अस्यापि द्यां स्पृशति वशिनश्चारणद्वन्द्वगीतः
पुण्यः शब्दो मुनिरिति मुहुः केवलं राजपूर्वः ॥ १४ ॥

द्वितीयः—गौतम, अयं स बलभित्सखो दुष्यन्तः ।

प्रथमः—अथ किम् ।

द्वितीयः—तेन हि

नैतच्चित्रं यदयमुदधिश्यामसीमां धरित्री-
मेकः कृत्स्नां नगरपरिघप्रांशुबाहुर्भुनक्ति ।
आशंसन्ते सुरसमितयो बद्धवैरा हि दैत्यै-
रस्याधिज्ये धनुषि विजयं पौरुहूते च वज्रे ॥ १५ ॥

उभौ—( उपगम्य । ) विजयस्व राजन् ।

राजा—( आसनादुत्थाय । ) अभिवादये भवन्तौ ।

उभौ—स्वस्ति भवते ।

( इति फलान्युपहरतः । )

राजा—( सप्रणामं परिगृह्य । ) आज्ञापयितुमिच्छामि ।

उभौ—विदितो भवानाश्रमसदामिहस्थः । तेन भवन्तं प्रार्थयन्ते ।

राजा—किमाज्ञापयन्ति ।

उभौ—तत्रभवतः कण्वस्य महर्षेरसांनिध्याद्रक्षांसि न इष्टिविघ्नमुत्पादयन्ति । तत्कतिपयरात्रं सारथिद्वितीयेन भवता सनाथीक्रियतामाश्रम इति ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.14 முனிவர்களைப் போலவே எல்லார்க்கும் போக்கியமாயுள்ள ஆச்சிரமத்தில் அவனும் இருந்து வருகிறான். இரட்சையின் சேர்க்கையால் தினமும் தவம் தளைக்கிறது. முனியென்ற புண்ணியமான பெயருக்கு முன்னால் அரசன் என்னும் அடை கொடுக்கப்பட்டிருக்கிற தேயன்றி இவனும் முனிவனே! புலத்தைத் தன் வசமாக்கிய முனிவனுடைய பெயரைச் சாரண விரட்டையர் வானளாவப் புகழ்ந்து பாடுகின்றனர்.

இர.இ.கு : கௌதமரே! அப்போ இவர் தானா இந்திரனின் தோழனான துஷ்யந்தன்.

முத.இ.கு : வேறென்ன ?

இ.இரு.கு : 2.15 நகரத்துக் கதவின் தாழ்ப்பாளைப் போன்ற நீண்ட கையுடைய இவன் இக்கருங்கடல் சூழ்ந்த நிலத்தைத் தனியாக ஆட்சி செய்வது ஆச்சரியமன்று. அசுரரோடு பகைகொண்டு நிற்கும் தேவர் கூட்டம் இவனுடைய நாணேற்றிய வில்லையும் இந்திரனுடைய வச்சிரத்தையுமே நம்பியிருக்கிறது.

இருவரும் : (முன்வந்து) அரசனுக்கு வெற்றியுண்டாக!

அரசன் : (இருக்கைவிட்டெழுந்து) தங்களுக்கு வணக்கம்.

இருவரும் : நன்மையுண்டாவதாக! (பழங்களைக் கொடுத்தல்)

அரசன் : (தாழ்ந்து வணங்கி ஏற்றுக் கொண்டு) தங்கள் கட்டளையை எதிர்பார்க்கிறேன்.

இருவரும் : தாங்கள் இங்கே இருப்பது ஆச்சிரமத்திலுள்ளவர்களுக்கு தெரியும். ஆதலால் அவர்கள் தங்களிடம் வேண்டிக் கொள்ளுகின்றனர்.

அரசன் : அவர்கள் வேண்டுகோளென்ன கூறுங்கள்.

இருவரும் : பகவான் கண்ணுவ மகரிஷி இங்கேயில்லாதபடியால் நமது வேள்விக்கு இடையூறுண்டாகிறது. ஆதலால் சில இரவுகள் தாங்களும், சாரதியும் இங்கு தங்கி இந்த ஆச்சிரமத்தைக் காக்க வேண்டுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—अनुगृहीतोऽस्मि ।

विदूषकः—( अपवार्य । ) एसा दाणिं अणुऊला ते अब्भत्थणा । एषेदानीमनुकूला तेऽभ्यर्थना ।

राजा—( स्मितं कृत्वा । ) रैवतक, मद्वचनादुच्यतां सारथिः सबाणासनं रथमुपस्थापयेति ।

दौवरिकः—जं देवो आणवेदि । ( इति निष्क्रान्तः । ) यद्देव आज्ञापयति ।

उभौ—( सहर्षम् । )

अनुकारिणि पूर्वेषां युक्तरूपमिदं त्वयि ।
आपन्नाभयसत्रेषु दीक्षिताः खलु पौरवाः ॥१६॥

राजा—( सप्रमाणम् । ) गच्छतां पुरौ भवन्तौ । अहमप्यनुपदमागत एव ।

उभौ—विजयस्व । ( इति निष्क्रान्तौ । )

राजा—माठव्य, अप्यस्ति शकुन्तलादर्शने कुतूहलम् ।

विदूषकः—पढमं सपरीवाहं आसि । दाणिं रक्खसवुत्तन्तेण बिन्दूवि णावसेसिदो । प्रथमं सपरीवाहमासीत् इदानीं राक्षसवृत्तान्तेन बिन्दुरपि नावशेषितः ।

राजा—मा भैषीः । ननु मत्समीपे वर्तिष्यसे ।

विदूषकः—एस रक्खसादो रक्खिदो म्हि । एष राक्षसाद्रक्षितोऽस्मि ।

( प्रविश्य । )

दौवारिकः—सज्जो रधो भट्टिणो विजअप्पत्थाणं अवेक्खदि । एस उण णअरादो देवीणं आणत्तिहरओ करभओ आअदो । सज्जो रथो भर्तुर्विजयप्रस्थानमपेक्षते । एष पुनर्नगराद्देवीनामाज्ञप्तिहरः करभक आगतः ।

राजा—( सादरम् । ) किमम्बाभिः प्रेषितः ।

दौवारिकः—अह इं । अथ किम् ।

राजा—ननु प्रवेश्यताम् ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : இதுவே எனக்குப் பெரும் பேறாகும்.

விதூஷக : (புறத்தே) இந்த வேண்டுகோள் உங்களுக்கு வாய்ப் பானதே.

அரசன் : (புன்புறுவல் செய்து) இரைவதக! என் சாரதியிடம் தேரையும் வில்லையும் கொண்டு வருமாறு கூறு.

வா.கா : தேவரீர் கட்டளைப்படியே! (செல்கிறான்)

இருவரும் : 2.16 (மகிழ்ச்சியுடன்) உன் முன்னோரைப் பின் பற்றும் உனக்கு இது ஏற்புடையதே. பௌரவர்கள் இடருற்றவர் களுக்கு அபயமளிக்கும் தொண்டில் விரதம் பூண்டவ ராகவே இருந்து வருகிறார்கள்.

அரசன் : (தாழ்ந்து வணங்கி) தாங்கள் முன்னே செல்லுங்கள். நான் இதோ வருகிறேன்.

இருவரும் : வெற்றியுண்டாவதாக! (செல்கின்றனர்)

அரசன் : மாடவியா! சகுந்தலையைப் பார்க்க விரும்புகிறாயா?

விதூஷக : முதலிலே எனக்கு வெள்ளம் போல விருப்பம் பெரு கிடிச்சு, ஆனால் இப்பென்னடான்னா. இந்த ராட்சதர் பற்றிய பேச்சைக்கேட்டதே அது ஒரு துளி கூட இல்லாமற் போயிட்டுது.

அரசன் : பயப்படாதே! என் பக்கத்திலேயே நீ இருந்து கொள்.

விதூஷக : அப்படியானால் சரி நான் தப்பினேன்.

வா.கா : தேர் தயார். தேவரீருடைய வெற்றி வருகையை எதிர் பார்த்து நிற்கிறது. ஆனால் கோப்பெருந்தேவியின் ஆணையைக் கொண்டு கரபகன் நகரிலிருந்து வந்தி ருக்கிறான்.

அரசன் : (அன்புடன்) என்ன? தாயாரிடமிருந்தா?

வா.கா : ஆம்.

அரசன் : சரி அவனை அழைத்து வா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

दौवारिकः—तह । ( इति निष्क्रम्य करभकेण सह प्रविश्य । ) एसो भट्टा । उवसप्प । तथा । एष भर्ता । उपसर्प ।

करभकः—जेदु भट्टा । देवी आणवेदि । आआमिणि चउत्थदिअहे पुत्तपिण्डपालणो णाम उववासो भविस्सदि । तहिं दीहाउणा अवस्सं संभाविदव्वा त्ति । जयतु भर्ता । देव्याज्ञापयति । आगामिनि चतुर्थदिवसे पुत्रपिण्डपालनो नाम उपवासो भविष्यति । तत्र दीर्घायुषावश्यं संभावनीयेति ।

राजा—इतस्तपस्विकार्यम् । इतो गुरुजनाज्ञा । द्वयमनतिक्रमणीयम् । किमत्र प्रतिविधेयम् ।

विदूषकः—तिसङ्कु विअ अन्तराले चिट्ठ । त्रिशङ्कुरिवान्तराले तिष्ठ ।

राजा—सत्यमाकुलीभूतोऽस्मि ।

कृत्ययोर्भिन्नदेशत्वाद्द्वैधीभवति मे मनः ।
पुरः प्रतिहतं शैले स्रोतः स्रोतोवहो यथा ॥ १७ ॥

( विचिन्त्य । ) सखे, त्वमम्बया पुत्र इति प्रतिगृहीतः । अतो भवानितः प्रतिनिवृत्य तपस्विकार्यव्यग्रमानसं मामावेद्य तत्रभवतीनां पुत्रकृत्यमनुष्ठातुमर्हति ।

विदूषकः—णं क्खु मं रक्खोभीरुअं गणेसि । ननु खलु मां रक्षोभीरुकं गणयसि ।

राजा—( सस्मितम् ) कथमेतद्भवति संभाव्यते ।

विदूषकः—जह राआणुएण गन्तव्वं तह गच्छामि । यथा राजानुजेन गन्तव्यं तथा गच्छामि ।

राजा—ननु तपोवनोपरोधः परिहरणीय इति सर्वानानुयात्रिकांस्त्वयैव सह प्रस्थापयामि ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா.கா : அப்படியே ! (வெளியே சென்று கரபகனோடு திரும்பி வருதல்) இதோ.

அரசன் : வருக !

கரபகன் : வெற்றி வெற்றி வேந்தே! கோப்பெருந்தேவி கட்டளை யனுப்பிருக்கிறார். இன்றிலிருந்து நாலு நாட்களில் "புத்திர பிண்ட பாலனம்" என்னும் நோன்பு வருகிறது. அதற்கு நீடுவாழ்வீர் அங்கு வரவேண்டும்.

அரசன் : இங்கே முனிவர் கடமை, அங்கே தாயாரின் கட்டளை. ஒன் றையும் கைவிட முடியாது, இதற்கு என்ன செய்யலாம்.

விதூஷக : திரிசங்கு போல இரண்டுக்குமிடையில் தொங்க வேண்டியது தான்.

அரசன் : உண்மையாகவே என் மனம் துயரடைகிறது.

2.17 ஆற்றின் போக்கை இடைமறிக்கும் கற்பாறை போல என் மனமும் இரண்டு இடங்களிலுள்ள இரண்டு கடமைகளுக் கிடையில் பிளவுபட்டுள்ளது. (நினைவிலாழ்ந்து) மாடவியா! உன் னைத் தேவி தன் புதல்வனைப் போலவே ஆதரித்து வருகிறார். ஆதலால் நீ இங்கிருந்துபோய் முனிவர் கடமையில் எவ்வாறு என் மனம் ஈடுபட்டுக் குழம்பி யிருக்கிறதென்பதைக் கூறி, நீயே புதல்வர் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றி வைப்பாயாக.

விதூஷக : அப்படியானால் நான் ராட்சதர்களுக்குப் பயந்து விட்டேனென்று நீங்கள் நினைக்கப்படாது.

அரசன் : (புன்முறுவல் பூத்து) தங்களைப் போன்ற மகாபிராமணர் எவ்வாறு அப்படியெல்லாம் பயப்படுவது?

விதூஷக : அரசகுமாரன் எவ்வாறு நடந்து கொள்வாரோ அவ்வாறே நானும் நடந்து கொள்கிறேன்.

அரசன் : இந்தத் தபோவனம் கலவரமடையாதிருக்கும் நோக்கத் தோடு நான் எனது பரிவாரங்களையெல்லாம் உங்க ளோடு அனுப்பி விடுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

विदूषकः—तेण हि जुवराओ म्हि दाणिं संवुत्तो। तेन हि युवराजोऽस्मीदानीं संवृत्तः।

राजा—( आत्मगतम्। ) चपलोऽयं बटुः। कदाचिदस्मत्प्रार्थनामन्तःपुरेभ्यः कथयेत्। भवतु। एनमेवं वक्ष्ये। ( विदूषकं हस्ते गृहीत्वा। प्रकाशम्। ) वयस्य, ऋषिगौरवादाश्रमं गच्छामि। न खलु सत्यमेव तापसकन्यकायां ममाभिलाषः। पश्य।

क्व वयं क्व परोक्षमन्मथो
मृगशावैः सममेधितो जनः।
परिहासविजल्पितं सखे
परमार्थेन न गृह्यतां वचः॥ १८॥

( इति निष्क्रान्ताः सर्वे। )

इति द्वितीयोऽङ्कः।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதூஷக : அப்படியானால் நான் இப்போதே அரசிளங் குமர னானேன்.

அரசன் : (தனக்குள்) இவன் வாயாடி , எனது இப்போதைய முயற சியை அந்தப்புரத்தில் உளறி விடுவான். நல்லது இவ் வாறு இவனு க்குச் சொல்வேன். (விதூஷகன் கையைப் பிடித்தக் கொண்டு) முனிவர்களிடத்துள்ள அபிமானத் தால் நான் இந்த ஆசிரமத் துக்கச் செல்கின்றேன். உண் மையிலேயே இந்தத் தாபச கன்னியான சகுந்தலையிடம் எனக்கு எவ்விதப் பற்றுதலு மில்லை. பார் நாமெங்கே? மான்களோடு கூடி வளர்ந்துகாத லென்ப தையறியாத அவளெங்கே. நண்பா! வேடிக்கையாகப் பேசிய பேச்சை நீ உண்மையாக நம்பிவிடாதே.

விதூஷக : ஆமா! வேறென்ன.

*(எல்லோரும் போதல்)*

**இரண்டாம் அங்கம் முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# तृतीयोऽङ्कः ।

( ततः प्रविशति कुशानादाय यजमानशिष्यः । )

शिष्यः—अहो, महानुभावः पार्थिवो दुष्यन्तः। प्रविष्टमात्र एवाश्रमं तत्रभवति राजनि निरुपप्लवानि नः कर्माणि संवृत्तानि।

का कथा बाणसंधाने ज्याशब्देनैव दूरतः।
हुंकारेणेव धनुषः स हि विघ्नानपोहति ॥ १ ॥

यावदिमान्वेदिसंस्तरणार्थं दर्भानृत्विग्भ्य उपनयामि ( परिक्रम्यावलोक्य च। आकाशे। ) प्रियंवदे, कस्येदमुशीरानुलेपनं मृणालवन्ति च नलिनीपत्राणि नीयन्ते । ( श्रुतिमभिनीय। ) किं ब्रवीषि । आतपलङ्घनाद्बलवदस्वस्था शकुन्तला। तस्याः शरीरनिर्वापणायेति । तर्हि त्वरितं गम्यताम्। सा खलु भगवतः कण्वस्य कुलपतेरुच्छ्वसितम्। अहमपि तावद्वैतानिकं शान्त्युदकमस्यै गौतमीहस्ते विसर्जयिष्यामि। ( इति निष्क्रान्तः। )

## विष्कम्भकः।

( ततः प्रविशति कामयमानावस्थो राजा। )

राजा—( निःश्वस्य। )

जाने तपसो वीर्यं सा बाला परवतीति मे विदितम्।
न च निम्नादिव सलिलं निवर्तते मे ततो हृदयम् ॥ २ ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது அங்கம்

**(வெள்ளித் தலைவனின் சீடன் கையிற் குசைப்புல்லுடன வருதல்)**

சீடன் : ஆகா! துஷ்யந்த மன்னர் பேராற்றலுடையவர். அம் மகானுபவர், இவ்வாச்சிரமத்திற்கு வந்ததும் எங்களுக்குண்டான விக்கினங்கள் எல்லாம் நீங்கிவிட்டன.

3.1 தூரத்திலிருந்து அவர் பாணத்தை தொடுத்தும், வில் நாணினின்றும் புறப்படுகின்ற உம்கார சத்தத்தினாலேயே சகல இன்னல்களும் மறைகின்றனவெனின் அவர் எய்யும் திற மையைப் பற்றிச் சொல்வதற்கு வேறு என்ன உள்ளது?

வேதிகையில் தூவுவதற்காக வேதியரிடம் இந்தத் தருப்பைப் புல்லை எடுத்துச் செல்கிறேன். (நடந்தவாறு ஆகாயத்தை பார்த்துக்கொண்டு) பிரியம்வதை! இந்தத் தண்டுடன் கூடிய தாமரை இலைகளையும், விலாமிச்சக் குழம்பையும் யாருக்காக எடுத்துச் செல்கிறாய்? (பதில் கேட்டதாக அபிநயித்துக் கொண்டு) என்ன சொல்கிறாய்? சூரிய வெப்பத்தினால் மிகவாடித் தன் நிலைமாறி வருந்தும் சகுந்தலைக்குக் குளிர்ச்சியுடண்டாக்கவா? அப்படியானால் அவளை நன்றாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். வணக்கத்திற்குரிய கண்ணுவ ரிஷியின் உயிர் போன்றவள் அவள். நானும் அவள் வெப்பத்தைத் தணிக்க சாந்தி தரும் புண்ணிய தீர்த்தத்தை கௌதமி கையில் அனுப்பி வைக்கிறேன்.

**(முகவுரையின் முடிவு)**

(அப்போது காதல் நோயினால் பீடிக்கப்பட்டவன் போல் அரசன் வருதல்)

அரசன் : (பெருமூச்சு விட்டவாறு)

3.2 தவத்தின் வலிமையை அறிவேன். இந்த இளம் பெண் சுதந்திரமற்றவள் என்பதையும் அறிவேன். இருந்தும் இம்மனத்தை அவளிடமிருந்து திருப்ப முடியவில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

भगवन्कुसुमायुध, त्वया चन्द्रमसा च विश्वसनीयाभ्यामतिसंधीयते कामिजनसार्थः । कुतः ।

तव कुसुमशरत्वं शीतरश्मित्वमिन्दो-
र्द्वयमिदमयथार्थं दृश्यते मद्विधेषु ।
विसृजति हिमगर्भैरग्निमिन्दुर्मयूखै-
स्त्वमपि कुसुमबाणान्वज्रसारीकरोषि ॥ ३ ॥

( मदनबाधां निरूप्य । सासूयम् । ) भगवन्मन्मथ । कुतस्ते कुसुमायुधस्य शरतैक्ष्ण्यमेतत् । ( स्मृत्वा । ) आं ज्ञातम् ।

अद्यापि नूनं हरकोपवह्नि-
स्त्वयि ज्वलत्यौर्व इवाम्बुराशौ ।
त्वमन्यथा मन्मथ मद्विधानां
भस्मावशेषः कथमेवमुष्णः ॥ ४ ॥

अथवा—

अनिशमपि मकरकेतुर्मनसो रुजमावहन्नभिमतो मे ।
यदि मदिरायतनयनां तामधिकृत्य प्रहरतीति ॥ ५ ॥

( सखेदं परिक्रम्य । ) क्व नु खलु संस्थिते कर्मणि सदस्यैरनुज्ञातः श्रमक्लान्तमात्मानं विनोदयामि । ( निःश्वस्य । ) किं नु खलु मे प्रियादर्शनादृते शरणमन्यत् । यावदेनामन्विष्यामि । ( सूर्यमवलोक्य । ) इमामुग्रातपां वेलां प्रायेण लतावलयवत्सु मालिनीतीरेषु ससखीजना शकुन्तला गमयति । तत्रैव तावद्गच्छामि ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(காதலால் வருந்துபவன் போல் நடித்துக்கொண்டு) மாரனே! மலர்களை ஆயுதமாக உடையவனே! நம்பிக்கைக்குப் பாத்திரமான நீயும் சந்திரனும் காதற் கூட்டத்தவரை வஞ்சித்து விட்டீர்கள்.

3.3 உனது மலர் அம்புகளும், சந்திரனின் குளிர்ந்த கிரணங்களுமாகிய இவ்விரண்டும் என் விஷயத்தில் பொய்த்து விட்டன. ஏனெனில் சந்திரன் பனியை உள்ளடக்கிக் கொண்டு தீக்கிரணங்களைப் பரப்புகிறது. நீயே உனது மலரம்புகளை வச்சிரம் ஆக்குகிறாய் (காதலால் வருந்துபவன் போல நடித்து கோபத்தோடு) காதற் கடவுளே! என்னிடத்தில் ஏன் நீ கருணை காட்டவில்லை. மலர்களை ஆயுதமாகவுடைய உன்னிடத்தில் இக்கடுமை எங்கிருந்து வந்தது. (நினைத்தவாறு) ஆம் அறிந்து கொண்டேன்.

3.4 சிவனுடைய கோபத்தின் வெப்பம் இன்னுங் கூட உன்னிடத்தில், சமுத்திரத்தின் நடுவிலுள்ள வடவைத் தீப்போல், கொதிப்படைந்து காணப்படுகிறது. இல்லாவிடில் சாம்பலாய் போன மன்மதனே! நீ எவ்வாறு என் போன்றவரிடம் இவ்வாறு வெப்பங்காட்டுவாய்.

3.5 மீனைக் கொடியாகக் கொண்டுள்ள மன்மதன், எனக்கு ஓயாது துன்பத்தையே கொடுப்பவனாய் இருந்தும் மயக்கும் நீண்ட விழியாளின் நினைவையும் தருவதால் எனக்கு இன்பம் தருபவனாயும் இருக்கின்றான்.

(களைப்புடன் நடந்தவாறு) தபோதனரின் கடமைகளை நிறைவேற்றியபின் அவர்களால் விடை கொடுத்து அனுப்பப்பட்ட நான் எங்கே சென்று என் மனக்களைப் பைப் போக்கிக் கொள்வேன். (பெருமூச்சு விட்டு) என் காதலியைப் பார்ப்பதைவிட வேறென்ன உள்ளது? நல்லது அவளைத் தேடிப்போவேன். (சூரியனைப் பார்த்தவாறு) சூரிய வெப்பம் மிகுந்துள்ள இந்த நேரத்தை சகுந்தலை தன் தோழிகளுடன் மாலினி நதிக்கரையிலுள்ள கொடி மண்டபத்தில் தான் கழிப்பாள் நானும் இப்போது அங்கே செல்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(परिक्रम्य स्पर्शं रूपयित्वा ।) अहो प्रवातसुभगोऽयमुद्देशः ।

शक्यमरविन्दसुरभिः कणवाही मालिनीतरङ्गाणाम् ।
अङ्गैरनङ्गतप्तैरविरलमालिङ्गितुं पवनः ॥ ६ ॥

(परिक्रम्यावलोक्य च ।) अस्मिन्वेतसपरिक्षिप्ते लतामण्डपे संनिहितया तया भवितव्यम् । तथा हि । (अधो विलोक्य ।)

अभ्युन्नता पुरस्तादवगाढा जघनगौरवात्पश्चात् ।
द्वारेऽस्य पाण्डुसिकते पदपङ्क्तिर्दृश्यतेऽभिनवा ॥ ७ ॥

यावद्विटपान्तरेणावलोकयामि । ( परिक्रम्य तथा कृत्वा सहर्षम् । ) अये, लब्धं नेत्रनिर्वाणम् । एषा मे मनोरथप्रियतमा सकुसुमास्तरणं शिलापट्टमधिशयाना सखीभ्यामन्वास्यते । भवतु । श्रोष्याम्यासां विश्रम्भकथितानि । ( इति विलोकयन्स्थितः । )

( ततः प्रविशति यथोक्तव्यापारा सहसखीभ्यां शकुन्तला । )

सख्यौ—( उपवीज्य सस्नेहम् । ) हला सउन्दले, अवि सुहेदि दे णलिणीपत्तवादो । हला शकुन्तले, अपि सुखयति ते नलिनीपत्रवातः ।

शकुन्तला—किं वीअअन्ति मं सहीओ । किं वीजयतो मां सख्यौ ।

( सख्यौ विषादं नाटयित्वा परस्परमवलोकयतः । )

राजा—बलवदस्वस्थशरीरा शकुन्तला दृश्यते । ( सवितर्कम् । ) तत्किमयमातपदोषः स्यात् । उत यथा मे मनसि वर्तते । ( साभिलाषं निर्वर्ण्य । ) अथवा कृतं संदेहेन ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நடந்துபரிசத்தினால் சுகம் கண்டவன் போல் அபிநயம் செய்து கொண்டு) ஆகா! தென்றல் உலாவும் இந்த இடம் மிக இனிமையானது.

3.6 தாமரை மலரின் மணத்தைப் பெற்ற மாலினி நதியின் சிறு திவலைகளைக் கொண்ட இத்தென்றலை மன் மதனின் காதற் சேட்டையால் வெதும்பிய இவ்வங்கங்களால் இறுகத் தழுவலாம். (சுற்றிவரப் பார்த்துக் கொண்டு நடந்து) மூங்கில் சூழ்ந்த இக்கொடி மண்டபத்திலே தான் அவள் இருக்க வேண்டும். ஏனெனில்

3.7 அதன் வாசல் அருகே காணப்படும் வெண் மணலில் பதிந்துள்ள பாதச் சுவட்டின் அடையாளங்கள் முன்புறம் உயர்ந்தும், பின்புறம் பின்பக்கத்தின் சுமையினால் தாழ்ந்தும் காணப்படுகின்றன. நல்லது இக்கிளைகளுக் கிடையாகப் பார்ப்பேன். (அவ்வாறு செய்து ஆனந்தத் துடன் நடந்துகொண்டு) ஆகா! கண்களாற் காணக்கூடிய பேரின்பத்தைக் கண்டேன். என் உள்ளம் விரும்பிய அன்பின் செல்வி, மலர்களால் மூடப்பட்ட கற்பாறையில் சாய்ந்துகொண்டு சேடியரால் சேவிக்கப்படுகின்றாள். ஆகட்டும் இவர்களது அந்தரங்கப் பேச்சுக்களைக் கேட் பேன். (பார்த்துக்கொண்டு நிற்கிறான்)

(சகுந்தலை தன் தோழியருடன் முன்சொன்னபடி காணப்படுதல்)

தோழியர் : (விசிறியவாறு ஆதரவோடு) தோழி சகுந்தலை! தாமரை இலைகளால் வீசியகாற்று உனக்குச் சுகத்தை தரு கின்றதா?

சகுந்தலை : என்ன?என் தோழியர் எனக்கு விசிறுகின்றதா? (தோழியர் சோகம் உள்ளவராய் அபிநயத்துக்கொண்டு ஒருவரை யொருவர் பார்க்கின்றனர்)

அரசன் : சகுந்தலை மிகவும் நோயுற்றவளாய்க் காணப்படுகிறாள். அது வெயிலின் கொடுமையினாலா அல்லது என்னுடைய நோய் தான் அவளுக்கும் உண்டாகிவிட்டதா? (ஆவல் நிறைந்தவனாய்ப் பார்த்துக்கொண்டு) அதைப்பற்றி ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

स्तनन्यस्तोशीरं शिथिलितमृणालैकवलयं
प्रियायाः साबाधं किमपि कमनीयं वपुरिदम् ।
समस्तापः कामं मनसिजनिदाघप्रसरयो-
र्न तु ग्रीष्मस्यैवं सुभगमपराद्धं युवतिषु ॥ ८ ॥

प्रियंवदा—( जनान्तिकम् ) अणसूए, तस्स राएसिणो पढमदंसणादो आरहिअ पज्जुस्सुआ विअ सउन्दला । किंणु क्खु से तण्णिमित्तो अअं आतङ्को भवे । अनसूये तस्य राजर्षेः प्रथमदर्शनादारभ्य पर्युत्सुकेव शकुन्तला । किं नु खलु तस्यास्तन्निमित्तोऽयमातङ्को भवेत् ।

अनसूया—सहि, ममवि ईदिसी आसङ्का हिअअस्स । होदु । पुच्छिस्सं दाव णं । ( प्रकाशम् ) सहि, पुच्छिदव्वासि किंपि । बलवं क्खु दे संदावो । सखि, ममापीदृश्याशङ्का हृदयस्य । भवतु । प्रक्ष्यामि तावदेनाम् । सखि, प्रष्टव्यासि किमपि । बलवान्खलु ते संतापः ।

शकुन्तला—( पूर्वार्धेन शयनादुत्थाय । ) हला, किं वत्तुकामासि । हला, किं वक्तुकामासि ।

अनसूया—हला सउन्दले, अणब्भन्तरा क्खु अम्हे मदणगदस्स वुत्तन्तस्स । किंदु जादिसी इतिहासणिबन्धेसु कामअमाणाणं अवत्था सुणीअदि तादिसीं दे पेक्खामि । कहेहि किंणिमित्तं दे संदावो । विआरं क्खु परमत्थदो अजाणिअ अणारम्भो पडिआरस्स । हला शकुन्तले, अनभ्यन्तरे खल्वावां मदनगतस्य वृत्तान्तस्य । किंतु यादृशीतिहासनिबन्धेषु कामयमानानामवस्था श्रूयते तादृशीं तव पश्यामि । कथय किंनिमित्तं ते संतापः । विकारं खलु परमार्थतोऽज्ञात्वानारम्भः प्रतीकारस्य ।

राजा—अनसूयामप्यनुगतो मदीयस्तर्कः ।

शकुन्तला—( आत्मगतम् । ) बलिअं क्खु मे अहिणिवेसो । दाणिं वि सहसा एदाणं ण सक्कणोमि णिवेदिदुं । बलवान्खलु मेऽभिनिवेशः इदानीमपि सहसैतयोर्न शक्नोमि निवेदयितुम् ।

प्रियंवदा—सहि सउन्दले, सुट्ठु एसा भणादि । किं अत्तणो आतङ्कं उवेक्खसि । अणुदिअहं क्खु परिहीअसि अङ्गेहिं । केवलं लावण्णमई छाआ तुमं ण मुञ्चदि । सखि शकुन्तले, सुष्ठ्वेषा भणति ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.8 சந்தனக் குழம்பு பூசிய மார்பகங்களும், தாமரைத்தண்டா லான தளர்ந்த ஒரே கைவளையமும், என் காதலிக்கு. இணையற்ற அழகைத் தருகின்றன. காதலின் தாபமும், கோடையின் வெப்பமும் சமமானது எனினும், கோடையின் வெப்பம் மாத்திரம், இளம் பெண்களுக்கு இத்தகைய அழகை ஒருக்காலும் தராது.

பிரியம்வதை : (ஒரு பக்கமாய்) அனுசூயா, அந்த ராச ரிஷியைக் கண்டது முதல் சகுந்தலை மிகுந்த சஞ்சலமுள்ளவள் போல் காணப்படுகிறாள். அவர் பொருட்டாகவே இத்துன்பம் உண்டாகியிருக்கின்றது.

அனுசூயை : தோழி! என் மனதில் இருப்பதும் அத்தகைய சந்தேகமே. இருக்கட்டும் தோழீ எதைப்பற்றியோ உன்னைக் கேட்க வேண்டும். என்றிருந்தேன். உண்மையாகவே உன் துன்பம் அதிகம் போலிருக்கிறது.

சகுந்தலை : நீ எதைக் கேட்க வேண்டும் என்கிறாய்?

அனுசூயை : தோழி! சாகுந்தலா காதற்போக்கைப்பற்றி எமக்குப் பழக்கமில்லை. எனினும் காதல் நோயால் வருந்துபவர் நிலையைப்பற்றி இதிகாசங்களில் கூறப்பட்டிருப்பது போலவே உன்னிலை காணப்படுகின்றது. நீ எதன் பொருட்டு வருந்துகின்றாய் என்பதைச் சொல். ஏனெனில் உண்மைக் காரணத்தை அறியாமல் எதற்கும் பரிகாரம் தேடமுடியாது.

அரசன் : என் மனதில் உதித்த சந்தேகமே அனுசூசைக்கும் உதித்துள்ளது. இருந்தும் அச்சந்தேகம் என் சொந்த அபிப்பிராயத்தினால் மாத்திரம் உண்டாகவில்லை.

சகுந்தலை : (தனக்குள்) உண்மையாகவே என் பற்றுதல் மிக ஆழ்ந் ததுதான். திடீரென்று அவர்களுக்கு அதை அறிவிக்க என்னால் முடியவில்லையே.

பிரியம்வதை : சகுந்தலா! அனுசூயை சொல்வது உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

किमात्मन आतङ्कमुपेक्षसे । अनुदिवसं खलु परिहीयसेऽङ्गैः । केवलं लावण्यमयी छाया त्वां न मुञ्चति ।

**राजा—अवितथमाह प्रियंवदा । तथा हि ।**

**क्षामक्षामकपोलमाननमुरः काठिन्यमुक्तस्तनं**
**मध्यः क्लान्ततरः प्रकामविनतावंसौ छविः पाण्डुरा ।**
**शोच्या च प्रियदर्शना च मदनक्लिष्टेयमालक्ष्यते**
**पत्राणामिव शोषणेन मरुता स्पृष्टा लता माधवी ॥ ९ ॥**

**शकुन्तला—सहि, कस्स वा अण्णस्स कहइस्सं । आआसइत्तिआ दाणिं वो भविस्सं ।** सखि, कस्य वान्यस्य कथयिष्यामि । आयासयित्रीदानीं वां भविष्यामि ।

**उभे—अदो एव्व क्खु णिब्बन्धो । सिणिद्धजणसंविभत्तं हि दुक्खं सज्झवेदणं होदि ।** अत एव खलु निर्बन्धः । स्निग्धजनसंविभक्तं हि दुःखं सह्यवेदनं भवति ।

**राजा—**

**पृष्टा जनेन समदुःखसुखेन बाला**
**नेयं न वक्ष्यति मनोगतमाधिहेतुम् ।**
**दृष्टो विवृत्य बहुशोऽप्यनया सतृष्ण-**
**मत्रान्तरे श्रवणकातरतां गतोऽस्मि ॥ १० ॥**

**शकुन्तला—सहि, जदो पहुदि मम दंसणपहं आअदो सो तवोवणरक्खिदा राएसी,** ( इत्यर्धोक्तेन लज्जां नाटयति । ) **सखि,** यतः प्रभृति मम दर्शनपथमागतः स तपोवनरक्षिता राजर्षिः—

**उभे—कथेदु पिअसही ।** कथयतु प्रियसखी ।

**शकुन्तला—तदो आरहिअ तग्गदेण अहिलासेण एतदवत्थम्हि संवुत्ता ।** तत आरभ्य तद्गतेनाभिलाषेणैतदवस्थास्मि संवृत्ता ।

**राजा—**( सहर्षम् । ) **श्रुतं श्रोतव्यम् ।**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் துயரை ஏன் அலட்சியம் செய்கிறாய். நாளுக்கு நாள் உன் உடம்பு மெலிகின்றது. உன் பேரழகின் சாயல் மட்டுமே உன்னைவிட்டு இன்னும் அகலவில்லை.

அரசன் : பிரியம்வதை சொல்வது உண்மைதான். ஏனெனில் நன்றாக மெலிந்த கன்னங்களையும் முகத்தையும், கடினமற்ற தனங்களையுமுடைய மார்பையும், சின்னஞ் சிறிய இடையையும், பெரிதும் சரிந்து விழுகின்ற தோள் களையும், வெளிறிய மேனியையும், உடைய காதல் நோயால் பீடிக்கப்பட்ட இவள் காற்றினால் அசைவுற்று இலைகள் வாடிய மாதவிக்கொடியைப் போல் இரக்கத்துக் குரியவளாயும், அழகுள்ளவளாயும் காணப்படுகிறாள்.

சகுந்தலை : தோழீ! யாரிடத்தில் என் துயரைக் கூறுவேன். உங்கள் துயருக்கும் காரணமாய் விட்டேன்.

இருவரும் : பிரியமானவருடன் பங்கிடப்படும் துயர் சகிக்க கூடிய தாயிருக்கும் என்பதால் தான் உன்னை நாங்கள் கட்டாயப்படுத்துகிறோம்.

அரசன் : தன் சுகதுக்கங்களில் பங்குபெறுபவர் 3.10 கேட்பதால் இம்மங்கை தன் மனத்தில் மறைத்துள்ளதை சொல்ல மறுக்கமாட்டாள். அவள் திரும்பித் திரும்பி என்னைப் பன்முறை காதலுடன் பார்த்தாள் எனினும், இப்போது அவள் பதிலைக் கேட்க மிக ஆவலாய் இருக்கிறேன்.

சகுந்தலை : தோழீ! என்றைக்கு அந்த ஆச்சிரமக் காவலரான ராஜரிஷி என் கண்ணில் பட்டாரோ, அன்று முதல். (இவ்வாறு கூறியதும் வெட்கம் அடைந்தவள் போல நடிக்கிறாள்)

இருவரும் : வெட்கப்படாமல் சொல்லு சகுந்தலா.

சகுந்தலை : அன்று தொடக்கம், அவர் மீது உண்டான காதலால் நான் இவ்வாறு மெலிய ஆரம்பித்திருக்கிறேன்.

அரசன் : (ஆனந்தத்துடன்) கேட்கத் தகுந்ததைக் கேட்டுவிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

स्मर एव तापहेतुर्निर्वापयिता स एव मे जातः ।
दिवस इवाभ्रश्यामस्तपात्यये जीवलोकस्य ॥ ११ ॥

**शकुन्तला**—तं जइ वो अणुमदं ता तह वट्टह जह तस्स राएसिणो अणुकम्पणिज्जा होमि । अण्णहा अवस्सं सिञ्चध मे तिलोदअं । तद्यदि वामनुमतं तदा तथा वर्तेथां यथा तस्य राजर्षेरनुकम्पनीया भवामि । अन्यथावश्यं सिञ्चतं मे तिलोदकम् ।

**राजा**—संशयच्छेदि वचनम् ।

**प्रियंवदा**—( जनान्तिकम् । ) अणसूये, दूरगअवम्महा अक्खमा इअं कालहरणस्स । जस्सिं बद्धभावा एसा सो ललामभूदो पोरवाणं । ता जुत्तं से अहिलासो अहिणन्दिदुं । अनसूये, दूरगतमन्मथाक्षमेयं कालहरणस्य । यस्मिन्बद्धभावैषा स ललामभूतः पौरवाणाम् । तद्युक्तमस्या अभिलाषोऽभिनन्दितुम् ।

**अनसूया**—तह जह भणसि । तथा यथा भणसि ।

**प्रियंवदा**—( प्रकाशम् । ) सहि, दिट्ठिआ अणुरूवो दे अहिणिवेसो । साअरं उज्झिअ कहिं वा महाणई ओदरइ । को दाणिं सहआरं अन्तरेण अदिमुत्तलदं पल्लविदं सहेदि । सखि, दिष्ट्यानुरूपस्तेऽभिनिवेशः । सागरमुज्झित्वा कुत्र वा महानद्यवतरति । क इदानीं सहकारमन्तरेणातिमुक्तलतां पल्लवितां सहते ।

**राजा**—किमत्र चित्रं यदि विशाखे शशाङ्कलेखामनुवर्तेते ।

**अनसूया**—को उण उवाओ भवे जेण अविलम्बिअं णिहुअं अ सहीए मणोरमं संपादेम्ह । कः पुनरुपायो भवेद्येनाविलम्बितं निभृतं च सख्या मनोरथं संपादयावः ।

**प्रियंवदा**—णिहुअंत्ति चिन्तणिज्जं भवे । सिग्घंत्ति सुअरं । निभृतमिति चिन्तनीयं भवेत् । शीघ्रमिति सुकरम् ।

**अनसूया**—कहं विअ । कथमिव ।

**प्रियंवदा**—णं सो राएसी इमस्सिं सिणिद्धदिट्ठीए सूइदाहिलासो इमाइं दिअहाइं पजाअरकिसो लक्खीअदि । ननु स राजर्षिरेतस्यां स्निग्धदृष्ट्या सूचिताभिलाष एतान्दिवसान्प्रजागरकृशो लक्ष्यते ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.11 என் தாபத்துக்கு காரணமான மன்மதன் என் தாபத்தை தணிப்பவனாயும் இப்பொழுது மாறிவிட்டான். கோடை கால முடிவில் மேகத்தால் இருண்ட வானத்தை உடைய ஒரு பகற்பொழுது மனித உலகத்திற்கு இன்பம் தருவது போல்.......

சகுந்தலை : நான் சொல்வதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களானால், அந்த ராஜரிஷியின் காதலைப் பெறும்படி செய்யுங்கள். இல்லாவிடில் எனக்கு எள்ளுந் தண்ணீரும் இறைக்க வேண்டியதே.

அரசன் : இவ்வசனம் என் சந்தேகத்தை அகற்றி விட்டது.

பிரியம்வதை : (ஒருபக்கமாய்)அனுசூயா!காதலால் மிகவும் பீடிக்கப் பட்டிருக்கும் இவளால் இனிக் காலம் கடத்த இயலாது. எவனிடத்தில் இவள் அன்பினால் கட்டப்பட்டிருக்கி றாளோ, அவன் பூரு வம்சத்தின் அணிகலன் போன் றவன். ஆகவே இவளது அன்பு பொருத்தமான இடத் தைத்தான் அடைந்துள்ளது. இது வரவேற்கத்தக்கதே!

அனுசூயை : நீ சொல்வது சரிதான்.

பிரியம்வதை : (உரத்து) தோழி, நன்று உனது காதல் வரவேற்கத் தகுந்ததே. பெரும்நதி சமுத்திரத்தை அடையாமல் வேறெங்கே போய்ச்சேரும். இலைகள் நிறைந்த ஆதிமுக் தக்கொடி மாமரத்தையன்றி வேறெதனைச் சாரும்?

அரசன் : விசாக நட்சத்திரங்கள் பிறைச்சந்திரனைத் தொடர்ந்தால் அதில் என்ன வியப்பு?

அனுசூயை : நம் தோழியின் மனோரதத்தை, எந்த உபாயத்தின் மூலம் விரைவாகவும் இரகசியமாயும் நிறைவேற்ற முடியும்?

பிரியம்வதை : இரகசியமாகச் செய்வதென்றால் ஆலோசித்துத்தான் செய்ய வேண்டும். சீக்கிரமாகச் செய்வதென்றால் இலகு வில் முடித்துவிடலாம்.

அனுசூயை : அது எப்படி?

பிரியம்வதை : அந்த ராஜரிஷிக்கு இவள் மீதுள்ள காதல் அவரது பார்வையிலேயே தெரிகிறது. அவரும் இப்பொழுது தினமும் நித்திரையின்றி மெலிந்து காணப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**राजा**—सत्यमित्थंभूत एवास्मि । तथाहि ।

इदमशिशिरैरन्तस्तापाद्विवर्णमणीकृतं
निशि निशि भुजन्यस्तापाङ्गप्रसारिभिरश्रुभिः ।
अनभिलुलितज्याघाताङ्कं मुहुर्मणिबन्धना-
त्कनकवलयं स्रस्तं स्रस्तं मया प्रतिसार्यते ॥ १२ ॥

**प्रियंवदा**—( विचिन्त्य । ) हला, मअणलेहो से करीअदु । इमं देवदासेसावदेसेण सुमणोगोविदं करिअ से हत्थअं पावइस्सं । हला, मदनलेखोऽस्य क्रियताम् । इमं देवताशेषापदेशेन सुमनोगोपितं कृत्वा तस्य हस्तं प्रापयिष्यामि ।

**अनसूया**—रोअइ मे सुउमारो पओओ । किं वा सउन्दला भणादि । रोचते मे सुकुमारः प्रयोगः । किं वा शकुन्तला भणति ।

**शकुन्तला**—सहीणिओओवि विकप्पीअदि । सखीनियोगोऽपि विकल्प्यते ।

**प्रियंवदा**—तेण हि अत्तणो उवण्णासपुव्वं चिन्तेहि दाव किंपि ललिअपदबन्धणं । तेन ह्यात्मन उपन्यासपूर्वं चिन्तय तावत् किमपि ललितपदबन्धनम् ।

**शकुन्तला**—हला, चिन्तेमि अहं । अवहीरणभीरुअं पुणो वेवइ मे हिअअं । हला, चिन्तयाम्यहम् । अवधीरणभीरु पुनर्वेपते मे हृदयम् ।

**राजा**—( सहर्षम् । )

अयं स ते तिष्ठति संगमोत्सुको
विशङ्कसे भीरु यतोऽवधीरणाम् ।
लभेत वा प्रार्थयिता न वा श्रियं
श्रिया दुरापः कथमीप्सितो भवेत् ॥ १३ ॥

**सख्यौ**—अत्तगुणावमाणिणि, को दाणिं सरीरणिव्वावत्तिअं सारदिअं जोसिणिं पडन्तेण वारेदि । आत्मगुणावमानिनि, क इदानीं शरीरनिर्वापयित्रीं शारदीं ज्योत्स्नां पटान्तेन वारयति ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : உண்மையாகவே நான் அப்படித்தானிருக்கிறேன், ஏனெனில்

3.12 என் புயத்தில் சாய்ந்த கடைக்கண்வழியே, இரவிரவாகப் பாய்ந்தோடும் உள்வெப்பத்தால் சூடுற்ற கண்ணீரால் நிறம்மாறிய மணிகளையுடைய இந்தத் தங்கக்காப்பு, வில் நாண் செய்த தழும்பினால் தடைப்படாது மணிக்கட்டு வழியே அடிக்கடி நழுவ நழுவ நான் அதை மேலே செறித்துக் கொண்டிருக்கிறேன்.

பிரியம்வதை : (சிந்தித்தவாறு) தோழீ! நீ ஒரு காதற் கடிதம் எழுதித்தா. அதை மலர்களோடு மறைத்துப் பிரசாதம் கொடுக்கும் சாட்டில் அவர் கையில் நான் கொடுத்து விடுகிறேன்.

அனுசூயை : அருமையான உபாயம் சொன்னாய். எனக்கும் அது பிடித் துள்ளது. ஆனால் சகுந்தலையின் அபிப்பிராய மெப் படியோ?

சகுந்தலை : என்ன! நான் உங்கள் முயற்சிகளில் எப்போதேனும் சந்தேகப்பட்டதுண்டா?

பிரியம்வதை : அப்படியானால் நல்லது. உன்னை அறிமுகப்படுத்தும் ஒரு கடிதத்தை உகந்த சொற்களைத் தெரிந்தெடுத்து எழுது.

சகுந்தலை : தோழீ! அப்படியே செய்ய நினைக்கிறேன். ஆனால் அவர் மறுப்பாரோ என்ற பயத்தினால் என் இதயம் நடுங்குகிறது.

அரசன் : (சந்தோஷத்துடன்)

3.13 அச்சமுடையவளே! எவனிடமிருந்து நீ மறுப்பை எதிர் பார்க்கிறாயோ அவன் உன் சேர்க்கையை விரும்பிய வனாய் இதோ நிற்கிறான். செந்திருவை விரும்பியவன் அவளை அடையவும் கூடும். அடையாமலிருக்கவும் கூடும். ஆனால் லஷ்மியே விரும்பும் ஒருவனை அவள் அடையாதிருக்க முடியமா?

தோழியர் : உன் குணத்தின் பெருமையை அறியாதவளே! உடம்பிற்குக் குளிர்ச்சி தரும் கோடை காலத்து நிலவை யார் தான் தம் ஆடைத்தலைப்பால் மறைப்பர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**शाकुन्तला**—( सस्मितम् । ) **णिओइदा दाणिं म्हि ।** ( इत्युपविष्टा चिन्तयति । ) नियोजितेदानीमस्मि ।

**राजा—स्थाने खलु विस्मृतनिमेषेण चक्षुषा प्रियामवलोकयामि । यतः**

**उन्नमितैकभ्रूलतमाननमस्याः पदानि रचयन्त्याः ।**
**कण्टकितेन प्रथयति मय्यनुरागं कपोलेन ॥ १४ ॥**

**शाकुन्तला—हला, चिन्तिदं मए गीदवत्थु । ण क्खु सण्णिहिदाणि उण लेहणसाहणाणि ।** हला, चिन्तितं मया गीतवस्तु । न खलु संनिहितानि पुनर्लेखनसाधनानि ।

**प्रियंवदा—इमस्सिं सुओदरसुउमारे णलिणीपत्ते णहेहिं णिक्खित्तवण्णं करेहि ।** एतस्मिञ्छुकोदरसुकुमारे नलिनीपत्रे नखैर्निक्षिप्तवर्णं कुरु ।

**शाकुन्तला**—( यथोक्तं रूपयित्वा । ) **हला, सुणुह दाणिं संगदत्थं ण वेत्ति ।** हला शृणुतमिदानीं संगतार्थं न वेति ।

**उभे—अवहिद म्ह ।** अवहिते स्वः ।

**शाकुन्तला**—( वाचयति । )

**तुज्झ ण आणे हिअअं मम उण कामो दिवावि रत्तिंपि ।**
**णिग्घिण तवेइ बलिअं तुइ वुत्तमणोरहाइं अङ्गाइं ॥ १५ ॥**

तव न जाने हृदयं मम पुनः कामो दिवापि रात्रावपि ।
निर्घृण तपति बलीयस्त्वयि वृत्तमनोरथान्यङ्गानि ॥

**राजा**—( सहसोपसृत्य । )

**तपति तनुगात्रि मदनस्त्वामनिशं मां पुनर्दहत्येव ।**
**ग्लपयति यथा शशाङ्कं न तथा हि कुमुद्वतीं दिवसः ॥ १६ ॥**

**सख्यौ**—( सहर्षम् । ) **साअदं अविलम्बिणो मणोरधस्स ।** स्वागतमविलम्बिनो मनोरथस्य ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலை : (புன்னகை புரிந்தவாறு) என்னை எழுதுவதற்குத் தூண்டி விட்டீர்கள். (எழுந்திருந்து சிந்திக்கிறாள்)

அரசன் : இமைப்பதற்கு கூட மறந்து போன இக்கண்களால் என் அன்பைப் பார்த்துக்கொண்டு நிற்பது மிக பொருத்த மாகவே இருக்கிறது.

3.14 ஏனெனில் எழுதுவதற்கு உகந்த சொற்களைத் தெரிந் தெடுத்த வண்ணம் கொடிபோன்ற தன் புருவங்களில் ஒன்றை உயர்த்திய முகத்தினளாய் அமர்ந்திருக்கும் அவ ளுடைய புளகாங்கிதமடைந்த கன்னம் என்னிடத்தில் அவளுக்கு உள்ள காதலை வெளிப்படுத்து கிறது.

சகுந்தலை : தோழி! எழுதவேண்டிய பாடலைக் கற்பனை செய்து விட்டேன். ஆனால் எழுதும் சாதனங்கள் தான் கைவச மில்லை.

பிரியம்வதை : கிளியின் மார்பைப்போன்ற மிருதுவான இந்தத் தாமரை யிலையில் உன் நகத்தினால் அழுத்தி எழுது.

சகுந்தலை : (சொல்லியபடி நடித்து) தோழி! இது பொருட்பொருத்தம் உடையதா அல்லவா என்பதைப்பார்.

இருவரும் : நாங்கள் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். எங்கே படி.

சகுந்தலை : (வாசிக்கிறாள்)

கொடிய உள்ளம் படைத்தவரே! உங்கள் மனதை நான் அறியேன். ஆனால் உங்களிடத்து மாறாக் காதலுள்ள என்னை மன்மதன் இரவு பகலாகப் பெரிதும் வாட்டு கிறான்.

அரசன் : (திடீரென்று அணுகி)

3.16 சின்னஞ்சிறிய இடையாளே! உன்னை மன்மதன் வாட்டு கிறான். ஆனால் என்னையோ அவன் இடைவிடாது எரித் துக்கொண்டிருக்கிறான். சூரியன் சந்திரனை வாட்டுவது போல் தாமரை மலரை வாட்டுவதில் லை.

தோழியர் : (அவனைப் பார்த்துவிட்டு சந்தோஷத்துடன் எழுந்து) காலதாமதமின்றி வந்த எங்கள் தோழியின் காதலருக்கு நல்வரவாகுக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( शकुन्तलाभ्युत्थातुमिच्छति )

**राजा—अलमलमायासेन ।**

**संदष्टकुसुमशयनान्याशुक्लान्तबिसभङ्गसुरभीणि ।**
**गुरुपरितापानि न ते गात्राण्युपचारमर्हन्ति ॥ १७ ॥**

**अनसूया—इदो सिलातलेक्कदेसं अलंकरेदु वअस्सो ।** इत शिलातलैकदेशमलंकरोतु वयस्यः ।

( राजोपविशति । शकुन्तला सलज्जा तिष्ठति । )

**प्रियंवदा—दुवेणं पि वो अण्णोण्णाणुराओ पच्चक्खो । सहीसिणेहो मं पुणरुत्तवादिणीं करेदि ।** द्वयोरपि युवयोरन्योन्यानुरागः प्रत्यक्षः । सखीस्नेहो मां पुनरुक्तवादिनीं करोति ।

**राजा—भद्रे, नैतत्परिहार्यम् । विवक्षितं ह्यनुक्तमनुतापं जनयति ।**

**प्रियंवदा—आवण्णस्स विसअणिवासिणो जणस्स अत्तिहरेण रण्णा होदव्वं त्ति एसो वो धम्मो ।** आपन्नस्य विषयनिवासिनो जनस्यार्तिहरेण राज्ञा भवितव्यमित्येष युष्माकं धर्मः ।

**राजा— नास्मात्परम् ।**

**प्रियंवदा—तेण हि इअं णो पिअसही तुमं उद्दिसिअ इमं अवत्थन्तरं भअवदा मअणेण आरोविदा । ता अरुहसि अब्भुववत्तीए जीविदं से अवलम्बिदुं ।** तेन हीयमावयोः प्रियसखी त्वामुद्दिश्येदमवस्थान्तरं भगवता मदनेनारोपिता । तदर्हस्यभ्युपपत्त्या जीवितं तस्या अवलम्बितुम् ।

**राजा—भद्रे, साधारणोऽयं प्रणयः । सर्वथानुगृहीतोऽस्मि ।**

**शकुन्तला—**( प्रियंवदामवलोक्य । ) **हला, किं अन्तेउरविरहपज्जुस्सुअस्स राएसिणो उवरोहेण ।** हला, किमन्तःपुरविरहपर्युत्सुकस्य राजर्षेरुपरोधेन ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சகுந்தலை எழும்புவதற்கு எத்தனிக்கிறாள்)

அரசன் : போதும் போதும், இந்தத் துடிப்பு எதற்கு?

3.17 மலர்ப்படுக்கை மீது செறிந்த மலர்கள் ஒட்டிக் கொண் டிருக்கும். உடனே வாடிய தாமரை மலர்த்தண்டுகளின் மணத்தை வீசும் உன் அங்கங்கள் பெரிதும் வருந்து கின்றன. அவை எனக்கு வழக்கமான உபசாரம் செய்யத் தகுந்தவையல்ல.

அனுசூயை : தோழரே! இக் கற்பாறையின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து அதனைஅழகுறச் செய்வீராக. (அரசன் உட்காருகிறான் சகுந்தலை நாணத்துடன் ஒதுங்குகிறாள்.)

பிரியம்வதை : உங்கள் இருவரது அன்யோன்னியமான காதல் வெளிப் படையானது. இருந்தும் என்தோழி மீதுள்ள அன்பு என்னை அதிகம் பேசத் தூண்டுகிறது.

அரசன் : நல்லாய்! இது மனத்திலே அடக்கப்பட வேண்டியது அன்று. சொல்ல வேண்டியதைச் சொல்லாவிட்டால் துயர் அடைய நேரும்.

பிரியம்வதை : தம் தேசத்தில் வாழும் குடிகளின் துன்பத்தை நீக்குவதே உங்களைப் போன்ற அரசரின் கடமை.

அரசன் : அதைவிட மேலானது என்ன இருக்கிறது.

பிரியம்வதை : எங்கள் தோழியாகிய இவள் உங்கள் மீது உண்டான காதலினாலேயே இந்த அவலநிலையை அடைந் துள்ளாள். ஆகவே அவளது வாழ்வு நிலை பெறும்படி அருள் செய்வீராக?

அரசன் : நல்லாய்! நானும் இவளிடம் கேட்கும் வரம் இதுவே. எங்கள் இருவருக்கும் பொதுவானது இந்தப் பிரார்த் தனை. நான் பலவகையிலும் அருள் பெற்றவன் ஆனேன்.

சகுந்தலை : (பிரியம்வதையைப் பார்த்தவாறு) தோழீ! அந்தப்புரப் பெண்களைப் பிரிந்து வருந்தும் ராஜரிஷியை ஏன் மேலும் வருத்துகிறாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—

इदमनन्यपरायणमन्यथा
हृदयसंनिहिते हृदयं मम ।
यदि समर्थयसे मदिरेक्षणे
मदनबाणहतोऽस्मि हतः पुनः ॥ १८ ॥

अनसूया—वअस्स, बहुवल्लहा राआणो सुणीअन्ति । जह णो पिअसही बन्धुअणसोआणिज्जा ण होई तह णिव्वत्तेहि । वयस्य, बहुवल्लभा राजानः श्रूयन्ते । यथा नौ प्रियसखी बन्धुजनशोचनीया न भवति तथा निर्वर्तय ।

राजा—भद्रे, किं बहुना ।

परिग्रहबहुत्वेऽपि द्वे प्रतिष्ठे कुलस्य मे ।
समुद्रवसना चोर्वी सखी च युवयोरियम् ॥ १९ ॥

उभे—णिव्वुद म्ह । निर्वृते स्वः ।

प्रियंवदा—( सदृष्टिक्षेपम् । ) अणसूए, जह एसो इदोदिण्णदिट्ठी उस्सुओ मिअपोदओ मादरं अण्णेसदि । एहि । संजोएम णं । ( इत्युभे प्रस्थिते । ) अनसूये, यथैष इतोदत्तदृष्टिरुत्सुको मृगपोतको मातरमन्विष्यति । एहि । संयोजयाव एनम् ।

शकुन्तला—हला, असरण म्हि । अण्णदरा वो आअच्छदु । हला, अशरणास्मि । अन्यतरा युवयोरागच्छतु ।

उभे—पुहवीए जो सरणं सो तुह समीवे वट्टइ । ( इति निष्क्रान्ते । ) पृथिव्या यः शरणं स तव समीपे वर्तते ।

शकुन्तला—कहं गदाओ एव्व । कथं गते एव ।

राजा—अलमावेगेन । नन्वयमाराधयिता जनस्तव समीपे वर्तते ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : சுந்தரி! மயக்கத்தைத் தரும் கண்களை உடையவளே!

3.18 என் இதயத்திற்கு அண்மையில் இருக்கும் நீ உன்னையன்றி வேறெவரையும் நினைக்காத இந்த என் உள்ளத்தைப் பற்றி வேறு விதமாய் நினைத்தால் மன்மதனால் கொல்லப்பட்ட நான் மீண்டும் கொல்லப்பட்டவன் ஆவேன்.

அனுசூயை : தோழரே! அரசர் பல மனைவியரைக் கொண்டுள்ளவர் என்று கேட்டுள்ளோம். எங்கள் தோழி அவள் சுற்றத் தவரால் அனுதாபப்படா வண்ணம் நடப்பீராக.

அரசன் : நல்லாய்! அதிகம் சொல்லி என்ன பயன்?

3.19 பல மனைவியரை உள்ளவனாய் இருந்தும் இருவரே என் குலத்தின் மகிமைக்கு உரியவர்கள். கடல் சூழ்ந்த நில மகள் ஒருத்தி மற்றொருத்தி உங்கள் தோழியாகிய இவள்.

இருவரும் : நாம் சந்தோஷப்படுகிறோம்.

பிரியம்வதை : (கண்ணால் குறி செய்தவாறு) அனுசூயை! இதோ எங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் இம்மான்குட்டி தன் தாயை தேடி அலைகிறது. வா! நாம் அதைத் தாயிடம் அழைத்துச் செல்வோம். (இருவரும் போகின்றனர்)

சகுந்தலை : தோழி! என்னைத் துணையின்றி விட்டுப்போகின்றீர்களே. உங்களில் ஒருவர் என்னோடு நில்லுங்கள்.

இருவரும் : உலகத்தைக் காக்கும் வேந்தனே உன் பக்கத்தில் இருக்கிறான். (போய்விடல் )

சகுந்தலை : என்ன? அவர்கள் போய்விட்டார்களா?

அரசன் : போதும் உன் துடிப்பு உன் பக்கத்தில் இருக்கும் நான் உன் பக்தன் அன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

किं शीतलैः क्लमविनोदिभिरार्द्रवातान्
संचारयामि नलिनीदलतालवृन्तैः ।
अङ्के निधाय करभोरु यथासुखं ते
संवाहयामि चरणावुत पद्मताम्रौ ॥ २० ॥

शकुन्तला—ण माणणीएसु अत्ताणं अवराहइस्सं । ( इत्युत्थाय गन्तुमिच्छति । ) न माननीयेष्वात्मानमपराधयिष्ये ।

राजा—सुन्दरि, अपरिनिर्वाणो दिवसः । इयं च ते शरीरावस्था ।

उत्सृज्य कुसुमशयनं नलिनीदलकल्पितस्तनावरणम् ।
कथमातपे गमिष्यसि परिबाधापेलवैरङ्गैः ॥ २१ ॥

( इति बलादेनां निवर्तयति । )

शकुन्तला—पोरव, रक्ख अविणअं । मअणसंतत्तावि ण हु अत्तणो पहवामि । पौरव, रक्षाविनयम् । मदनसंतप्तापि न खल्वात्मनः प्रभवामि ।

राजा—भीरु, अलं गुरुजनभयेन । दृष्ट्वा ते विदितधर्मा तत्रभवान्नात्र दोषं ग्रहीष्यति कुलपतिः । अपि च ।

गान्धर्वेण विवाहेन बह्वयो राजर्षिकन्यकाः ।
श्रूयन्ते परिणीतास्ताः पितृभिश्चाभिनन्दिताः ॥ २२ ॥

शकुन्तला—मुञ्च दाव मं । भूओ वि सहीजणं अणुमाणइस्सं । मुञ्च तावन्माम् । भूयोऽपि सखीजनमनुमानयिष्ये ।

राजा—भवतु । मोक्ष्यामि ।

शकुन्तला—कदा । कदा ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.20 குளிர்மையான இத்தாமரை இலைகளால் உன்களைப்பு நீங்கும் பொருட்டு நான் விசிறி விடட்டுமா? அல்லது யானையின் தும்பிக்கை போன்ற தொடையில் விரிந்த உன் செந்தாமரைப் பாதங்களை என் மடிமீது வைத்துத் தடவி விடட்டுமா?

சகுந்தலை : நான் கௌரவமானவரிடத்தில் இவ்வாறு குற்றம் செய்வதில்லை. (எழுந்து போக எத்தனிக்கிறாள்)

அரசன் : சுந்தரி! பொழுது இன்னும் மறையவில்லை.

3.21 உன் தேகநிலையும் இப்படித்தானிருக்க வேண்டுமா? மலர்ப் படுக்கையையும் தாமரை இலைகளாலான மார்புக் கச்சையையும் கைவிட்டு துயரினால் மெலிந்த அங்கங்களையுடைய நீ எவ்வாறு இவ்வெயிலில் செல்வாய்?

சகுந்தலை : பூரு வம்சத்தவரே! உங்கள் ஒழுக்கத்தைக் பேணிக்கொள்வீராக! நான் காதல் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் சுதந்திரமுள்ளவள் அன்று.

அரசன் : அச்சம் உடையவளே! முதியோரைப் பற்றிய பயத்தை இத்துடன் நிறுத்திக்கொள். தர்மத்தை அறிந்த பெரியோர் இதை அறிய நேர்ந்தால் உன்னிடத்தில் ஒருபோதும் குற்றம் காணமாட்டார்கள். மேலும்

3.22 அரசகுல ரிஷிகளுக்குப் பிறந்த எத்தனையோ பெண்கள் கந்தருவ முறைப்படி விவாகம் புரிந்து கொண்டு பின்னால் தம் தந்தையரின் அனுமதியைப் பெற்றுள்ளனர்.

சகுந்தலை : என்னை விட்டுவிடுங்கள். என் தோழியருடன் ஆலோசித்து விட்டு மீண்டும் வருவேன்.

அரசன் : ஆகட்டும், விடுகிறேன்.

சகுந்தலை : எப்போது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—

अपरिक्षतकोमलस्य याव-
त्कुसुमस्येव नवस्य षट्पदेन ।
अधरस्य पिपासता मया ते
सदयं सुन्दरि गृह्यते रसोऽस्य ॥ २३ ॥

( इति मुखमस्याः समुन्नमयितुमिच्छति । शकुन्तला परिहरति नाट्येन । )

( नेपथ्ये । )

**चक्कवाकवहुए, आमन्तेहि सहअरं । उवट्ठिदा रअणी ।** चक्रवाकवधूः आमन्त्रयस्व सहचरम् । उपस्थिता रजनी ।

**शकुन्तला —** ( ससंभ्रमम् । ) **पोरव, असंसअं मम सरीरवुत्तन्तोवलम्भस्स अज्जा गोदमी इदो एव्व आअच्छदि । जाव विडवन्तरिदो होहि ।** पौरव, असंशयं मम शरीरवृत्तान्तोपलम्भायार्या गौतमीत एवागच्छति । यावद्विटपान्तरितो भव ।

**राजा—तथा ।** ( इत्यात्मानमावृत्य तिष्ठति । )

( ततः प्रविशति पात्रहस्ता गौतमी सख्यौ च । )

**सख्यौ—इदो इदो अज्जा गोतमी ।** इत इत आर्या गौतमी ।

**गौतमी—** ( शकुन्तलामुपेत्य । ) **जादे, अवि लहुसंदावाइं दे अङ्गाइं ।** जाते, अपि लघुसंतापानि तेऽङ्गानि ।

**शकुन्तला—अज्जे, अत्थि मे विसेसो ।** आर्ये, अस्ति मे विशेषः ।

**गौतमी—इमिणा दब्भोदएण णिराबाधं एव्व दे सरीरं भविस्सदि ।** ( शिरसि शकुन्तलामभ्युक्ष्य ) **वच्छे, परिणदो दिअहो । एहि । उडजं एव्व गच्छम्ह ।** अनेन दर्भोदकेन निराबाधमेव ते शरीरं भविष्यति । वत्से, परिणतो दिवसः । एहि । उटजमेव गच्छामः ।

( इति प्रस्थिताः । )

**शकुन्तला—** ( आत्मगतम् । ) **हिअअ, पढमं एव्व सुहोवणदे मणोरहे कादरभावं ण मुञ्चसि । साणुसअविहडिअस्स महं दे संपदं संदावो ।** ( पदान्तरे स्थित्वा । प्रकाशम् । ) **लादावलअ संदा-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : 3.23 பூவிலுள்ள தேனை வண்டு குடிப்பது போல் தொட்டறியாத உன் மிருதுவான இதழ்களைப் பருகி என் தாகம் தீர்ந்ததும் உன்னை விடுவேன் சுந்தரி.

(இவ்வாறு சொல்லி அவள் முகத்தை உயர்த்துவதற்கு எத்தனிக்கச் சகுந்தலை அதைத் தடுப்பது போல் நடிக்கிறாள்)

*(திரையின் பின்னால்)*

சக்கரவாகப் பெடையே! இரவு நெருங்கிவிட்டது. உன் தோழனிடமிருந்து விடைபெற்றுக்கொள்.

சகுந்தலை : (பதட்டத்துடன்) கௌரவரே! என் உடல் நலத்தை விசாரிக்கும் பொருட்டு கௌதமி அம்மையார் இங்கு வருகிறாள் போலிருக்கிறது. ஆகவே கிளைகளின் பின்னால் மறைந்து கொள்ளுங்கள்.

அரசன் : அப்படியே செய்கிறேன். (தன்னை அப்படியே மறைத்துக் கொள்கிறான்)

(அப்பொழுது கையில் பாத்திரத்தை உடையவளாய்க் கௌதமி தோழியருடன் வருகிறாள்)

தோழியர் : இப்படி இப்படி வாருங்கள் கௌதமி அம்மையாரே!

கௌதமி : (சகுந்தலையை அணுகி) குழந்தாய்! உன் வருத்தம் குறைந்துவிட்டதா?

சகுந்தலை : கொஞ்சம் குறைந்துவிட்டது, தாயே!

கௌதமி : தருப்பைப்புல் கலந்த இத்தண்ணீர் உன் உடல் நலத்தை முற்றாகக் குணமாக்கிவிடும். குழந்தாய்! நேரமாகி விட்டது. வா! குடிசைக்குப் போவோம்.

சகுந்தலை : (தனக்குள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

वहारअ, आमन्तेमि तुमं भूओ वि परिमोअस्स । ( इति दुःखेन निष्क्रान्ता शकुन्तला सहेतराभिः । ) हृदय, प्रथममेव सुखोपनते मनोरथे कातरभावं न मुञ्चसि । सानुशयविघटितस्य कथं ते सांप्रतं संतापः । लतावलय संतापहारक, आमंत्रये त्वां भूयोऽपि परिभोगाय ।

राजा—( पूर्वस्थानमुपेत्य । सनिःश्वासम् । ) अहो विघ्नवत्यः प्रार्थितार्थसिद्धयः । मया हि

मुहुरङ्गुलिसंवृताधरोष्ठं
　　प्रतिषेधाक्षरविक्लवाभिरामम् ।
मुखमंसविवर्ति पक्ष्मलाक्ष्याः
　　कथमप्युन्नमितं न चुम्बितं तु ॥ २४ ॥

क्व नु खलु संप्रति गच्छामि । अथवा । इहैव प्रियापरिभुक्तमुक्ते लतावलये मुहुर्तं स्थास्यामि । ( सर्वतोऽवलोक्य )

तस्याः पुष्पमयी शरीरलुलिता शय्या शिलायामियं
　　क्लान्तो मन्मथलेख एष नलिनीपत्रे नखैरर्पितः ।
हस्ताद्भ्रष्टमिदं बिसाभरणमित्यासज्यमानेक्षणो
　　निर्गन्तुं सहसा न वेतसगृहाच्छक्नोमि शून्यादपि ॥ २५ ॥

( आकाशे । )

राजन्,

सायंतने सवनकर्मणि संप्रवृत्ते
　　वेदीं हुताशनवतीं परितः प्रकीर्णाः ।
छायाश्चरन्ति बहुधा भयमादधानाः
　　संध्यापयोदकपिशाः पिशिताशनानाम् ॥ २६ ॥

राजा—अयमयमागच्छामि । ( इति निष्क्रान्तः । )

इति तृतीयोऽङ्कः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமே! இன்பம் உன்னைத்தானாக நாடி வந்த போது நீ பயத்தினால் அதை மறுத்தாய். இப்பொழுது அது உன்னை விட்டுப் பிரிந்துவிட்டதும் எதற்காக வருந்துகிறாய். (நடந்தபடி உரத்து) என் துயரைப் போக்கிய கொடி மண்டபமே! உன்னுடன் மீண்டும் இன்பம் அனுப விக்கும் வரை நான் விடைப்பெற்றுக் கொள்ளுகிறேன். (சகுந்தலை மிகுந்த துயரோடு மற்றவருடன் போய் விடுகிறாள்)

அரசன் : (தான் முன்னிருந்த இடத்தை அடைந்து பெருமூச்சுடன்) அந்தோ! விரும்பிய பொருள்கள் நிறைவேறுவதற்கு இடையூறுகள் சூழ்ந்திருக்கின்றன. ஏனெனில்,

3.24 முகத்தைத் தோட்பக்கம் திருப்பி அடிக்கடி விரல்களால் கீழ் உதட்டை மறைத்து விக்கல்களிடையே மறுப்பு தெரிவித்த அவளது அழகிய கண்ணிமைகள் படைத்த முகத்தை ஒருவாறு உயர்த்தியும் என்னால் முத்தமிட முடியவில்லையே! நான் எங்கே போவது? என் அன்புச் செல்வி அனுபவித்த இக்கொடி மண்டபத்திலேயே நானும் சிறிதுநேரம் தங்குவேன். (சுற்றிவரப்பார்க்கிறான்)

3.25 இதோ! இக்கற்பாறையின் மீது அவள் உடம்பு அழுந்திய மலர்ப்படுக்கை. அதோ! அவள் தன் நகத்தால் அழுத்தி எழுதிய காதற் கடிதம் வாடிக்கிடக்கிறது. இதோ அவள் கையிலிருந்து நழுவிய தாமரைத் தண்டாலான அணிகலன் விழுந்து கிடக்கிறது. இம்மண்டபம் வெறுமையாக இருப்பினும் என் கண்கள் இப்பொருள்கள் மீது நிலைத்திருப்பதால் இவற்றைவிட்டு உடனே என்னாற் போக முடியவில்லையே!

3.25 (ஆகாயத்தில்) மன்னனே!

மாலை நேரமாகிவிட்டது. வேள்விக்கிரியைகள் ஆரம்பித்து விட்டன. மாமிசம் உண்ணும் கபில நிற அரக்கரின் நிழல்கள் வேதிகையின் மீது சுடர் விட்டெரியும் தீயைச் சூழ்ந்து கொண்டு பயத்தை விளைவிப்பனவாய் மாலை வானத்து மேகங்களைப் போல் அங்கும் இங்கும் ஓடித் திரிகின்றன.

அரசன் : இதோ நான் வந்துவிட்டேன். (போய் விடுகிறான்)

**(மூன்றாம் அங்கத்தின் முடிவு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# चतुर्थोऽङ्कः ।

( ततः प्रविशतः कुसुमावचयं नाटयन्त्यौ सख्यौ । )

**अनसूया—हला पिअंवदे, जइ वि गन्धव्वेण विवाहविहिणा णिव्वुत्तकल्लाणा सउन्दला अणुरूवभत्तुगामिणी संवुत्तेत्ति णिव्वुदं मे हिअअं, तह वि एत्तिअं चिन्तणिज्जं ।** हला प्रियंवदे, यद्यपि गान्धर्वेण विवाहविधिना निर्वृत्तकल्याणा शकुन्तलानुरूपभर्तृगामिनी संवृत्तेति निर्वृतं मे हृदयम्, तथाप्येतावच्चिन्तनीयम् ।

**प्रियंवदा—कहं विअ ।** कथमिव ।

**अनसूया—अज्ज सो राएसी इट्ठिं परिसमाविअ इसीहिं विसज्जिदो अत्तणो णअरं पविसिअ अन्तेउरसमागदो इदोगदं वुत्तन्तं सुमरदि वा ण वेत्ति ।** अद्य स राजर्षिरिष्टिं परिसमाप्य ऋषिभिर्विसर्जित आत्मनो नगरं प्रविश्यान्तःपुरसमागत इतोगतं वृत्तान्तं स्मरति वा न वेति ।

**प्रियंवदा—वीसद्धा होहि । ण तादिसा आकिदिविसेसा गुणविरोहिणो होन्ति । किंदु तादो दाणिं इमं वुत्तन्तं सुणिअ ण आणे किं पडिवज्जिस्सदि त्ति ।** विस्रब्धा भव । न तादृशा आकृतिविशेषा गुणविरोधिनी भवन्ति । किंतु तात इदानीमिमं वृत्तान्तं श्रुत्वा न जाने किं प्रतिपत्स्यत इति ।

**अनसूया—जह अहं देक्खामि, तह तस्स अणुमदं भवे ।** यथाहं पश्यामि, तथा तस्यानुमतं भवेत् ।

**प्रियंवदा—कहं विअ ।** कथमिव ।

**अनसूया—गुणवदे कण्णआ पडिबादणिज्जेत्ति अअं दाव पढमो संकप्पो । तं जइ देव्वं एव्व संपादेदि, णं अप्पआसेण किदत्थो गुरुअणो ।** गुणवते कन्यका प्रतिपादनीयेत्ययं तावत्प्रथमः संकल्पः । तं यदि दैवमेव संपादयति नन्वप्रयासेन कृतार्थो गुरुजनः ।

**प्रियंवदा—**( पुष्पभाजनं विलोक्य । ) **सहि, अवइदाहं बलिकम्मपज्जत्ताइं कुसुमाइं ।** सखि, अवचितानि बलिकर्मपर्याप्तानि कुसुमानि ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் அங்கம்

(தோழியர் இருவரும் பூப்பறிப்பவராய்த் தோன்றுகின்றனர்)

அனசூயை : தோழி! பிரியம்வதை! சகுந்தலை தன் மனதுக்கேற்ற மணாளனைக் காந்தருவ முறைப்படி மணஞ்செய்து மகிழ்ச்சியடைந்திருந்த போதிலும் சிறிது சிந்திக்க வேண்டியுமிருக்கிறது.

பிரியம்வதை : எப்படி?

அனசூயை : அந்த அரச முனிவரை வேள்வி முடிந்த நம் துறவிகள் அனுப்பிவிட்டனர். அவர் தமது நகரையடைந்து அந்தப்புர வனிதையரோடு கூடிக்குலாவியிருக்கும்போது இங்கு நிகழ்ந்தவற்றை நினைவில் கொள்வாரோ என்னவோ?

பிரிளம்வதை : அதிற் சந்தேகம் வேண்டாம். அத்தகைய சுந்தர வடிவ முடையவர்கள் ஒழுக்கங் கெட்டவராயிருக்க முடியாது. அதல்ல இங்கே நடந்த நிகழ்ச்சினளைக் கேள்விப்பட்டால் நமது தந்தை காசிபர் என்ன செய்வாரோ?

அனசூயை : எனக்குத் தோன்றுமளவில் அவர் இதை அனுமதிப்பா ரென்றே நினைக்கிறேன்.

பிரியம்வதை : அ∴தெப்படி?

அனசூயை : பெற்றோர்க்கு முதற்கருமம் கன்னியைத்தக்க வரனுக்குக் கொடுத்து விடுவதே. அதை விதியே செய்து விடுமாகில் பெற்றோர் கடமை முயற்சியில்லாமலே நிறைவேறி விடுகிறது.

பிரியம்வதை : அதுவும் அப்படியே (மலர்ப்பாத்திரத்தை பார்த்து) தோழி! இம்மலர்கள் பூசைக்குப் போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**अनसूया—णं पिअसहीए सउन्दलाए सोहग्गदेवआ अच्चणीआ ।** ननु प्रियसख्याः शकुन्तलायाः सौभाग्यदेवतार्चनीया ।

**प्रियंवदा—जुज्जदि ।** युज्यते ।

( इति तदेव कर्मारभेते । )

( नेपथ्ये । )

**अयमहं भोः ।**

**अनसूया—**( कर्णं दत्त्वा । ) **सहि, अदिधीणं विअ णिवेदिदं ।** सखि, अतिथीनामिव निवेदितम् ।

**प्रियंवदा—णं उडजसंणिहिदा सउन्दला ।** ( आत्मगतम् । ) **अज्ज उण हिअएण असंणिहिदा ।** ननूटजसंनिहिता शकुन्तला । अद्य पुनर्हृदये-नासंनिहिता ।

**अनसूया—होदु । अलं एत्तिएहिं कुसुमेहिं ।** भवतु । अल-मेतावद्भिः कुसुमैः ।

( इति प्रस्थिते । )

( नेपथ्ये । )

**आः अतिथिपरिभाविनी,**

**विचिन्तयन्ती यमनन्यमानसा**
**तपोधनं वेत्सि न मामुपस्थितम् ।**
**स्मरिष्यति त्वां न स बोधितोऽपि स-**
**न्कथां प्रमत्तः प्रथमं कृतामिव ॥ १ ॥**

**प्रियंवदा—हद्धी हद्धी । अप्पिअं एव्व संवुत्तं । कस्सिं पि पूआरुहे अवरद्धा सुण्णहिअआ सउन्दला ।** ( पुरोऽवलोक्य । ) **ण हु जस्सिं कस्सिं पि । एसो दुव्वासो सुलहकोवो महेसी । तह सविअ वेअबलुप्फुल्लाए दुव्वाराए गईए पडिणिवुत्तो । को अण्णो हुदवहादो दहिदुं पहविस्सदि ।** हा धिक् हा धिक् । अप्रियमेव संवृत्तम् । कस्मिन्नपि पूजार्हेऽपराद्धा शून्यहृदया शकुन्तला । न खलु यस्मिन्कस्मिन्नपि । एष दुर्वासाः सुलभकोपो महर्षिः । तथा शप्त्वा वेगबलोत्फुल्लया दुर्वारया गत्या प्रतिनिवृत्तः । कोऽन्यो हुतवहाद्दग्धुं प्रभविष्यति ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனசூயை : தோழி! சகுந்தலையின் அதிட்ட தேவதைக்கு அஞ்சலி செய்ய வேண்டும்.

பிரியம்வதை : சரிதான் (இருவரும்) பூப்பறிப்பது போல நடிக்கின்றனர் (திரைக்குப் பின்னால்) இதோ! நான் வந்திருக்கிறேன்.

அனசூயை : (உற்றுக்கோட்டு) தோழி! யாரோ அதிதியின் குரல்போலத் தெரிகிறது.

பிரியம்வதை : சகுந்தலை குடிசையிற்றானே இருக்கிறாள்.

அனசூயை : ஆனால் இன்றைக்கு அவள் தன்வசமாயில்லை. பூக்கள் போதும்.

(புறப்பட்டுப் போகின்றனர்)

(திரைக்குப் பின்னால்)

ஆ! விருந்தினரைப் புறக்கணிப்பவளே!!

4.1 பக்கத்தில் வந்து நின்றும் தபோதனனான என்னை அலட்சியஞ் செய்துகொண்டு வேறு நினைவின்றி எவனைத் தியானஞ் செய்து கொண்டிருக்கிறாயோ அவன் உன்னால் ஞாபகப்படுத்தப்பட்ட போதிலும் குடிகாரன் முன்பேசியதைப் பின் மறப்பது போல உன்னை மறந்து போவானாக!

பிரியம்வதை : அந்தோ!அந்தோ!!ஏதோ கெடுதி விளைந்து விட்டது. நினைவற்றிருக்கும் சகுந்தலை யாரோ பெரியவருக்குத் தீங்கு புரிந்து விட்டாள்.

அனசூயை : (முன்னால் பார்த்து) அவர் சாமானியமானவருமல்லர். அவர் துருவாச மகா முனி. அவருக்கு கோபம் எப்போதும் மூக்கு நுனியில் சபித்து விட்டு சடுதியாகத் திரும்பி விரைந்து செல்கின்றார். நெருப்பை விட வேறென்ன எரிக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**अनसूया—गच्छ । पादेसु पणमिअ णिवत्तेहि णं, जाव अहं अग्घोदअं उवकप्पेमि ।** गच्छ । पादयोः प्रणम्य निवर्तयैनं, यावदहमर्घोदकमुपकल्पयामि ।

**प्रियंवदा—तह ।** ( इति निष्क्रान्ता । ) तथा ।

**अनसूया—**( पदान्तरे स्खलितं निरूप्य । ) **अम्मो । आवेअक्खलिदाए गईए पब्भट्ठं मे अग्गहत्थादो पुप्फभाअणं ।** ( इति पुष्पोच्चयं रूपयति । ) अहो । आवेगस्खलितया गत्या प्रभ्रष्टं ममाग्रहस्तात्पुष्पभाजनम् ।

( प्रविश्य । )

**प्रियंवदा—सहि, पकिदिवक्को सो कस्स अणुणअं पडिगेण्हदि । किं पि उण साणुक्कोसो किदो ।** सखि, प्रकृतिवक्रः स कस्यानुनयं प्रतिगृह्णाति । किमपि पुनः सानुक्रोशः कृतः ।

**अनसूया—**( सस्मितम् । ) **तस्सिं बहु एदं पि । कहेहि ।** तस्मिन्बह्वेतदपि । कथय ।

**प्रियंवदा—जदा णिवत्तिदुं ण इच्छदि तदा विण्णविदो मए । भअवं, पढमं त्ति पेक्खिअ अविण्णादतवप्पहावस्स दुहिदुजणस्स भअवदा एक्को अवराहो मरिसिदव्वोत्ति ।** यदा निवर्तितुं नेच्छति तदा विज्ञापितो मया । भगवन्, प्रथम इति प्रेक्ष्याविज्ञाततपःप्रभावस्य दुहितृजनस्य भगवतैकोऽपराधो मर्षितव्य इति ।

**अनसूया—तदो तदो ।** ततस्ततः ।

**प्रियंवदा—तदो मे वअणं अण्णहाभविदुं णारिहदि । किंदु अहिण्णाणाभरणदंसणेण सावो णिवत्तिस्सदि त्ति मन्तअन्तो सअं अन्तरिहिदो ।** ततो मे वचनमन्यथाभवितुं नार्हति । किंत्वभिज्ञानाभरणदर्शनेन शापो निवर्तिष्यत इति मन्त्रयन्स्वयमन्तर्हितः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடு போய்க் காலில் விழுந்து மறி. நான் பாத பூசைக்கு அர்க்கியமும் நீரும் கொண்டு வருகிறேன்.

பிரியம்வதை : அப்படியே (செல்கின்றாள்)

அனசூயை : (அடிவைத்தும் தடக்கி விழுதலை நடித்து) சந்தடியிலே தடக்கி விழுந்து என் மலர் பாத்திரம் கையிலிருந்து தவறி விட்டதே. (மலர் பொருக்குவது போல நடித்தல்)

பிரியம்வதை : (தோற்றுதல்) தோழி! இயல்பாகவே முரட்டுச் சுபாவ முடையவர். யாருடைய வேண்டுதலுக்குச் செவி கொடுக் கப்போகிறார். ஏதோ ஒரு வகையில் கொஞ்சங் கருணை புரியச் செய்துள்ளேன்.

அனசூயை : (புன்முறுவல் செய்து) அவர் இவ்வளவு செய்ததே பெருங்காரியம். அப்புறம்

பிரியம்வதை : நான் மன்றாடிக் கேட்டேன். ஆனால் அவர் திரும்பிவர மறுத்துவிட்டார். பின்னர் நான் "தேவரீர் தவத்தின் மகிமை தெரியாத பிள்ளைகளாகிய நாங்கள் செய்த முதற் பிழை இது. மன்னிக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டேன்.

அனசூயை : அப்புறம், அப்புறம்......

பிரியம்வதை : "என்சொல்லை மாற்ற முடியாது. ஆனால் நினைவுக்குரிய ஒரு அணிகலனைக் காட்டினால் சாபம் நீங்கும்" என்று கூறிவிட்டு மறைந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**अनसूया—सक्कं दाणिं अस्ससिदुं । अत्थि तेण राएसिणा संपत्थिदेण सणामहेअङ्किअं अङ्गुलीअअं सुमरणीअंत्ति सअं पिणद्धं । तस्सिं साहीणोबाआ सउन्दला भविस्सदि ।** शक्यमिदानीमाश्वसितुम् । अस्ति तेन राजर्षिणा संप्रस्थितेन स्वनामधेयाङ्कितमङ्गुलीयकं स्मरणीयमिति स्वयं पिनद्धम् । तस्मिन्स्वाधीनोपाया शकुन्तला भविष्यति ।

**प्रियंवदा—सहि, एहि । देवकज्जं दाव णिव्वत्तेम्ह ।** सखि, एहि । देवकार्यं तावन्निर्वर्तयावः ।

( इति परिक्रामतः । )

**प्रियंवदा—**( विलोक्य । )**अणसूए, पेक्ख दाव । वामहत्थोवहिदवअणा आलिहिदा विअ पिअसही । भत्तुगदाए चिन्ताए अत्ताणं पि ण एसा विभावेदि । किं उण आअन्तुअं ।** अनसूये, पश्य तावत् । वामहस्तोपहितवदनालिखितेव प्रियसखी । भर्तृगतया चिन्तयात्मानमपि नैषा विभावयति । किं पुनरागन्तुकम् ।

**अनसूया—पिअंवदे, दुवेणं एव्व णं णो मुहे एसो वुत्तन्तो चिट्ठदु । रक्खिदव्वा क्खु पकिदिपेलवा पिअसही ।** प्रियंवदे, द्वयोरेव ननु नौ मुख एष वृत्तान्तस्तिष्ठतु । रक्षितव्या खलु प्रकृतिपेलवा प्रियसखी ।

**प्रियंवदा—को णाम उण्होदएण णोमालिअं सिञ्चेदि ।** को नामोष्णोदकेन नवमालिकां सिञ्चति ।

( इत्युभे निष्क्रान्ते । )

**विष्कम्भः ।**

( ततः प्रविशति सुप्तोत्थितः शिष्यः । )

**शिष्यः—वेलोपलक्षणार्थमादिष्टोऽस्मि तत्रभवता प्रवासादुपावृत्तेन काश्यपेन । प्रकाशं निर्गतस्तावदवलोकयामि कियदवशिष्टं रजन्या इति ।** ( परिक्रम्यावलोक्य च । ) **हन्त प्रभातम् । तथा हि**

**यात्येकतोऽस्तशिखरं पतिरोषधीना-**
**माविष्कृतारुणपुरःसर एकतोऽर्कः ।**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனசூயை : அப்பாடி! இனிச் சிறிது மூச்சுவிடலாம். அந்த அரச முனிவர் போகும்போது தன் பெயர் பொறித்த கணையாழி யொன்றைச் சகுந்தலைக்கு ஞாபகச் சின்ன மாகத்தானாகவே அணிந்துவிட்டுப் போனார். அந்தக் கணையாழி சகுந்தலை வசமேயிருக்கிறது.

பிரியம்வதை : தோழி! வா இப்போது அவளுடைய தெய்வ காரியத்தை முடித்துவிடுவோம். (செல்கின்றனர்)

பிரியம்வதை : (பார்த்து) அனசூயை, இங்கே பார் நமது அன்புத்தோழி முகத்தை இடது கையில் வைத்துக்கொண்டு சித்திரத்திற் கீறிய ஓவியம் போலிருக்கிறாள். கணவன் நினைவிலே தன்னையே மறந்திருக்கின்றாள். அப்படியானால் வந்த விருந்தை எப்படிக் கவனிப்பது?

அனசூயை : இந்த நிகழ்ச்சி எங்களிருவர்க்கிடையிலிரக்கட்டும். மெல்லிய உள்ளம் படைத்தவள். அவளைக் காப்பாற்ற வேண்டும்.

பிரியம்வதை : நவமல்லிகைக் கொடிமீது யாராவது வெந்நீரைத் தெளிப்பாரா?

*(இருவரும் செல்கின்றனர்)*

### முகவுரை முடிவு

(விழித்தெழுந்த சீடன் வருகை)

சீடன் : யாத்திரை முடித்து வந்த காசிப முனிவர் நேரம் பார்க்கும் படி என்னை ஏவியிருக்கிறார். இரவு கழிய இன்னும் எவ் வளவு நாழிகையுண்டென்பதை வெளியே சென்று பார்ப் போம். (சுற்றிவரப்பார்த்து) இதோ பொழுது புலர்ந்து விட்டது. ஒரு புறம் சந்திரன் அத்த மனகிரியை அடைந்து விட்டான். மறுபுறம் அருணன் முன்வர ஞாயிறு எழுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

तेजोद्वयस्य युगपद्व्यसनोदयाभ्यां
लोको नियम्यत इवात्मदशान्तरेषु ॥ १ ॥

अपि च ।

अन्तर्हिते शशिनि सैव कुमुद्वती मे
दृष्टिं न नन्दयति संस्मरणीयशोभा ।
इष्टप्रवासजनितान्यबलाजनस्य
दुःखानि नूनमतिमात्रसुदुःसहानि ॥ २ ॥

**अनसूया**—( प्रविश्यापटीक्षेपेण । )—**एवं णाम विसअपरम्मुहस्स वि जणस्स ण एदं ण विदिअं जधा तेण रण्णा सउन्दलाए अणज्जं आअरिदं ।** एवं नाम विषयपराङ्मुखस्यापि जनस्य नैतन्न विदितं यथा तेन राज्ञा शकुन्तलायामनार्यमाचरितम् ।

**शिष्यः**—**यावदुपस्थितां होमवेलां गुरवे निवेदयामि ।** ( इति निष्क्रान्तः । )

**अनसूया**—**पडिबुद्धा वि किं करिस्सं । ण मे उइदेसु वि णिअकरणिज्जेसु हत्थपाआ पसरन्ति । कामो दाणिं सकामो होदु । जेण असच्चसंधे जणे सुद्धहिअआ सही पदं कारिदा । अहवा दुव्वाससावो एसो विआरेदि । अण्णहा कहं सो राएसी तारिसाणि मन्तिअ एत्तिअस्स कालस्स लेहमेत्तं पि ण विसज्जेदि । ता इदो अहिण्णाणं अङ्गुलीअअं से विसज्जेम । दुक्खसीले तवस्सिजणे को अब्भत्थीअदु । णं सहीगामी दोसो त्ति ववसिदा वि ण पारेमि पवासपडिणिउत्तस्स तादकस्सवस्स दुस्सन्तपरिणीदं आवण्णसत्तं सउन्दलं णिवेदिदुं । इत्थंगए अम्हेहि किं करणिज्जं ।** प्रतिबुद्धापि किं करिष्ये । न मे उचितेष्वपि निजकार्येषु हस्तपादं प्रसरति । काम इदानीं सकामो भवतु । येनासत्यसंधे जने शुद्धहृदया सखी पदं कारिता । अथवा दुर्वासःशाप एष विकारयति । अन्यथा कथं स राजर्षिस्तादृशानि मन्त्रयित्वैतावत्कालस्य लेखमात्रमपि न विसर्जयति । तदितोऽभिज्ञानमङ्गुलीयकं तस्य विसर्जयावः । दुःखशीले तपस्विजने कोऽभ्यर्थ्यताम् । ननु सखीगामी दोष इति



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.2 இவ்விரு பெருஞ்சுடரும் ஒரே காலத்தில் எழுவதும் விழுவதும் உலகத்து இயற்கையை உணர்த்துவது போலி ருக்கிறது. அன்றியும் சந்திரன் மறைந்தான். குமுதத்தின் அழகு பழங் கதையாகி என் கண்களுக்கு மகிழ்ச்சி தர வில்லை. காதலரைப் பிரிந்த இளமங்கையரின் பிரிவுத் துயர் பொறுத்தாற்கு மிக அரிதே.

அனசூயை : (திரையை நீக்கிக்கொண்டு வருதல்) விஷய சுகங்களைப் பொருட்படுத்தாத ஆச்சிரமவாசிகட்கு இது தெரியா தென் றாலும் சகுந்தலையிடம் அந்த அரசன் நடந்து கொண்டது முறையன்று.

சீடன் : ஓமத்துக்கு நேரம் வந்துவிட்டதெனக் குரு தேவரிடம் கூறப் போகிறேன். (செல்லல்)

அனசூயை : விழித்துக்கொண்ட போதிலும் நான் என்ன செய்ய முடியும். வழக்கமான என் கருமங்களைக்கூடச் செய்வ தற்குக் கை கால் ஏவுகிறதில்லை. மன்மதனே! உன் விருப்பம் இப்போது நிறைவேறட்டும். உன்னாலன்றோ வெள்ளை உள்ளம் படைத்த எமது தோழி வஞ்சனை நிறைந்த அம்மனிதனிடத்தில் நம்பிக்கை வைத்தாள். அல்லது துருவாசரின் சாபந்தான் இம்மாற்றங்களை உண்டாக்குகிறதோ? இல்லாவிட்டால் இத்துணை இனி மையான வார்த்தைகளைப்பேசிய அந்த அரசர் பெருந் தகை இவ்வளவு காலமும் ஒரு கடிதங் கூட அனுப்பி யிருக்கக் கூடாதா? இனி அந்த நினைவுச் சின்னமான கணையாழியை அனுப்ப வேண்டியது தான். துற வொழுக்கம் பூண்ட தவமுனிவர்களில் யாரைத்தான் அனுப்புவது. நம் தோழியும் இவ்விஷயத்தில் பிழை செய்து விட்டாள். இருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

व्यवसितापि न पारयामि प्रवासप्रतिनिवृत्तस्य तातकाश्यपस्य दुष्यन्तपरिणीतामापन्नसत्त्वां शकुन्तलां निवेदयितुम् । इत्थंगतेऽस्माभिः किं करणीयम् ।

**प्रियंवदा**—( प्रविश्य सहर्षम् । ) **सहि, तुवर तुवर सउन्दलाए पत्थाणकोदुअं णिव्वत्तिदुं ।** सखि, त्वरस्व त्वरस्व शकुन्तलायाः प्रस्थानकौतुकं निर्वर्तयितुम् ।

**अनसूया**—**सहि, कहं एदं ।** सखि, कथमेतत् ।

**प्रियंवदा**—**सुणाहि दाणिं । सुहसइदपुच्छिआ सउन्दलासआसं गदम्हि । तदो जाव एणं लज्जावणदमुहिं परिस्सजिअ सअं तादकस्सवेण एव्वं अहिणन्दिदं । दिट्ठिआ धूमाउलिददिट्ठिणो वि जअमाणस्स पाअए एव्व आहुदी पडिदा । वच्छे, सुसिस्सपरिदिण्णा विज्जा विअ असोअणिज्जा संवुत्ता । अज्ज एव्व इसिरक्खिदं तुमं भत्तुणो सआसं विसज्जेमि त्ति ।** श्रृणु इदानीम् । सुखशयितपृच्छिका शकुन्तलासकाशं गतास्मि । ततो यादवेनां लज्जावनतमुखीं परिष्वज्य स्वयं तातकाश्यपेनैवमभिनन्दितम् । दिष्ट्या धूमाकुलितदृष्टेरपि यजमानस्य पावक एवाहुतिः पतिता । वत्से, सुशिष्यपरिदत्ता विद्येवाशोचनीया संवृत्ता । अद्यैव ऋषिरक्षितां त्वां भर्तुः सकाशं विसर्जयामीति ।

**अनसूया**—**अह केण सूइदो तादकस्सवस्स वुत्तन्तो ।** अथ केन सूचितस्तातकाश्यपस्य वृत्तान्तः ।

**प्रियंवदा**—**अग्गिसरणं पविट्ठस्स सरीरं विणा छन्दोमईए वाणिआए ।** अग्निशरणं प्रविष्टस्य शरीरं विना छन्दोमय्या वाण्या ।

**अनसूया**—( सविस्मयं ) **कहेहि ।** कथय ।

**प्रियंवदा**—( संस्कृतमाश्रित्य । )

**दुष्यन्तेनाहितं तेजो दधानां भूतये भुवः ।**
**अवेहि तनयां ब्रह्मन्नग्निगर्भां शमीमिव ॥ ३ ॥**

**अनसूया**—( प्रियंवदामाश्लिष्य । ) **सहि, पिअं मे । किंदु अज्ज एव्व सउन्दला णीअदित्ति उक्कण्ठासाधारणं परितोसं अणुहोमि ।** सखि, प्रियं मे । किंत्वद्यैव शकुन्तला नीयत इत्युत्कण्ठासाधारणं परितोषमनुभवामि ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத்திரையிலிருந்து திரும்பிய தந்தை காசிபரிடம் துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் மணம் நிறை வேறியதையும் அவள் கருப்பவதியாய் இருப்பதையும் சொல்ல முடிவு செய்த போதிலும் உள்ளம் இசையவில் லையே. இவ்வளவு தூரம் எல்லாம் போனபின் நாமென்ன செய்ய முடியும்.

பிரியம்வதை : (தோன்றி மகிழ்ச்சியுடன்) சீக்கிரம் சீக்கிரம் சகுந்த லையின் பிரியாவிடை வைபவத்தை நிறைவேற்ற வேண்டும். சீக்கிரம் வா!

அனசூயை : தோழி! அஃதெப்படி?

பிரியம்வதை : நன்றாக நித்திரை செய்தாளா என்று விசாரிப் பதற்குச் சகுந்தலையிடஞ் சென்றேன்.

பிரியம்வதை : அப்போது வெட்கத்தினாலே தலைகுனிந்து நின்ற அவளைக் காசிபத்தந்தை மருங்கே அணைத்து "பார்வை யைப் புகை மறைத்திருந்த போதிலும் எசமான் சொரிந்த அவிப்பாகம் நேராக தீயில் விழுந்து விட்டது. அது உன் அதிட்டம் குழந்தாய்! நன்மாணக்கருக்குச் சொல்லிய கல்விபோல நீயும் கவலைக்கிடமற்றவளானாய். இன்றே நான் முனிவர்கள் காவலில் உன்னை உன் கணவனிடம் அனுப்பிவைக்கிறேன்." என்றார்.

அனசூயை : ஆனால் காசிபர் பெருந்தகைக்கு இங்கு நடந்தவற்றை யார் கேட்டதாம்.

பிரியம்வதை : அக்கினி மண்டபத்தில் அவர் புகுந்த பொழுது கவிதை யுருவில் ஓர் அசரீரி கூறியதாம்.

அனசூயை : (ஆச்சரியத்துடன்) சரி மேலே சொல்லு.

பிரியம்வதை : (சம்ஸ்கிருதத்தில் பேசுபவளாய்)

4.3 அந்தணரே! சாமிமரம் அக்கினியை உள்ளடக்கியிருப்பது போலத் துஷ்யந்தனுடைய ஒளியை உலகின் நலனுக்காக உன் மகள் தாங்கியிருக்கிறாள் என்பதை அறிவாயாக!

அனசூயை : (பிரியம்வதையைத் தழுவியவாறு)
தோழி! தோழி! தோழி!! ஆனால் சகுந்தலை இன்றே போகின்றாளென்பதை எண்ணத் துயரும் மகிழ்ச்சியும் ஒன்றாக உண்டாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**प्रियंवदा—सहि, अम्हे दाव उक्कण्ठं विणोदइस्सामो । सा वस्सिणी णिव्वुदा होदु ।** सखि, आवां तावदुत्कण्ठां विनोदयिष्यावः । सा तपस्विनी निर्वृता भवतु ।

**अनसूया—तेण हि एदस्सिं चूदसाहावलम्बिदे णारिएरस-मुग्गए एतण्णिमित्तं एव्व कालन्तरक्खमा णिक्खित्ता मए केसर-मालिआ । ता इमं हत्थसंणिहिदं करेहि । जाव अहंपि से मिअलोअणं तित्थमित्तिअं दुव्वाकिसलआणित्ति मङ्गलसमालम्भ-णाणि विरएमि ।** तेन ह्येतस्मिश्चूतशाखावलम्बिते नारिकेलसमुद्गक एतन्नि-मित्तमेव कालान्तरक्षमा निक्षिप्ता मया केसरमालिका । तदिमां हस्तसंनिहितां-कुरु । यावदहमपि तस्यै मृगरोचनां तीर्थमृत्तिकां दूर्वाकिसलयानीति मङ्गल-समालम्भनानि विरचयामि ।

**प्रियंवदा—तह करीअदु ।** तथा क्रियताम् ।

( अनसूया निष्क्रान्ता । प्रियंवदा नाट्येन सुमनसो गृह्णाति । )

( नेपथ्ये । )

**गौतमि, आदिश्यन्तां शार्ङ्गरवमिश्राः शकुन्तलानयनाय ।**

**प्रियंवदा—**( कर्णं दत्त्वा । ) **अणसूए, तुवर तुवर । एदे क्खु हत्थि-णाउरगामिणो इसीओ सद्दावीअन्ति ।** अनसूये, त्वरस्व त्वरस्व । एते खलु हास्तिनापुरगामिन ऋषय शब्दाय्यन्ते ।

( प्रविश्य समालम्भनहस्ता । )

**अनसूया—सहि, एहि । गच्छम्ह ।** सखि, एहि । गच्छावः ।

( इति परिक्रामतः । )

**प्रियंवदा—**( विलोक्य । ) **एसा सुज्जोदय एव्व सिहामज्जिदा पडिच्छिदणीवारहत्थाहिं सोत्थिवाअणकाहिं तावसीहिं अहि-णन्दीअमाणा सउन्दला चिट्ठइ । उवसप्पम्ह णं ।** एषा सूर्योदय एव शिखामज्जिता प्रतिष्ठितनीवारहस्ताभिः स्वस्तिवाचनिकाभिस्तापसीभिरभिनन्द्य-माना शकुन्तला तिष्ठति । उपसर्पाव एताम् ।

( इत्युपसर्पतः । )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியம்வதை : தோழி நாங்கள் ஒருவாறு இத்துயரைச் சமாளித்துக் கொள்வோம். ஆனால் இந்த அபலை சந்தோஷமாக இருந்தால் போதும்.

அனசூயை : அப்படியானால் மாமரக் கொப்பிலே தொங்கும் இத் தென்னங் கூடையில் இந்த வைபவத்திற்காகப் பல நாள் வாடா திருக்கக்கூடிய மகிழ மலர் மாலையிருக்கிறது. நீ அதை எடு. அதற்கிடையில் நான் அவளுக்குத் தேவை யான கோரோசனை, தீர்த்தக்கரைமண், துருவம் புல் முதலிய மங்களப் பொருள்களை ஆயத்தஞ் செய்கிறேன்.

பிரியம்வதை : அப்படியே ஆகட்டும். செய்வோம்.

(அனசூயை போகிறாள்; பிரியம்வதை பூக்களை எடுப்பது போல் நடிக்கிறாள்)

*(திரைக்குப்பின்னால்)*

கோதமி! சகுந்தலையை அழைத்துச் செல்லும் படி சார்ங்கவர் முதலாயினோர்க்குச் சொல்லு.

பிரியம்வதை : (உற்றுக்கேட்டு) அனசூயா, சீக்கிரம் சீக்கிரம், அத்தினா புரிக்குச் செல்லுந்துறவிகளை அழைக்கிறார்கள்

அனசூயை : (ஒப்பனை செய்யும் பொருள்களோடு தோன்றுதல்) தோழி நாமும் போவோம். (சொல்லுதல்)

பிரியம்வதை : (பார்த்து) சூரியோதயத்தில் தலைமுழுகிய சகுந்த லையைக் கையில் காட்டரிசியை எடுத்து ரிகூஷிபத்தினிகள் அதோ ஆசீர்வதிக்கிறார்கள் நாமும் அவளிடம் போவோம். வா. (இருவரும் செல்லுதல்) முன்சொன்னபடி சகுந்தலை ஆசனத்திலிருந்தவாறு தோன்றுகிறாள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( ततः प्रविशति यथोद्दिष्टव्यापारासनस्था शकुन्तला । )

**तापसीनामन्यतमा**—( शकुन्तलां प्रति । ) **जादे, भत्तुणो बहु-माणसूअअं महादेईसद्दं लहेहि ।** जाते, भर्तुर्बहुमानसूचकं महादेवीशब्दं लभस्व ।

**द्वितीया—वच्छे, वीरप्पसविणी होहि ।** वत्से, वीरप्रसविनी भव ।

**तृतीया—वच्छे, भत्तुणो बहुमदा होहि ।** वत्से, भर्तुर्बहुमता भव ।

( इत्याशिषो दत्त्वा गौतमीवर्जं निष्क्रान्ताः । )

**सख्यौ**—( उपसृत्य । ) **सहि सुहमज्जणं दे होदु ।** सखि, सुखमज्जनं ते भवतु ।

**शकुन्तला—साअदं मे सहीणं । इदो णिसीदह ।** स्वागतं मे सख्योः । इतो निषीदतम् ।

**उभे**—( मङ्गलपात्राण्यादाय । उपविश्य । ) **हला, सज्जा होहि । जाव मङ्गलसमालम्भणं विरएम ।** हला, सज्जा भव । यावन्मङ्गलसमालम्भनं विरचयावः ।

**शकुन्तला—एदं पि बहु मन्तव्वं । दुल्लहं दाणिं मे सहीमण्डणं भविस्सदि त्ति ।** ( इति बाष्पं विसृजति । ) एतदपि बहु मन्तव्यम् । दुर्लभमिदानीं मे सखीमण्डनं भविष्यतीति ।

**उभे—सहि, उइअं ण दे मङ्गलकाले रोइदुं ।** ( इत्यश्रूणि प्रमृज्य नाट्येन प्रसाधयतः । ) सखि, उचितं न ते मङ्गलकाले रोदितुम् ।

**प्रियंवदा—आहरणोइदं रूवं अस्समसुलहेहिं पसाहणेहिं विप्पआरीअदि ।** आभरणोचितं रूपमाश्रमसुलभैः प्रसाधनैर्विप्रकार्यते ।

( प्रविश्योपायनहस्तौ । )

**ऋषिकुमारकौ—इदमलंकरणम् । अलंक्रियतामत्रभवती ।**

( सर्वा विलोक्य विस्मिताः । )

**गौतमी—वच्छ णारअ, कुदो एदं ।** वत्स नारद, कुत एतत् ।

**प्रथमः—तातकाश्यपप्रभावात् ।**

**गौतमी—किं माणसी सिद्धी ।** किं मानसी सिद्धिः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபசி ஒருத்தி : (சகுந்தலையைப் பார்த்து) மகளே! உன் கணவன் மதிப்புக்கு ஏற்றவாறு நீ கோப்பெருந்தேவியென்ற பட்டத்தைப் பெறுவாயாக.

இரண்டாம் தாபசி : குழந்தாய்! வீரப் புதல்வனைப் பெறுவாயாக!

மூன்றாவது தாபசி: குழந்தாய்! கணவன் நன்மதிப்பைம் பெறுவாயாக!

தோழிகள் : (சகுந்தலையை அணுகி) தோழி! சுகத்தில் மூழ்குவாயாக.

சகுந்தலை : என் தோழியர்க்கு நல்வரவு; இப்படியிருங்கள்.

இருவரும் : (மங்கல பாத்திரங்களை எடுத்துக்கொண்டு இருத்தல்)

தோழி; ஆயத்தமாகு. மங்களப் பொருள்களால் உன்னை

அலங்கரிக்கப் போகிறோம்.

சகுந்தலை : இதைக்கூட வெகுவாக மதிக்கிறேன். இனி இந்த ஒப்பனை எப்பொழுது கிடைக்கப்போகிறதோ! (கண்ணீர் விடுகிறாள்)

இருவரும் : தோழி ! அழாதே. மங்களமான இந் நேரத்தில் இது வேண்டாம்.

பிரியம்வதை : அணிகளால் அலங்கரிக்கத்தக்க இவ்வழகை ஆசிரமத்தில் இலேசாகக்கிடைக்கும் பொருள்கள் கெடுத்து விடுமே.

இருடி குமாரர் இருவர் : (கையிலே பரிசுகளோடு வருதல்) இதோ அணிகலன்கள்; இம்மங்கையை இதனால் ஒப்பனை செய்யுங்கள்.

(எல்லோரும் ஆச்சரியத்தோடு பார்க்கின்றனர்.)

கௌதமி : குழந்தாய் !நாரதா!! இவை எங்கே கிடைத்தன.

முதல் இருடி குமாரன் : தந்தை காசிபரின் மகிமை தான்.

கௌதமி : என்ன; அவருடைய மனோவலியின் பயனா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

द्वितीयः—न खलु । श्रूयताम् । तत्रभवता वयमाज्ञप्ताः शकुन्तलाहेतोर्वनस्पतिभ्यः कुसुमान्याहरतेति । तत इदानीं

क्षौमं केनचिदिन्दुपाण्डु तरुणा माङ्गल्यमाविष्कृतं
निष्ठ्यूतश्चरणोपभोगसुलभो लाक्षारसः केनचित् ।
अन्येभ्यो वनदेवताकरतलैरापर्वभागोत्थितै-
र्दत्तान्याभरणानि तत्किसलयोद्भेदप्रतिद्वन्द्विभिः ॥ ४ ॥

प्रियंवदा—हला, इमाए अब्भुववत्तीए सूइआ दे भत्तुणो गेहे अणुहोदव्वा राअलच्छित्ति । हला, अनयाभ्युपपत्त्या सूचिता ते भर्तुर्गेहेऽनुभवितव्या राजलक्ष्मीरीति ।

( शकुन्तला व्रीडां रूपयति । )

प्रथमः—गौतम, एह्येहि । अभिषेकोत्तीर्णाय काश्यपाय वनस्पतिसेवां निवेदयावः ।

द्वितीयः—तथा ।

( इति निष्क्रान्तौ । )

सख्यौ—अए, अणुवजुत्तभूसणो अअं जणो । चित्तकम्मपरिअएण अङ्गेसु दे आहरणविणिओअं करेम्ह । अये, अनुपयुक्तभूषणोऽयं जनः । चित्रकर्मपरिचयेनाङ्गेषु ते आभरणविनियोगं कुर्वः ।

शकुन्तला—जाणे वो णेउणं । जाने वां नैपुणम् ।

( उभे नाट्येनालंकुरुतः । )

( ततः प्रविशति स्नानोत्तीर्णः काश्यपः । )

काश्यपः—

यास्यत्यद्य शकुन्तलेति हृदयं संस्पृष्टमुत्कण्ठया
कण्ठः स्तम्भितबाष्पवृत्तिकलुषश्चिन्ताजडं दर्शनम् ।
वैक्लव्यं मम तावदीदृशमपि स्नेहादरण्यौकसः
पीड्यन्ते गृहिणः कथं न तनयाविश्लेषदुःखैर्नवैः ॥ ५ ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது இருடி குமாரர் : அப்படியன்று கேட்பீராக. " சகுந்தலை அணிவதற்கு காட்டுப் பெருமரங்களின் மலரைக் கொண்டு வருமாறு முனிவர் பெருந்தகை கூறினார்.

4.4 பின்னர் சந்திரன் போல வெண்மையுடைய மங்களமான இந்தப்பட்டுப் புடவையை ஒரு மரம் தந்தது. பாதங்களில் அணிவதற்குச் சிறந்த செந்நிறக் குழம்பை மற்றொன்று உமிழ்ந்தது. வேறு மரங்களிலிருந்து வன தேவதைகள் அம்மரங்களின் புதிய இலைத்துளிர் போலத் தம் கரங்களை மணிக்கட்டுவரை நீட்டி அணிகலன்களைத் தந்தன.

பிரியம்வதை : (சகுந்தலையைப் பார்த்து) உன் கணவன் வீட்டில் நீ அனுபவிக்கப் போகும் அரசலட்சுமியை இச் சகுனம் அறிவிக்கிறது.

(சகுந்தலை நாணமடைந்தவள் போல நடிக்கிறாள்)

மு.இருடி : கௌதமா! வா வா போவோம். போய் நீராடச் சென்றிருக்கும் காசிபப்பெருந்தகைக்கு காட்டுப் பெருமரங்கள் செய்த உதவியை அறிவிப்போம்.

இ.இருடி : அப்படியே (போகின்றனர்)

தோழியர் : அடி! எங்களுக்கு ஆபரணங்களணிந்து பழக்கமில்லை. ஓவியங்களிற் பார்த்துப் பழகியபடி இவற்றை உனக்கு அணிகிறோம்.

சகுந்தலை : உங்களுடைய திறமை எனக்குத் தெரியாதா?

( இருவரும் ஒப்பனை செய்வதை நடித்தல் )

(நீராடித் தரும்பியை காசிபர் வருதல்)

காசிபர் :4.5 இன்று சகுந்தலை போகிறாள் என்ற நினைவு என் மனத்தைப் பெரிதும் வாட்டுகின்றது. கண்ணீர் இடைவிடாது துளிர்ப்பதால் குரல் கம்மி விட்டது. துயரினால் பார்வை குன்றிவிட்டது. அவள் மீதுள்ள அன்பினால் வனவாசியாகிய எனக்கே இத்தகைய மனத்துயருண்டானால், இல்லறத்திலுள்ளவர் தமது மகளிரைப் பிரியும் புதுத்துயரால் எத்துணை இன்னலடைவர்? (செல்கிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( इति परिक्रामति )

**सख्यौ—हला सउन्दले अवसिदमण्डणासि । परिधेहि संपदं खोमजुअलं ।** हला शकुन्तले, अवसितमण्डनासि । परिधत्स्व सांप्रतं क्षौमयुगलम् ।

( शकुन्तलोत्थाय परिधत्ते । )

**गौतमी—जादे, एसो दे आणन्दपरिवाहिणा चक्खुणा परिस्सजन्तो विअ गुरू उवट्ठिदो । आआरं दाव पडिवज्जस्स ।** जाते, एष त आनन्दपरिवाहिणा चक्षुषा परिष्वजमान इव गुरुरुपस्थितः । आचारं तावत्प्रतिपद्यस्व ।

**शकुन्तला—**( सव्रीडम् । ) **ताद, वन्दामि ।** तात वन्दे ।

**काश्यपः—वत्से,**

**यथातेरिव शर्मिष्ठा भर्तुर्बहुमता भव ।**
**सुतं त्वमपि सम्राजं सेव पूरुमवाप्नुहि ॥ ६ ॥**

**गौतमी—भअवं, वरो क्खु एसो ण आसिसा ।** भगवन्, वर खल्वेषो नाशीः ।

**काश्यपः—वत्से, इतः सद्योहुताग्नीन्प्रदक्षिणीकुरुष्व ।**

[ सर्वे परिक्रामन्ति । ]

**काश्यपः—**( ऋक्छन्दसाशास्ते । )

**अमी वेदिं परितः क्लृप्तधिष्ण्याः**
**समिद्वन्तः प्रान्तसंस्तीर्णदर्भाः ।**
**अपघ्नन्तो दुरितं हव्यगन्धै-**
**र्वैतानास्त्वां वह्नयः पावयन्तु ॥ ७ ॥**

**प्रतिष्ठस्वेदानीम् ।** ( सदृष्टिक्षेपम् । ) **क्व ते शार्ङ्गरवमिश्राः ।**

( प्रविश्य । )

**शिष्यः—भगवन्, इमे स्मः ।**

**काश्यपः—भगिन्यास्ते मार्गमादेशय ।**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழியர் : தோழி! சகுந்தலை, ஒப்பனை முடிந்தது. இந்த இரண்டு பட்டையும் உடுத்துக் கொள். (சகுந்தலை எழுந்து உடுத்துக் கொள்கின்றாள்)

கௌதமி : மகிழ்ச்சி நிறைந்த கண்களால் உன்னைத் தழுவிக் கொள்வது போல உன் தந்தை காசிபர் இதோ வந்து நிற்கிறார். வழக்கம் போல் அவரை வணங்கு.

சகுந்தலை : (வெட்கத்தோடு) தந்தையே வணங்குகிறேன். (வணங் குதல்)

காசிபர் : குழந்தாய்!

4.6 யயாதியாற் சருமிட்டை எவ்வாறு மதிக்கப்பட்டாளோ அவ் வாறு நீயும் உன் கணவனால் நன்கு மதிக்கப்படு வாயாக. அவள் பூருவைப் பெற்றெடுத்தது போல நீயும் இவ்வுல கையெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆளும் பேரரசனைப் பெறுவாயாக.

கௌதமி : பெருமானே! இது வரமும் வாழ்த்துமாகிறது.

காசிபர் : குழந்தாய்! இப்போது தான் வேட்கப்பட்ட இவ்வேள்வித் தீயை வலம் வருவாயாக. (எல்லாரும் வலம் வருதல்)

காசிபர் : 4.7 (இருக்கு வேதச் செய்யுளொன்றைப் பாடி) இடம் வகுத்துச் சமித்து இட்டுத், தருப்பை தூவியமைத்ததும், தன் வேள்வித் தீயின் மணத்தால் தீவினையை அகற்றுவது மான, இவ்வேதிகையின் தீச்சுடர்கள், உன்னைத் தூய் மைப்படுத்துக. (சகுந்தலை தீயைச் சுற்றி வருதல்) இனிப் புறப்படு. (சுற்றிப் பார்த்து) சார்ங்கரவன் முதலியோர் எங்கே?

சீடர் : (வந்து) இதோ இருக்கிறோம். குருதேவா.

காசிபர் : சார்ங்காவ உன் தங்கைக்கு வழிகாட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

शार्ङ्गरवः—इत इतो भवती ।

( सर्वे परिक्रामन्ति । )

काश्यपः—भो भोः संनिहितास्तपोवनतरवः,

पातुं न प्रथमं व्यवस्यति जलं युष्मास्वपीतेषु या
नादत्ते प्रियमण्डनापि भवतां स्नेहेन या पल्लवम् ।
आद्ये वः कुसुमप्रसूतिसमये यस्या भवत्युत्सवः
सेयं याति शकुन्तला पतिगृहं सर्वैरनुज्ञायताम् ॥ ८ ॥

( कोकिलरवं सूचयित्वा )

अनुमतगमना शकुन्तला
तरुभिरियं वनवासबन्धुभिः ।
परभृतविरुतं कलं यथा
प्रतिवचनीकृतमेभिरीदृशम् ॥ ९ ॥

( आकाशे । )

रम्यान्तरः कमलिनीहरितैः सरोभि–
श्छायाद्रुमैर्नियमितार्कमयूखतापः ।
भूयात्कुशेशयरजोमृदुरेणुरस्याः
शान्तानुकुलपवनश्च शिवश्च पन्थाः ॥ १० ॥

( सर्वे सविस्मयमाकर्णयन्ति । )

गौतमी—जादे, णादिजणसिणिद्धाहिं अणुण्णादगमणासि तवोवण-देवदाहिं । पणम भअवदीणं । जाते, ज्ञातिजनस्निग्धाभिरनुज्ञातगमनासि तपोवनदेवताभिः । प्रणम भगवतीभ्यः ।

शकुन्तला—( सप्रणामं परिक्रम्य । जनान्तिकम् । ) हला पिअंवदे, णं अज्जउत्तदंसणुस्सुआए वि अस्समपदं परिच्चअन्तीए दुक्खेण मे चलणा पुरदो पवट्टन्ति । हला प्रियंवदे, नन्वार्यपुत्रदर्शनोत्सुकाया अप्याश्रमपदं परित्यजन्त्या दुःखेन मे चरणौ पुरतः प्रवर्तेते ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ங்கர : இப்படி அம்மா! இப்படி வருக அம்மா!! (எல்லாரும் செல்லுதல்)

காசிபர் : 4.8 ஓ! தபோவனத்தைச் சுற்றியுள்ள தருக்களே! உங்களுக்கு முதலிலே தண்ணீர் ஊற்றாவிட்டால் தானும் அருந்த முற் படாதவள், பூச்சூடுவதில் ஆசையுடையவளானாலும் உங்கள் மீதுள்ள அன்பினால் உங்கள் தளிரைக்கூடக் கிள்ளாதவள்; நீங்கள் முதன் முதற் பூப்பூக்குங் காலங் களிலே அதன் நிமித்தம் பெருவிழாக் கொண்டாடுபவள். அத்தகைய சகுந்தலை இதோ தன் கணவன் வீட்டுக்குப் போகின்றாள். நீங்களெல்லாரும் அவளுக்கு விடை கொடுப்பீராக.

4.9 (குயில் கூவும் ஓசையைக் கேட்டவர் போல் நடித்துக் கொண்டு) காட்டு வாழ்க்கையில் சுற்றத்தவர் போலிருந்த மரங்களின் பிரியா விடை கிடைத்துவிட்டது. இக்குயிலின் இனிய ஓசையே அம் மரங்களின் அனுமதியாகும். (ஆகா யத்தில்)

4.10 தாமரை நிறைந்த பசிய குளங்களாங்காங்கு கிடந்து அழகுபடுத்தும், கொடுங்கதிர் பரப்பும் சூரிய வெப்பத் தைத் தணிக்கம் நிழல் மரங்கள், தாமரை மலரின் மகரந் தப்பொடி பரவி மென்மையாய் விளங்கும் மணற் பரப்பு, இன்பமளிக்கும் மெல்லிய தென்றற் காற்று என்னுமிவை இவள் செல்லும் வழியை மங்கலம் நிறைந்ததாக்குக.

*பங்கய மலர்ந்த பொய்கை யிடையிடை பசுமை கால*
*வெங்கதிர் வெம்மை நீக்கும் விரிநிழற் தருக்கள் மல்க*
*இங்கிவள் செல்லும் பாதை யிடுமணல் கமலத் தாது*
*பொங்கிட வினிய தென்றல் மங்களம் பொலிக மாதோ.*

(எல்லாரும் ஆச்சரியத்தோடு கேட்கின்றனர்)

கௌதமி : குழந்தாய்! இத்தவவனத்திலுள்ள தேவதைகள் உன் உற வினர் போலுனக்கு விடையளித்து விட்டன. அவர்களை வணங்கு.

சகுந்தலை : (தலை வணங்கி நடந்து கொண்டு ஒரு புறமாக) தோழி பிரியம் வதை என் கணவனைக் காண ஆர்வமுடையவளா யிருந்த போதிலும் இந்த வனத்தை விட்டுப்போக என் கால்கள் ஏவவில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**प्रियंवदा—ण केवलं तवोवणविरहकादरा सही एव्व । तुए उवट्ठिदविओअस्स तवोवणस्स वि दाव समवत्था दीसइ ।** न केवलं तपोवनविरहकातरा सख्येव । त्वयोपस्थितवियोगस्य तपोवनस्यापि तावत्समवस्था दृश्यते ।

**उग्गलिअदब्भकवला मिआ परिच्चत्तणच्चणा मोरा ।**
**ओसरिअपण्डुपत्ता मुअन्ति अस्सू विअ लदाओ ॥ ११ ॥**

उद्गलितदर्भकवला मृग्यः परित्यक्तनर्तना मयूराः ।
अपसृतपाण्डुपत्रा मुञ्चन्त्यश्रूणीव लताः ॥

**शकुन्तला—**( स्मृत्वा । ) **ताद, लदाबहिणिअं वणजोसिणिं दाव आमन्तइस्सं ।** तात, लताभगिनीं वनज्योत्स्नां तावदामन्त्रयिष्ये ।

**काश्यपः—अवैमि ते तस्यां सोदर्यस्नेहम् । इयं तावद्दक्षिणेन ।**

**शकुन्तला—**( लतामुपेत्य । ) **वणजोसिणी, चूदसंगता वि मं पच्चालिङ्ग इदोगदाहिं साहाबाहाहिं । अज्जप्पहुदि दूरपरिवत्तिणी दे खु भविस्सं ।** वनज्योत्स्ने, चूतसंगतापि मां प्रत्यालिङ्गेतोगताभिः शाखाबाहाभिः । अद्यप्रभृति दूरपरिवर्तिनी ते खलु भविष्यामि ।

**काश्यपः—**

**संकल्पितं प्रथममेव मया तवार्थे**
**भर्तारमात्मसदृशं सुकृतैर्गता त्वम् ।**
**चूतेन संश्रितवती नवमालिकेय-**
**मस्यामहं त्वयि च संप्रति वीतचिन्तः ॥ १२ ॥**

**इतः पन्थानं प्रतिपद्यस्व ।**

**शकुन्तला—**( सख्यौ प्रति । ) **हला, एसा दुवेणं वो हत्थे णिक्खेवो ।** हला, एषा द्वयोर्युवयोर्हस्ते निक्षेपः ।

**सख्यौ—अअं जणो कस्स हत्थे समप्पिदो ।** ( इति बाष्पं विहरतः । ) अयं जनः कस्य हस्ते समर्पितः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியம்வதை : இத் தபோவனத்தைப் பிரிவதால் உனக்கு மட்டுமா துயர்? இவ்வனமும் உன்னைப் பிரிவதால் துயரடைகிறதல்லவா?

4.11 மான்கள் தருப்பைப் புல்லை மறந்து விட்டன. மயில்கள் ஆடலை மறந்தன. மரங்கள் கண்ணீர் வடிப்பது போலப் பழுத்த இலைகளை உதிர்க்கின்றன.

சகுந்தலை : (நினைவு கூர்ந்து) அப்பா என் தங்கை வனசோதிக் கொடியிடம் விடைபெறப் போகிறேன்.

காசிபர் : உன் சகோதர பாசத்தை நான் அறிவேன். இதோ வலப்புறத்தில் நிற்கிறது.

சகுந்தலை : (கொடிக்குக் கிட்டச் சென்று) வனசோதி! நீ மாமரத்தைத் தழுவியிருந்தாலும் என் பக்கமாக நீண்ட உன் கைகளால், என்னைத் தழுவிக் கொள். இன்று தொடங்கி நான் உன்னை விட்டுப் பிரியப் போகிறேன்.

காசிபர் :4.12முன் நான் நினைத்திருந்தபடியே உனக்கேற்ற கணவனை உன் நல்வினைப் பயனாற் பெற்றுவிட்டாய். இந்த நவ மல்லியையும் இம்மாமரத்தைக் கொழுநனாகப் பெற்று விட்டது. இனி என் கவலைகளே ஒழிந்தன: இனி உன் பிரயாணத்தைத் துவங்கலாம்.

சகுந்தலை : (தோழிகளை நோக்கி) தோழிகளே! இதை உங்களிருவர் கையிலும் ஒப்படைக்கிறேன்.

தோழிகள் : எங்களை யாரிடம் அம்மா ஒப்படைக்கப் போகிறாய் (கண்ணீர் விடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

काश्यपः—अनसूये, अलं रुदित्वा । ननु भवतीभ्यामेव स्थिरी· कर्तव्या शाकुन्तला ।

( सर्वे परिक्रामन्ति । )

शकुन्तला—ताद, एसा उडजपज्जन्तचारिणी गब्भमन्थरा मिअवहू जदा अणघप्पसवा होइ तदा मे कंपि पिअणिवेदइत्तअं विसज्जइस्सह । तात एषोटजपर्यंतचारिणी गर्भमन्थरा मृगवधूर्यदानघ-प्रसवा भवति तदा मह्यं कमपि प्रियनिवेदयितृकं विसर्जयिष्यथ ।

काश्यपः—नेदं विस्मरिष्यामः ।

शकुन्तला—( गतिभङ्गं रूपयित्वा । ) को णु क्खु एसो णिवसणे मे सज्जइ । ( इति परावर्तते । ) को नु खल्वेष निवसने मे सज्जते ।

काश्यपः—वत्से,

यस्य त्वया व्रणविरोपणमिङ्गुदीनां
तैलं न्यषिच्यत मुखे कुशसूचिविद्धे ।
श्यामाकमुष्टिपरिवर्धितको जहाति
सोऽयं न पुत्रकृतकः पदवीं मृगस्ते ॥ १३ ॥

शकुन्तला—वच्छ, किं सहवासपरिच्चाइणिं मं अणुसरसि । अचिरप्पसूदाए जणणीए विणा वड्ढिदो एव्व । दाणिं पि मए विरहिदं तुमं तादो चिन्तइस्सदि । णिवत्तेहि दाव । ( इति रुदती प्रस्थिता । ) वत्स, किं सहवासपरित्यागिनीं मामनुसरसि । अचिरप्रसूतया जनन्या विना वार्धित एव । इदानीमपि मया विरहितं त्वां तातश्चिन्तयिष्यति । निवर्तस्व तावत् ।

काश्यपः—

उत्पक्ष्मणोर्नयनयोरुपरुद्धवृत्तिं
बाष्पं कुरु स्थिरतया विरतानुबन्धम् ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிபர் : அனசூயை; அழாதே, நீங்களல்லவா சகுந்தலையைத் தேற்ற வேண்டும். (எல்லாரும் நடத்தல்)

சகுந்தலை : அப்பா, எம் குடிசையைச் சுற்றிக் கொண்டு குட்டித்தாய்ச் சியாய் மெல்ல நடந்து திரியும் இந்த மான் சுகமாகக் குட்டி போட்டதும் எனக்கு அறிவியுங்கள்.

காசிபர் : நல்லது! நாம் இதை மறக்கமாட்டோம்.

சகுந்தலை : (நடை தடக்கியது போல நடித்து) யார் இது என் சேலையை இழுப்பது? (திரும்பிப்பார்த்தல்)

காசிபர் : குழந்தாய்!

4.13 குசப்புல்லு வாயிற்குத்திய புண்ணை ஆற்றுவதற்கு இங்கு தித்தைலத்தைப் பூசினாய். காட்டரிசி யைக் கை நிறையக் கொடுத்து உன் சுவீகார புத்திரன் போல நன்கு வளர்த் தாய். அந்த மான் தான் உன் வழியை இப்போது மறிக்கிறது.

சகுந்தலை : குழந்தாய்; உன்னைக் கைவிட்டுப் பிரியும் என்னை ஏன் தொடர்கிறாய். பிறந்ததும் தாயைப் பறிகொடுத்த உன்னை நான் கருத்தோடு வளர்த்தேன். என்னைப் பிரிந் தாலும் என் அப்பா உன்னை நன்றாகக் கவனிப்பார். இனித் திரும்பிப் போ (அழுது கொண்டு செல்கிறாள்)

காசிபர் :

4.14 மேனோக்கிய இமைகளையுடைய கண்களின் பார்வை யைத் தடைசெய்யும் கண்ணீரை உன் மனோதிடத்தினால் நிறுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

अस्मिन्नलक्षितनतोन्नतभूमिभागे
मार्गे पदानि खलु ते विषमीभवन्ति ॥ १४ ॥

शार्ङ्गरवः—भगवन्, ओदकान्तं स्निग्धो जनोऽनुगन्तव्य इति श्रूयते । तदिदं सरस्तीरम् । अत्र संदिश्य प्रतिगन्तुमर्हसि ।

काश्यपः—तेन हीमां क्षीरवृक्षच्छायामाश्रयामः ।

( सर्वे परिक्रम्य स्थिताः । )

काश्यपः—( आत्मगतम् । ) किं नु खलु तत्रभवतो दुष्यन्तस्य युक्तरूपमस्माभिः संदेष्टव्यम् । ( इति चिन्तयति । )

शकुन्तला—( जनान्तिकम् । ) हला, पेक्ख । णलिणीपत्तन्तरिदं वि सहअरं अदेक्खन्ती आदुरा चक्कवाई आरडदि दुक्करं अहं करेमि त्ति । हला, पश्य नलिनीपत्रान्तरितमपि सहचरमपश्यन्त्यातुरा चक्रवाक्यारौति दुष्करमहं करोमीति ।

अनसूया—सहि, मा एव्वं मन्तेहि । सखि, मैवं मन्त्रयस्व ।

एसा वि पिएण विणा गमेइ रअणिं विसाअदीहअरं ।
गरुअं पि विरहदुक्खं आसाबन्धो सहावेदि ॥ १५ ॥

एषापि प्रियेण विना गमयति रजनीं विषाददीर्घतराम् ।
गुर्वपि विरहदुःखमाशाबन्धः साहयति ॥

काश्यपः—शार्ङ्गरव, इति त्वया मद्वचनात्स राजा शकुन्तलां पुरस्कृत्य वक्तव्यः ।

शार्ङ्गरवः—आज्ञापयतु भवान् ।

काश्यपः—

अस्मान्साधु विचिन्त्य संयमधनानुच्चैः कुलं चात्मन-
स्त्वय्यस्याः कथमप्यबान्धवकृतां स्नेहप्रवृत्तिं च ताम् ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடும் பள்ளமுமாயிருக்குமிப்பாதையைக் கவனியாது நடப்ப தால் உன்னடிச் சுவடுகள் கூடத் தடுமாறுகின்றன.

சார்ங்கர : எம்பெருமானே! வழியனுப்பும் உற்றாருறவினர் நீர்க்கரை வரையே வரலாமென்று கூறப்பட்டிருக்கிறது. இதோ குளக் கரை, தாங்கள் தெரிவிக்குஞ் செய்தியைச் சொல்லி விட்டுத் திரும்பலாமே.

காசிபர் : சரி அப்படியானால் இந்தச் சீரமர நிழலிற் சிறிது தங்கு வோம். (எல்லாரும் சென்று நிற்றல்)

காசிபர் : (தனக்குள்) துஷ்யந்தன் மன்னர் பெருந்தகைக்கு எத்தகைய செய்தியை அனுப்புவது? (சிந்தித்தல்)

சகுந்தலை : (ஒரு புறமாக) தோழி! பார். தாமரையிலையால் மறைக்கப் பட்டிருக்கும் தன் துணையைக் காணவில்லையே என்று ஏங்கும் சக்கரவாகம். துயர் தாங்க முடியாது அலறுவ தைப்பார். நானுமப்படித்தான்.

அனசூயை : தோழி! அப்படிச் சொல்லாதே. 4.15 காதலனைப் பிரிந்த அப்பறவை கூட துயரால் நீண்ட இரவை எப்படியோ கழிக்கிறது. பிரிவுத்துன்பம் எவ்வளவு நீண்ட தாயினும் நம்பிக்கை அதைத் தாங்கச் செய்கிறது.

காசிபர் : சார்ங்கரவா! சகுந்தலையை அரசன் முன் சமர்பித்து நான் சொன்னதாக அரசனிடம் இவ்வாறு கூறு.

சார்ங்கர : எம்பெருமான் கட்டளையிடுக!

காசிபர் : தவத்தையே செல்வமாகவுடைய எம்மையும், உனது உயர் குடிப்பிறப்பையும், சுற்றத்தவர் முயற்சியின்றிக் கூடிய சகுந்தலையின் அன்பையும், நன்கு சிந்தித்த பின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

सामान्यप्रतिपत्तिपूर्वकमियं दारेषु दृश्या त्वया
भाग्यायत्तमतःपरं न खलु तद्वाच्यं वधूबन्धुभिः ॥ १६ ॥

शार्ङ्गरवः—गृहीतः संदेशः ।

काश्यपः—वत्से, त्वमिदानीमनुशासनीयासि । वनौकसोऽपि सन्तो लौकिकज्ञा वयम् ।

शार्ङ्गरवः—न खलु धीमतां कश्चिदविषयो नाम ।

काश्यपः—सा त्वमितः पतिकुलं प्राप्य

शुश्रूषस्व गुरून्कुरु प्रियसखीवृत्तिं सपत्नीजने
भर्तुर्विप्रकृतापि रोषणतया मा स्म प्रतीपं गमः ।
भूयिष्ठं भव दक्षिणा परिजने भाग्येष्वनुत्सेकिनी
यान्त्येवं गृहिणीपदं युवतयो वामाः कुलस्याधयः ॥ १७ ॥

कथं वा गौतमी मन्यते ।

गौतमी—एत्तिओ वहूजणस्य उवदेसो । जादे, एदं क्खु सव्वं ओधारेहि । एतावान्वधूजनस्योपदेशः । जाते, एतत्खलु सर्वमवधारय ।

काश्यपः—वत्से, परिष्वजस्व मां सखीजनं च ।

शकुन्तला—ताद, इदो एव्व किं पिअंवदामिस्साओ सहीओ णिवत्तिस्सन्ति । तात, इत एव किं प्रियंवदामिश्राः सख्यो निवर्तिष्यन्ते ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளை உன் மனைவியருள் ஒருத்தியாகச் சகல மரியா தைகளுடனும் ஏற்றுக் கொள்வாயாக! இதற்கு மேல் பெண்ணின் உறவினராகிய நாம் ஒன்றுஞ்சொல்வதற் கில்லை.

சார்ங்கர : செய்தியை நன்கு அறிந்து கொண்டேன்

காசிபர் : குழந்தாய்! உனக்கு ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது. வனவாசிகளானாலும் நாம் உலக விடயங்களும் தெரிந்தவர்களே.

சார்ங்கர : அறிவுடையார் எல்லாம் அறிவர்.

காசிபர் : 4.17 இங்கிருந்து நீ கணவனில்லத்தையடைந்ததும், இரு பெருங்குரவர்க்குப் பணிவிடை செய், சபத்தினிகளோடு அன்பாயிரு; கணவன் உன்னைக் கோபித்துக் கொடு மைப்படுத்தினாலும் நீ அவனைக் கோபிக்காதே. உனக்குப் பணிபுரிவோரிடம் மிகுந்த மரியாதை காட்டு; செல்வத்திற் செருக்கடையாதே. இவ்வாறு இளமங்கையர் இல்லக்கிழத்தியராவர். இவற்றுக்கு மாறாக நடப்போர் தங்குலத்துக்கே தீங்கு செய்பவராவார். அப்படியல்லவா கௌதமி.

கௌதமி : இளம் பிள்ளைகளறிய வேண்டியவை இவ்வளவுதான். குழந்தாய்! என்னையும் உனது தோழியரையும் தழுவிக் கொள்.

காசிபர் : குழந்தாய்! என்னையும் உன் தோழிகளையும் தழுவிக் கொள்.

சகுந்தலை : அப்பா! பிரியம்வதையும் அனசூயையும் இவ்வளவில் திரும்பிவிடுவார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

काश्यपः—इमे अपि प्रदेये । न युक्तमनयोस्तत्र गन्तुम् । त्वया सह गौतमी यास्यति ।

शकुन्तला—( पितरमाश्लिष्य । ) कहं दाणिं तादस्स अङ्कादो परिब्भट्ठा मलअतडुम्मूलिआ चन्दणलदा विअ दसन्तरे जीविअं धारइस्सं । कथमिदानीं तातस्याङ्कात्परिभ्रष्टा मलयतटोन्मूलिता चन्दनलतेव देशान्तरे जीवितं धारयिष्ये ।

काश्यपः—वत्से, किमेवं कातरासि ।

अभिजनवतो भर्तुः श्लाघ्ये स्थिता गृहिणीपदे
विभवगुरुभिः कृत्यैस्तस्य प्रतिक्षणमाकुला ।
तनयमचिरात्प्राचीवार्कं प्रसूय च पावनं
मम विरहजां न त्वं वत्से शुचं गणयिष्यसि ॥ १८ ॥

( शकुन्तला पितुः पादयोः पतति । )

काश्यपः—यदिच्छामि ते तदस्तु ।

शकुन्तला—( सख्यावुपेत्य । ) हला, दुवे वि मं समं एव्व परिस्सजह । हला, द्वे अपि मां सममेव परिष्वजेथाम् ।

सख्यौ—( तथा कृत्वा । ) सहि, जइ णाम सो राआ पच्चहिण्णाणमन्थरो भवे तदो से इमं अत्तणामहेअङ्किअं अङ्गुलीअअं दंसेहि । सखि, यदि नाम स राजा प्रत्यभिज्ञानमन्थरो भवेत्ततस्तस्येदमात्मनामधेयाङ्कितमङ्गुलीयकं दर्शय ।

शकुन्तला—इमिणा संदेहेण वो आकम्पिदम्हि । अनेन संदेहेन वामाकम्पितास्मि ।

सख्यौ—मा भाआहि । अदिसिणेहो पावसङ्की । मा भैषीः । अतिस्नेहः पापशङ्की ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிபர் : இவர்களும் பிறர் கையில் கொடுக்கப்பட வேண்டியவர்களே. இவர்களும் உன்னோடு எப்படி வரமுடியும் குழந்தாய்? உன்னோடு கௌதமி வருகிறார்.

சகுந்தலை : (தந்தையைத் தழுவி) மலைச்சாரலிலிருந்து வேரோடு பிடுங்கிய சந்தனக் கொடியே போல, என் தந்தை மடியைவிடடுப் பிரிந்து அந்நிய தேசத்தில் எப்படி வாழ்வேன்.

காசிபர் : குழந்தாய்! ஏனிவ்வாறு கலங்குகிறாய்.

4.18 உயர்குடிப்பிறந்த கணவனுக்கு மனைவியாகி, பெருமை தருஞ் சிறப்படைந்து, அவனது பெருமைக்கேற்ற அரசியல் அவலுவல்களில் ஒவ்வொரு கணமும் ஈடுபட்டுக் கீழ்த்திசை, சூரியனைத் தோற்றுவிப்பது போல, நீயும், தூய ஒரு புதல்வனைப் பெற்று இன்புறும் போது, என் பிரிவாலுண்டான துயரை மறந்து விடுவாய், என் மகளே!

(சகுந்தலை தந்தையின் பாதங்களில் விழுகிறாள்)

காசிபர் : என் விருப்பமெல்லாம் உன்னிடம் நிறைவேறுவதாக.

சகுந்தலை : (தோழியரை அணுகி) தோழியரே இருவரும் என்னை ஒரே சமயத்திற் தழுக்கொள்வீராக!

தோழியர் : (அவ்வாறு செய்து) தோழி! ஒருவேளை அரசர் உன்னை ஞாபகப்படுத்திக் கொள்ளத் தாமதஞ் செய்தால் அவர் பெயர் பதித்த இக்கணையாழியைக் காட்டுக!

சகுந்தலை : உங்கள் சந்தேகம் என்னை நடுங்கச் செய்கிறதே.

தோழியர் : அஞ்சாதே! அதிக அன்பு, தீங்கு உண்டாகுமோ என்ற அச்சத்தை உண்டாக்குவது இயல்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

शार्ङ्गरवः—युगान्तरमारूढः सविता । त्वरतामत्रभवती ।

शकुन्तला—( आश्रमाभिमुखी स्थित्वा । ) ताद, कदा णु भूओ तवोवणं पेक्खिस्सं । तात, कदा नु भूयस्तपोवनं प्रेक्षिष्ये ।

काश्यपः—श्रूयताम् ।

भूत्वा चिराय चतुरन्तमहीसपत्नी
दौष्यन्तमप्रतिरथं तनयं निवेश्य ।
भर्त्रा तदर्पितकुटुम्बभरेण सार्धं
शान्ते करिष्यसि पदं पुनराश्रमेऽस्मिन् ॥ १९ ॥

गौतमी—जादे, परिहीअदि गमणवेला । णिवत्तेहि पिदरं । अहवा चिरेण वि पुणो पुणो एसा एव्वं मन्तइस्सदि । णिवत्तदु भवं । जाते, परिहीयते गमनवेला । निवर्तय पितरम् । अथवा चिरेणापि पुनः पुनरेषैवं मन्त्रयिष्यते । निवर्ततां भवान् ।

काश्यपः—वत्से, उपरुध्यते तपोऽनुष्ठानम् ।

शकुन्तला—( भूयः पितरमाश्लिष्य । ) तवच्चरणपीडिदं तादसरीरं । ता मा अदिमेत्तं मम किदे उक्कण्ठिदुम् । तपश्चरणपीडितं तातशरीरम् । तन्मातिमात्रं मम कृत उत्कण्ठितुम् ।

काश्यपः—( सनिःश्वासम् । )

शममेष्यति मम शोकः कथं नु वत्से त्वया रचितपूर्वम् ।
उटजद्वारविरूढं नीवारबलिं विलोकयतः ॥ २० ॥

गच्छ । शिवास्ते पन्थानः सन्तु ।

( निष्क्रान्ता शकुन्तला सहयायिनश्च । )

सख्यौ—( शकुन्तलां विलोक्य । ) हद्धी हद्धी । अन्तरिहिदा सउन्दला वणराईए । हा धिक्, हा धिक । अन्तर्हिता शकुन्तला वनराज्या ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ங்கர : சூரியன் வானத்தின் மற்றொரு பாகத்தையடைந்து விட்டான். சீக்கிரம் புறப்படுங்கள்.

சகுந்தலை : (ஆச்சிரமத்தை நோக்கி) அப்பா! இத்தபோவனத்தை மீண்டும் எப்போது காண்பேன்.

காசிபர் :4.19 நான்கு எல்லையிலும் கடல் சூழ்ந்த இப்பூமி தேவியோ நீயும் துஷ்யந்தனுக்கு மனைவியாய் நீண்டகாலம் வாழ்ந்து ஈடு இணையற்ற ஒரு புதல்வனைப் பெற்றுக் கொடுத்து, அவனை இல்லறத்திலீடுபடுத்தி, அரச பாரத்தை அவனிடம் ஒப்புவித்த பின் அமைதியை நாடி நீயும் உன் கணவனும் இத்துறவறவா சிரமத்துக்கும் வரும் போது, இதை மீண்டுங் காண்பாய்.

கௌதமி : குழந்தாய்! பிரயாண முகூர்த்தம் கழிகிறது. உன் அப் பாவை அனுப்பு. அல்லது அவள் நெடுநேரம் இப்படியே பேசிக்கொண்டிருப்பாள். ஆதலால் எம்பெருமான் திரும்பி விடுங்கள்

காசிபர் : என் தவத்துக்கு நேரமாகிறது.

சகுந்தலை : (மீண்டும் தந்தையை அணைத்தவாறு) அப்பா! தவத்தால் தங்களுடம்பு இளைத்துவிட்டது. ஆதலால் என் பொருட்டு அளவுக்கு மீறித்துயரடைய வேண்டாம்.

காசிபர் : (பெருமூச்சு விட்டு)

4.20 எப்படி என் துயர் தீரும். செல்வாயாக. உன் வழி மங்கலம் நிறைந்ததாகுக!

(சகுந்தலையும் துணைவரும் போகின்றனர்)

தோழியர் : (சகுந்தலையைப் பார்த்து) ஆ! சகுந்தலை காட்டில் மறைந்து விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

काश्यपः—( सनिःश्वासम् । ) अनसूये, गतवती वां सहधर्मचारिणी । निगृह्य शोकमनुगच्छतं मां प्रस्थितम् ।

उभे—ताद, सउन्दलाविरहिदं सुण्णं विअ तवोवणं कहं पविसामो । तात, शकुन्तलाविरहितं शून्यमिव तपोवनं कथं प्रविशावः ।

काश्यपः—स्नेहप्रवृत्तिरेवंदर्शिनी । ( सविमर्शं परिक्रम्य । ) हन्त भोः, शकुन्तलां पतिकुलं विसृज्य लब्धमिदानीं स्वास्थ्यम् । कुतः

अर्थो हि कन्या परकीय एव
तामद्य संप्रेष्य परिग्रहीतुः ।
जातो ममायं विशदः प्रकामं
प्रत्यर्पितन्यास इवान्तरात्मा ॥ २१ ॥

( इति निष्क्रान्ताः सर्वे । )

## चतुर्थोऽङ्कः ।

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிபர் : (பெருமூச்சு எறிந்து) அனுசூயா, ஆச்சிரமக் கடமைகளை உங்களோடு சேர்ந்து செய்துவந்த தோழி சகுந்தலை போய்விட்டாள். மனத்துயரை அடக்கிக் கொண்டு பின்னால் வாருங்கள். நான் போகிறேன்.

இருவரும் : சகுந்தலையில்லாத படியால் சூனியமாயிருக்கும் இத்தபோவனத்தில் எவ்வாறு நுழைவோம்.

காசிபர் : உங்களன்பின் மிகுதி இவ்வாறு பேசத் தூண்டுகிறது. (சிந்தனையுடன் நடந்தவாறு) அப்பாடா! சகுந்தலையைக் கணவன் வீட்டுக்கு அனுப்பியபின் தான் எம் மனம் நிம்மதிய டைந்தது.

4.21 ஏனெனில் பெண்கள் உண்மையில் பிறர்க்குரியவரே. இன்று அவளைக் கணவன் வீட்டுக்கு அனுப்பியதால் அடைக்கலப் பொருளைத் திருப்பிக் கொடுத்தவன் போல என் உள்ளம் மிக்க அமைதியை அடைந்து விட்டது.

**(நான்காம் அங்கம் முற்றும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# पञ्चमोऽङ्कः ।

( ततः प्रविशत्यासनस्थो राजा विदूषकश्च । )

विदूषकः—( कर्णं दत्त्वा । ) भो वअस्स, संगीदसालन्तरे अवधाणं देहि । कलविसुद्धाए गीदीए सरसंजोओ सुणीअदि । जाणे तत्तहोदी हंसवदिआ वण्णपरिअअं करेदि त्ति । भो वयस्य, संगीतशालान्तरेऽवधानं देहि । कलविशुद्धाया गीतेः स्वरसंयोगः श्रूयते । जाने तत्रभवती हंसपदिका वर्णपरिचयं करोतीति ।

राजा—तूष्णीं भव । यावदाकर्णयामि ।

( आकाशे गीयते । )

अहिणवमहुलोलुवो तुमं
तह परिचुम्बिअ चूअमञ्जरिं ।
कमलवसइमेत्तणिव्वुदो
महुअर विम्हरिओ सि णं कहं ॥ १ ॥

अभिनवमधुलोलुपस्त्वं तथा परिचुम्ब्य चूतमञ्जरीम् ।
कमलवसतिमात्रनिर्वृतो मधुकर विस्मृतोऽस्येनां कथम् ॥

राजा—अहो रागपरिवाहिनी गीतिः ।

विदूषकः—किं दाव गीदीए अवगदो अक्खरत्थो । किं तावद्गीत्या अवगतोऽक्षरार्थः ।

राजा—( स्मितं कृत्वा । ) सकृत्कृतप्रणयोऽयं जनः । तदस्या देवीं वसुमतीमन्तरेण महदुपालम्भं गतोऽस्मि । सखे माढव्य, मद्वचना-दुच्यतां हंसपदिका । निपुणमुपालब्धोऽस्मीति ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் அங்கம்

**(அரசன் இருக்கையில் இருந்த வண்ணம் விதூஷகனோடு தோன்றுகிறான்.)**

விதூஷகன் : (உற்றுக் கேட்டவாறு) இசை மண்டபத்தில் நடப்பதைச் சிறிது கவனியுங்கள். இனிமையுடன்? கூடிய சுரங்களின் கூட்டம் தெளிவாகக் கேட்கிறது. அம்சவதிகை சங்கீதப் பயிற்சி செய்கிறார். போலிக்கின்றது.

அரசன் : பேசாதிரு, நான் சற்றுக் கேட்கிறேன். (ஆகாயத்தில் இருந்து ஓர் இசைப்பாட்டு)

*புதுமதுத்தேடும் வண்டே*
*மாம்பூந்துணரை முத்தமிட்டுக் கொண்டிருந்த நீ*
*அதை மறந்து இப்பொழுதெல்லாம்*
*தாமரை மலரில் தங்கியிருப்பதிலேயே எவ்வாறு*
(மகிழ்ச்சியடைகின்றாயோ)

அரசன் : ஆகா! எத்தகைய இனிமையான பாடல்

விதூஷகன் : என்ன? பாட்டின் பொருளைத் தெரிந்து கொண்டீர்களா?

அரசன் : (புன்னகை புரிந்தவாறு) இவள் ஒரு காலத்தில் என் காதலி. ஆகவே அரசி வசுமதியைக் குறித்தே என்னை இவ்வாறு இவள் ஏளனங் செய்கிறாள். நண்பா! மாடவியா, அம்சவதியிடஞ் சென்று என்னை அவள் நன்றாக ஏளனஞ் செய்து விட்டாளென நான் சொன்ன தாகச் சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

विदूषकः—जं भवं आणवेदि । ( उत्थाय । ) भो वअस्स, गहीदस्स ताए परकीएहिं हत्थेहिं सिहण्डए ताडीअमाणस्स अच्छराए वीदराअस्स विअ णत्थि दाणिं मे मोक्खो । यद्भवानाज्ञापयति । भो वयस्य, गृहीतस्य तया परकीयैर्हस्तैः शिखण्डके ताड्यमानस्याप्सरसा वीतरागस्येव नास्तीदानीं मे मोक्षः ।

राजा—गच्छ । नागरिकवृत्त्या संज्ञापयैनाम् ।

विदूषकः—का गई । ( इति निष्क्रान्तः । ) का गतिः ।

राजा—( आत्मगतम् । ) किं नु खलु गीतार्थमाकर्ण्येष्टजनविरहादृतेऽपि बलवदुत्कण्ठितोऽस्मि । अथवा ।

रम्याणि वीक्ष्य मधुरांश्च निशम्य शब्दा-
न्पर्युत्सुकीभवति यत्सुखितोऽपि जन्तुः ।
तच्चेतसा स्मरति नूनमबोधपूर्वं
भावस्थिराणि जननान्तरसौहृदानि ॥२ ॥

( इति पर्याकुलस्तिष्ठति । )

( ततः प्रविशति कन्चुकी । )

कञ्चुकी—अहो नु खल्वीदृशीमवस्थां प्रतिपन्नोऽस्मि ।

आचार इत्यवहितेन मया गृहीता
या वेत्रयष्टिरवरोधगृहेषु राज्ञः ।
काले गते बहुतिथे मम सैव जाता
प्रस्थानविक्लवगतेरवलम्बनार्था ॥ ३ ॥

भोः, कामं धर्मकार्यमनतिपात्यं देवस्य । तथापीदानीमेव धर्मासनादुत्थिताय पुनरुपरोधकारि कण्वशिष्यागमनमस्मै नोत्सहे निवेदितुम् । अथवाविश्रमोऽयं लोकतन्त्राधिकारः । कुतः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதூஷகன் : தங்கள் கட்டளைப்படியே! (எழுந்து) தோழரே! இந்தத் தோழியர் என் தலைமயிரைப் பிடித்து இழுக்கும் போது அரம்பையரால் பற்றப்பட்ட முனிவரைப் போல் எனக்கு விடுதலையே கிடையாதா?

அரசன் : போ, வெகு சாதுரியமாக இதை அவளுக்குத் தெரியப் படுத்து.

விதூஷகன் : வேறு வழி எது? (போய்விடுகின்றான்)

அரசன் : (தனக்குள்) என் காதலுக்குப் பாத்திரமான எவரையும் பிரியாதிருந்தும் இத்தகையதொரு பாடலைக்கேட்டதும் என் மனம் கவலைப்படுவது ஏனோ?

5.2 ஒரு வேளை அழகிய பொருள்களைப் பார்க்கும் போதும், இனிய இசைகளைக் கேட்கும் போதும் இன்ப முற்றிருக்கும் ஒருவன் கூட, ஏக்கமடைகிறான். அப் பொழுது முன்னறிவின்றியே, அவனுள்ளம், முற்பிறப்பி லுண்டான நட்புத் தொடர்புகளை, வாசனையின் பயனாக, நினைவு கூறுகின்றது. (மனக்க லக்கத்தோடு நிற்கிறான்) (அப்பொழுது கஞ்சுகி வருகிறாள்)

கஞ்சுகி : அந்தோ! இந்தநிலைக்கு நான் வந்து விட்டேனா?

5.3 அரசனின் அந்தப் புரத்திற்கு நியமிக்கப்பட்டபோது வழக் கப்படி நான் எந்த மூங்கிற் கோலை உபயோகித் தேனோ இந்தக் கோலே இத்தனை காலம் கழிந்த பின்னும் வழுக்கிவிழும் எனக்கு ஊன்று கோலாயிருக்கிறது.

ஓ! தருமகாரியங்களில் அரசன் தாமதிக்கக்கூடா தென்பது உண்மையே! இப்போது தான் தருமாசனத்தி லிருந்து எழுந்து செல்லும் மன்னவனிடம் கண்ணவ முனிவரின் சீடரது வருகையை அறிவித்து, அவரை மேலும் நிறுத்தி வைப்பதற்கு எனக்குச் சிறிதும் மன மில்லை. ஆ! இந்த அரசியற் பொறுப்பு ஆறுதலில் லாதது தான். ஏனெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

भानुः सकृद्युक्ततुरङ्ग एव
रात्रिंदिवं गन्धवहः प्रयाति ।
शेषः सदैवाहितभूमिभारः
षष्ठांशवृत्तेरपि धर्म एषः ॥ ४ ॥

यावन्नियोगमनुतिष्ठामि । ( परिक्रम्यावलोक्य च । ) एष देवः

प्रजाः प्रजाः स्वा इव तन्त्रयित्वा
निषेवते श्रान्तमना विविक्तम् ।
यूथानि संचार्य रविप्रतप्तः
शीतं दिवा स्थानमिव द्विपेन्द्रः ॥ ५ ॥

( उपगम्य । ) जयतु जयतु देवः । एते खलु हिमगिरेरुपत्यकारण्यवासिनः काश्यपसंदेशमादाय सस्त्रीकास्तपस्विनः संप्राप्ताः । श्रुत्वा देवः प्रमाणम् ।

राजा—( सादरम् । ) किं काश्यपसंदेशहारिणः ।

कञ्चुकी—अथ किम् ।

राजा—तेन हि मद्वचनाद्विज्ञाप्यतामुपाध्यायः सोमरातः । अमूनाश्रमवासिनः श्रौतेन विधिना सत्कृत्य स्वयमेव प्रवेशयितुमर्हतीति । अहमप्यत्र तपस्विदर्शनोचिते प्रदेशे स्थितः प्रतिपालयामि ।

कञ्चुकी—यदाज्ञापयति देवः । ( इति निष्क्रान्तः । )

राजा—( उत्थाय । ) वेत्रवति, अग्निशरणमार्गमादेशय ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.4 சூரியன் ஒரு முறை பூட்டிய குதிரைகளோடு சென்று கொண் டிருக்கிறான். காற்று இரவும் பகலும் வீசிக் கொண்டிருக்கிறது. ஆதிசேடன் எப்போதும் பூமி பாரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறான். ஆறிலொரு பங்கு திறை பெற்று வாழும் அரசன் கடமையும் அத்த கையதே. ஆகவே என் கடமையையும் நான் செய்வேன். (நடந்து போய்ப் பார்த்து) இதோ மன்னவர்.

5.5 சூரிய வெப்பத்தால் வெதும்பிய அரசயானை யானைக் கூட்டங்களை அழைத்துச் சென்று குளிர்ந்த நிழலில் இளைப்பாறுவது போல அரசனும் குடிகளைத் தன் மக்களைப் போலக் காவல் செய்தபின், தனியே இவ் விடத்தில் இளைப்பாறிக் கொண்டிருக்கிறான். (அணுகி யவாறு) வெற்றி, வெற்றி மன்னவா! இமய மலைச் சார லிலுள்ள காட்டில் வசிக்கும் முனிவர்கள், காசிப முனிவ ரிடமிருந்து ஒரு செய்தி கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களோடு பெண்களும் வந்துள்ளார்கள், தங்கள் கட்டளை வேந்தே!

அரசன் : (அன்புடன்) என்ன? காசிபரிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கிறார்களா?

கஞ்சுகி : வேறென்ன?

அரசன் : அப்படியானால் அவர்களுக்கு அறமுறைப்படி வரி சைகள் செய்து அவர்களை வரவேற்கும்படி புரோகிதர் சோமராதருக்கு நான் சொன்னதாகத் தெரிவி நானும் இங்கே அத்துறவிகளை எதிர்பார்த்துக் கொண்டி ருக்கிறேன்.

கங்சுகி : தேவரீர் கட்டளைப்படியே! (போய்விடுகிறான்)

அரசன் : (எழுந்து) வேத்திரவதி! அக்கினி மண்டபத்திற்கு வழிகாட்டிச் செல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

प्रतीहारी—इदो इदो देवो। इत इतो देवः।

राजा—( परिक्रामति। अधिकारखेदं निरूप्य। ) सर्वः प्रार्थितमर्थमधिगम्य सुखी संपद्यते जन्तुः। राज्ञां तु चरितार्थता दुःखोत्तरैव।

औत्सुक्यमात्रमवसादयति प्रतिष्ठा
क्लिश्नाति लब्धपरिपालनवृत्तिरेव।
नातिश्रमापनयनाय यथा श्रमाय
राज्यं स्वहस्तधृतदण्डमिवातपत्रम्॥ ६॥

( नेपथ्ये। )

वैतालिकौ—विजयतां देवः।

प्रथमः—

स्वसुखनिरभिलाषः खिद्यसे लोकहेतोः
प्रतिदिनमथवा ते वृत्तिरेवंविधैव।
अनुभवति हि मूर्ध्ना पादपस्तीव्रमुष्णं
शमयति परितापं छायया संश्रितानाम्॥ ७॥

द्वितीयः—

नियमयसि विमार्गप्रस्थितानात्तदण्डः
प्रशमयसि विवादं कल्पसे रक्षणाय।
अतनुषु विभवेषु ज्ञातयः सन्तु नाम
त्वयि तु परिसमाप्तं बन्धुकृत्यं प्रजानाम्॥ ८॥

राजा—एते क्लान्तमनसः पुनर्नवीकृताः स्मः। ( इति परिक्रामति। )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில்காப் : இவ்வழி! வேந்தே இவ்வழி

அரசன் : (ஆட்சிப் பொறுப்பாலுண்டான களைப்பை மெய்ப் பாட்டின் மூலம் காட்டிக் கொண்டு) விரும்பிய பொருளைப் பெற்றதும் ஒருவன் இன்பமடைகிறான். ஆனால் அரசனோ விரும்பியதைப் பெற்றதும் அதை யடுத்து வரும் துன்பத்துக்கு ஆளாகிறான்.

அரசன் : மேனிலையடைவதால் உற்சாகம் குன்றுகின்றது. பெற்றதைக் காக்கச் செய்யும் முயற்சி துன்பத்தைத் தருகின்றது. ஒருவன் கையிற் பிடித்த குடையின் தண்டைப் போல், அரசாட்சியும் களைப்பை அகற்றாது அதையே மேலும் கூட்டுகின்றது.

(திரைக்குப் பின்னால்)

இரண்டு பாடகர்: வேந்தர்க்கு வெற்றி ஓங்குக!

மு.பாடகன் : சொந்தச்சுகத்தைக் கருதாது, உலகின் பொருட்டுத் தினமும் உழைக்கிறாய். அல்லது இதுவே உன் வாழ்க்கைப் போக்காயிருக்கிறது. தாங்கு தற்கரிய கடும் வெப்பத்தைத் தலையிலே தாங்கும் மரம் தன்னை வந்தடைந்தவர்க்கு நிழல் தந்து சாந்தி செய்கிறது.

இ.பாடகன் : கையிலே தண்டத்தைப் பற்றிப் புன்னெறியிற் செல் வோரை விலக்குகின்றாய். பிணக்கைத் தீர்த்து காவலில் முனைகின்றாய். செல்வம் மிகுந்த காலத்திலே சுற்றத்தவர் கணக்கின்றிப் பெருகுக. நீயோ குடிகட்குச் சுற்றம் போல விளங்குகிறாய்

அரசன் : என் உள்ளம் தளர்ந்திருந்தும். இங்கே மறுபடியும் மகிழ்ச்சியடைகிறது. (நடக்கிறான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

प्रतीहारी—अहिणवसम्मज्जणससिरीओ सण्णिहिदहोमधेणू-अग्गिसरणालिन्दो । आरुहदु देवो । अभिनवसंमार्जनसश्रीकः संनिहित-होमधेनुरग्निशरणालिन्दः । आरोहतु देवः ।

राजा—( आरुह्य परिजनांसावलम्बी तिष्ठति । ) वेत्रवति, किमुद्दिश्य भगवता काश्यपेन मत्सकाशमृषयः प्रेषिताः स्युः ।

किं तावद्व्रतिनामुपोढतपसां विघ्नैस्तपो दूषितं
धर्मारण्यचरेषु केनचिदुत प्राणिष्वसच्चेष्टितम् ।
आहोस्वित्प्रसवो ममापचरितैर्विष्टम्भितो वीरुधा-
मित्यारूढबहुप्रतर्कमपरिच्छेदाकुलं मे मनः ॥ ९ ॥

प्रतीहारी—सुचरिदणन्दिणो इसीओ देवं सभाजइदुं आअदे त्ति तक्केमि । सुचरितनन्दिन ऋषयो देवं सभाजयितुमागता इति तर्कयामि ।

( ततः प्रविशन्ति गौतमीसहिताः शकुन्तलां पुरस्कृत्य मुनयः । )

[ पुरश्चैषां कञ्चुकी पुरोहितश्च । ]

कञ्चुकी—इत इतो भवन्तः ।

शार्ङ्गरवः—शारद्वत,

महाभागः कामं नरपतिरभिन्नस्थितिरसौ
न कश्चिद्वर्णानामपथमपकृष्टोऽपि भजते ।
तथापीदं शश्वत्परिचितविविक्तेन मनसा
जनाकीर्णं मन्ये हुतवहपरीतं गृहमिव ॥ १० ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில்காப் : இதோ, சற்று முன்னரே சுத்தஞ்செய்யப்பட்டு விளங்கும், வேள்விக்குரிய பசுவுடன் கூடிய, அக்கினி மண்டபத்தின் வேதிகை. தேவரீர் அதன்மீது ஏறுவீராக!

அரசன் : (ஏறிப் பணியாளரின் தோளைப் பற்றிய வண்ணம்) வேத்திரவதி! வணக்கத்திற்குரிய காசிபர் இம்முனிவர் களை எதற்காக என்னிடம் அனுப்பினாரோ?

5.9 உயர்ந்த தவத்தைச் செய்யம் தபோதனரின் தவத்திற்கு இன்னலுண்டானதோ? அல்லது தருமாரணியத்திலே நடமாடித்திரியும் விலங்குக ளுக்கு யாராவது தீங்கிழைத் தார்களோ? அல்லது அந்தோ எனது தீய நடத்தையினாற் செடி கொடிகள் பழம் தருவதை நிறுத்திவிட்டனவோ? இவ்வாறெழுந்த பல ஐயங்களினால் என் மனம் சஞ்சலமுற்று வருந்துகிறது.

வா.காப் : தங்களுடைய நற்கருமங்களால் மனமகிழ்ச்சியடைந்த முனிவர்கள், தங்களுக்கு நன்றிகூற வந்திருக்கிறார்கள், பொலத் தெரிகிறது. (சகுந்தலை முன்வரக் கௌதமியும் முனிவர்களும் வருகின்றனர். இவர்களுக்கு முன்னால் கஞ்சகியும் புரோகிதரும் வருகின்றார்கள்)

கஞ்சுகி : இவ்வழி; இவ்வழி வாருங்கள் முனிவர்களே!

சார்ங்கரவன் : சாரத்துவா!

5.10 பெருஞ் சிறப்புடைய இவ்வரசன் என்றம் அறநெறி தவறாதவன் என்பது உண்மையே! மிகத் தாழ்ந்த வருணத்தைச் சேர்ந்தவர் கூட இங்கே தீய நெறியிற் செல்பவராய்க் காணப்படவில்லை. இவ்வாறிருந்தும் என்றும் தனிமையிலிருந்து பழகிய என் மனத்திற்கு, மக்கள் நிறைந்த இந்நகரம், தீயினாற் சூழ்ந்த வீடு போலவே தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

शारद्वतः—स्थाने भवान्पुरप्रवेशादित्थंभूतः संवृत्तः । अहमपि

अभ्यक्तमिव स्नातः शुचिरशुचिमिव प्रबुद्ध इव सुप्तम् ।
बद्धमिव स्वैरगतिर्जनमिह सुखसङ्गिनमवैमि ॥ ११ ॥

शकुन्तला—( निमित्तं सूचयित्वा । ) अम्महे, किं मे वामेदरं णअणं विप्फुरदि । अहो, किं मे वामेतरन्नयनं विस्फुरति ।

गौतमी—जादे पडिहदं अमङ्गलं । सुहाइं दे भत्तुकुलदेवदाओ वितरन्दु । ( इति परिक्रामति । ) जाते, प्रतिहतममङ्गलम् । सुखानि ते भर्तृकुलदेवता वितरन्तु ।

पुरोहितः—( राजानं निर्दिश्य । ) भो भोस्तपस्विनः असावत्रभवान्वर्णाश्रमाणां रक्षिता प्रागेव मुक्तासनो वः प्रतिपालयति । पश्यतैनम् ।

शार्ङ्गरवः—भो महाब्राह्मण, काममेतदभिनन्दनीयम् । तथापि वयमत्र मध्यस्थाः । कुतः ।

भवन्ति नम्रास्तरवः फलागमै-
र्नवाम्बुभिर्भूरिविलम्बिनो घनाः ।
अनुद्धताः सत्पुरुषाः समृद्धिभिः
स्वभाव एवैष परोपकारिणाम् ॥ १२ ॥

प्रतीहारी—देव, पसण्णमुहवण्णा दीसन्ति । जाणामि वीसद्धकज्जा इसीओ । देव, प्रसन्नमुखवर्णा दृश्यन्ते । जानामि विश्रब्धकार्या ऋषयः ।

राजा—( शकुन्तलां दृष्ट्वा । ) अथात्रभवती



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரத்துவ : உண்மை! இந்நகரில் புகுந்தும் தாங்கள் இந்நிலையை அடைந்துவிட்டீர்கள். நானும்,

5.11 இன்பத்தில் மூழ்கியிருக்கும் இம்மகளைப் பார்க்கும் போது குளித்தவன் எண்ணெய் தேய்த்திருப்பவனைப் பார்த்தல் போலவும், தூய்மையுள்ளவன் தூய்மையற்ற வனைப் பார்த்தல் போலவும், சுதந்திரமுள்ளவன் சுதந்திரமற்றவனைப் பார்த்தல் போலவும் தோன்று கிறது.

சகுந்தலை : (அபசகுனம் கண்டவள் போல் மெய்ப்பாடு தோன்ற) அம்மே! என் வலக்கண் அல்லவா துடிக்கிறது.

கௌதமி : குழந்தாய்! தீமை ஒழிக! உன் கணவனின் குலதெய் வங்கள் உனக்கு நன்மையை அருள்வாராக! (நடக் கிறாள்)

புரோகிதர் : அரசனைச் சுட்டிக் காட்டி) ஓ! துறவிகளே! எல்லா வருணத்த வரையும் ஆசிரமத்தவரையும் காப்பாற்றும் நம்மரசன், தங்கள் வருகையை எதிர்நோக்கி, அதோ தன்னிருக்கையை விட்டெழுந்து காத்திருக்கிறார். பாருங்கள்.

சார்ங்கர : அந்தணர் தலைவனே! இது மகிழ்ச்சிக்குரியதே! எனினும் எமக்கு இதில் விருப்பு வெறுப்புக்கிடையாது. ஏனெனில்

5.12 பழம் நிறைந்த மரங்கள் விளைந்து விடுகின்றன. புதுநீர் நிறைந்த மேகங்கள் மிகத் தாழ்ந்து செல்கின்றன. செல்வப் பெருக்கினால் நல்லோர் செருக்கடைவ தில்லை. பிறர்க்குதவி புரிவோர் இவ்வாறிருப்பது இயற் கையே!

வா.காப் : அரசே! இத்துறவிகளின் முகத்திலே மகிழ்ச்சி காணப் படுகிறது. நன்மைதரும் காரியமாகவே இவர்கள் வந்திருக்கிறார்களென எண்ணுகிறேன்.

அரசன் : (சகுந்தலையைப் பார்த்து) சரி; இப்பெண்யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

कास्विदवगुण्ठनवती नातिपरिस्फुटशरीरलावण्या ।
मध्ये तपोधनानां किसलयमिव पाण्डुपत्राणाम् ॥ १३ ॥

प्रतीहारी—देव, कुदूहलगब्भोपहिदो ण मे तक्को पसरदि । णं दंसणीआ उण से आकिदी लक्खीअदि । देव, कुतूहलगर्भोपहितो न मे तर्कः प्रसरति । ननु दर्शनीया पुनरस्या आकृतिर्लक्ष्यते ।

राजा—भवतु । अनिर्वर्णनीयं परकलत्रम् ।

शकुन्तला—( हस्तमुरसि कृत्वा । आत्मगतम् ) हिअअ, किं एव्वं वेवसि । अज्जउत्तस्स भावं ओधारिअ धीरं दाव होहि । हृदय, किमेवं वेपसे । आर्यपुत्रस्य भावमवधार्य धीरं तावद्भव ।

पुरोहितः—( पुरो गत्वा । ) एते विधिवदर्चितास्तपस्विनः । अस्ति कश्चिदेषामुपाध्यायसंदेशः । तं देवः श्रोतुमर्हति ।

राजा—अवहितोऽस्मि ।

ऋषयः—( हस्तानुद्यम्य ) विजयस्व राजन् ।

राजा—सर्वानभिवादये ।

ऋषयः—इष्टेन युज्यस्व ।

राजा—अपि निर्विघ्नतपसो मुनयः ।

ऋषयः—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.13 பழுத்த இலைகளின் நடுவே இளந்தளிர்போல; இம் முனிவர்கள் மத்தியில் முக்காடிட்டு அழகிய அங்கங்கள் சற்றே மறைந்து விளங்க நிற்கும் இப்பெண் யாரோ?

வா.காப். : அரசே! எனக்கும் இதை அறிய ஆர்வமிருந்தாலும் என் மனம் தொழிற்பட மறுத்து விட்டது. ஆனால் இவள் உருவம் மிக அழகாக இருக்கிறது.

அரசன் : சரி இருக்கட்டும்; பிறர் மனைவியரைக் கூர்ந்து பார்க்கக்கூடாது.

சகுந்தலை : (நெஞ்சிலே கையை வைத்து) நெஞ்சே! ஆரிய புத்திரனின் காதலைக் கருத்திற் கொள்பொறுமையாயிரு.

புரோகித : (முன்வந்து) முறைப்படி உபசரிக்கப்பட்ட துறவிகள் இதோ வந்திருக்கின்றனர். உபாத்தியாயரிடமிருந்து ஏதோ செய்தியாம். அதைத் தேவரீர் கேட்டருள்வீராக!

அரசன் : அதற்குத் தயாராயிருக்கிறேன்.

முனிவர்கள் : (கையை உயர்த்தியவாறு) மன்னவா, உனக்கு வெற்றியுண்டாவதாக!

அரசன் : எல்லோருக்கும் வணக்கம்

முனிவர்கள் : நீ நினைத்தவையெல்லாம் நிறைவேறுக.

அரசன் : முனிவர்களின் தவத்துக்கு ஏதேனும் இடையூறுகளுண்டா?

முனிவர் : நல்லோரைக் காப்பாற்ற நீ இருக்கும்

5.14 போது தவத்துக்கு இடையூறு எங்கிருந்து வரும்? சூரியன் சுடர்விட்டெரியும் போது, இருள் எவ்வாறு தோன்றும்?

அரசன் : அப்படியானால் அரசன் என்ற பெயர் பொருளுடையதாயிற்று. சரி வணக்கத்துக்குரிய காசிபர் உலக நன்மையின் பொருட்டுச் சுகமாயிருக்கிறாரா?

சார்ங்கர : சித்து வல்லவருடைய சுகம் அவர்களுடைய கையிலேயே இருக்கிறது. முதலில் தங்களுடைய தீதின்மையை விசாரித்த பின் இவ்வாறு கூறுமாறு அவர் கட்டளையிட்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—किमाज्ञापयति भगवान् ।

शार्ङ्गरवः—यन्मिथः समयादिमां मदीयां दुहितरं भवानुपायंस्त तन्मया प्रीतिमता युवयोरनुज्ञातम् । कुतः ।

त्वमर्हतां प्राग्रसरः स्मृतोऽसि नः
शाकुन्तला मूर्तिमती च सत्क्रिया ।
समानयंस्तुल्यगुणं वधूवरं
चिरस्य वाच्यं न गतः प्रजापतिः ॥ १५ ॥

तदिदानीमापन्नसत्त्वा प्रतिगृह्यतां सहधर्मचरणायेति ।

गौतमी—अज्ज, किंपि वत्तुकामम्हि । ण मे वअणावसरो अत्थि । कहंत्ति । आर्य, किमपि वक्तुकामास्मि । न मे वचनावसरोस्ति । कथमिति ।

णावेक्खिओ गुरुअणो इमीअ ण तुए वि पुच्छिदो बन्धू ।
एक्कक्कमेव्व चरिए भणामि किं एक्कमेक्कस्स ॥ १६ ॥

नापेक्षितो गुरुजनोऽनया न त्वयापि पृष्टो बन्धुः ।
एकैकमेव चरिते भणामि किमेकैकम् ।

शाकुन्तला—( आत्मगतम् । ) किं णु क्खु अज्जउत्तो भणादि । किं नु खल्वार्यपुत्रो भणति ।

राजा—किमिदमुपन्यस्तम् ।

शाकुन्तला—( आत्मगतम् । ) पावओ क्खु एसो वअणोवण्णासो । पावकः खल्वेष वचनोपन्यासः ।

शार्ङ्गरवः—कथमिदं नाम । भवन्त एव सुतरां लोकवृत्तान्तनिष्णाताः ।

सतीमपि ज्ञातिकुलैकसंश्रयां
जनोऽन्यथा भर्तृमतीं विशङ्कते ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : முனிவர் பெருமான் கட்டளை என்னவோ?

சார்ங்கர : மனமொத்து என் மகளைத் தாங்கள் மணம் புரிந்து கொண்டீர்கள். உங்களிருவரது செய்கையையும் நான் மகிழ்வுடன் எற்றுக் கொண்டேன். ஏனெனில்

5.15 நீயோ தகுதியுடையோருள்ளே தலை சிறந்தவன் சகுந்தலையோ நல்லொழுக்கமே உருவெடுத்தாற் போன்றவள். ஒத்த நலமுடைய ஒருவனையும் ஒருத்தியையும் ஒன்று சேர்த்ததால் படைப்புக்கடவுளும் வெகு காலத்தின் பின் புகழைப் பெற்றுவிட்டான். ஆகவே கர்ப்பவதியாயிருக்குமிவளை இப்பொழுது ஏற்றுக் கொண்டு இல்லறத்தை நடத்துவாயாக!

கௌதமி : ஐயனே! நானுமேதோ சொல்ல விரும்பினேன். ஆனால் அதற்கு அவசியமில்லாமற் போய் விட்டது ஏனெனில்

5.16 இவள் தன் குரவரைக் கேட்டது மில்லை. தாங்களும் அவளது உறவினரைக் கலந்து கொள்ளவுமில்லை. உங்களிருவருக்குமிடையில் நடந்த இச்சம்பவத்தைப் பற்றி வேறொருவர் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

சகுந்தலை : (தனக்குள்) இப்போது என்ன சொல்லப்போகிறாரோ?

அரசன் : என்ன பேச்சிது! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!

சகுந்தலை : (தனக்குள்) நெருப்பாயிருக்கிறதே இவர் பேச்சு!

சார்ங்கர : என்ன இப்படிப் போகிறது! தாங்கள் உலக விவகாரங்களை நன்கு அறிந்தவராயிற்றே. கற்புடைய பெண் கூட மணமான பின்னர், உறவினர் வீட்டில் வசித்தால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

अतः समीपे परिणेतुरिष्यते
तदप्रियापि प्रमदा स्वबन्धुभिः ॥ १७ ॥

राजा—किं चात्रभवती मया परिणीतपूर्वा ।

शकुन्तला—( सविषादम् । आत्मगतम् । ) हिअअ, संपदं दे आसङ्का । हृदय, सांप्रतं त आशङ्का ।

शार्ङ्गरवः—

किं कृतकार्यद्वेषाद्धर्मं प्रति विमुखतोचिता राज्ञः ।

राजा—कुतोऽयमसत्कल्पनाप्रश्नः ।

शार्ङ्गरवः—

मूर्च्छन्त्यमी विकाराः प्रायेणैश्वर्यमत्तेषु ॥ १८ ॥

राजा—विशेषेणाधिक्षिप्तोऽस्मि ।

गौतमी—जादे, मुहुत्तअं मा लज्ज । अवणइस्सं दाव दे ओउण्ठणं । तदो तुमं भट्टा अहिजाणिस्सदि । ( इति यथोक्तं करोति । ) जाते, मुहूर्तं मा लज्जस्व । अपनेष्यामि तावत्तेऽवगुण्ठनम् । ततस्त्वां भर्ताभिज्ञास्यति ।

राजा—( शकुन्तलां निर्वर्ण्य । आत्मगतम् । )

इदमुपनतमेवं रूपमक्लिष्टकान्ति
प्रथमपरिगृहीतं स्यान्न वेत्यव्यवस्यन् ।
भ्रमर इव विभाते कुन्दमन्तस्तुषारं
न खलु च परिभोक्तुं नैव शक्नोमि हातुम् ॥ १९ ॥

( इति विचारयन् स्थितः । )

प्रतीहारी—अहो धम्मावेक्खिदा भट्टिणो । इदिसं णाम सुहोवणदं रूवं देक्खिअ को अण्णो विआरेदि । अहो धर्मापेक्षिता भर्तुः । ईदृशं नाम सुखोपनतं रूपं दृष्ट्वा कोऽन्यो विचारयति ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.17 உலகம், வேறுவிதமாக நினைக்கும் கணவன் வெறுத்தாலும் அவள் பதியோடிருப் பதையே சுற்றத்தவர் விரும்புவர்.

அரசன் : என்ன? இப்பெண்மணியை நான் முன்மணஞ் செய்தேனா?

சகுந்தலை : (துக்கத்தோடு தனக்குள்) மனமே நீ அஞ்சியது சரியாய்ப் போய்விட்டது!

சார்ங்கர: என்ன?

5.18 முடிந்துபோன காரியத்திலுள்ள வெறுப்பினாலா? கடமையிலுள்ள பராமுகத்தினாலா? காரியம் முடிந்தது என்ற அலட்சியத்தினாலா? ஏதனால் இவ்வாறு பேசுகிறீர்?

அரசன் : பொய்யிலே பிறந்த இந்தக் கேள்வி எதற்கு?

சார்ங்கர : செல்வச்செருக்குடையவரிடத்து இத்தகைய மனமாற்ற முண்டாவது இயல்பு தான்.

அரசன் : பெருங் குற்றத்தை என்மீது வீணாகச் சுமத்துகிறீர்கள்.

கௌதமி : குழந்தாய்! சிறிது நேரம் வெட்கப்படாமலிரு. உன் முகத்திரையைச் சிறிது அகற்றிவிடுகிறேன். அப்போது உன் கணவர் உன்னைத் தெரிந்து கொள்வார். (சொன்னபடி செய்கிறாள்)

அரசன் : (சகுந்தலையைப் பார்த்து தனக்குள்)

5.19 காலையிற் பனித்துளி பொதுளிய குந்தமலரை வண்டு சேரவோ அகலவோ முடியாது தத்தளிப்பது போல, இவ்வழகுத் தெய்வத்தை நான் முதலில் கைப்பிடித் தேனோ இல்லையோ என்பதை நிச்சயிக்க முடியாது தத்தளிக்கின்றேன். (இவ்வாறு துயருடனிருக் கின்றான்.

வா.காப. : (தனக்குள்) சுலபமாகக் கிடைத்த இப்பேரழகியைக் கண்டு யார் தான் விசாரமடைந்து கொண்டிருப்பர். அரச னுடைய உயர்ந்த ஒழுக்கம் எத்தகையது; ஆகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

शार्ङ्गरवः—भो राजन्, किमिति जोषमास्यते ।

राजा—भोस्तपोधनाः, चिन्तयन्नपि न खलु स्वीकरणमत्र-भवत्याः स्मरामि । तत्कथमिमामभिव्यक्तसत्त्वलक्षणां प्रत्यात्मानं क्षेत्रिणमाशङ्कमानः प्रतिपत्स्ये ।

शकुन्तला—( अपवार्य । ) अज्जस्स परिणए एव्व संदेहो । कुदो दाणिं मे दूराहिरोहिणी आसा । आर्यस्य परिणय एव संदेहः । कुत इदानीं मे दूराधिरोहिण्याशा ।

शार्ङ्गरवः—मा तावत्

कृताभिमर्शामनुमन्यमानः
सुतां त्वया नाम मुनिर्विमान्यः ।
मुष्टं प्रतिग्राहयता स्वमर्थं
पात्रीकृतो दस्युरिवासि येन ॥ २० ॥

शारद्वतः—शार्ङ्गरव, विरम त्वमिदानीम् । शकुन्तले, वक्तव्यमुक्तमस्माभिः । सोऽयमत्रभवानेवमाह । दीयतामस्मै प्रत्यय-प्रतिवचनम् ।

शकुन्तला—( अपवार्य । ) इमं अवत्थन्तरं गदे तारिसे अणुराए किं वा सुमराविदेण । अत्ता दाणिं मे सोअणीओ त्ति ववसिदं एदं । ( प्रकाशम् । ) अज्जउत्त, ( इत्यर्धोक्ते । ) संसइदे दाणिं परिणए ण एसो समुदाआरो । पोरव, ण जुत्तं णाम दे तह पुरा अस्समपदे सहा-वुत्ताणहिअअं इमं जणं समअपुव्वं पतारिअ ईदिसेहिं अक्खरेहिं पच्चाचक्खिदुं । इदमवस्थान्तरं गते तादृशेऽनुरागे किं वा स्मारितेन । आत्मेदानीं मे शोचनीय इति व्यवसितमेतत् । आर्यपुत्र । संशयित इदानीं परिणये नैष समुदाचारः । पौरव, न युक्तं नाम ते तथा पुराश्रमपदे स्वभावोत्तानहृदयमिमं जनं समयपूर्वं प्रतार्येदृशैरक्षरैः प्रत्याख्यातुम् ।

राजा—( कर्णौ पिधाय । ) शान्तं पापम् ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ங்கர : ஓ அரசனே! ஏன் மௌனமாயிருக்கிறாய்?

அரசன் : துறவிகளே! நான் எவ்வளவு நினைத்தும் இப்பெண் மணியை மணம் புரிந்ததாக ஞாபகமில்லை. அவ்வாறிருக்கக் கர்ப்பவதியாயிருக்கும் இப்பெண்ணை எவ்வாறு ஏற்றுக் கொள்வேன்?

சகுந்தலை : ஒரு பக்கமாய்) என் தலைவருக்கு கல்யாணஞ் செய்ததே நினைவில்லை. இனி உயர வட்டமிடும் என் ஆசை என்னவாகப் போகிறது?

சார்ங்கர : அது தான் வேண்டாம்.

5.20 உன்னால் அபகரிக்கப்பட்ட தன் மகளை மறுபடியும் ஏற்றுக் கொண்ட அம்முனிவரை நீ இகழ்வது பொருத்த முடையதே. திருடிய பொருளை வைத்திருக்க அத்திருடனுக்கே அனுமதியளித்தது போல அவளை நீயே வைத்திருக்க ஒப்புக் கொண்டு உன்னை அவர் சற்பாத்திரமாக்கியும் விட்டார் .

சாரத்துவ : சார்ங்கர! நிறுத்து; சகுந்தலை! எம்மால் சொல்லக்கூடியதைச் சொல்லி விட்டோம். இங்கே அரசர் பெருமானும் இப்படிச் சொல்லுகிறார். அவருக்கு நம்பிக்கை வரக் கூடியவற்றை இனி நீயே சொல்ல வேண்டும்.

சகுந்தலை : (ஒரு புறமாக) காதல் இத்துணை மாறுதலை அடைந்து விட்ட பின் நினைவூட்டுவதனால் என்ன பயன் உள்ளது. நான் துயரப்பட வேண்டுமென்பது இப்போது முடிவாகி விட்டது. (உரத்து) ஆரிய புத்திரரே! (பாதி கூறியதும்) மணம் புரிந்ததே சந்தேகத்திற்கு இடமாயிருக்கும் போது, இவ்வாறு அழைத்தல் நல்லதன்று. பௌரவரே! முன்னர், ஆச்சிரமத்திலே இயற்கையாகவே திறந்த மனமுடையவென்னை, மனமொத்து மணந்து கொண்டு இப்போது இத்தகைய சொற்களால் வஞ்சித்து என்னைத் தள்ளிவிடுதல் உமக்கு மிகப் பொருத்த முடையதே!

அரசன் : (காதில் கையை வைத்து) என்ன பழி இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

व्यपदेशमाविलयितुं किमीहसे जनमिमं च पातयितुम् ।
कूलंकषेव सिन्धुः प्रसन्नमम्भस्तटतरुं च ॥ २१ ॥

**शाकुन्तला**—होदु । जइ परमत्थदो परपरिग्गहसङ्किणा तुए एव्वं पउत्तं ता अहिण्णाणेण इमिणा तुह आसङ्कं अवणइस्सं। भवतु । यदि परमार्थतः परपरिग्रहशङ्किना त्वयैवं प्रवृत्तं तदभिज्ञानेनानेन तवाशङ्कामपनेष्यामि ।

**राजा**—उदारः कल्पः ।

**शाकुन्तला**—( मुद्रास्थानं परामृश्य ) हद्धी । अङ्गुलीअअसुण्णा मे अङ्गुली । ( इति सविषादं गौतमीमवेक्षते । ) हा धिक् । अङ्गुलीयकशून्या मेऽङ्गुलिः ।

**गौतमी**—णूणं दे सक्कावदारब्भन्तरे सचीतित्थसलिलं वन्दमाणाए पब्भट्ठं अङ्गुलीअअं । नूनं ते शक्रावताराभ्यन्तरे शचीतीर्थसलिलं वन्दमानायाः प्रभ्रष्टमङ्गुलीयकम् ।

**राजा**—( सस्मितम् । ) इदं तत्प्रत्युत्पन्नमति स्त्रैणमिति यदुच्यते ।

**शाकुन्तला**—एत्थ दाव विहिणा दंसिदं पहुत्तणं । अवरं दे कहिस्सं । अत्र तावद्विधिना दर्शितं प्रभुत्वम् । अपरं ते कथयिष्यामि ।

**राजा**—श्रोतव्यमिदानीं संवृत्तम् ।

**शाकुन्तला**—णं एक्कस्सिं दिअहे णोमालिआमण्डवे णलिणीपत्तभाअणगदं उदअं तुह हत्थे संणिहिदं आसि । नन्वेकस्मिन्दिवसे नवमालिकामण्डपे नलिनीपत्रभाजनगतमुदकं तव हस्ते संनिहितमासीत् ।

**राजा**—श्रृणुमस्तावत् ।

**शाकुन्तला**—तक्खणं सो मे पुत्तकिदओ दीहापङ्गो णाम मिअपोदओ उवट्ठिओ । तुए अअं दाव पढमं पिअउ त्ति अणुअम्पिणा उवच्छन्दिदो उअएण । ण उण दे अपरिचिआदो हत्थब्भासं उगवदो । पच्छा तस्सिं एव्व मए गहिदे सलिले णेण किदो पणओ । तदा तुमं इत्थं पहसिदो सि । सव्वो सगन्धेसु विस्ससदि । दुवेवि एत्थ आरण्णआ त्ति । तत्क्षणे स मे पुत्रकृतको दीर्घापाङ्गो नाम मृगपोतक उपस्थितः । त्वयायं तावत्प्रथमं पिबत्वित्यनुकम्पिनोपच्छन्दित उदकेन ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.21 கரைபுரண்டு செல்லும் ஆறு, தெளிந்த நீரைக் கலக்கிக் கரையிலுள்ள மரங்களையும் பெயர்த்து விடுவது போல நீ என்னையும் இழிவுபடுத்தி என் குலத்தையும் ஏன் களங்கமடையச் செய்கிறாய்.

சகுந்தலை : ஆகட்டும், என்னைப் பிறன் மனைவியென்று சந்தேகித்து இவ்வாறு நடத்தினால், அச்சந்தேகத்தை இவ் வடையாளக் குறியினாற் போக்குகிறேன்.

அரசன் : அது சிறந்த யோசனைதான்.

சகுந்தலை : (மோதிரம் இட்ட விரலைத் தடவி) ஆ! விரலில் மோதிரத்தைக் காணவில்லையே! (என்று கூறிக் கொண்டு கௌதமியைத் துயரோடு பார்க்கிறாள்)

கௌதமி : கணையாழி, சக்கராவதாரத்திலே சசிதீர்த்தத்தை வணங்கும் போது நழுவி விழுந்து விட்டது போலும்!

அரசன் : (புன்சிரிப்போடு) பெண்கள், சமயோசித புத்தியுள்ளவர்கள் என்று சொல்வது சரிதான்.

சகுந்தலை : இச்சந்தர்ப்பத்தில் விதி தன் வலிமையைக் காட்டி விட்டது. வேறொன்றும் சொல்லுகின்றேன்.

அரசன் : பார்த்து முடிந்தது. இனிக்கேட்க வேண்டுமா?

சகுந்தலை : ஒரு சமயம் தாங்கள் பிரப்பங்கொடி மண்டபத்திலே தங்கியிருந்த பொழுது தங்கள் கையிலே தாமரைத் தொன்னையில் தண்ணீர் இருந்தது.

அரசன் : நாம் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறோம்

சகுந்தலை : அப்போது என் வளர்ப்புப் பிள்ளையான தீர்க்காபாங்கன் என்னும் மான் அங்கே வந்தது. அதைக்கண்டு கருணை கொண்ட நீர் "அது முதலிற் குடிக்கட்டும்" என்று அதற்குத் தண்ணீரைக் கொடுக்க முயன்றீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

न पुनस्तेऽपरिचयाद्धस्ताभ्याशमुपगतः । पश्चात्तस्मिन्नेव मया गृहीते सलिलेऽनेन कृतः प्रणयः । तदा त्वमित्थं प्रहसितोऽसि । सर्वः सगन्धेषु विश्वसिति । द्वावप्यत्रारण्यकाविति ।

राजा—एवमादिभिरात्मकार्यनिर्वर्तिनीनामनृतमयवाङ्मधुभिराकृष्यन्ते विषयिणः ।

गौतमी—महाभाअ, ण अरुहसि एव्वं मन्तिदुं । तवोवण-संवड्ढिदो अणभिण्णो अअं जणो कइदवस्स । महाभाग, नार्हस्येवं मन्त्रयितुम् । तपोवनसंवर्धितोऽनभिज्ञोयं जनः कैतवस्य ।

राजा—तापसवृद्धे,

स्त्रीणामशिक्षितपटुत्वममानुषीषु
संदृश्यते किमुत याः प्रतिबोधवत्यः ।
प्रागन्तरिक्षगमनात्स्वमपत्यजात-
मन्यैर्द्विजैः परभृताः खलु पोषयन्ति ॥ २२ ॥

शकुन्तला—( सरोषम् । ) अणज्ज, अत्तणो हिअआणुमाणेण पेक्खसि । को दाणिं अण्णो धम्मकञ्चुअप्पवेसिणो तिणच्छण्ण-कूवोवमस्स तव अणुकिदिं पडिवदिस्सदि । अनार्य, आत्मनो हृदयानुमानेन पश्यसि । क इदानीमन्यो धर्मकञ्चुकप्रवेशिनस्तृणच्छन्नकूपोपमस्य तवानुकृतिं प्रतिपत्स्यते ।

राजा—( आत्मगतम् । ) संदिग्धबुद्धिं मां कुर्वन्नकैतव इवास्याः कोपो लक्ष्यते । तथा ह्यनया

मय्येव विस्मरणदारुणचित्तवृत्तौ
वृत्तं रहः प्रणयमप्रतिपद्यमाने ।
भेदाद्भ्रुवोः कुटिलयोरतिलोहिताक्ष्या
भग्नं शरासनमिवातिरुषा स्मरस्य ॥ २३ ॥

( प्रकाशम् । ) भद्रे, प्रथितं दुष्यन्तस्य चरितम् । तथापीदं न लक्षये ।

शकुन्तला—सुट्ठु दाव अत्त सच्छन्दचारिणी किदम्हि जा अहं इमस्स पुरुवंसप्पच्चएण मुहमहुणो हिअअट्ठिअविसस्स हत्थब्भासं



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மிடம் பழக்கமில்லாததால் அது உமக்கு அருகில் வரவில்லை. ஆனால் அதே தண்ணீரை நான் கொடுத்த போது அது விரும்பிக் குடித்தது. அதைக்கண்ட நீர், சிரித்தவண்ணம் "இனம் இனத்தையே சேரும்; நீங்கள் இருவரும் வனவாசிகளே" என்றீர்.

அரசன் : சொந்தக்காரியத்தை சாதித்துக் கொள்ளும் பெண்களது இத்தகைய பொய்மயமான தேன் மொழிகளை, இன்ப நுகர்ச்சியை விரும்புவோரே பொருட்படுத்துவர்.

கௌதமி : அரசர் பெருமானே! அவ்வாறு சொல்ல வேண்டாம். ஆச்சிரமத்தில் வளர்ந்த இப்பெண் வஞ்சனை யென்ப தையே அறியாதவள்.

அரசன் : தவமூதாட்டியே!

5.22 பெண்களிடத்திலே கல்லாதே தோன்றும் சூழ்ச்சித் திறமை, விலங்குகளிடத்திலும் காணப்படும் போது, பகுத்தறிவுள்ள மனிதரிடை அஃது எவ்வளவு மிகுதியாக இருக்கும். குயில்கள் தம் குஞ்சுகள் ஆகாயத்திலே பறக்கும் வரை, வேறு பறவைகளின் கூட்டில் வைத்து அவற்றை வளர்க்கவில்லையா?

சகுந்தலை : (கோபத்தோடு) கீழ்க்குலத்தவனே! உன் போக்கைக் கொண்டே மற்றவரை எடை போடுகிறாய். ஒழுக்க மென்ற போர்வையைப் போர்த்துக் கொண்டாய், புல் மறைத்த பாழ்ங்கிணறு போன்றவனே உன்னை யார் பின் பற்றுவார்கள்.

அரசன் : (தனக்குள்) களங்கமற்றதாகத் தோன்றும் இவளுடைய கோபம், என் மனத்திலே சந்தேகத்தை உண்டாக் குகிறது.

5.23 கனவில் வளர்ந்த காதலை நிராகரித்த, கொடிய மறதி யென்னும் மனநிலையில் இருக்கும் என்னிடம் இரத்தஞ் செறிந்த பெருவிழிகளையுடைய இவள் செலுத்திய, பெருங்கோபத்துடன் கூடிய வளைந்த புருவங்களின் நெரிப்பு, மன்மதனுடையவில் முறிந்தது போலக் காணப் படுகிறது. (உரத்து) நல்லாய்! துஷ்யந்தனுடைய வாழ்க்கை பிரசித்தமானது, அதில் இது காணப்பட வில்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

उवगदा । ( इति पटान्तेन मुखमावृत्य रोदिति । ) सुट्ठु तावदत्र स्वच्छन्दचारिणी कृतास्मि याहमस्य पुरुवंशप्रत्ययेन मुखमधोर्हृदयस्थितविषस्य हस्ताभ्याशमुपगता ।

शार्ङ्गरवः—इत्थमामकृतत्मप्रतिहतं चापलं दहति ।

अतः परीक्ष्य कर्तव्यं विशेषात्संगतं रहः ।
अज्ञातहृदयेष्वेवं वैरीभवति सौहृदम् ॥ २४ ॥

राजा—अयि भोः, किमत्रभवतीप्रत्ययादेवास्मान्संभृतदोषैः क्षिणुथ ।

शार्ङ्गरवः—( सासूयम् । ) श्रुतं भवद्भिरधरोत्तरम् ।

आ जन्मनः शाठ्यमशिक्षितो य-
स्तस्याप्रमाणं वचनं जनस्य ।
परातिसंधानमधीयते यै-
र्विद्येति ते सन्तु किलाप्तवाचः ॥ २५ ॥

राजा—भोः सत्यवादिन् , अभ्युपगतं तावदस्माभिरेवम् । किं पुनरिमामतिसंधाय लभ्यते ।

शार्ङ्गरवः—विनिपातः ।

राजा—विनिपातः पौरवैः प्रार्थ्यत इति न श्रद्धेयम् ।

शारद्वतः—शार्ङ्गरव, किमुत्तरेण । अनुष्ठितो गुरोः संदेशः । प्रतिनिवर्तामहे वयम् । ( राजानं प्रति । )

तदेषा भवतः कान्ता त्यज वैनां गृहाण वा ।
उपपन्ना हि दारेषु प्रभुता सर्वतोमुखी ॥ २६ ॥

गौतमि, गच्छाग्रतः ।

( इति प्रस्थिताः । )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலை : நன்று! நான் கற்பில்லாதவளாக்கப்பட்டேன். பூருவ மிசத்திலே நம்பிக்கை வைத்ததால், நாவில் தேனும், நெஞ்சில் நஞ்சுமுள்ள ஒருவன் கையிற் சிக்கி விட்டேன். (சேலைத் தலைப்பால் முகத்தை முடிக்கொண்டு அழுகிறாள்)

சார்ங்கர : ஆழ்ந்து ஆலோசியாமற் செய்த ஒருவனது செய்கை இப்படித்தான் முடியும்.

5.24 ஆகவே களவொழுக்கம் நன்கு ஆராய்ந்த பின்னரே செய்யப்பட வேண்டும். உள்ளத்தை நன்கு அறிந்து கொள்ளாத அன்பு, பகையிலே தான் முடியும்.

அரசன் : ஐயனே! அப்பெண்ணின் பேச்சில் மட்டும் நம்பிக்கை வைத்து எம்மை ஏன் இவ்வண்ணம் வசை மொழிகளால் துளைக்கிறீர்.

சார்ங்கர : (ஏளனத்தோடு) வாலுந்தலையுமில்லாத பேச்சைக் கேட்டுவிட்டீர்கள்.

5.25 பிறந்தது முதல் கபடமென்பதையே அறியாமல் வளர்ந்த ஒருவரது பேச்சுப் பொய்யாம்; ஆனால் ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்ட இவரது பேச்சைப் பெரிதாக மதிக்க வேண்டுமாம்!

அரசன் : ஓ சத்தியவந்தரே! உமது பேச்சை ஏற்றுக் கொள்வ தாகவே வைத்துக் கொள்வோம். அப்படியானால் இப் பெண்ணை ஏமாற்றுவதால் நான் அடையும் பயன் என்ன?

சார்ங்கர : அதோகதிதான்

அரசன் : பூருவகுலத்தவர் அதோகதி அடைவார் என்பதை நினைக்கக்கூட, முடியவில்லையே!

சாரத்துவ : சார்ங்கர! பதில் கூறிக்கொண்டிருப்பதால் என்ன பயன்? நாங்கள் குருதேவரின் கட்டளையை நிறைவேற்றி விட்டோம். இனித் திரும்பிப் போக வேண்டியது தான். (அரசனை நோக்கி)

5.26 இதோ இவள் உங்கள் மனைவி! இவளைக் கைவிட்டா லென்ன; ஏற்றுக் கொண்டாலென்ன; மனைவி யிடத்துக் கணவனுக்கு இருக்கும் அதிகாரம் பலமுகப்பட்டதாகும். கௌதமி முன்னே செல் (என்று கூறிப்புறப்படுகிறார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

शाकुन्तला—कहं इमिणा किदवेण विप्पलद्ध म्हि । तुम्हे वि मं परिच्चअध । ( इत्यनुप्रतिष्ठते । ) कथमनेन कितवेन विप्रलब्धास्मि । यूयमपि मां परित्यजथ ।

गौतमी—( स्थित्वा ) वच्छ सङ्गरव, अनुगच्छदि इअं क्खु णो करुणपरिदेविणी सउन्दला । पच्चादेसपरुसे भत्तरि किं वा मे पुत्तिआ करेदु । वत्स शार्ङ्गरव, अनुगच्छतीयं खलु नः करुणपरिदेविनी शकुन्तला । प्रत्यादेशपरुषे भर्तरि किं वा मे पुत्रिका करोतु ।

शार्ङ्गरवः—( सरोषं निवृत्य । ) किं पुरोभागिनि, स्वातंत्र्यमवलम्बसे ।

( शकुन्तला भीता वेपते । )

शार्ङ्गरवः—शकुन्तले,

यदि यथा वदति क्षितिपस्तथा
त्वमसि किं पितुरुत्कुलया त्वया ।
अथ तु वेत्सि शुचि व्रतमात्मनः
पतिकुले तव दास्यमपि क्षमम् ॥ २७ ॥

तिष्ठ । साधयामो वयम् ।

राजा—भोस्तपस्विन् , किमत्रभवतीं विप्रलभसे । कुतः

कुमुदान्येव शशाङ्कः सविता बोधयति पङ्कजान्येव ।
वशिनां हि परपरिग्रहसंश्लेषपराङ्मुखी वृत्तिः ॥ २८ ॥

शार्ङ्गरवः—यदा तु पूर्ववृत्तमन्यसङ्गाद्विस्मृतो भवांस्तदा कथमधर्मभीरुः ।

राजा—भवन्तमेवात्र गुरुलाघवं पृच्छामि ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலை : ஆ! இந்தக் கயவன் தான் என்னை வஞ்சித்து விட்டானென்றால், நீங்களுமா என்னைக் கைவிட வேண்டும்? (என்று அவர்களைப் பின் தொடர்கிறாள்)

கௌதமி : (நின்றவாறு) குழந்தாய்! சார்ங்கரவ!! இதோ, பார்த்தவர் இரங்கத்தக்க வண்ணம் அழுது கொண்டு சகுந்தலை நம்மை பின் தொடர்கிறாள். கணவன் அவளை ஏற்றுக் கொள்ள மறுத்துக் கொடுமை செய்தால் என்செல் வந்தான் என்ன செய்வாள்.

சார்ங்கர : (கோபத்துடன் திரும்பியவாறு) அடக்க மற்றவளே! உன் விருப்பப்படி நடக்க விரும்புகிறாயா? (சகுந்தலை அஞ்சி நடுங்குகிறாள்)

5.27 சகுந்தலை! அரசன் சொல்வது உண்மை யானால் குல ஒழுக்கத்திலே தவறிய உனக்கு உன் தந்தையால் என்னசெய்யமுடியும்? அன்றி உன் ஒழுக்கம் தூயது என்று நீ நம்பினால் உன் கணவன் வீட்டில் அடிமையாக இருப்பதுவும் உனக்குத் தக்கதாகும். ஆக்வே நில், நாங்கள் போகிறோம்!

அரசன் : முனிவர்களே! இந்தப் பெண்ணை ஏன் ஏமாற்று கிறீர்கள்?

5.28 சந்திரன் குமுதமலரையே விரியச் செய்கிறது. சூரியனோ தாமரைப் பூவையே மலரச் செய்கிறது. புலன்களைத் தன் வசமாக்கியவன் பிறன் மனைவியைச் சேர விரும்பமாட்டான்.

சார்ங்கர : வேறு விடயங்களில் ஈடுபட்டிருப்பதால் முன் நடந்தவற் றையும் மறந்து போயிருக்கும் தாங்கள் பழிக்கு அஞ் சுவது எவ்வாறு?

அரசன் : இரண்டில் எதுபொய் எதுமெய் என்பதைத் தாங்களே கூறுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

मूढः स्यामहमेषा वा वदेन्मिथ्येति संशये
दारत्यागी भवाम्याहो परस्त्रीस्पर्शपांसुलः ॥ २९ ॥

पुरोहितः—( विचार्य ) यदि तावदेवं क्रियताम् ।

राजा—अनुशास्तु मां भवान् ।

पुरोहितः—अत्रभवती तावदाप्रसवादस्मद्गृहे तिष्ठतु । कुत इदमुच्यत इति चेत् । त्वं साधुभिरुद्दिष्टः प्रथममेव चक्रवर्तिनं पुत्रं जनयिष्यसीति । स चेन्मुनिदौहित्रस्तल्लक्षणोपपन्नो भविष्यति, अभिनन्द्य शुद्धान्तमेनां प्रवेशयिष्यसि । विपर्यये तु पितुरस्याः समीपनयनमवस्थितमेव ।

राजा—यथा गुरुभ्यो रोचते ।

पुरोहितः—वत्से, अनुगच्छ माम् ।

शकुन्तला—भअवदि वसुहे, देहि मे विवरं । भगवति वसुधे, देहि मे विवरम् । ( इति रुदती प्रस्थिता । निष्क्रान्ता सह पुरोधसा, तपस्विभिश्च )

( राजा शापव्यवहितस्मृतिः शकुन्तलागतमेव चिन्तयति । )

( नेपथ्ये । )

आश्चर्यम् ।

राजा—( आकर्ण्य ) किं नु खलु स्यात् ।

( प्रविश्य । )

पुरोहितः—( सविस्मयम् । ) देव, अद्भुत खलु संवृत्तम् ।

राजा—किमिव ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.29 ஒன்றில் நான் மோகமடைந்து விட்டேன். அல்லது இவள் சொல்வது பொய், முன்னையது உண்மையானால் மனைவியைக் கைவிட்டவனாவேன்; பின்னையது உண்மையானால் இவளை ஏற்பதால் (யோசித்தவாறு)

புரோகித : அப்படியானால் இவ்வாறு செய்யலாம்.

அரசன் : தெரிவியுங்கள் பெரியவரே!

புரோகித : பிரசவகாலம் வரை இப்பெண்மணி என் வீட்டிலே தங் கட்டும். உங்களுக்குப் பிறக்கும் முதற் குழந்தை மன்னாதி மன்னனாக இருப்பான் என்று முனிவர்கள் உங்களை முன் வாழ்த்தியிருப்பதால், இவ்வாறு கூறு கிறேன். முனிவரின் வாக்குப்படி, காசிபரின் பேரக் குழந்தை அரச அடையாளங்களோடு பிறந்தால், இப் பெண்மணியை நீங்கள் அந்தப் புரத்துக்கு அழைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவள் தன் தந்தை வீட்டுக்குப் போய் விடுவதே முறை.

அரசன் : குருதேவரின் விருப்பப்படியே ஆகட்டும்!

புரோகித : குழந்தாய் என்னோடு வா!

சகுந்தலை : பூமிதேவியே! பிளந்து என்னை ஏற்றுக் கொள்.

(அழுதுகொண்டு புரோகிதரோடும், துறவிகளோடுஞ் செல்கிறாள்)

(சாபத்தின் விளைவால் நினைவிழந்த அரசன் சகுந்த லையைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறான்)

(திரைக்குப் பின் )

அதிசயம் ; பேரதிசயம்!

அரசன் : (உற்றுக் கேட்டு) என்னவாயிருக்குமோ!

புரோகித : (வருதல்) சிரிப்போடு வேந்தே! அற்புதமான சம்பவமொன்று நடந்துவிட்டது.

அரசன் : என்ன நடந்தது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

पुरोहितः—देव, परावृत्तेषु कण्वशिष्येषु

सा निन्दन्ती स्वानि भाग्यानि बाला
बाहूत्क्षेपं क्रन्दितुं च प्रवृत्ता ।

राजा—किं च ।

पुरोहितः—

स्त्रीसंस्थानं चाप्सरस्तीर्थमारा-
दुक्षिप्यैनां ज्योतिरेकं जगाम ॥ ३० ॥

( सर्वे विस्मयं रूपयन्ति । )

राजा—भगवन् प्रागपि सोऽस्माभिरर्थः प्रत्यादिष्ट एव । किं वृथा तर्केणान्विष्यते । विश्राम्यतु भवान् ।

पुरोहितः—( विलोक्य । ) विजयस्व । ( इति निष्क्रान्तः । )

राजा—वेत्रवति, पर्याकुलोऽस्मि । शयनभूमिमार्गमादेशय ।

प्रतीहारी—इदो इदो देवो । ( इति प्रस्थितः । ) इत इतो देवः ।

राजा—

कामं प्रत्यादिष्टां स्मरामि न परिग्रहं मुनेस्तनयाम् ।
बलवत्तु दूयमानं प्रत्याययतीव मां हृदयम् ॥ ३१ ॥

( इति निष्क्रान्ताः सर्वे । )

पञ्चमोऽङ्कः ।

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரோகித : தேவரீர்! கண்ணுவ முனிவரின் சீடர்கள்

5.30 சென்ற பின் அப்பெண் தன் கைகளை மேலே உயர்த்தி யவாறு தன் விதியை நொந்து அழத் தொடங்கினாள்

அரசன் பின்னர் ;

புரோகிதர் : உடனே அப்சரதீர்த்தத்துக்கு அண்மையில் பெண் வடிவான ஓர் ஒளி அவளைத் தூக்கிக் கொண்டு சென்றது. (எல்லோரும் ஆச்சரியப்படுகின்றனர்)

அரசன் : சுவாமீ! அவளைத்தானே முன்னமே கைகழுவிவிட்டு விட்டோம். இனி அவளைப் பற்றி ஏன் வீணாய் எண்ண வேண்டம். தாங்கள் போய்ச் சிறிது இளைப்பாறுங்கள்.

புரோகிதர் : (அரசனைப் பார்த்து) வெற்றியுண்டாக! என்று கூறிப் போய்விடுகிறார்)

அரசன் : வேத்திரவதி! என் மனம் கவலையடைகிறது. படுக்கை அறைக்கு வழியைக் காட்டு.

வா.காப் : இவ்வழி, இவ்வழியே வாருங்கள். அரசே. (என்று கூறிச் செல்லல்)

அரசன் : (நடந்து கொண்டு தனக்குள்) நான் கைவிட்ட முனிவர் மகளை என்னால் நினைவு கூர முடியவில்லையே யென்பது உண்மையே. இருந்தும் என் மனம் வருந்துவதைப் பார்த்தால் அவ்வாறு நிகழ்ந்திருக்கவும் கூடும் என்று எண்ணத் தோன்றுகின்றது. (எல்லோரும் போகின்றனர்)

**(ஐந்தாம் அங்கம் முற்றும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# षष्ठोऽङ्कः ।

( ततः प्रविशति नागरिकः श्यालः पश्चाद्बद्धपुरुषमादाय रक्षिणौ च । )

**रक्षिणौ**—( ताडयित्वा । ) **अले कुम्भिलआ, कहेहि कहिं तुए एशो मणिबन्धणुक्किण्णणामहेए लाअकीए अङ्गुलीअए शमाशादिए ।** अरे कुम्भिलक, कथय कुत्र त्वयैतन्मणिबन्धनोत्कीर्णनामधेयं राजकीयमङ्गुलीयकं समासादितम् ।

**पुरुषः**—( भीतिनाटितकेन । ) **पशीदन्तु भावमिश्शे । हगे ण ईदिशकम्मकाली ।** प्रसीदन्तु भावमिश्राः । अहं नेदृशकर्मकारी ।

**प्रथमः**—**किं खु शोहणे बम्हणेत्ति कलिअ लण्णा पडिग्गहे दिण्णे ।** किं खलु शोभनो ब्राह्मण इति कृत्वा राज्ञा प्रतिग्रहो दत्तः ।

**पुरुषः**—**शुणध दाणिं । हगे शक्कावदालब्भन्तलवाशी धीवले ।** शृणुतेदानीम् । अहं शक्रावताराभ्यन्तरवासी धीवरः ।

**द्वितीयः**—**पाडच्चला, किं अम्हेहिं जादी पुच्छिदा ।** पाटच्चर, किमस्माभिर्जातिः पृष्टा ।

**श्यालः**—**सूअअ, कहेदु सव्वं अणुक्कमेण । मा णं अन्तरा पडिबन्धह ।** सूचक, कथयतु सर्वमनुक्रमेण । मैनमन्तरे प्रतिबन्धय ।

**उभौ**—**जं आवुत्ते आणवेदि । कहेहि ।** यदावुत्त आज्ञापयति । कथय ।

**पुरुषः**—**अहके जालुग्गालादीहिं मच्छबन्धणोवाएहिं कुडुम्बभलणं कलेमि ।** अहं जालोद्गालादिभिर्मत्स्यबन्धनोपायैः कुटुम्बभरणं करोमि ।

**श्यालः**—( विहस्य । ) **विसुद्धो दाणिं आजीवो ।** विशुद्ध इदानीमाजीवः ।

**पुरुषः**—

**शहजे किल जे विणिन्दिए ण हु दे कम्म विवज्जणीअए ।**
**पशुमालणकम्मदालुणे अणुकम्पामिदु एव्व शोत्तिए ॥ १ ॥**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் அங்கம்

**(நகரக் காவலர் சியாளனும், அவன் பின்னால் கட்டப்பட்ட மனிதனை அழைத்தவாறு இரு காவலரும் வருதல்)**

காவலர் : (அடித்தவாறு) அடே திருட்டுப் பயலே! சொல்லு! மாணிக்கம் பதித்ததும், அரசன் பெயர் தீட்டியதுமான இந்த மோதிரத்தை எங்கே எடுத்தாய்?

செம்படவன் : (பயந்தவன் போல் நடித்து) தயவு காட்டுங்க துரையிங்க. நான் அப்படி ஆளில்லீங்க.

மு. காவல் : பின்னை ராஜா உன்னைப் பெரிய பிராமணனாகக் கருதி தட்சிணை கொடுத்தாராக்கும். )

செம்படவன் : கொஞ்சங் கேளுங்க; நானுங்க சக்கராவதாரத்தி லிருக்கிற ஒரு செம்படவனுங்க,

இ.காவல் : திருட்டுப்பயலே! உன் சாதியைக் கேட்டேனா?

சியாளன் : இடையிலே அவனைக் குழப்பாதே. எல்லாவற்றையம் அவன் ஒழுங்காகச் சொல்லட்டும்,

இருவரும் : மச்சான் சொல்லுகிறபடியே ஆகட்டும். சொல்லடா.

செம்படவன் : வலை தூண்டில் கொண்டு மீன் பிடிச்சுக் குடும்பம் நடத்திறவனுங்க,

ந.காவல் : இது தூய்மையான தொழிலல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

सहजं किल यद्विनिन्दितं न खलु तत्कर्म विवर्जनीयम् ।
पशुमारणकर्मदारुणोऽनुकम्पामृदुरेव श्रोत्रियः ॥

**श्यालः—तदो तदो ।** ततस्ततः ।

**पुरुषः—एक्कर्शिश दिअशे खण्डशो लोहिअमच्छे मए कप्पिदे जाव तश्श उदलब्भन्तले एदं लदणभाशुलं अङ्गुलीअअं देक्खिजं । पच्छा अहके शे विक्कआअ दंशअन्ते गहिदे भावमिश्शेहिं । मालेह वा मुञ्चेह वा । अअं शे आअमवुत्तन्ते ।** एकस्मिन्दिवसे खण्डशो रोहितमत्स्यो मया कल्पितो यावत् तस्योदराभ्यन्तर इदं रत्नभासुरमङ्गुलीयं दृष्टम् । पश्चादहं तस्य विक्रयाय दर्शयन्गृहीतो भावमिश्रैः । मारयत वा मुञ्चत वा । अयमस्यागमवृत्तान्तः ।

**श्यालः—जाणुअ, विस्सगन्धी गोहादी मच्छबन्धो एव्व णिस्संसअं । अङ्गुलीअअदंसणं से विमरिसिदव्वं । राउलं एव्व गच्छामो ।** जानुक, विस्रगन्धी गोधादी मत्स्यबन्ध एव निःसंशयम् । अङ्गुलीयक-दर्शनमस्य विमर्शयितव्यम् । राजकुलमेव गच्छामः ।

**रक्खिणौ—तह । गच्छ अले गण्ठिभेदअ ।** तथा । गच्छ अरे ग्रन्थि-भेदक ।

( सर्वे परिक्रामन्ति । )

**श्यालः—सूअअ, इमं पुरदुआरे अप्पमत्ता पडिवालह । जाव इमं अङ्गुलीअअं जहागमणं भट्टिणो णिवेदिअ तदो सासणं पडिच्छिअ णिक्कमामि ।** सूचक, इमं पुरद्वारेऽप्रमत्तौ प्रतिपालयतम् । यावदिदमङ्गुलीयकं यथागमनं भर्तुर्निवेद्य ततः शासनं प्रतीक्ष्य निष्क्रमामि ।

**उभौ—पविशादु आवुत्ते शामिपशादश्श ।** प्रविशत्वावुत्तः स्वामि-प्रसादाय ।

( इति निष्क्रान्तः श्यालः । )

**प्रथमः—जाणुअ, चिलाअदि क्खु आवुत्ते ।** जानुक, चिरायते खल्वावुत्तः ।

**द्वितीयः—णं अवशलोवशप्पणीआ लाआणो ।** नन्ववसरोपसर्पणीया राजानः ।

**प्रथमः—जाणुअ, फुलन्ति मे हत्था इमश्श वज्झश्श शुमणो पिणद्धुं ।** ( इति पुरुषं निर्दिशति । ) जानुक, स्फुरतो मम हस्तावस्य वध्यस्य सुमनसः पिनद्धुम् ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்படவன் : துரைங்க; அப்படிச் சொல்லாதீங்க.

6.1 தான் பிறந்த சாதிக்குரிய தொழில் எவ்வளவு இழிவான தாயிருந்தாலுங்க அதை ஒருத்தரும் கைவிடக் கூடாதின்னு சொல்லி வைச்சிருக்காங்க. இரக்கம் மிகுந்த அந்தணன்கூட வேள்விக்குப் பசுவைக் கொலை செய்யுமாறு விதித்திருந்தால் அதைக் கைவிட மாட்டானுங்க.

சியாளன் : அப்புறம், அப்புறம்,

செம்படவன் : அப்புறம் ஒரு நாள் ஒரு ரோகித மீனைத் துண்டு துண்டாகப் வெட்டினேனுங்க அதன் வயித்திலே பார்த்த போது மாணிக்கம் பதித்த இந்த மோதிரம் கிடைத்த துங்க. அதைக் கொண்டு போய் விலை கூறின நேரம் எஜமானுங்க என்னைப் பிடித்துக் கொண்டு வந்தீங்க. இவ்வளவுதான் நடந்ததுங்க. இனி என்னைக் கொல்ல வேணுமின்னாக் கொல்லுங்க, அல்லது விட்டு விடுங்க,

சியாளன் : பச்சை ஊன் மணம் நாறும் இந்த முதலை உண்ணி, செம்படவன் என்பது நிச்சயம் இந்த மோதிரம் இவ னுக்குக் கிடைத்தது பற்றி விசாரணை செய்ய வேண் டியது அவசியம். நாம் அரண்மனைக்கே போவோம்.

காவலர் : அட முடிச்சு மாறி, முன்னுக்கு போடா

*(எல்லோரும் போகிறார்கள்)*

சியாளன் : ஏ! சூசகா, இந்தக் கணையாழி வந்த விதத்தை அரசனுக்கு அறிவித்து அவரது கட்டளையைப் பெற்று நான் திரும்பும் வரை இவனைக் கவனமாக இந்த வாசலில் வைத்துப் பார்த்துக் கொள்

இருவரும் : அரசனைக் காணத்தாங்கள் செல்லுங்கள். (சியாளன் போகிறான்)

மு.கா : அடே, ஜானுகா, எசமான் போய் ரொம்ப நேரமாகிறதே.

இ.காவ : ராஜாவுக்குக் கிட்டப்போவதின்னாச் சமயம் பாத்து போக வேண்டாமாடா?

மு.காவ : இவனைக் கழுவேத்திறதுக்கு மின்னே இவனுக்கு எப்ப மாலை சூட்டிலாமின்னு என் கையெல்லாம் துடியாய்த் துடிச்சிண்டிருக்குதடா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**पुरुषः**—**ण अलुहदि भावे अकालणमालणे भविदुं** । नार्हति भावोऽकारणमारणो भवितुम् ।

**द्वितीयः**—( विलोक्य । ) **एशे अम्हाणं शामी पत्तहत्थे लाअशाशणं पडिच्छिअ इदोमुहे देक्खीअदि । गिद्धबली भविश्शशि । शुणो मुहं वा देक्खिश्शशि** । एष नौ स्वामी पत्रहस्तो राजशासनं प्रतीक्ष्येतोमुखो दृश्यते । गृध्रबलिर्भविष्यसि, शुनो मुखं वा द्रक्ष्यसि ।

( प्रविश्य । )

**श्यालः**—**सूअअ, मुञ्चेदु एसो जालोअजीवी । उववण्णो क्खु अङ्गुलीअस्स आअमो** । सूचक, मुच्यतामेष जालोपजीवी । उपपन्नः खल्वङ्गुलीयस्यागमः ।

**सूचकः**—**जह आवुत्ते भणादि** । यथावुत्तो भणति ।

**द्वितीयः**—**एशे जमशदणं पविशिअ पडिणिवुत्ते** । ( इति पुरुषं परिमुक्तबन्धनं करोति । ) एष यमसदनं प्रविश्य प्रतिनिवृत्तः ।

**पुरुषः**—( श्यालं प्रणम्य । ) **भट्टा, अह कीलिशे मे आजीवे** । भर्तः, अथ कीदृशो मे आजीवः ।

**श्यालः**—**एसो भट्टिणा अङ्गुलीअअमुल्लसम्मिदो पसादो वि दाविदो** । ( इति पुरुषायार्थं प्रयच्छति । ) एष भर्त्राङ्गुलीयकमूल्यसमितः प्रसादोऽपि दापितः ।

**पुरुषः**—( सप्रणामं प्रतिगृह्य । ) **भट्टा, अणुग्गहीदम्हि** । भर्तः, अनुगृहीतोऽस्मि ।

**सूचकः**—**एशे णाम अणुग्गहिदे जे शूलादो अवदालिअ हत्थिक्खन्धे पडिट्ठाविदे** । एष नामानुगृहीतो यच्छूलादवतार्य हस्तिस्कन्धे प्रतिष्ठापितः ।

**जानुकः**—**आवुत्त, पालिदोशिअं कहेदि तेण अङ्गुलीअएण भट्टिणो शम्मदेण होदव्वं** । आवुत्त, पारितोषिकं कथयति तेनाङ्गुलीयकेन भर्तुः संमतेन भवितव्यम् ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்படவன் : காரணமில்லாமே ஒருத்தனைத் தூக்கிறது அநியாய முங்க. சாமி.

இ.காவ : (பார்த்து) நம்ம எசமான், ராஜாவின் கட்டளையைக் கையிலே கொண்டு இந்தப் பக்கமாய் வாறானுங்க. அடே! கழுகுக்குப் பலியாகப் போகிறாய். அல்லது நாயின் முகத்தைக் காணப்போகிறாய்.

சியாளன் : விடுதலை செய்யுங்கள் இந்தச் செம்படவனை. இந்தக் கணையாழி கிடைத்த விதம் முற்றும் நியாயமானதே.

சூசகன் : தாங்கள் கூறியபடியே.

இ.காவ : இவன் எமலோகத்துக்குப் போய்த் திரும்பி வந்திருக் கிறான். (செம்படவனின் கட்டை அவிழ்க்கிறான்)

செம்படவன் : (சியாளனை வணங்கி) சாமி, இப்போ எப்படி நம்ம தொழில்.

சியாளன் : இதோ மகாராஜாவுடைய கணையாழிக்குச் சமமான பணம். உனக்குப் பரிசாகக் கொடுக்கும்படி மன்னவன் கட்டளையிட்டிருக்கிறார். (செம்படவனுக்குப் பணத்தைக் கொடுத்தல்)

செம்படவன் : (தாழ்ந்து வணங்கி) பெரிய புண்ணியம் சாமீ

சூசகன் : வேறென்ன, கழுவிலிருந்து இறக்கி, யானையின் மேலேற்றிவிட்டது புண்ணியமில்லையா?

சானுகன் : எசமான் இந்தப் பரிசைப் பார்த்தால் அந்த மோதிரத்திலுள்ள இரத்தினம் மகாராஜாவுக்கு மிகவும் பிடிச்சிருக்குமின்னு தான் நினைக்கிறேன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

श्यालः—ण तस्सिं महारुहं रदणं भट्टिणो बहुमदं त्ति तक्केमि। तस्स दंसणेण भट्टिणो अभिमदो जणो सुमराविदो। मुहुत्तअं पकिदिगम्भीरो वि पज्जुसुअणअणो आसि। न तस्मिन्महार्हं रत्नं भर्तुर्बहुमतमिति तर्कयामि। तस्य दर्शनेन भर्तुरभिमतो जनः स्मारितः। मुहूर्तं प्रकृतिगम्भीरोऽपि पर्युत्सुकनयन आसीत्।

सूचकः—शेविदं णाम आवुत्तेण। सेवितं नामावुत्तेन।

जानुकः—णं भणाहि। इमश्श कए मच्छिआभत्तुणोत्ति। ( इति पुरुषमसूयया पश्यति। ) ननु भण। अस्य कृते मात्स्यिकभर्तुरिति।

पुरुषः—भट्टालके, इदो अद्धं तुम्हाणं शुमणोमुल्लं होदु। भट्टारक, इतोऽर्धं युष्माकं सुमनोमूल्यं भवतु।

जानुकः—एत्तके जुज्जई। एतावद्युज्यते।

श्यालः—धीवर, महत्तरो तुमं पिअवअस्सओ दाणिं मे संवुत्तो। कादम्बरीसक्खिअं अम्हाणं पढमसोहिदं इच्छीअदि। ता सोण्डिआपणं एव्व गच्छामो। धीवर, महत्तरस्त्वं प्रियवयस्यक इदानीं मे संवृत्तः। कादम्बरीसाक्षिकमस्माकं प्रथमसौहृदमिष्यते। तच्छौण्डिकापणमेव गच्छामः। ( इति निष्क्रान्ताः सर्वे। )

## प्रवेशकः।

( ततः प्रविशत्याकाशयानेन सानुमती नामाप्सराः। )

सानुमती—णिव्वत्तिदं मए पज्जाअणिव्वत्तणिज्जं अच्छरातित्थसण्णिज्झं जाव साहुजणस्स अभिसेअकालो त्ति। संपदं इमस्स राएसिणो उदन्तं पच्चक्खीकरिस्सं। णं मेणआसंबन्धेण सरीरभूदा मे सउन्दला। ताए अ दुहिदुणिमित्तं आदिट्ठपुव्वम्हि। ( समन्तादवलोक्य। ) किं णु क्खु उदुच्छवे वि णिरुच्छवारम्भं विअ राअउलं दीसइ। अत्थि मे विहवो पणिधाणेण सव्वं परिण्णादुं। किंदु सहीए आदरो मए माणइदव्वो। होदु। इमाणं एव्व उज्जाणपालिआणं तिरक्खरिणीपडिच्छण्णा पस्सवत्तिणी



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாளன் : அதிலுள்ள இரத்தினம் அவ்வளவு விலையுயர்ந்ததாய்த் தெரியவில்லை. ஆனால் கணையாழியைக் கண்ட மாத்திரத்தே தனக்கு மிக்க அன்புள்ள ஒருவரை அவர் நினைத்திருக்க வேண்டும். இயல்பாகவே கம்பீரமான தோற்றமுடைய அவர் சிறிது நேரம் கண்ணீர் சொரிந்தார்.

சூசகன் : தாங்கள் அரசனுக்கு நல்ல சேவை செய்திருக்கிறீர்கள்.

சானுகன் : அரசனுக்கல்ல இந்த செம்படவர் தலைவனுக்கு என்று சொல்லு.

(செம்படவனைப் பொறாமையோடு பார்க்கிறான்)

செம்படவன் : இத்தாங்க சாமி, இதிலே பாதியை உங்களுக்கு வாய்க்கரிசிபோட வைச்சுக்கொள்ளுங்க

சானுகன் : அது மிகவும் பொருத்தமானது தான்.

சியாளன் : பலே ஆளய்யா நீ! நீ தான் நம்ம பெரிய கூட்டாளி. கள்ளுச் சாட்சியாக நமது முதற் சிநேகிதத்தை ஆரம்பிப் போம். வா. நேரே கள்ளுக்கடைக்கு. (எல்லோரும் போதல்)

**(முன்னுரை முற்றும்)**

**(சானுமதி என்னும் அரம்பை ஆகாய மார்க்கமாக வருகிறாள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**भविअ उवलहिस्स ।** ( इति नाट्येनावतीर्य स्थिता । ) निर्वर्तितं **मया** पर्याय-निर्वर्तनीयमप्सरस्तीर्थसांनिध्यं यावत्साधुजनस्याभिषेककाल इति । सांप्रतमस्य राजर्षेरुदन्तं प्रत्यक्षीकरिष्यामि । ननु मेनकासंबन्धेन शरीरभूता मे शकुन्तला । तथा च दुहितृनिमित्तमादिष्टपूर्वास्मि । किं नु खलु ऋतूत्सवेऽपि निरुत्सवारम्भमिव राजकुलं दृश्यते । अस्ति मे विभवः प्रणिधानेन सर्वं परिज्ञातुम् । किं तु सख्या आदरो मया मानयितव्यः । भवतु । अनयोरेवोद्यानपालिकयोस्तिरस्करिणीप्रतिच्छन्ना पार्श्ववर्तिनी भूत्वोपलप्स्ये ।

( ततः प्रविशति चूताङ्कुरमवलोयन्ती चेटी । अपरा च पृष्ठतस्तस्याः । )

**प्रथमा—**

**आतम्महरिअपण्डुर वसन्तमासस्स जीअसव्वस्स ।**
**दिट्ठो सि चूदकोरअ उदुमङ्गल तुमं पसाएमि ॥ २ ॥**

आताम्रहरितपाण्डुर वसन्तमासस्य जीवसर्वस्व ।
दृष्टोऽसि चूतकोरक ऋतुमङ्गल त्वां प्रसादयामि ॥

**द्वितीया—परहुदिए, किं एआइणी मन्तेसि ।** परभृतिके, किमेकाकिनी मन्त्रयसे ।

**प्रथमा—महुअरिए, चूदकलिअं देक्खिअ उम्मत्तिआ परहुदिआ होदि ।** मधुकरिके, चूतकलिकां दृष्ट्वोन्मत्ता परभृतिका भवति ।

**द्वितीया—**( सहर्षं त्वरयोगपम्य । ) **कहं उवट्ठिदो महुमासो ।** कथमुपस्थितो मधुमासः ।

**प्रथमा—महुअरिए, तव दाणिं कालो एसो मदविब्भमगीदाण ।** मधुकरिके, तवेदानीं काल एष मदविभ्रमगीतानाम् ।

**द्वितीया—सहि, अवलम्ब मं । जाव अग्गपादट्ठिआ भविअ चूदकलिअं गेण्हिअ कामदेवच्चणं करेमि ।** सखी, अवलम्बस्व मां यावदग्रपादस्थिता भूत्वा चूतकलिकां गृहीत्वा कामदेवार्चनं करोमि ।

**प्रथमा—जइ मम वि क्खु अद्धं अच्चणफलस्स ।** यदि ममापि खल्वर्धमर्चनफलस्य ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சானுமதி : முனிவர்கள் நீராடும் போது அப்சர தீர்த்தத்தில் முறை முறையாகச் செய்ய வேண்டிவற்றை நான் செய்து விட்டேன். இனி அரசன் நிலையை என் கண்களாலேயே பார்ப்பேன். மேனகையின்

உறவினால் சகுந்தலை என்னுயிரை ஒத்தவளானாள். அவள் பொருட்டே மேனகை என்னை இங்கே அனுப் பினாள். (சுற்றிப் பார்த்து) பருவ விழா நெருங்கி விட்ட போதும், அரசன் கோயில் ஆரவாரமின்றியிருப்பது ஏனோ? எல்லாவற்றையும் தியானத்தினால் அறியும் ஆற்றல் எனக்கிருந்தும் என் தோழியின் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். ஆகட்டும். பூங்காவ னத்தைக் காக்கும் இவ்விரு பெண்களிடையே போய், மற்றவர் பார்க்காதவாறு மந்திர சக்தியால் என்னை மறைத்துக் கொண்டு, வேண்டியதை அறிந்து கொள்வேன். (இறங்கு வது போல் நடித்து நிற்கிறாள்)

(மாந்துணரை உற்று நோக்கியவாறு ஒரு தோழியும் அவளுக்குப் பின்னால் மற்றொருத்தியும வருகின்றனர்)

மு.தோழி : 6.2 சற்றே சிவந்து பசுமையும் சாம்பல் நிறமும் கலந்த, வசந்த காலத்துக்கு உயிர் கொடுக்கும் மாம்பூங் கொத்தே! உன்னை நான் பார்த்துவிட்டேன், வேனிற் காலத்தில் மங்கள அறிகுறியாய்வரும் உன்னை நான் வணங்கு கிறேன்.

இ.தோழி : பரப்பிருதிகே! (குயிலே) என்ன தனியே மந்திரஞ் சொல்லிக் கொண்டா இருக்கிறாய்

மு.தோழி : மதுகரிகே! (வண்டே) மாந்துணரைக் கண்ட குயில் தன்னிலை மறந்து ஆடுகிறது.

இ. தோழி : (மகிழ்ச்சி) என்ன! வேனிற்காலம் வந்து விட்டதா?

மு.தோழி : மதுகரிகே (வண்டே!) நீ மயங்கிப் பாடித்திரியுங்காலம் இதுதான்.

இ.தோழி. : தோழி, என்னைப் பிடித்துக் கொள். நான்

நுனிக்காலில் நின்று கொண்டு மாந்துணரைப் பறித்து மன்மதனை வழிபடப் போகிறேன்.

மு.தோழி : வழிபாட்டின் பாதிப் புண்ணியத்தை எனக்குத் தந்தால் அப்படிச் செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**द्वितीया—अकहिदे वि एदं संपज्जइ जदो एक्कं एव्व णो जीविदं दुधा ट्ठिदं सरीरं ।** ( सखीमवलम्ब्य स्थिता चूताङ्कुरं गृह्णाति । ) **अए, अप्पडिबुद्धो वि चूदप्पसवो एत्थ बन्धणभङ्गसुरभी होदि ।**
अकथितेऽप्येतत्संपद्यते यत एकमेव नौ जीवितं द्विधा स्थितं शरीरम् । अये, अप्रतिबुद्धोऽपि चूतप्रसवोऽत्र बन्धनभङ्गसुरभिर्भवति ।

( कपोतहस्तकं कृत्वा । )

**तुं सि मए चूदङ्कुर दिण्णो कामस्स गहिदधणुअस्स ।**
**पहिअजणजुवइलक्खो पञ्चब्भहिओ सरो होहि ॥ ३ ॥**

त्वमसि मया चूताङ्कुर दत्तः कामाय गृहीतधनुषे ।
पथिकजनयुवतिलक्ष्यः पञ्चाभ्यधिकः शरो भव ॥

( इति चूताङ्कुरं क्षिपति । )

( प्रविश्यापटीक्षेपेण कुपितः )

**कञ्चुकी—मा तावत् । अनात्मज्ञे, देवेन प्रतिषिद्धे वसन्तोत्सवे त्वमाम्रकलिकाभङ्गं किमारभसे ।**

**उभे—**( भीते ) **पसीददु अज्जो । अग्गहीदत्थाओ अम्हे ।** प्रसीदत्वार्यः । अगृहीतार्थे आवाम् ।

**कञ्चुकी—न किल श्रुतं युवाभ्यां यद्वासन्तिकैस्तरुभिरपि देवस्य शासनं प्रमाणीकृतं तदाश्रयिभिः पत्रिभिश्च । तथाहि**

**चूतानां चिरनिर्गतापि कलिका बध्नाति न स्वं रजः**
**संनद्धं यदपि स्थितं कुरवकं तत्कोरकावस्थया ।**
**कण्ठेषु स्खलितं गतेऽपि शिशिरे पुंस्कोकिलानां रुतं**
**शङ्के संहरति स्मरोऽपि चकितस्तूणार्धकृष्टं शरम् ॥ ४ ॥**

**उभे—णत्थि संदेहो । महाप्पहावो राएसी ।** नास्ति संदेहः । महाप्रभावो राजर्षिः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.தோழி : நீ கேட்காமலே அது கிடையாதா? நம் உடல் இரண்டே யன்றி உயிர் ஒன்று தானே! (தோழி தாங்க மாந்து ணரைப் பறிக்கிறாள்)

6.3 ஆ! மாந்துணர் முழுவதும் இதழ் விரியாதிருந்தும் அதைத் தண்டிலிருந்து பறித்ததும் என்ன மணம் விசுகிறது (என்று உள்ளங்கைகளை ஒன்று சேரத்த வாறு) மாந்துணரே! கையில் வில்லுடன் தோன்றும் மன்மதனுக்கு உன்னைக் கையுறையாகக் கொடுக் கிறேன். கணவரைப் பிரிந்து வாழும் இளம் மனை வியரை நோக்கிச் செல்லும் காமனது ஐந்து பாணங் களில் நீயே மிகுந்த சிறப்புப் பெறுவாயாக. (என்று கூறி மாந்துணரை வீசுகிறாள்)

(திரையை விலக்கியவாறு கஞ்சுகி கோபத்தோடு வருகிறான்)

கஞ்சுகி : பேதைப் பெண்ணே! நிறுத்து, வேனிற் காலக் கொண் டாட்டங்களை. அரசர் தடுத்திருக்கும் போது இந்த மாந்துணரை நீ ஏன் பிடுங்குகிறாய்.

இருவரும் : (பயத்துடன்) பொறுக்க வேண்டும் பெருமானே. எங்க ளுக்கிது தெரியாது.

கஞ்சுகி : என்ன! நீங்கள் கேள்விப்படவில்லையா? வசந்தகால மரங்களும் அவற்றில் வாழும் பறவையினங்களுங்கூட அரசன் கட்டளையைப் பின்பற்றுகின்றன.

6.4 நீண்ட நாளானத் துளிர்த்த மாந்துணர்மொட்டு மகரந்தங் கூட்டவில்லை. மலர்வதற்கு ஆயத்தமாயிருக்கும் குரபகமலர் கூட இதழவிளாது

நிற்கிறது. கார்காலம் கழிந்த போதிலும் ஆண் குயில்களின் கூவுதல் தொண்டையிலே தடுமாறுகிறது. காமன் கூட அம்பறாத்தூணியிலிருந்து பாதிதூரம் இழுத்த பாணத்தை அச்சத்தினால் எய்யாது நிறுத்தி விடுகிறான். என்றே எண்ணுகிறேன்.

சானுமதி : இதில் இனிச் சந்தேகமே இல்லை; இந்த அரச முனிவர் பேராற்றலுடையவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**प्रथमा**—अज्ज कदि दिअहाइ अम्हाणं मित्तावसुणा रट्ठिएण भट्टिणो पाअमूलं पेसिदाणं। इत्थं अ णो पमदवणस्स पालणकम्म समप्पिदं । ता आअन्तुअदाए अस्सुदपुव्वो अम्हेहिं एसो वुत्तन्तो । आर्य, कति दिवसान्यावयोर्मित्रावसुना राष्ट्रीयेण भर्तुः पादमूलं प्रेषितयोः । इत्थं च नौ प्रमदवनस्य पालनकर्म समर्पितम् । तदागन्तुकतया-श्रुतपूर्व आवाभ्यामेष वृत्तान्तः ।

**कञ्चुकी**—भवतु । न पुनरेवं प्रवर्तितव्यम् ।

**उभे**—अज्ज, कोदूहलं णो । जदि इमिणा जणेण सोदव्वं कहेदु भवं किंणिमित्तं भट्टिणा वसन्तुस्सवो पडिसिद्धो । आर्य, कौतूहलं नौ । यद्यनेन जनेन श्रोतव्यं कथयतु भवान् किंनिमित्तं भर्त्रा वसन्तोत्सवः प्रतिषिद्धः ।

**सानुमती**—उस्सवप्पिआ क्खु मणुस्सा । गुरुणा कारणेण होदव्वं । उत्सवप्रियाः खलु मनुष्याः । गुरुणा कारणेन भवितव्यम् ।

**कञ्चुकी**—बहुलीभूतमेतत्किं न कथ्यते । किमत्रभवत्योः कर्ण-पंथ नायातं शकुन्तलाप्रत्यादेशकौलीनम् ।

**उभे**—सुदं रट्ठिअमुहादो जाव अङ्गुलीअअदंसणं । श्रुतं राष्ट्रीय मुखाद्यावदङ्गुलीयकदर्शनम् ।

**कञ्चुकी**—तेन ह्यल्पं कथयितव्यम् । यदैव खलु स्वाङ्गुलीयक-दर्शनादनुस्मृतं देवेन सत्यमूढपूर्वा मे तत्रभवती रहसि शकु-न्तला मोहात्प्रत्यादिष्टेति । तदाप्रभृत्येव पश्चात्तापमुपगतो देवः । तथाहि ।

रम्यं द्वेष्टि यथापुरा प्रकृतिभिर्न प्रत्यहं सेव्यते
शय्याप्रान्तविवर्तनैर्विगमयत्युन्निद्र एव क्षपाः ।
दाक्षिण्येन ददाति वाचमुचितामन्तःपुरेभ्यो यदा
गोत्रेषु स्खलितस्तदा भवति च व्रीडाविलक्षश्चिरम् ॥ ५ ॥

**सानुमती**—पिअं मे । प्रियं मे ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இ.தோழி. | : | ஐயனே! மன்னரின் மைத்துனரான மித்திராவசு, மகாராணிக்குத் தொண்டு செய்ய எங்களை அழைத்து வந்து சில தினங்கள் தாம் ஆகின்றன. அங்கிருந்து இந்தச் சோலையைப் பார்க்குமாறு நாம் அமர்த்தப் பட்டோம். ஆகையாலேதான், இச் செய்தியை முன்னமே அறிந்து கொள்ள முடியவில்லை. |
| கஞ்சுகி | : | போகட்டும், இனிமேல் இவ்வாறு செய்யக்கூடாது |
| இருவரும் | : | ஐயனே; எங்களுக்கு ஆவலாயிருக்கின்றது. சொல்லக் கூடிய விடயமானாற் சொல்லுங்கள். வேனில் விழாவை அரசன் தடுத்தற்குக் காரணமென்ன? |
| சானுமதி | : | மானிடர் விழாவில் பிரியமுடையவர்; இதற்குத் தக்க காரணம் இருக்க வேண்டும். |
| கஞ்சுகி | : | இது எல்லாருமறிந்த விடயமாயிற்று. எனவே நீங்கள் ஏன் அறியக்கூடாது. அரசன் சகுந்தலையை ஏற்றுக் கொள்ளாது அவதூறு செய்தமை உங்கள் காதுக்கு எட்ட வில்லையா? |
| இருவரும் | : | அரசனுடைய அதிகாரி மூலம் கணையாழி கிடைத்தது வரை கேள்விப்பட்டோம் |
| கஞ்சுகி | : | அப்படியானால் இன்னுங் கொஞ்சமே சொல்லவிருக் கிறது. கணையாழியைக் கண்டவுடனே சகுந்தலையைத் தான் களவில் மணந்த செய்தியை அரசன் நினைத்துத் தான் மயக்கத்தால் அவளைத் தள்ளி விட்டதை யெண்ணி, அதுமுதல். கழிவிரக்கங் கொண்டு வருந்து கிறார் |

6.5 இன்பத்தை வெறுக்கிறார். முன்போல் அமைச்சர் சேவையை நாடுவதில்லை. உறக்கமின்றிக் கட்டிலோ ரத்தில் புரண்டவாறு இரவைக்கழிக்கிறார். கண்ணோட் டத்தால் தன் அந்தப்புர மாதரோடு பேசும் பொழுது, அவர்களுடைய பெயர்களை மாற்றி அழைத்து, நாணத் தினால் நீண்டநேரம் மயக்கங் கொண்டவராயிருக்கிறார்.

| | | |
|---|---|---|
| சானுமதி | : | இது மகிழ்ச்சிக்குரியதே. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

कञ्चुकी—अस्मात्प्रभवतो वैमनस्यादुत्सवः प्रत्याख्यातः ।

उभे—जुज्जइ । युज्यते ।

( नेपथ्ये । )

एदु एदु भवं । एतु एतु भवान् ।

कञ्चुकी—( कर्णं दत्त्वा । ) अये, इत एवाभिवर्तते देवः । स्वकर्मानुष्ठीयताम् ।

उभे—तह । ( इति निष्क्रान्ते ) तथा ।

( ततः प्रविशति पश्चात्तापसदृशवेषो राजा विदूषकः प्रतीहारी च । )

कञ्चुकी—( राजानमवलोक्य । ) अहो सर्वास्ववस्थासु रमणीयत्वमाकृतिविशेषाणाम् । एवमुत्सुकोऽपि प्रियदर्शनो देवः । तथाहि ।

प्रत्यादिष्टविशेषमण्डनविधिर्वामप्रकोष्ठार्पितं
बिभ्रत्काञ्चनमेकमेव वलयं श्वासोपरक्ताधरः ।
चिन्ताजागरणप्रताम्रनयनस्तेजोगुणादात्मनः
संस्कारोल्लिखितो महामणिरिव क्षीणोऽपि नालक्ष्यते ॥ ६ ॥

सानुमती—( राजानं दृष्ट्वा । ) ठाणे क्खु पच्चादेसविमाणिदा वि इमस्स किदे सउन्दला किलम्मदि । स्थाने खलु प्रत्यादेशविमानिताप्यस्य कृते शकुन्तला क्लाम्यति

राजा—( ध्यानमन्दं परिक्रम्य )।

प्रथमं सारङ्गाक्ष्या प्रियया प्रतिबोध्यमानमपि सुप्तम् ।
अनुशयदुःखायेदं हतहृदयं संप्रति विबुद्धम् ॥ ७ ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சுகி : மன்னருடைய இந்த மனக்குழப்பத்தினாலே தான் வேனில் விழாத் தடை செய்யப்பட்டிருக்கிறது.

இருவரும் : அது சரி தான் (திரைக்குப் பின்னால்) வாருங்கள் ; வாருங்கள், பெருமானே!

கஞ்சுகி : (காதுகொடுத்து) மன்னர் இவ்வழியே வருகிறார் நீங்கள் உங்கள் வேலையைக் கவனியுங்கள்.

இருவரும் : அப்படியே (போகின்றனர்)

(தன் துயரை அறிவுறுத்தும் வேடத்தோடு அரசனும் விதூடகனும் வாயில் காப்பவரும் தோன்றுகின்றனர்.)

கஞ்சுகி : (அரசனைப் பார்த்து) உயர்ந்தோர் எந்த நிலையிலிருந் தாலும் தோற்றப் பொலிவுடையவராகவே காணப்படுவர். துயரடைந்த நிலையிலும் மன்னவன் கண்கவர் பொலிவோடு தான் விளங்குகிறார்

6.6 விசேட அணிகலன்களை வெறுத்து, இடது மணிக்கட்டில் ஒரே ஒரு தங்க வளையலையணிந்து கொண்டு, பெருமூச்சினால் வாடிய அதரமும், காதலியை நினைந்து விழித்திருந்ததாற் சாலச் சிவந்த கண்ணும் உடைய அரசன், உடல் மெலிந்த போதிலும், தன் இயற்கைத் தோற்றப் பொலிவால் மண்ணிய மாணிக்கம் போல ஒளிவிட்டு விளங்குகிறான்.

சானுமதி : (அரசனைப் பார்த்து) அரசனால் கைவிடப்பட்டு அவமதிக்கப்பட்ட போதும் சகுந்தலை அவனை நினைந்து மனமுருகுவது பொருத்தமானதே.

அரசன் : 6.7 (சிந்தனையிலாழ்ந்து மெல்ல நடக்கிறான்) முன் னெல்லாம், என் மான்விழிக் காதலியால் துயிலுணர்த் தப்பட்ட பொழுதும், விழித்துக் கொள்ளாத என் பாழ்பட்ட நெஞ்சம், அவளைப் பிரிந்த துயரை அனுபவிக்க இப்பொழுதெல்லாம் விழித்துக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

सानुमती—णं ईदिसाणि तवस्सिणीए भाअहेआणि । नन्वीदृशानि तपस्विन्या भागधेयानि ।

विदूषकः—( अपवार्य । ) लङ्घिदो एसो भूओ वि सउन्दलावाहिणा । ण आणे कहं चिकिच्छिदव्वो भविस्सदि त्ति ।

कञ्चुकी—( उपगम्य । ) जयतु जयतु देवः । महाराज, प्रत्यवेक्षिताः प्रमदवनभूमयः । यथाकाममध्यास्तां विनोदस्थानानि महाराजः ।

राजा—वेत्रवति, मद्वचनादमात्यमार्यपिशुनं ब्रूहि । चिरप्रबोधान्न संभावितमस्माभिरद्य धर्मासनमध्यासितुम् । यत्प्रत्यवेक्षितं पौरकार्यमार्येण तत्पत्रमारोप्य दीयतामिति ।

प्रतीहारी—जं देवो आणवेदि । ( इति निष्क्रान्ता । ) यद्देव आज्ञापयति ।

राजा—वातायन, त्वमपि स्वं नियोगमशून्यं कुरु ।

कञ्चुकी—यदाज्ञापयति देवः । ( इति निष्क्रान्तः । )

विदूषकः—किदं भवदा णिम्मच्छिअं । संपदं सिसिरातवच्छेअरमणीए इमस्सिं पमदवणुद्देसे अत्ताणं रमइस्ससि । कृतं भवता निर्मक्षिकम् । सांप्रतं शिशिरातपच्छेदरमणीयेऽस्मिन्प्रमदवनोद्देश आत्मानं रमयिष्यसि ।

राजा—वयस्य, रन्ध्रोपनिपतिनोऽनर्था इति यदुच्यते तदव्यभिचारि वचः । कुतः ।

मुनिसुताप्रणयस्मृतिरोधिना
मम च मुक्तमिदं तमसा मनः ।
मनसिजेन सखे प्रहरिष्यता
धनुषि चूतशरश्च निवेशितः ॥ ८ ॥

विदूषकः—चिट्ठ दाव । इमिणा दण्डकट्ठेण कन्दप्पवाणं णासइस्सामि । ( इति दण्डकाष्ठमुद्यम्य चूताङ्कुरं पातयितुमिच्छति । ) तिष्ठ तावत् । अनेन दण्डकाष्ठेन कन्दर्पबाणं नाशयिष्यामि ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சானுமதி : அந்தோ, அப்பேதைப் பெண்ணின் பாக்கியம் அவ்வளவு தான்.

விதூஷக : (ஒரு புறமாக) மறுபடியும் அந்தச் சகுந்தலை வியாதி இவரைப் பிடித்துக் கொண்டது. இதற்கு என்ன பரிகாரமென்பது தெரியவில்லையே.

கஞ்சுகி : கிட்டச் சென்று வெற்றி!வெற்றி!வேந்தே, மகாராசனே! பூங்கா வனத்தைப் பார்வையிட்டு விட்டோம். தங்களுக்கு விருப்பமான ஆடல் இடத்தில் அமருங்கள்.

அரசன் : வேத்திரவதி! இரவு நெடுநேரம் விழித்திருந்ததால் இன்று தருமாசனத்துக்கு வரமுடியவில்லை. தாங்கள் குடிமக் களின் கருமங்களைக் கவனித் திருந்தால் அவற்றைக் கைப்பட எழுதி எனக்கு அனுப்புக" என்று நான் சொன்னதாக அமைச்சர் பிசுனனிடம் கூறு.

வா.கா. : தேவரீர் கட்டளைப்படியே. (செல்கிறான்)

அரசன் : வாதாயனா; நீயும் உன் கடமையைப் பார்.

கஞ்சுகி : தேவரீர் கட்டளைப்படியே.

விதூஷக : ஒரு ஈ கூட இல்லாமே செய்து விட்டீங்க இனி தட்ப வெப்ப மில்லாத இந்த அழகிய பூங்சோலையிலிருந்து இன்ப மாய்ப் பொழுதைக் கழிக்கலாம்.

அரசன் : நண்பா! எங்கே நீக்கல் இருக்கிறதென்று பார்த்து அங்கே ஆபத்து வந்து புகுந்துவிடுகிறதென்பது உண்மையே ஏனெனில்,

6.8 முனி மகள் மீது எனக்குள்ள காதல் நினைவை மறைத்த இருள் என் மனத்திலிருந்து அகன்றதும், காமன் தனது கணையை வைத்து என்னைத் தாக்க முற்பட்டு விட்டான்.

விதூஷக : கொஞ்சம் நில்லு. இந்தத் தடியினால் அந்த மன்மத னுடைய வில்லை ஒடிச்சுப்பிடுகிறேன். (கையிலுள்ள தடியை உயர்த்தி மாம்பூத்துணரை விழுத்த விரும் புகிறான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—( सस्मितम् । ) भवतु । दृष्टं ब्रह्मवर्चसम् । सखे, क्वोपविष्टः प्रियायाः किंचिदनुकारिणीषु लतासु दृष्टिं विलोभयामि ।

विदूषकः—णं आसण्णपरिआरिआ चदुरिआ भवदा संदिट्ठा । माहवीमण्डवे इमं वेलं अदिवाहिस्सं । तहिं मे चित्तफलअगदं सहत्थलिहिदं तत्तहोदीए सउन्दलाए पडिकिदिं आणेहित्ति । नन्वासन्नपरिचारिका चतुरिका भवता संदिष्टा । माधवीमण्डप इमां वेलामतिवाहयिष्ये । तत्र मे चित्रफलकगतां स्वहस्तलिखितां तत्रभवत्याः शाकुन्तलयाः प्रतिकृतिमानयेति ।

राजा—ईदृशं हृदयविनोदस्थानम् । तत्तमेव मार्गमादेशय ।

विदूषकः—इदो इदो भवं । इत इतो भवान् ।

( उभौ परिक्रामतः । सानुमत्यनुगच्छति । )

विदूषकः—एसो मणिसिलापट्टअसणाहो माहवीमण्डवो उवहाररमणिज्जदाए णिस्संसअं साअदेण विअ णो पडिच्छदि । ता पविसिअ णिसीददु भवं । एष मणिशिलापट्टकसनाथो माधवीमण्डप उपहाररमणीयतया निःसंशयं स्वागतेनेव नौ प्रतीच्छति । तत्प्रविश्य निषीदतु भवान् ।

( उभौ प्रवेशं कृत्वोपविष्टौ । )

सानुमती—लदासंस्सिदा देक्खिस्सं दाव सहीए पडिकिदिं । तदो से भत्तुणो बहुमुहं अणुराअं णिवेदइस्सं । ( इति तथा कृत्वा स्थिता । ) लतासंश्रिता द्रक्ष्यामि तावत्सख्याः प्रतिकृतिम् । ततोऽस्या भर्तुर्बहुमुखमनुरागं निवेदयिष्यामि ।

राजा—सखे, सर्वमिदानीं स्मरामि शाकुन्तलायाः प्रथमवृत्तान्तम् । कथितवानस्मि भवते च । स भवान्प्रत्यादेशवेलायां मत्समीपगतो नासीत् । पूर्वमपि न त्वया कदाचित्संकीर्तितं तत्रभवत्या नाम । कच्चिदहमिव विस्मृतवानसि त्वम् ।

विदूषकः—ण विसुमरामि । किंतु सव्वं कहिअ अवसाणे उण तुए परिहासविअप्पओ एसो ण भूदत्थोत्ति आचक्खिदं । मए वि मिप्पिण्डबुद्धिणा तह- एव्व गहीदं । अहवा भविदव्वदा



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : (புன் முறுவலோடு) போகட்டும், நண்பா, உன்பிராமணப் பிரதாபத்தை அறிந்து கொண்டேன். என் காதலியைச் சற்றே ஒத்திருக்கும் கொடிகளைப் பார்த்தாவது மகிழ் வதற்கு, எந்த இடம் பொருத்தமுடையது.

விதூஷக : ஏன்! அணுக்கப் பரிசாரிகையான சதுரிகையிடம் தாங்கள் கட்டளையிடவில்லையா? இச்சமயம் நான் மாதவி மண்டபத்தில் காலங்கழிக்க விரும்புகின்றேன். என் கையாற்றீட்டிய சகுந்தலை யின் ஓவியம் அமைந்த சித்திரப் பலகையைக் கொண்டுவா" என்று.

அரசன் : உள்ளத்தை மகிழச்செய்வதற்கு அதுவே ஏற்ற இடம். அங்கே செல்வதற்கு வழிகாட்டு.

விதூஷக : இவ்வழி, இவ்வழி தேவரீர். (இருவருஞ் செல்லச் சானுமதி பின் தொடர்கிறாள்) இதோ மாணிக்கச் சிலை யோடு கூடிய மாதவி மண்டபம்! தனது மலர்த்து ணர்களை நீட்டி எம்மை நிச்சயமாக வரவேற்கிறது. அங்கே சென்று தங்குங்கள் பெருமானே! (இருவரும் புகுந்து உட்காருகின்றனர்)

சானுமதி : கொடிக்குப் பின் மறைந்து நின்று என் தோழியின் படத்தைப் பார்ப்பேன். பின்னர் அவள் கணவனிடத்துக் கொண்டுள்ள பல முகப்பட்ட அன்பைத் தெரிவிப்பேன் (அவ்வாறாறே செய்தல்)

அரசன் : நண்பா! சகுந்தலையின் பழைய செய்தியெல்லாம் இப்பொழுது நினைவுக்கு வந்துவிட்டது. தங்களுக்கு அவற்றைக் கூறிவிட்டேன். அவளை மறுத்துத் தள்ளிய நேரத்தில் நீ என்னோடிருக்கவில்லை. அந்தப் பெண் மணியின் பெயரை நீ கூட ஒரு போதும் எனக்கு ஞாபக மூட்டிவில்லை. என்னைப் போலவே நீயும் மறந்து விட்டாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

क्खु बलवदी । न विस्मरामि । किंतु सर्वं कथयित्वावसाने पुनस्त्वया परिहासविजल्प एष न भूतार्थ इत्याख्यातम् । मयापि मृत्पिण्डबुद्धिना तथैव गृहीतम् । अथवा भवितव्यता खलु बलवती ।

सानुमती—एव्वं णेदं । एवमेवैतत् ।

राजा—( ध्यात्वा । ) सखे, त्रायस्व माम् ।

विदूषकः—भो, किं एदं । अणुववण्णं क्खु ईदिसं तुइ । कदा वि सप्पुरिसा सोअपत्तप्पाणो ण होन्ति । णं पवादे वि णिक्कम्पा गिरीओ । भोः, किमेतत् । अनुपपन्नं खल्वीदृशं त्वयि । कदापि सत्पुरुषा शोकपात्रात्मानो न भवन्ति । ननु प्रवातेऽपि निष्कम्पा गिरयः ।

राजा—वयस्य, निराकरणविक्लवायाः प्रियायाः समवस्थामनुस्मृत्य बलवदशरणोऽस्मि । सा हि

इतः प्रत्यादेशात्स्वजनमनुगन्तुं व्यवसिता
मुहुस्तिष्ठेत्युच्चैर्वदति गुरुशिष्ये गुरुसमे ।
पुनर्दृष्टिं बाष्पप्रसरकलुषामर्पितवती
मयि क्रूरे यत्तत्सविषमिव शल्यं दहति माम् ॥ ९ ॥

सानुमती—अम्महे । ईदिसी सकज्जपरदा । इमस्स संदावेण अहं रमामि । अहो । ईदृशी स्वकार्यपरता । अस्य संतापेनाहं रमे ।

विदूषकः—भो, अत्थि मे तक्को । केण वि तत्तहोदी आआसचारिणा णीदेत्ति । भोः, अस्ति मे तर्कः । केनापि तत्रभवत्याकाशचारिणा नीतेति ।

राजा—कः पतिदेवतामन्यः परामर्ष्टुमुत्सहेत । मेनका किल सख्यास्ते जन्मप्रतिष्ठेति श्रुतवानस्मि । तत्सहचारिणीभिः सखी ते हृतेति मे हृदयमाशङ्कते ।

सानुमती—संमोहो क्खु विम्हअणिज्जो ण पडिबोहो । संमोहः खलु विस्मयनीयो न प्रतिबोधः ।

विदूषकः—जइ एव्वं अत्थि क्खु समाअमो कालेण तत्तहोदीए । यद्येवमस्ति खलु समागमः कालेन तत्रभवत्या ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதூஷக : நான் மறக்கவில்லை; எல்லாஞ் சொல்லி முடிந்த பின்னர், "இது வேடிக்கைப் பேச்சு; உண்மையென்று நினையாதே" எனக் கூறிவிட்டீர்கள். இந்த மண்ணாங் கட்டி மூளையும் அது உண்மையென்று நம்பி விட்டது. எல்லாம் விதியின் விளையாட்டு.

சானுமதி : அப்படியா செய்தி

அரசன் : (சிந்தனையிலாழ்ந்து நண்பா! என்னைக் காப்பாற்று

விதூஷக : ஓ! இதென்ன? இப்படிப் போய்விட்டீர்களா? நல்லவர்கள் ஒருபோதும் துயரத்துக்கிடங்கொடுக்கமாட்டார்களே. பெரியபுயல் வீசினாலும் மலைகள் அசைவதில்லையே

அரசன் : தோழா, நான் அவளைக் கைவிட்டபோது அவளடைந்த துயரத்தை நினைக்கும் போதெல்லாம், நான் கதியற்றவனாகக் கலங்குகிறேன். அவளோ,

6.9 நான் மறுத்துக் கூறியதும் தன் சுற்றத்தவரைப் பின் தொடர்ந்து செல்ல முயன்றபோது முனிவர்க்குச் சமான மான அவர் சீடன் "நில்" என அடிக்கடி உரத்துக் கூறி யதும், நீர்மல்கிய கண்ணால் கொடியவனாகிய என்னை ஒரு பார்வை பார்த்தாள். அப்பார்வை நஞ்சு தோய்ந்த ஈட்டியைப் போல் என்னை எரிக்கிறது.

சானுமதி : அந்தோ! தன் காரியத்தில் ஒருவருக்கிருக்கும் சிரத்தை இவ்வளவா? இவருடைய துயரைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

விதூஷக : ஓ! வானத்தில் சஞ்சரிக்கும் ஒருவரே அந்தப் பெண் மணியை எடுத்துச் சென்றிருக்க வேண்டுமென எண் ணுகிறேன்.

அரசன் : கணவனே தெய்மென்று நினைப்பவளை வேறு யார் தொட முடியும். உன் தோழி, மேனகையிடத்திலே பிறந்த தாக நான் அறிகிறேன். அவளுடைய தோழியர் தான் அவளை எடுத்துச் சென்றிருக்க வேண்டுமென்று ஐயப்படுகிறேன்.

சானுமதி : இவர் மோகம் நீங்கிவிட்டது. நீங்கினது ஆச்சரியமன்று. இவருடைய மோகமே ஆச்சரியப்படத்தக்கது.

விதூஷக : விஷயம் அப்படியானால் காலப்போக்கில் அவளை அடைந்துவிடலாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—कथमिव ।

विदूषकः—ण क्खु मादापिदरा भत्तुविओअदुक्खिदं दुहिदरं देक्खिदुं पारेन्ति । न खलु मातापितरौ भर्तृवियोगदुःखितां दुहितरं द्रष्टुं पारयतः ।

राजा—वयस्य,

स्वप्नो नु माया नु मतिभ्रमो नु
क्लिष्टं नु तावत्फलमेव पुण्यम् ।
असंनिवृत्त्यै तदतीतमव
मनोरथा नाम तटप्रपाताः ॥ १० ॥

विदूषकः—मा एव्वं । णं अङ्गुलीअअं एव्व णिदंसणं अवस्सं-भावी अचिन्तणिज्जो समाअमो होदि त्ति । मैवम् । नन्वङ्गुलीयकमेव निदर्शनमवश्यंभाव्यचिन्तनीयः समागमो भवतीति ।

राजा—( अङ्गुलीयकं विलोक्य । ) अये, इदं तावदसुलभ-स्थानभ्रंशि शोचनीयम् ।

तव सुचरितमङ्गुलीय नूनं
प्रतनु ममेव विभाव्यते फलेन ।
अरुणनखमनोहरासु तस्या-
श्च्युतमसि लब्धपदं यदङ्गुलीषु ॥ ११ ॥

सानुमती—जइ अण्णहत्थगदं भवे सच्चं एव्व सोअणिज्जं भवे । यद्यन्यहस्तगतं भवेत्सत्यमेव शोचनीयं भवेत् ।

विदूषकः—भो, इअं णाममुद्दा केण उग्घदेण तत्तहोदीए हत्थ-संसग्गं पाविदा । भोः, इयं नाममुद्रा केनोद्धातेन तत्रभवत्या हस्तसंसर्गं प्रापिता ।

सानुमती—मम वि कोदूहलेण आआरिदो एसो । ममापि कौतू-हलेनाकारित एषः ।

राजा—श्रूयताम् । स्वनगराय प्रस्थितं मां प्रिया सबाष्पमाह । कियच्चिरेणार्यपुत्रः प्रतिपत्तिं दास्यतीति ।

विदूषकः—तदो तदो । ततस्ततः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : எப்படி?

விதூஷக : மகள் பிரிந்த துயரடைவதைத் தாய் தந்தையார் தாங்கிக் கொள்ளமாட்டார்கள்.

அரசன் : தோழா!

6.10 கனவோ, மாயையோ, சித்தப்பிரமையோ, செய்த புண்ணியமெல்லாம் இத்துணைப்பலனைக் கொடுத்துவிட்டு மடிந்த போயிற்றோ? அவள் போய்விட்டாள்; திரும்பி வரமாட்டாள். எனது இந்த ஆசைகள் எல்லாம் மலையிலிருந்து வீழ்ந்தவை போலத்தான்.

விதூஷகன் : அப்படியன்று ஏன், இந்தக் கணையாழி கிடைக்க வில்லையா? அதைப்போலத்தான் வந்து சேர வேண்டியது காத்திராப்பிரகாரம் வந்து சேர்ந்து விடும்.

அரசன் : (கணையாழியைப் பார்த:து) இலேசாகக் கிடைத்தற்கரிய இடத்திலிருந்து தவறிய இந்தக் கணையாழியும் இரங்கத் தக்கதே.

6.11 ஓ கணையாழியே! நீயும் என்னைப் போலவே சொற்ப புண்ணியமே செய்திருக்கிறாய் என்பது, நீயடைந்த பலனால் அறியக்கூடியதாயிருக்கிறது. சிவந்த நகத்தையுடைய விரலில் தங்க ஓரிடம் பெற்றபின் விழுந்து விட்டாயே!

சானுமதி : வேறொருவர் கையில் சிக்கியிருந்தால் அது உண்மையாகவே வருத்தத்துக்குரியதாகும்.

விதூஷகன் : ஓ! இந்தப் பெயர் பொறிந்த கணையாழி என்ன நோக்கத்துடன் அந்நங்கை நல்லாளுக்குக் கொடுக்கப் பட்டதோ?

சானுமதி : என்னைப் போலவே அதைத் தெரிந்து கொள்ள இவனுக்கும் ஆவலுண்டு போலும்!

அரசன் : கேள், நான் நகருக்குப் புறப்படும் பொழுது நீர் மல்கிய கண்களையுடையவளாய், என் காதலி, தேவரீர் எவ்வளவு காலத்தக்குப் பின் எனக்குச் செய்தியனுப் புவீர்" என்று கேட்டாள்

விதூஷகன் : ஆ! அப்புறம், அப்புறம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—पश्चादिमां मुद्रां तदङ्गुलौ निवेशयता मया प्रत्यभिहिता।

एकैकमत्र दिवसे दिवसे मदीयं
नामाक्षरं गणय गच्छसि यावदन्तम्।
तावत्प्रिये मदवरोधगृहप्रवेशं
नेता जनस्तव समीपमुपैष्यतीति ॥ १२ ॥

तच्च दारुणात्मना मया मोहान्नानुष्ठितम्।

सानुमती—रमणीओ क्खु अवही विहिणा विसंवादिदो। रमणीयः खल्ववधिर्विधिना विसंवादितः।

विदूषकः—कहं धीवलकप्पिअस्स लोहिअमच्छस्स उदलब्भन्तले आसि। कथं धीवरकल्पितस्य रोहितमत्स्यस्योदराभ्यन्तर आसीत्।

राजा—शचीतीर्थे वन्दमानायाः सख्यास्ते हस्ताद्गङ्गास्रोतसि परिभ्रष्टम्।

विदूषकः—जुज्जइ। युज्यते।

सानुमती—अदो एव्व तवस्सिणीए सउन्दलाए अधम्मभीरुणो इमस्स राएसिणो परिणए संदेहो आसि। अहवा ईदिसो अणुराओ अहिण्णाणं अवेक्खदि। कहं विअ एदं। अत एव तपस्विन्याः शकुतलाया अधर्मभीरोरस्य राजर्षेः परिणये संदेह आसीत्। अथवेदृशोऽनुरागोऽभिज्ञानमपेक्षते। कथमिवैतत्।

राजा—उपालप्स्ये तावदिदमङ्गुलीयकम्।

विदूषकः—( आत्मगतम्। ) गहीदो णेण पन्था उम्मत्तआणं। गृहीतोऽनेन पन्था उन्मत्तानाम्।

राजा—

कथं नु तं बन्धुरकोमलाङ्गुलिं
करं विहायासि निमग्नमम्भसि।

अथवा।

अचेतनं नाम गुणं न लक्षये-
न्मयैव कस्मादवधीरिता प्रिया ॥ १३ ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : பின்னர் இந்தக் கணையாழியை அவள் விரலிற் போட்டு நான் சொன்னேன்,

6.12 "இந்தக் கணையாழியிலுள்ள என் பெயரின் எழுத்தை நாளுக்கொரு எழுத்தாக எண்ணு; முடியும் போது என் அன்பே! என் அந்தப் புரத்துக்கு உன்னை இட்டுச் செல்லும் தலைவன் உன்னண்டை வந்து சேர்வான்!

கொடிய சிந்தையுள்ள நான் மயக்கத்தின் பயனாக இந்த வாக்குறுதியை நிறைவேற்றாத விட்டேன்.

சானுமதி : அழகானதொரு நியமனம்; விதவசத்தால் நிறைவேற்றப் படாமற் போயிற்று.

விதூஷகன் : செம்படவன் வெட்டிய ரோகிதமீன் வயிற்றில் இது எப்படி வந்தது?

அரசன் : சசிதீர்த்தத்தில் வழிபாடு செய்யும் போது அது உன் தோழி கையிலிருந்து கங்கையாற்றில் விழுந்து விட்டது.

விதூஷகன் : அப்படித்தானிருக்க வேண்டும்.

சானுமதி : பழிக்ககஞ்சிய மன்னன் தனது களவு மணத்தைக்கூடச் சந்தேகித்தது இதனாலேதான் போலும். இத்தகைய காதலுக்கு அறிகுறியும் வேண்டியதில்லை. எதற்காக?

அரசன் : நான் இனி இக்கணையாழியைக் குறை கூறுவேன்.

விதூஷகன் : (தனக்குள்) மறுபடியும் பித்துத் தலைக்கேறிவிட்டது!

அரசன் : அழகிய மெல்விரற் கரங்களைவிட்டு ஆற்றில்

6.13 நீ எங்ஙனம் விழுந்த அமிழ்ந்துவாய். அல்லது, உயிரில் லாத நீ, அழகை எவ்வாறு உணர்வாய்? நான் எவ்வாறு என் காதலியை அவமதிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**विदूषकः**—( आत्मगतम् । ) कहं बुभुक्खाए खादिदव्वो म्हि कथं बुभुक्षया खादितव्योऽस्मि ।

**राजा**—अकारणपरित्यक्ते अनुशयतप्तहृदयस्तावदनुकम्प्यतामयं जनः पुनर्दर्शनेन ।

( प्रविश्यापटीक्षेपेण चित्रफलकहस्ता । )

**चतुरिका**—इअं चित्तगदा भट्टिणी । ( इति चित्रफलकं दर्शयति । ) इयं चित्रगता भट्टिनी ।

**विदूषकः**—साहु वअस्स, महुरावत्थाणदंसणिज्जो भावाणुप्पवेसो । क्खलदि विअ मे दिट्ठी णिण्णुण्णअप्पदेसेसु । साधु वयस्य, मधुरावस्थानदर्शनीयो भावानुप्रवेशः । स्खलतीव मे दृष्टिर्निम्नोन्नतप्रदेशेषु ।

**सानुमती**—अम्मो एसा राएसिणो णिउणदा । जाणे सही अग्गदो मे वट्टदित्ति । अहो एषा राजर्षेर्निपुणता । जाने सख्यग्रतो मे वर्तत इति ।

**राजा**—

यद्यत्साधु न चित्रे स्यात्क्रियते तत्तदन्यथा ।
तथापि तस्या लावण्यं रेखया किंचिदन्वितम् ॥ १४ ॥

**सानुमती**—सरिसं एदं पच्छादावगुरुणो सिणेहस्स अणवलेवस्स अ । सदृशमेतत्पश्चात्तापगुरोः स्नेहस्यानवलेपस्य च ।

**विदूषकः**—भो, दाणिं तिण्णि तत्थहोदीओ दीसन्ति । सव्वाओ अ दंसणीआओ । कदमा इत्थ तत्तहोदी सउन्दला । भोः, इदानीं तिस्रस्तत्रभवत्यो दृश्यन्ते । सर्वाश्च दर्शनीयाः । कतमात्र तत्रभवती शकुन्तला ।

**सानुमती**—अणभिण्णो क्खु ईदिसस्स रूवस्स मोहदिट्ठी अअं जणो । अनभिज्ञः खल्वीदृशस्य रूपस्य मोघदृष्टिरयं जनः ।

**राजा**—त्वं तावत्कतमां तर्कयसि ।

**विदूषकः**—तक्केमि जा एसा सिढिलकेसबन्धणुव्वन्तकुसुमेण केसन्तेण उब्भिण्णसेअबिन्दुणा वअणेण विसेसदो ओसरीआहिं बाहाहिं अवसेअसिणिद्धतरुणपल्लवस्स चूअपाअवस्स पासे इसिपरिस्सन्ता विअ आलिहिदा सा सउन्दला । इदराओ सहीओत्ति ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதூஷகன் : (தனக்குள்) நான் எவ்வாறு பசியினால் விழுங்கப் படுவேன்.:.

அரசன் : காரணமின்றிக்கைவிட்ட எனக்கு, துயரினால் வாடும் இந்த மனிதனுக்கு, என் அன்பே, கருணை செய்து ஒரு முறை காட்சி தரமாட்டாயா?

(திரையை உதறிக்கொண்டு பிரவேசித்து)

சதுரிகை : இதோ சித்திரத்தில் தீட்டிய தேவி. (சித்திரப் பலகையைக் காட்டுதல்)

விதூஷகன் : பலே! நண்பா!! இந்த அழகிய நிலையில் பாவங்கள் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. விழுந்து எழும்பும் பாகங்களைப் பார்க்கும் போது என்கண்கள் ததத்தளிக் கின்றன.

சானுமதி : இந்த அரச முனிவரின் திறமை என்ன? என் தோழி என் கண்முன் நிற்பது போலத்தோன்றுகிறது.

அரசன் : இச்சித்திரித்தில் நிறைவு பெறாத்தை மறுபடியும் அமைத்துக் கொள்ளலாம். அப்படி செய்தாலும் அவளுடைய அழகு ஒரளவுக்கே சித்திரத்தில் தோன்றும்.

சானுமதி : இந்த அன்பு ஏற்புடையதே. இது கழிவிரக்கத்தாலும், பிணியினாலும் உண்டானது.

விதூஷகன் : ஓ! இங்கே மூன்று பெண்கள் காணப்படுகின்றனர். எல்லோரும் அழகிகள், இதில் சகுந்தலை யார்?

சானுமதி : இந்த அழகைக் காணமுடியாதவனுடைய கண்களினால் என்ன பயன்?

அரசன் : சகுந்தலையாரென்று ஊகிக்கிறாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

तर्कयामि यैषा शिथिलकेशबन्धनोद्वान्तकुसुमेन केशान्तेनोद्भिन्नस्वेदबिन्दुना वद
विशेषतोऽपसृताभ्यां बाहुभ्यामवसेकस्निग्धतरुणपल्लवस्य चूतपादपस्य प
ईषत्परिश्रान्तेवालिखिता सा शकुन्तला । इतरे सख्याविति ।

**राजा**—निपुणो भवान् । अस्त्यत्र मे भावचिह्नम् ।

स्विन्नाङ्गुलिविनिवेशो रेखाप्रान्तेषु दृश्यते मलिनः ।
अश्रु च कपोलपतितं दृश्यमिदं वर्तिकोच्छ्वासात् ॥ १५

चतुरिके, अर्धलिखितमेतद्विनोदस्थानम् । गच्छ । वर्ति
तावदानय ।

**चतुरिका**—अज्ज माठव्व, अवलम्ब चित्तफलअं जाव आ
च्छामि । आर्य माठव्य, अवलम्बस्व चित्रफलकं यावदागच्छामि ।

**राजा**—अहमेवैतदवलम्बे । ( इति यथोक्तं करोति । )

( निष्क्रान्ता चेटी । )

**राजा**—अहं हि

साक्षात्प्रियामुपगतामपहाय पूर्वं
चित्रार्पितां पुनरिमां बहु मन्यमानः ।
स्रोतोवहां पथि निकामजलामतीत्य
जातः सखे प्रणयवान्मृगतृष्णिकायाम् ॥ १६ ॥

**विदूषकः**—( आत्मगतम् । ) एसो अत्तभवं णदिं अदिक्कमि
मिअतिण्हिआं संकन्तो । ( प्रकाशम् । ) भो, अवरं किं एत्थ लि
दव्वं । एषोत्रभवान्नदीमतिक्रम्य मृगतृष्णिकां संक्रान्तः । भोः, अपरं कि
लिखितव्यम् ।

**सानुमती**—जो जो पदेसो सहीए मे अहिरूवो तं तं आ
लिहिदुकामो भवे । यो यः प्रदेशः सख्या मेऽभिरूपस्तं तमालिखितुक
भवेत् ।

**राजा**—श्रूयताम् ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதூஷகன் : உற்று நோக்கி) நான் நினைக்கிறேன். சற்றே களைப் படைந்தவளாய், நீர்சிந்திய, இளந்தளிர்களையடைய மாங்கன்றின் பக்கத்தே, நூதனமான முறையிலே தொங்கிய கையுடன், வெயர்வை அரும்பும் முகமும், அவிழந்து நெகிழ்ந்த கூற்தலிலிருந்து விழும் மலர்களை யுடைய அளகபாரத்தையுமுடையவளாய் நிற்பவளே கசுந்தலை, மற்றவர்கள் அவளது தோழிகள்.

அரசன் : நீ கெட்டிக்காரன். என் அன்புக்கு அறிகுறி இங்கே உண்டு. சித்திரத்தின் ஓரங்களில், வியர்வை மலிந்த விரல்களின் அழுக்குப் பதிந்த குறி காணப்படுகிறது. இங்கே வருணம் ஊறியிருப்பதால் என் கபோலத்தி லிருந்து வடிந்த கண்ணீர் விழுந்திரப்பதைக் காணலாம். சதுரிகை என் காலப்போக்கிற்குத் துணையாயுள்ள இந்தச் சித்திரம் பாதிதான்முடிந்ததுள்ளது. ஆதலால் போய் ஒரு தூரிகையெடுத்துவா.

சதுரிகை : நான் வரும்வரை இந்தச் சித்திரப் பலகையைப் பிடித்துக் கொள்ள ஐயா, மாடவியா,

அரசன் : நானே பித்துக் கொள்கிறேன். (என்று கூறியவாறு செய்கிறான்)

தோழி போகிறாள்)

அரசன் : கண்முன் வந்த என் காதலியைக் கைவிட்டு சித்திரத்தில் எழுதிய அவளுக்கு மீட்டும் மீட்டும் அன்பு காட்டி நிற்கும் நான் வழியில் நீர் நிறைந்த

அற்றைக் கடந்து சென்று கானல் நீருக்கு ஆசைப் பட்டவன் போலானேன்.

விதூஷகன் : (தனக்குள்) இதோ நிற்கிறார் ஆற்றைக் கடந்து வந்து கானல் நீருக்கு ஆசைப்பட்டவர். (உரக்க) ஓ; வேற என்ன இங்கே கீற வேண்டியிருக்கிறது.

சானுமதி : காதலி விரும்பிய இடங்களெல்லாவற்றையும் தீட்டு வதற்கு ஒரு வேளை அவர் விரும்பலாம்.

அரசன் : கேள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

कार्या सैकतलीनहंसमिथुना स्रोतोवहा मालिनी
पादास्तामभितो निषण्णहरिणा गौरीगुरोः पावनाः ।
शाखालम्बितवल्कलस्य च तरोर्निर्मातुमिच्छाम्यधः
शृङ्गे कृष्णमृगस्य वामनयनं कण्डूयमानां मृगीम् ॥ १७ ॥

विदूषकः—( आत्मगतम् । ) जह अहं देक्खामि पूरिदव्वं णेण चित्तफलअं लम्बकुच्चाणं तावसाणं कदम्बेहिं । यथाहं पश्यामि पूरितव्यमनेन चित्रफलकं लम्बकूर्चानां तापसानां कदम्बैः ।

राजा—वयस्य, अन्यच्च शकुन्तलायाः प्रसाधनमभिप्रेतं विस्मृतमस्माभिः ।

विदूषकः—किं विअ । किमिव ।

सानुमती—वणवासस्स सो उमारस्स अ जं सरिसं भविस्सदि । वनवासस्य सौकुमार्यस्य च यत्सदृशं भविष्यति ।

राजा—

कृतं न कर्णार्पितबन्धनं सखे
शिरीषमागण्डविलम्बिकेसरम् ।
न वा शरच्चन्द्रमरीचिकोमलं
मृणालसूत्रं रचितं स्तनान्तरे ॥ १८ ॥

विदूषकः—भो, किं णु तत्तहोदी रत्तकुवलअपल्लवसोहिणा अग्गहत्थेण मुहं आवारिअ चइदचइदा विअ ठिआ । ( सावधानं निरूप्य दृष्ट्वा । ) आ, एसो दासीए पुत्तो कुसुमरसपाडच्चरो तत्तहोदीए वअणं अहिलङ्घदि महुअरो । भोः, किं नु तत्रभवती रक्तकुवलयपल्लवशोभिनाग्रहस्तेन मुखमावार्य चकितचकितेव स्थिता । आः, एष दास्याः पुत्रः कुसुमरसपटच्चरस्तत्रभवत्या वदनमभिलङ्घति मधुकरः ।

राजा— ननु वार्यतामेष धृष्टः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலினி நதியின் மணற்கரையில் அன்னப் பறவை யிரண்டு கீறுவேன். அந்நிதியின் இருமருங்கும், இமயத் தினடிவாரத்திற் காணப்படும் திவ்வியமான குன்று களில், மான்கள் உறையும் தோற்றம். வற்கலை உடை கள் தொங்கும் கிளையுடைய மரத்தினடியில் ஒரு மான், கறுத்த கலைமானின் கொம்பிலே தனது இடக்கண்ணை உரோஞ்சும் பாவனையில் தீட்டுவேன்.

விதூஷகன் : (தனக்குள்) பின்னர் எஞ்சிய பலகையில் நீண்ட தாடி யுள்ள துறவிகள் கூட்டத்தை நிரப்பி விடவேண்டியது தான்.

அரசன் : சகுந்தலையின் மற்றொரு அணிகலனைக் கீற நினைத் தேன்; மறந்து விட்டேன்.

விதூஷகன் : என்ன எது?

சானுமதி : அவளுடைய வனவாசத்துக்கும் இளமைக்கும் பொருத்த மானது.

அரசன் : காதிற் பதித்த தண்டு, கபோலம் வரை பரந்த புறவிதழு முள்ள அனிச்ச மலரைக்கீறாது விட்டுவிட்டேன், நண்பா; அன்றியும், முதுவேனிற் காலத்து மதியின் கிரணம் போ, மெல்லிய தாமரை
நாணினாற் செய்த மங்கல நூலைத் தனங்களிடையே கீற மறந்து விட்டேன்.

விதூஷகன் : ஓ! செந்தாமரை மலர் இதழ் போன்ற உள்ளங்கை யினால் முகத்தை மூடிக் கொண்டு, இப்பெண் பயந்து பயந்து நிற்பது எதற்கோ? ஆ! இதோ இந்த வண்டு; பூக்களிலுள்ள தேனை யெல்லாம் களவெடுக்கும் திருட்டுப்பயல், இப்பெண்மணியின் முகத்தை வட்ட மிடுகிறது.

அரசன் : இந்த முட்டாளை நீயே கலைத்துவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

विदूषकः—भवं एव्व अविणीदाणं सासिदा इमस्स वारणे पहविस्सदि। भवानेवाविनीतानां शासितास्य वारणे प्रभविष्यति।

राजा—युज्यते। अयि भोः, कुसुमलताप्रियातिथे, किमत्र परिपतनखेदमनुभवसि।

एषा कुसुमनिषण्णा तृषितापि सती भवन्तमनुरक्ता।
प्रतिपालयति मधुकरी न खलु मधु विना त्वया पिबति॥ १९॥

सानुमती—अज्ज अभिजादं क्खु एसो वारिदो। अद्याभिजातं खल्वेष वारितः।

विदूषकः—पडिसिद्धा वि वामा एसा जादी। प्रतिषिद्धापि वामैषा जातिः।

राजा—एवं भोः, न मे शासने तिष्ठसि। श्रूयतां तर्हि संप्रति।

अक्लिष्टबालतरुपल्लवलोभनीयं
पीतं मया सदयमेव रतोत्सवेषु।
बिम्बाधरं स्पृशसि चेद्भ्रमरप्रियाया-
स्त्वां कारयामि कमलोदरबन्धनस्थम्॥ २०॥

विदूषकः—एव्वं तिक्खदण्डस्स किं ण भाइस्सदि। (प्रहस्य। आत्मगतम्।) एदो दाव उम्मत्तो। अहं पि एदस्स सङ्गेण ईदिसवण्णो विअ संवुत्तो। (प्रकाशम्।) भो, चित्तं क्खु एदं। एवं तीक्ष्णदण्डस्य किं न भेष्यति। एष तावदुन्मत्तः। अहमप्येतस्य सङ्गेनेदृशवर्ण इव संवृत्तः। भोः, चित्रं खल्वेतत्।

राजा—कथं चित्रम्।

सानुमती—अहं पि दाणिं अणवगदत्था, किं उण जहालिहिदाणुभावी एसो। अहमपीदानीमनवगतार्था, किं पुनर्यथालिखितानुभाव्येषः

राजा— वयस्य, किमिदमनुष्ठितं पौरोभाग्यम्।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதூஷகன் : குற்றஞ் செய்வோர்க்குத் தண்டனை விதிக்குந் தாங்களே இதற்குத் தகதியுடையவர்கள்.

அரசன் : உண்மை; பூத்துக் குலுங்கும் கொடிகளின் அன்பான விருந்தாளியே! எதற்காக நீ இங்கே சுற்றித் திரிந்து துயரடைகிறாய்? அதோ உன்மீது அன்பு மிக்க பெண் வண்டு, தாகமடைந்துள்ளபோதும், நீயின்றித் தேன் அருந்த விரும்பாது உன்னையே எதிர்பார்த்திருக்கிறது.

சானுமதி : இன்று தான் அது கண்ணியமாகத் துரத்தப்பட்டது.

விதூஷகன் : எவ்வளவு தடுத்தாலம், இந்த இனமே எப்பொழுதும் குறுக்கே போ;கும் இயல்புடையது தான்.

அரசன் : அப்போ என் ஆணைக்குக் கீழ்ப்படிய மாட்டாயா? அப்படியானால் நான் சொல்வதைக் கேன் கிள்ளாத இளந்தளிர்போல அழகுடையதும், காதல் விழாக்களில் என்னால் மென்மையாக இன்பம் பருகப்பட்டதுமான என் காதலியின் கொவ்வைச் செவ்வாயில், நீ தொடநேர்ந்தால் வண்டே! உன்னை
கமல மலர்ப்பொகுட்டிலே சிறை வைத்து விடுவேன்.

விதூஷகன் : இத்தகைய கொடிய தண்டனை கொடுப்பவரிடம் பயங்கொள்ளாதிருக்க முடியுமா? (சிரித்துக் கொண்டு தனக்குள்) இவரா, இவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது, இவரோடு கூடிய நானும் அப்படியே - (உரக்க) இது சித்திரம் ஐயனே! சித்திரம்

அரசன் : என்ன? சித்திரமா?

சானுமதி : நான் கூட இதை மந்து விட்டேன். அப்படியானால் இதை எழுதி அனுபவிக்கும் இவருடைய நிலையை எப்படிச் சொல்வது!

அரசன் : நண்பா! ஏனிந்தக் குறும்புத்தனம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

दर्शनसुखमनुभवतः साक्षादिव तन्मयेन हृदयेन ।
स्मृतिकारिणा त्वया मे पुनरपि चित्रीकृता कान्ता ॥ २१ ॥

( इति बाष्पं विहरति । )

सानुमती—पुव्वावरविरोही अपुव्वो एसो विरहमग्गो । पूर्वापरविरोध्यपूर्व एष विरहमार्गः ।

राजा—वयस्य, कथमेवमविश्रान्तदुःखमनुभवामि ।

प्रजागरात्खिलीभूतस्तस्याः स्वप्ने समागमः ।
बाष्पस्तु न ददात्येनां द्रष्टुं चित्रगतामपि ॥ २२ ॥

सानुमती—सव्वहा पमज्जिदं तुए पच्चादेसदुक्खं सउन्दलाए । सर्वथा प्रमार्जितं त्वया प्रत्यादेशदुःखं शकुन्तलायाः ।

( प्रविश्य । )

चतुरिका—जेदु जेदु भट्टा । वट्टिआकरण्डअं गेण्हिअ इदोमुहं पत्थिदम्हि । जयतु जयतु भर्ता । वर्तिकाकरण्डकं गृहीत्वेतोमुखं प्रस्थितास्मि ।

राजा—किं च ।

चतुरिका—सो मे हत्थादो अन्तरा तरलिआदुदीआए देवीए वसुमदीए अहं अज्जउत्तस्स उवणइस्सं त्ति सबलक्कारं गहीदो । स मे हस्तादन्तरा तरलिकाद्वितीयया देव्या वसुमत्याहमेवार्यपुत्रस्योपनेष्यामीति सबलात्कारं गृहीतः ।

विदूषकः—दिट्ठिआ तुमं मुक्का । दिष्ट्या त्वं मुक्ता ।

चतुरिका—जाव देवीए विडवलग्गं उत्तरीअं तरलिआ मोचेदि ताव मए णिव्वाहिदो अत्ता । यावद्देव्या विटपलग्नमुत्तरीयं तरलिका मोचयति तावन्मया निर्वाहित आत्मा ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கண்முன் நிற்கிறாள் என்று அவளிடத்து ஊறிய மனத்தோடு நான் அவளைக் காணும் இன்பதை அனுபவித்துக் கொண்டிருக்கும: போது, எனது நினைவைத் தூண்டி என் காதலியை ஓவியமாகச் செய்து விட்டாய். (என்று கண்ணிர் விடுகிறான்)

சானுமதி : இந்தப் பிரிவு முன்பின் முரணுற்றதாய் அபூர்வமான தாயிருக்கிறது.

அரசன் : நண்பா! ஏன் என்னிடத்து இம்மாதிரித் தணியாத துயருண்டாகிறது. கனவிலேனும், கூடலாமென்றால் என் விழிப்பு அதற்கு இடையூறாயிருக்கிறது. சித்திரத்திற் பார்ப்போமென்றால் என் கண்ணீர் இடையூறாயி ருக்கிறது.

சானுமதி : சகுந்தலையைக் கைவிட்டதால் அவளுக்குண்டான துயருக்குப் போதிய பிராயச்சித்தம் செய்துவீட்டீர்கள். (வருதல்)

சதுரிகை : வெற்றி, வெற்றி வேந்தே - தூரிகைப் பெட்டியை எடுத்துக் கொண்டு இந்தப் பக்கமாக வந்தேன்...

அரசன் : அப்புறம்...

சதுரிகை : வழியிலே தரலிகையோடு வந்த கோப்பெருந்தேவி வசுமதி “அதை நானே மகாராசாவுக்குக் கொடுக் கிறேன்” என்று சொல்லி என் கையிலிருந்து வாங்கிக் கொண்டார்.

விதூஷகன் : தலை தப்பியத தம்பிரான் புண்ணியம்.

விதூஷகன் : கொடியிற் சிக்கிய தேவியின் உத்தரீயத்தை தரலிகை எடுத்துக் கொண்டிருக்கும் போது நான் தப்பி ஓடி வந்து விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**राजा**—वयस्य, उपस्थिता देवी बहुमानगर्विता = भवानिमां प्रतिकृतिं रक्षतु।

**विदूषकः**—अत्ताणं त्ति भणाहि । ( चित्रफलकमादायोत्थाय च । ) जइ भवं अन्तेउरकालकूडादो मुञ्चीअदि तदो मं मेहप्पडिच्छन्दे पासादे सद्दावेहि। ( इति द्रुतपदं निष्क्रान्तः । ) आत्मानमिति भण। यदि भवानन्तःपुरकालकूटान्मोक्ष्यते तदा मां मेघप्रतिच्छन्दे प्रासादे शब्दापय ।

**सानुमती**—अण्णसंकन्तहिअओ वि पढमसंभावणं अवेक्खदि। सिढिलसोहदो दाणिं एसो। अन्यसंक्रान्तहृदयोऽपि प्रथमसंभावनामपेक्षते । शिथिलसौहार्द इदानीमेषः ।

( प्रविश्य पत्रहस्ता । )

**प्रतीहारी**—जेदु जेदु देवो। जयतु जयतु देवः ।

**राजा**—वेत्रवति, न खल्वन्तरा दृष्टा त्वया देवी।

**प्रतीहारी**—अह इं । पत्तहत्थं मं देक्खिअ पाडिणिउत्ता। अथ किम् । पत्रहस्तां मां प्रेक्ष्य प्रतिनिवृत्ता ।

**राजा**—कार्यज्ञा कार्योपरोधं मे परिहरति।

**प्रतीहारी**—देव, अमच्चो विण्णवेदि । अत्थजादस्स गणणाबहुलदाए एक्कं एव्व पोरकज्जं अवेक्खिदं तं देवो पत्तारूढं पच्चक्खीकरेदु त्ति । देव, अमात्यो विज्ञापयति । अर्थजातस्य गणनाबहुलतयैकमेव पौरकार्यमवेक्षितं तद्देवः पत्रारूढं प्रत्यक्षीकरोत्विति ।

**राजा**—इतः पत्रिकां दर्शय।

( प्रतीहार्युपनयति । )

**राजा**—( अनुवाच्य । ) कथम् । समुद्रव्यवहारी सार्थवाहो धनमित्रो नाम नौव्यसने विपन्नः । अनपत्यश्च किल तपस्वी। राज-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுரிகை : நண்பா! என்னால் நன்கு போற்றப்பட்டமையால் கருவங் கொண்டுள்ள தேவி வருகிறாள். இந்த ஓவியத்தை நீயே காப்பாற்று.

விதூஷகன் : ஓவியத்தையல்ல, "என்னையே காப்பாற்று" என்று சொல்லுங்கள். (சித்திரப் பலகையை எடுத்துக் கொண்டு எழுதல்) அந்தப்புரத்து ஆலகால விடத்திலிருந்து தப்பிப் பிழைத்தேனானால் என்னை மேகப்பிரதிச் சந்தமண்டபத்தில் சந்திப்பீராக.
(விரைந்து செல்லல்)

சானுமதி : ஆர்வம் குன்றிய அரசன்தன் காதல் மற்றொருத்தியிடம் திருப்பப்பட்ட போதிலும், இப்பொழுது தன் முதற் காதலிக்கு ஆதரவு காட்டுகிறான்.

வா.கா. : (கையிலே ஓலையுடன்) வெற்றி, வெற்றி தேவரீர்.

அரசன் : வேதத்திரவதி! நீ வழியிலே தேவியைக் காண வில்லையா?

வா.காப. : காணாமலென்ன? என் கையில் ஓலையைக் கண்டதும் அவர் திரும்பிவிட்டார்.

அரசன் : கையில் வேலையாயிருப்பென் என்பதை அறிந்து அவர்கள் சென்று விட்டார்கள் போலும்.

வா.காப : தேவரீர், அமைச்சர் விண்ணப்பஞ் செய்கிறார். திறைக் கணக்குப் பார்ப்பதில் காலங்கடந்து விட்டபடியால் ஒரே ஒரு பிரசையின் வழக்குத்தான் பார்க்கக் கூடிய தாயிருந்தது. அதை எழுதியனுப்புகிறேன். தேவரிர் பார்த் தருள்க."

அரசன் : ஓலையை இங்கே கொடு. (வாயில் காப்பவன் கொடு கிறான்)

அரசன் : (வாசித்து) என்ன? கடலில் வாணிபஞ்செய்து வந்த தன மித்திரனென்ற பெருவணிகன் கலமுடைந்து விபத்துக் குட்பட்டானாம். இவனுக்குச் சந்ததியில்லையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

गामी तस्यार्थसंचय इत्येतदमात्येन लिखितम् । ( सविषादम् । ) कष्टं खल्वनपत्यता । बहुधनत्वाद्बहुपत्नीकेन तत्रभवता भवितव्यम् । विचार्यतां यदि काचिदापन्नसत्त्वा तस्य भार्यासु स्यात् ।

प्रतीहारी—देव, दाणिं एव्व साकेदअस्स सेट्ठिणो दुहिआ णिव्वुत्तपुंसवणा जाआ से सुणिअदि । देव, इदानीमेव साकेतस्य श्रेष्ठिनो दुहिता निर्वृत्तपुंसवना जायास्य श्रूयते ।

राजा—ननु गर्भः पित्र्यं रिक्थमर्हति । गच्छ एवममात्यं ब्रूहि ।

प्रतीहारी—जं देवो आणवेदि । ( इति प्रस्थिता ) यद्देव आज्ञापयति ।

राजा—एहि तावत् ।

प्रतीहारी—इअम्हि । इयमस्मि ।

राजा—किमनेन संततिरस्ति नास्तीति ।

येन येन वियुज्यन्ते प्रजाः स्निग्धेन बन्धुना ।
स स पापादृते तासां दुष्यन्त इति घुष्यताम् ॥ २३ ॥

प्रतीहारी—एव्वं णाम घोसइदव्वं । ( निष्क्रम्य । पुनः प्रविश्य । ) काले पवुट्ठं विअ अहिणन्दिदं देवस्स सासणम् । एवं नाम घोषयितव्यम् । काले प्रवृष्टमिवाभिनन्दितं देवस्य शासनम् ।

राजा—( दीर्घमुष्णं च निःश्वस्य । ) एवं भोः संततिच्छेदनिरवलम्बानां कुलानां मूलपुरुषावसाने संपदः परमुपतिष्ठन्ति । ममाप्यन्ते पुरुवंशश्रियः एष वृत्तान्तः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனுடைய செல்வமெல்லாம் அரசனுக்கு சேருமென்று அமைச்சன் எழுதுகிறான். (துயருடன்) சந்ததியில்லா விட்டால் கஷ்டந்தான். பெருஞ்செல்வனானபடியால் பல பெண்களை மணந்திருப்பான். அவர்களுள் எவராவது கர்ப்பவதியாயிருப்பாளா? என்பதை விசாரிக்கச் சொல், வேதத்திரவதி.

வா.காப் : தேவரீர், சாகேதத்தைச் சேர்ந்த ஒரு செட்டிமகள் அவனுக்கு மனைவி யென்றும், அவள் கர்ப்பவதியா யிருப்பதை யொட்டிப் புஞ்சவனக்கிரியை நடத்தப்பட் டுள்ள தென்றும் இப்பொழுது தான் அறிவிக்கப் பட்டுள்ளது.

அரசன் : கர்ப்பத்திலுள்ள, பிள்ளைக்கே தந்தையின் செல்வ மெல்லாஞ் சேர வேண்டும். இதைப் போய் அமைச் சரிடங் கூறு.

வா.காப. : தேவரீர் கட்டளைப்படி - (செல்ல முயல்கிறான்)

அரசன் : சற்று நில்

வா.காப் : இதோ தேவரீர்

அரசன் : சந்திதியிருந்தாலென்ன;
இல்லா விட்டாலென்ன? யார் யார் தமக்கினிய சுற்றத தாரை இழக்ககின்றாரோ, குற்றவாளிகளைத் தவிர மற்றவர்க்கெல்லாம் துஸ்யந்தனே சுற்றமாவான் என் பதைப் பிரசித்திப்படுத்துவீராக.

வா.காப் : இது உடனே பிரசித்தஞ் செய்யப்படும். (வெளியே சென்று பின்னர் வருதல்) பருவமழை போல மக்கள் தேவரீருடைய கட்டளையை வரவேற்றனர்.

அரசன் : (பெரு மூச்சுவிட்டு) ஓ! சந்ததியில்லாதவருடைய செல்வம், தந்தையிறந்ததும் அந்நியருக்குத் தான் சேரு கிறது. நான் இறந்த பின்னர் பூருவமிசத்துச் செல்வத் துக்கும் அதே கதிதானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

प्रतीहारी—पडिहदं अमङ्गलम् । प्रतिहतममङ्गलम् ।

राजा—धिङ्मामुपस्थितश्रेयोऽवमानिनम् ।

सानुमती—असंसअं सहिं एव्व हिअए करिअ णिन्दिदो णेण अप्पा । असंशयं सखीमेव हृदये कृत्वा निन्दितोऽनेनात्मा ।

राजा—

संरोपितेऽप्यात्मनि धर्मपत्नी
त्यक्ता मया नाम कुलप्रतिष्ठा ।
कल्पिष्यमाणा महते फलाय
वसुंधरा काल इवोप्तबीजा ॥ २४ ॥

सानुमती—अपरिच्छिण्णा दाणिं दे संददी भविस्सदि । अपरिच्छिन्नेदानीं ते संततिर्भविष्यति ।

चतुरिका—( जनान्तिकम् । ) अए इमिणा सत्थवाहवुत्तन्तेण दिउणुव्वेओ भट्टा । णं अस्सासिदुं मेहप्पडिच्छन्दादो अज्जं माढव्वं गेण्हिअ आअच्छ । अयि, अनेन सार्थवाहवृत्तान्तेन द्विगुणोद्वेगो भर्ता । एनमाश्वासयितुं मेघप्रतिच्छन्दादार्यं माठव्यं गृहीत्वागच्छ ।

प्रतीहारी—सुट्ठु भणासि । ( इति निष्क्रान्ता । ) सुष्ठु भणसि ।

राजा—अहो दुष्यन्तस्य संशयमारूढाः पिण्डभाजः । कुतः ।

अस्मात्परं बत यथाश्रुति संभृतानि
को नः कुले निवपनानि नियच्छतीति ।
नूनं प्रसूतिविकलेन मया प्रसिक्तं
धौताश्रुशेषमुदकं पितरः पिबन्ति ॥ २५ ॥

( इति मोहमुपगतः । )

चतुरिका—( ससंभ्रममवलोक्य । ) [illegible] । समाश्वसितु भर्ता



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா.காப் : அமங்கலம் ஒழிக

அரசன் : வலிய வந்த சீதேவியைக் காலால் உதறித் தள்ளிய நான் அந்தோ கெடுவேன்.

சானுமதி : என் தோழியை மனத்தில் நினைத்து நினைத்து அரசன் தன்னை நிந்திக்கிறான். இதிற் சந்தேகமில்லை.

அரசன் : நானே அவளிடத்தில் முளைகொண்டு விட்டேன். அப்படியிருந்தும் என் தரும பத்தினியை, குலத்துக்குக் கொழுகொம்பு போன்றவளை, பருவத்தில் விதைத்து நல்ல விளைவு தரக்கூடிய நிலம் போன்ற வளைக்கை விட்டேன்.

சானுமதி : உன் சந்ததி இடையீடின்றிப் பெருகும்.

சதுரிகை : (புறத்தே) இந்த வணிகனுடைய செய்தி அரசரின் துயரை இருமடங்காக்கி விட்டது. அவர்க்கு மகிழ்ச்சியூட்டு வதற்கு மேகப்பிரதிச் சந்த மண்டபத்துக்குச் சென்று மாடவியனை அழைத்துவா.

வா.காப. : நன்றாகச் சொன்னாய் (போகிறான்)

அரசன் : அந்தோ! துஷ்யந்தனுடைய பிதுருக்கள் சந்தேக மடையும் நிலை உண்டானதே. இனி எமது குலத்தில் வேத விதிப்படி பிண்டத்தை யார் தான் எமக்குத் தருவார், என எண்ணிக் கொண்டு, சந்ததியில்லாத நான், தர்ப் பணஞ் செய்த தண்ணீரால் தமது கண்ணீரைக் கழுவி, என் பிதுருக்கள் எஞ்சியதைக் குடிப்பார் (மயங்குகிறான்)

சதுரிகை : (துடிதுடித்தச் சுற்றிலும் பார்த்து) தேவரீர் ஆறுத டைவீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

सानुमती—हद्धी हद्धी । सदि क्खु दीवे ववधाणदोसेण एसो अन्धआरदोसं अणुहोदि । अहं दाणिं एव्व णिव्वुदं करोमि । अहवा सुदं मए सउन्दलं समस्सासअन्तीए महेन्दजणणीए मुहादो जण्णभाओस्सुआ देवा एव्व तह अणुचिट्ठिस्सन्ति जह अइरेण धम्मपदिणिं भट्टा अहिणन्दिस्सदित्ति । ता जुत्तं एदं कालं पडिपालिदुं । जाव इमिणा वुत्तन्तेण पिअसहिं समस्सासेमि । ( इत्युद्भ्रान्तकेन निष्क्रान्ता । ) हा धिक् हा धिक् । सति खलु दीपे व्यवधानदोषेणैषोऽन्धकारदोषमनुभवति । अहमिदानीमेव निर्वृत्तं करोमि । अथवा श्रुतं मया शकुन्तलां समाश्वासयन्त्या महेन्द्रजनन्या मुखाद्यज्ञभागोत्सुका देवा एव तथानुष्ठास्यन्ति यथाऽचिरेण धर्मपत्नीं भर्ताभिनन्दिष्यतीति । तद्युक्तमेतं कालं प्रतिपालयितुम् । यावदनेन वृत्तान्तेन प्रियसखीं समाश्वासयामि ।

( नेपथ्ये । )

अब्बम्हण्णं अब्बम्हण्णं । अब्रह्मण्यम्, अब्रह्मण्यम् ।

राजा—( प्रत्यागतप्राणः कर्णं दत्त्वा । ) अये, माठव्यस्येवार्तस्वरः । कः कोऽत्र भोः ।

( प्रविश्य । )

प्रतीहारी—( ससंभ्रमम् । ) परित्ताअदु देवो संसअगदं वअस्सं । परित्रायतां देवः संशयगतं वयस्यम् ।

राजा—केनात्तगन्धो माणवकः ।

प्रतीहारी—अदिट्ठरूवेण केण वि सत्तेण अदिक्कमिअ मेहप्पडिच्छन्दस्स पासादस्स अग्गभूमिं आरोविदो । अदृष्टरूपेण केनापि सत्त्वेनातिक्रम्य मेघप्रतिच्छन्दस्य प्रासादस्याग्रभूमिमारोपितः ।

राजा—( उत्थाय । ) मा तावत् । ममापि सत्त्वैरभिभूयन्ते गृहाः । अथवा ।

अहन्यहन्यात्मन एव ताव-
ज्ज्ञातुं प्रमादस्खलितं न शक्यम् ।
प्रजासु कः केन पथा प्रयाती-
त्यशेषतो वेदितुमस्ति शक्तिः ॥ २६ ॥

( नेपथ्ये । )

भो वअस्स, अविहा अविहा । भो वयस्य, अविहा अविहा ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சானுமதி : அந்தோ, அந்தோ, ஒளியிருந்தும் திரையின் குற்றத்தால் இருளில் இருக்கிறார். இப்போதே இவரை மகிழ்விக்க என்னால் முடியும். இந்திரன் தாய்,சகுந்தலைக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கும் போது, அரசன், தனது தரும பத்தினியை ஏற்று மகிழக்கூடிய வசதியை, வேள்விப் பாகத்தை விரும்பும் தேவர்கள் விரைவிற் செய் வார்கள் எனக் கூறினாள், எனவே, அந்தக் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். அதுவரை இந்தச் செய்திகளை யெல்லாம் கூறிச் சகுந்தலைக்கு ஆறுதல் சொல்வேன்.

(திரைக்குப் பின்னால்)

கொடுமை! கொடுமை!!

அரசன் : (சுயநினைவு வந்து, உற்றுக்கேட்கிறான்.)

ஆ! அது மாடவியனுடைய தீனக்குரல் ஏ! யாரங்கே

வா.காப் : (புகுதல்) (கலக்கமடைந்தவளாய்) காப்பாற்றுங்கள் தேவரீர்; தங்கள் நண்பன் ஆபத்திற்சிக்கிவிட்டான்.

அரசன் : யால் அவமானம் படுத்தப்பட்டான்

வா.காப் : கண்ணுக்குத் தெரியாத ஒரு பூதம் அவனை பிடித்து மேகப் பிரதிச்சந்த மண்டபத்தின் உச்சிமாடிக்குக் கொண்டு போய் விட்டது.

அரசன் : (எழுந்து) அப்படியிராது. என் மனையிற் கூடப் பூதங்கள் குடிகொண்டு விட்டனவா? அல்லது,

626 கவனக்குறை வினால் நான் நாடோறும் செய்யுங் குற்றங்களையே அறிய முடியாதிருக்கும் போது, என் குடிகளில் யார் எந்த வழியிற் செல்கிறாரென்பதையறிய எனக்குச் சக்தி யுண்டா?

*(திரைக்குப் பின்னால்)*

*நண்பா அந்தோ! அந்தோ!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—( गतिभेदेन परिक्रामन् । ) **सखे, न भेतव्यं न भेतव्यम् ।**

( नेपथ्ये । )

( पुनस्तदेव पठित्वा । ) **कहं ण भाइस्सं । एस मं को वि पच्छावणदसिरोहरं इक्खुं विअ तिण्हभङ्गं करेदि ।** कथं न भेष्यामि । एष मां कोऽपि पश्चादवनतशिरोधरमिक्षुमिव त्रिभङ्गं करोति ।

राजा—( सदृष्टिक्षेपम् । ) **धनुस्तावत् ।**

( प्रविश्य शार्ङ्गहस्ता । )

यवनी—**भट्टा, एदं हत्थावावसहिदं सरासणं ।** भर्तः, एतद्धस्तावापसहितं शरासनम् ।

( राजा सशरं धनुरादत्ते । )

( नेपथ्ये । )

**एष त्वामभिनवकण्ठशोणितार्थी**
**शार्दूलः पशुमिव हन्मि चेष्टमानम् ।**
**आर्तानां भयमपनेतुमात्तधन्वा**
**दुष्यन्तस्तव शरणं भवत्विदानीम् ॥ २७ ॥**

राजा—( सरोषम् । ) **कथं मामेवोद्दिशति । तिष्ठ कुणपाशन, त्वमिदानीं न भविष्यसि ।** ( शार्ङ्गमारोप्य । ) **वेत्रवति, सोपानमार्गमादेशय ।**

प्रतीहारी—**इदो इदो देवो ।** इत इतो देवः ।

( सर्वे सत्वरमुपसर्पन्ति । )

राजा—( समन्ताद्विलोक्य । ) **शून्यं खल्विदम् ।**

( नेपथ्ये । )

**अविहा अविहा । अहं अत्तभवन्तं पेक्खामि । तुमं मं ण पेक्खसि । बिडालग्गहीदो मूसओ विअ णिरासो म्हि जीविदे संवुत्तो ।** अविहा अविहा । अहमत्रभवन्तं पश्यामि । त्वं मां न पश्यसि । विडालगृहीतो मूषिक इव निराशोऽस्मि जीविते संवृत्तः ।

राजा—**भोस्तिरस्करिणीगर्वित, मदीयं शस्त्रं त्वां द्रक्ष्यति । एष तमिषुं संदधे,**

**यो हनिष्यति वध्यं त्वां रक्ष्यं रक्षति च द्विजम् ।**
**हंसो हि क्षीरमादत्ते तन्मिश्रा वर्जयत्यपः ॥ २८ ॥**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : (மாறியகதியில் நடந்து கொண்டு) நண்பா, பயப்படாதே! பயப்படாதே!!

(திரைக்குப் பின்னால் அதையே திருப்பிச் சொல்லல்)

நண்பா, பயப்படாதே! பயப்படாதே!! பயப்பட வேண் டாமா? கழுத்தை மடக்கிக் கரும்புத்துண்டு போல என்னை யாரோ முறித்துக் கொண்டிருக்கும் போது பயப் படாமலிருக்க முடியுமா?

அரசன் : (கண்ணெறிந்து) எங்கே என் வில்லு.

யவனி : (வில்லுங் கையுமாய்) தேவ; இதோ அம்பும் வில்லும், கையுறையோடு.

(அரசன்) அம்பையம் வில்லையும் பெற்று)

திரைக்குப் பின்னால் )

கழுத்திலிருந்தொழுகும் புதுக்குருதியை விரும்பும் உன்னை மானைக்கொல்லும் புலியைப் போல், நடுங்க நடுங்கக் கொல்வேன், துயரடைந்தவரைக் காக்க வில்லெடுக்கும் துஷ்யந்தன் உனக்குக் காவலனாவான்.

அரசன் : (கோபத்துடன்) என்ன! என் பெயரைக் கூடச் சொல்லு கிறதே. நில்லு பிணந்தின்னி. நீ செத்தாய். (வில்லில் நாணேற்றி) வேத்திரவதி மாடிக்கு வழிகாட்டு

வா.காப.. : இவ்வழி அரசே இவ்வழி (எல்லாரும் விரைகின்றனர்)

அரசன் : (சுற்றிலும் பார்த்து) ஒருவரையுங் காணோமே. திரைக்குப் பின்னால்)

ஐயோ!! நான் தங்களைக் காண்கிறேன், தாங்கள் என்னைப் பார்க்கவில்லை. பூனை பிடித்த எலிபோல நான் உயிருக்கே அஞ்சுகிறேன்.

அரசன் : கண்ணுக்குத் தெரியாமல் நின்று அட்டகாசம் புரிப வனே! இதோ என் அம்பு உன்னைக் கண்டு கொள்ளும். அஇதோ இந்தப் பாணத்தைத் தொடுக் கின்றேன்.

சாகத் தகுதியுடைய நீ இதனால் சாவாய்; வாழத் தகுதி யடைய அந்தணன் காக்கப்படுவான். நீரோடு கலந்த பாலை அன்னம் பிரித்து உண்டபின் நீரை விட்டு விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( इत्यस्त्रं संधत्ते । )

( ततः प्रविशति विदूषकमुत्सृज्य मातलिः । )

मातलिः—

कृताः शरव्यं हरिणा तवासुराः
शरासनं तेषु विकृष्यतामिदम् ।
प्रसादसौम्यानि सतां सुहृज्जने
पतन्ति चक्षूंषि न दारुणाः शराः ॥ २९ ॥

राजा—( अस्त्रमुपसंहरन् । ) अये मातलिः । स्वागतं महेन्द्रसारथये ।

( प्रविश्य । )

विदूषकः—अहं जेण इट्ठिपसुमारं मारिदो सो इमिणा साअदेण अहिणन्दीअदि । अहं येनेष्टिपशुमारं मारितः सोऽनेन स्वागतेनाभिनन्द्यते ।

मातलिः—( सस्मितम् । ) आयुष्मन्, श्रूयतां यदस्मि हरिणा भवत्सकाशं प्रेषितः ।

राजा—अवहितोऽस्मि ।

मातलिः—अस्ति कालनेमिप्रसूतिर्दुर्जयो नाम दानवगणः ।

राजा—अस्ति । श्रुतपूर्वं मया नारदात् ।

मातलिः—

सख्युस्ते स किल शतक्रतोरजय्य-
स्तस्य त्वं रणशिरसि स्मृतो निहन्ता ।
उच्छेत्तुं प्रभवति यन्न सप्तसप्ति-
स्तन्नैशं तिमिरमपाकरोति चन्द्रः ॥ ३० ॥

स भवानात्तशस्त्र एव इदानीं तमैन्द्ररथमारुह्य विजयाय प्रतिष्ठताम् ।

राजा—अनुगृहीतोऽहमनया मघवतः संभावनया । अथ माठव्यं प्रति भवता किमेवं प्रत्युक्तम् ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(என்று பாணத்தைக் குறிவைக்கிறான்)

விதூஷகனை விட்டுவிட்டு மாதலி வருகிறான்)

மாதலி : அசுரரை உன்பாணத்துக்கு இலக்காகுமாறு இந்திரன் செய்துள்ளான். இந்த அம்பை அவர்கள் மாட்டுச் செலுத் துவாயாக. நண்பர் மீது நல்லவர்கள் அன்பு நிறைந்த பார்வையைச் செலுத்துவரேயன்றிக் கொடிய பாணங் களைச் செலுத்தார்.

அரசன் : (தனது பாணத்தை வாங்கிக் கொண்டு) ஏ! மாதலி, இந்திரசாரதிக்கு நல்லவராகுக!

விதூஷகன் : (வருதல்) வேள்விப் பசுப்போல என்னைக் கொல்ல வந்தவனை அரசன் நல்வரவு கூறி உபசரிக்கி றானே.

மாதலி : (புன்முறுவல் செய்து) நீடுவாழ்வீர். இந்திரன் என்னைத் தங்கள் சமுகத்துக்கு அனுப்பிய காரணத்தைக் கேட்ட ருள்க.

அரசன் : கேட்கிறேன்

மாதலி : காலநேமியின் காண்முளையான துர்ச்சயரென்ற அசுரர் கூட்டமொன்றுண்டு.

அரசன் : ஆம்! நாரத முனிவர் சொல்லியிருக்கிறார்

மாதலி : உங்கள் நண்பனான இந்திரனால் அவர்களை அடக்க முடியவில்லை. போர் முனையில் அவர்களை நீங்களே ஒழிக்க வேண்டும் - சூரியனால் ஒழிக்கமுடியாத இருளைச் சந்திரன் அல்லவா சிதறவடிக்கிறது. எனவே வில்லையெடுத்துக் கொண்டு இந்த இந்திர ரதத்திலே ஏறி வெற்றி பெறப் புறப்படுவீராக.

அரசன் : இந்திரன் காட்டிய அபிமானத்துக்கு நான்

*நன்றியறிதலுடையேன், ஆனால் மாடவியனை*

*ஏன் இவ்வாறு செய்தாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

मातलिः—तदपि कथ्यते । किंचिन्निमित्तादपि मनःसंतापादायुष्मान्मया विक्लवो दृष्टः । पश्चात्कोपयितुमायुष्मन्तं तथा कृतवानस्मि । कुतः ।

ज्वलति चलितेन्धनोऽग्निर्विप्रकृतः पन्नगः फणां कुरुते ।
प्रायः स्वं महिमानं क्षोभात्प्रतिपद्यते हि जनः ॥ ३१ ॥

राजा—( जनान्तिकम् । ) वयस्य, अनतिक्रमणीया दिवस्पतेराज्ञा । तदत्र परिगतार्थं कृत्वा मद्वचनादमात्यपिशुनं ब्रूहि ।

त्वन्मतिः केवला तावत्परिपालयतु प्रजाः ।
अधिज्यमिदमन्यस्मिन्कर्मणि व्यापृतं धनुः ॥ ३२ ॥

इति ।

विदूषकः—जं भवं आणवेदि । ( इति निष्क्रान्तः । ) यद्भवानाज्ञापयति ।

मातलिः—आयुष्मान्रथमारोहतु ।

( राजा रथाधिरोहणं नाटयति । )

( इति निष्क्रान्ताः सर्वे । )

षष्ठोऽङ्कः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதலி : கூறுகிறேன். ஏதோ காரணத்தால் நீடு வாழ்வீர் மனத்து யரடைந்திருந்ததை அறிந்தேன். எனவே தங்களுக்குக் கோபமூட்டவே இவ்வாறு செய்தேன் - ஏனெனில்,

விறகை மூட்டினால் நெருப்புக் கொழுந்துவிட்டெரியும். பாம்பைக் குழப்பினால் படமெடுக்கும். குழப்பமடையும் பொழுது தான் பெரியோர் தமது மகிமையை வெளிப்படுத்துவர்.

அரசன் : (ஒருபுறம்) நண்பா, தேவசேனாபதியின் ஆணையை மீற முடியாது, எனவே அமைச்சர் பிசுனரிடம் நடந்ததைச் சொல்லிப் பின்னர் நான் சொன்னதாக " இந்த நாணேற்றிய வில்லு வேறொரு கருமத்திலீடுபட்டிருக்கும் வரை உன் மதியால் மாத்திரம் என் குடிகளைப் பரிபாலனஞ் செய்வாயாக என்று கூறு.

விதூஷகன் : தேவரீர் கட்டளைப்படி (போகிறான்)

மாதலி : நீடுவாழ்வீர், தேரிலேறுக - அரசன் தேரில் ஏறுவது போல நடித்தல்)

எல்லோரும் செல்கின்றனர்.

**(ஆறாம் அங்கம் முற்றும்.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# सप्तमोऽङ्कः ।

( ततः प्रविशत्याकाशयानेन रथाधिरूढो राजा मातलिश्च । )

राजा—मातले, अनुष्ठितनिदेशोऽपि मघवतः सत्क्रियाविशेषादनुपयुक्तमिवात्मानं समर्थये ।

मातलिः—( सस्मितम् । ) आयुष्मन्, उभयमप्यपरितोषं समर्थये ।

प्रथमोपकृतं मरुत्वतः
प्रतिपत्त्या लघु मन्यते भवान् ।
गणयत्यवदानविस्मितो
भवतः सोऽपि न सत्क्रियागुणान् ॥ १ ॥

राजा—मातले, मा, मैवम् । स खलु मनोरथानामप्यभूमिर्विसर्जनावसरसत्कारः । मम हि दिवौकसां समक्षमर्धासनोपवेशितस्य

अन्तर्गतप्रार्थनमन्तिकस्थं
जयन्तमुद्वीक्ष्य कृतस्मितेन ।
आमृष्टवक्षोहरिचन्दनाङ्का
मन्दारमाला हरिणा पिनद्धा ॥ २ ॥

मातलिः—किमिव नामायुष्मानमरेश्वराद्नार्हति । पश्य ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாம் அங்கம்

**(கோச மார்க்கமாகத் தேரிலூர்ந்து அரசனும் மாதலியுந் தோன்றுதல்)**

அரசன் : மாதலி! இந்திரனிட்ட கட்டளையை நான் நிறைவேற்றிய போதிலும் அவன் எனக்களித்த விசேட வரவேற்புக்கு நான் ஆற்றிய தொண்டு எம்மாத்திரம்?

மாதலி : (புன்னகை புரிந்து) நீடுவாழ்வீர்! தாங்களிருபேரும் திருப்தியடைந்ததாக நான் நினைக்கவில்லை.

7.1 இந்திரன் தங்களுக்குச் செய்த சன்மானம் பெரிதெனவும், தாங்கள் இந்திரனுக்குச் செய்த எதவி சிறிதெனவும் எண்ணுகிறீர்கள், ஆனால் இந்திரன், தான் தங்களுக்குச் செய்த விசேட சன்மானம் அற்பதெனவும் தாங் களாற்றிய தொண்டு பெரிதெனவும் ஆச்சரியப்படு கின்றான்.

அரசன் : மாதலி! அப்படியில்லை. அவ்வாறு கூறாதே. எனக்குப் பிரியாவிடை கூறும் பொழுது எனக்களித்த சன்மானம், மனத்தாலும் நினைக்க முடியாதது.

7.2 எனக்கு இந்திரன் தன் ஆசனத்தில் ஒரு பகுதியைத் தந்து, தேவர்கள் முன்னிலையில் இருக்கச் செய்து, அரிசந்தனத்தில் தோய்ந்த மந்தார மாலையை மார்பிலிருந்து எடுத்துப் பக்கத்தில் தனக்கு அந்தச் சன்மானங்கிடைக்கக் கூடாதா என்ற ஆவலுடன் பார்த்து நின்ற சயந்தனை நோக்கிப் புன்முறுவல் செய்து, என் கழுத்திலிட்டான்.

மாதலி : அமரேசனிடத்திலிருந்து நீடுவாழ்வீர் பெறத் தகுதியற்றது என்ன தானுண்டு; பாருங்கள்.மாதல

: அமரேசனிடத்திலிருந்து நீடுவாழ்வீர் பெறத் தகுதியற்றது என்ன தானுண்டு; பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

सुखपरस्य हरेरुभयैः कृतं
त्रिदिवमुद्धृतदानवकण्टकम् ।
तव शरैरधुना नतपर्वभिः
पुरुषकेसरिणश्च पुरा नखैः ॥ ३ ॥

राजा—अत्र खलु शतक्रतोरेव महिमा स्तुत्यः ।

सिध्यन्ति कर्मसु महत्स्वपि यन्नियोज्याः
संभावनागुणमवेहि तमीश्वराणाम् ।
किंवाभविष्यदरुणस्तमसां विभेत्ता
तं चेत्सहस्रकिरणो धुरि नाकरिष्यत् ॥ ४ ॥

मातलिः—सदृशमेवैतत् । ( स्तोकमन्तरमतीत्य । ) आयुष्मन्, इतः पश्य नाकपृष्ठप्रतिष्ठितस्य सौभाग्यमात्मयशसः ।

विच्छित्तिशेषैः सुरसुन्दरीणां
वर्णैरमी कल्पलतांशुकेषु ।
विचिन्त्य गीतक्षममर्थजातं
दिवौकसस्त्वच्चरित लिखन्ति ॥ ५ ॥

राजा—मातले, असुरसंप्रहारोत्सुकेन पूर्वेद्युर्दिवमधिरोहता न लक्षितः स्वर्गमार्गः । कतरस्मिन्मरुतां पथि वर्तामहे ।

मातलिः—

त्रिस्रोतसं वहति यो गगनप्रतिष्ठां
ज्योतींषि वर्तयति च प्रविभक्तरश्मिः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.3 இன்று தங்களுடைய கூரிய அம்பினாலும். முன்னாள் நர சிங்கத்தின் கூரிய நகத்தினாலும், இன்ப நாட்டமுள்ள இந்திரனின் அமரருலகத்திலிருந்து, தானவரென்ற முள்ளு, இருவகையிலகற்றப்பட்டது.

அரசன் : இந்தச் சந்தர்ப்பத்திலே இந்திரனுடைய பெருமையே போற்றத்தக்கது.

7.4 பெரிய கருமங்களிற் சேவகர்கூட வெற்றி பெறுவர். அதற்குக் காரணம் எசமானார், அவர்க்குக் காட்டும் சன்மானமே, ஆயிரங்கிரணத்து அலரிவானவன், அருணனைத் தன் தேர் நுகத்தில் பூட்டாவிட்டால், அவன் இருளைத் துரத்தி விட முடியுமா?

மாதலி : தங்களுக்கு இது பொருத்தமுடையதே! (சிறிது தூரம் சென்று) நீடுவாழ்வீர்; இதோ, தங்கள் புகழின் ஒளி வானமெங்கும் பரந்து விளங்குகின்றது.

7.5 தேவசுந்தரிகள் தம்மையலங்கரித்து மிஞ்சிய வருணங் களால், இந்த அமரர், உனது புகழைப் பாடற்கமைந்த கீர்த்தனங்களாக அமைத்துக் கற்பக தருக்கள் தந்த துணிகளில் எழுதுகிறார்கள்.

அரசன் : மாதலி! அசுரரோடு போர் புரியும் ஆர்வத்தினால், அன்று வான மண்டலத்தில் ஏறிய பொழுது, சுவர்க்கத்துக்குப் போகும் வழியைக் கவனிக்கவில்லை. இப்போது நாம் எந்தக் காற்றின் மார்க்கத்திற் செல்கின்றோம்.

மாதலி : இதுதான் பரிவகம் என்ற காற்றின் மார்க்கம். இது திருமாலின் இரண்டாவது பாதச் சுவடு பட்ட தால் இருள் நீங்கப்பெற்று, வானில் ஓடும் மூன்று நதி யைத் தாங்கிச் செல்கிறது.

7.6 விண்ணிலியங்கும் நட்சத்திரங்கள் தம்மொளியைத் தடையின்றிப் பரப்பிச் சுழல்வதற்குத் துணையாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

तस्य द्वितीयहरिविक्रमनिस्तमस्कं
वायोरिमं परिवहस्य वदन्ति मार्गम् ॥ ६ ॥

राजा—मातले, अतः खलु सबाह्यान्तःकरणो ममान्तरात्मा प्रसीदति । ( रथाङ्गमवलोक्य । ) मेघपदवीमवतीर्णौ स्वः ।

मातलिः—कथमवगम्यते ।

राजा—

अयमरविवरेभ्यश्चातकैर्निष्पतद्भि-
र्हरिभिरचिरभासां तेजसा चानुलिप्तैः ।
गतमुपरि घनानां वारिगर्भोदराणां
पिशुनयति रथस्ते सीकरक्लिन्ननेमिः ॥ ७ ॥

मातलिः—क्षणादायुष्मान्स्वाधिकारभूमौ वर्तिष्यते ।

राजा—( अधोऽवलोक्य । ) वेगावतरणादाश्चर्यदर्शनः संलक्ष्यते मनुष्यलोकः । तथाहि ।

शैलानामवरोहतीव शिखरादुन्मज्जतां मेदिनी
पर्णाभ्यन्तरलीनतां विजहति स्कन्धोदयात्पादपाः ।
संतानैस्तनुभावनष्टसलिला व्यक्तिं भजन्त्यापगाः
केनाप्युत्क्षिपतेव पश्य भुवनं मत्पार्श्वमानीयते ॥ ८ ॥

मातलिः—साधु दृष्टम् । ( सबहुमानमवलोक्य । ) अहो, उदाररमणीया पृथिवी ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : மாதலி! அதனாலேதான் போலும் எனது உட்கரணங் களும், வெளிப்புலன்களும், உயிரும் மகிழ்ச்சியில் திளைத்துள்ளன. (தேரின் சக்கரத்தைப் பார்த்து) மேகமண்டலத்துக்கு வந்து விட்டோம்.

அரசன் 7.8 : எவ்விதம் அறிகிறீர்கள் இதோ தேர்ச்சக்கரத்தின் வளையம் நீர்த்திவலைகளால் நனைந்திருக்கிறது. அதனால் நீரைவயிற்றில் நிறையக் கொண்ட மேகங் களுக்கு மேலாகச் செல்கிறோமென்பது தெரிகிறது. தேர்க்காலின் ஆரைக் கூடாகச் சாதகப் புட்கள் பறந்து செல்கின்றன. குதிரைகள் மின்னலின் ஒளியிலே தோய்ந்து காணப்படுகின்றன.

மாதலி : நொடிப்பொழுதில் நீடுவாழ்வீர் தங்கள் ஆணைக்குட் பட்ட பூமிக்கு வந்துவிடுவீர்.

அரசன் : (கீழே பார்த்து) மனிதருலகம்! நாம் செல்லும் வேகத்தால் மிக அற்புதமான காட்சியைத் தருகிறது. ஏனெனில்,

7.8 மேலே உயரும் மலைச் சிகரங்களிலிருந்து பூமி கீழேயிறங்குவது போலத் தெரிகிறது. மரங்களைச் சூழ்ந்து மூடிய இலைகள் அகல, அவற்றின் பெரிய முண்டங்கள் தோற்றமளிக்கின்றன. தூரத்திலிருந்து பார்க்கும் பொழுது, காட்சிக்கு மறைந்த ஆறுகளின் நீரோட்டம் விசாலாமாகக் கண்ணுக்குக் காட்சியளிக் கின்றது. பூமியை, யாரோ தூக்கி என் பக்கமெறிந்தது போல, அது என்னயலே தோன்றுவதைப்பார்.

மாதலி : நன்றாகச் சொன்னீர்கள். (மிகுந்த மரியாதையோடு பார்த்து) அதோ! என்ன சிறப்பு, என்ன அழகு!! இந்தப் பூமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—मातले, कतमोऽयं पूर्वापरसमुद्रावगाढः कनकरसनिस्यन्दी सांध्य इव मेघपरिघः सानुमानालोक्यते ।

मातलिः—आयुष्मन्, एष खलु हेमकूटो नाम किंपुरुषपर्वतस्तपःसंसिद्धिक्षेत्रम् । पश्य ।

स्वायंभुवान्मरीचेर्यः प्रबभूव प्रजापतिः ।
सुरासुरगुरुः सोऽत्र सपत्नीकस्तपस्यति ॥ ९ ॥

राजा—तेन ह्यनतिक्रमणीयानि श्रेयांसि । प्रदक्षिणीकृत्य भगवन्तं गन्तुमिच्छामि ।

मातलिः—प्रथमः कल्पः ।

( नाट्येनावतीर्णौ । )

राजा—( सविस्मयम् । )

उपोढशब्दा न रथाङ्गनेमयः
प्रवर्तमानं न च दृश्यते रजः ।
अभूतलस्पर्शतया निरुन्धत-
स्तवावतीर्णोऽपि रथो न लक्ष्यते ॥ १० ॥

मातलिः—एतावानेव शतक्रतोरायुष्मतश्च विशेषः ।

राजा—मातले, कतमस्मिन्प्रदेशे मारीचाश्रमः ।

मातलिः—( हस्तेन दर्शयति । )

वल्मीकाधनिमग्नमूर्तिरुरसा संदष्टसर्पत्वचा
कण्ठे जीर्णलताप्रतानवलयेनात्यर्थसंपीडितः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : மாதலி! மேற்கடலிலிருந்து கீழ்க் கடல் வரை பரந்து, கடலைக் குறுக்கிட்டு, தங்கம் உருகி வழிந்தோட, மாலை மேகமென்னும் சலாகை போற்கிடக்கும் அந்த மலையாது?

மாதலி : நீடுவாழ்வீர்! அதுதான் பொன்முடி என்னும் ஏமகூடம். தவஞ் செய்வோர் முழுப் பயனையும் பெறும் புண்ணிய பூமி; கிம்புருடர் இங்கே தான் வாழ்கின்றார்.

7.9 தானே தோன்றிய பிரமாவின் மானச புத்திரனான் மரீசி முனிவரிடத்துப் பிறந்தவரும், தேவாசுரர்களின் தந்தை யுமான பிரசாபதி இங்கே தனது பத்தினியோடு தவஞ் செய்கிறார்.

அரசன் : அப்படியானால் உயர்நலம் பெறும் வாய்ப்புக்களைக் கைநழுவ விடக்கூடாது. அம்முனிவர் பெருந்தகையை வலம் வந்து வணங்கிப் பின்னர் நாம் மேலே செல்வோம்.

மாதலி : நல்ல யோசனைதான். (கீழே இறங்குதல் போல நடித்தல்)

அரசன் : (புன்முறுவல் செய்து) தேர்க்கால்கள் ஒலி எழுப்ப வில்லை;

7.10 தூசு கிளம்புவதையும் காணவில்லை குதிரைகளை இழுத்துத் தேரைப் பூமியில் இறக்கும் போதும், அது பூமியைத் தொடாமலே ஆட்டம் அசைவின்றி ஓடு கின்றது.

மாதலி : இஃது ஒன்று தான் தங்களுக்கும் இந்திரனுக்கும் உள்ள வித்தியாசம்.

அரசன் : மாதலி! இங்கே மரீசி முனிவர் ஆச்சிரமம் எங்கே யிருக்கிறது?

மாதலி : (கையாற் காட்டி)

7.11 கறையான் புற்றினால் முடிய பாதி உடல், பாம்பின் தோல் தொங்கிக் கிடக்கும்மார்பு, முதிர்ந்த கொடிகளால் நெருங்கி வளையப் பட்ட கழுத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

अंसव्यापि शकुन्तनीडनिचितं बिभ्रज्जटामण्डलं
यत्र स्थाणुरिवाचलो मुनिरसावभ्यर्कबिम्बं स्थितः ॥ ११ ॥

राजा—नमस्ते कष्टतपसे ।

मातलिः—( संयतप्रग्रहं रथं कृत्वा । ) महाराज, एतावददितिपरिवर्धितमन्दारवृक्षं प्रजापतेराश्रमं प्रविष्टौ स्वः ।

राजा—स्वर्गादधिकतरं निर्वृतिस्थानम् । अमृतह्रदमिवावगाढोऽस्मि ।

मातलिः—( रथं स्थापयित्वा । ) अवतरत्वायुष्मान् ।

राजा—( अवतीर्य । ) मातले, भवान्कथमिदानीम् ।

मातलिः—संयन्त्रितो मया रथः । वयमप्यवतरामः । ( तथा कृत्वा । ) इत आयुष्मन् । ( परिक्रम्य । ) दृश्यन्तामत्रभवतामृषीणां तपोवनभूमयः ।

राजा—ननु विस्मयादवलोकयामि ।

प्राणानामनिलेन वृत्तिरुचिता सत्कल्पवृक्षे वने
तोये काञ्चनपद्मरेणुकपिशे धर्माभिषेकक्रिया ।
ध्यानं रत्नशिलातलेषु विबुधस्त्रीसंनिधौ संयमो
यत्काङ्क्षन्ति तपोभिरन्यमुनयस्तस्मिंस्तपस्यन्त्यमी ॥ १२ ॥

मातलिः—उत्सर्पिणी खलु महतां प्रार्थना । ( परिक्रम्य आकाशे । ) अये वृद्धशाकल्य, किमनुतिष्ठति भगवान्मारीचः । किं



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளெங்கும் பரவிய பறவைகளின் கூடுகள் நிரம்பியுள்ள சடாமண்டலம் என்பவற்றையுடையவராய், மரக்கட்டை போல அசை வற்றுச் சூரிய விம்பத்தை நோக்கியவாறு காணப்படும் மரீசி இருக்கும் அந்த இடமே அவருடைய ஆச்சிரமம்.

அரசன் : பகவானே! தங்கள் கொடுந்தவத்துக்கு ஒரு வணக்கம்.

மாதலி : (குதிரைகளின் கடிவாளத்தை இழுத்து) அதிதியால் வளர்க்கப்பட்ட மந்தார மரங்கள் நிறைந்த பிரசாபதியின் ஆச்சிரமத்தை அடைந்து விட்டோம்.

அரசன் : இது சுவர்க்கத்திலும் இன்பத்தையளிக்கும் இடம். அமுதப் பொய்கையில் மூழ்கியவன் போலிருக்கிறேன்.

மாதலி : (தேரை நிறுத்தி) நீடுவாழ்வீர்! இறங்குக.

அரசன் : (இறங்கி) தாங்கள் எப்படி இறங்குவீர்.

மாதலி : தேரைக் கட்டிவிட்டேன். நாமும் இறங்குகிறோம். (அவ்வாறு செய்து) இப்படி வருக. இத்தபோவனத்தின் பல பகுதிகளையும் இங்கிருந்து பாருங்கள்.

அரசன் : அதிசயத்திலாழ்ந்தவனாய் நோக்குகின்றேன்.

7.12 இங்கே இக்கற்பகச் சொலையில், உயிர்க்கு அவசிய மான பொருள்களைக் காற்றிலிருந்து பெறுகிறார்கள். பொற்றாமரையின் மகரந்தப் பொடியினால் மஞ்சள் நிறம் பெற்ற நீர் நிலையில், சமயக் கிரியைகள் செய்வதற்கு முன் நீர்க்கடன்களை முடிக்கிறார்கள். இரத்தினக் கற்பாறைகளில் தியானஞ் செய்கிறார்கள்; சுரசுந்தரிகளின் மத்தியிலிருந்து கொண்டே புலட னக்கஞ் செய்கின்றனர்; மற்ற முனிவர்கள் எந்த இடத்தை அடைவதற்குக் கொடுந்தவஞ் செய்கிறார் களோ, அந்த இடத்தில் இங்கே இவர்கள் தவமியற்று கின்றார்கள்.

மாதலி : உயந்தவர்களுடைய இலட்சியம் உண்மையில் உயர்ந்து செல்லும். (நடந்து கொண்டு ஆகாயத்திலே) ஏ! விருத்தசாகல்யா! மாரீசி பகவான் என்ன செய்கிறார்? என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ब्रवीषि । दाक्षायण्या पतिव्रताधर्ममधिकृत्य पृष्टस्तस्यै महर्षिपत्नीसहितायै कथयतीति ।

राजा—( कर्णं दत्त्वा । ) अये, प्रतिपाल्यावसराः खलु मुनयः ।

मातलिः—( राजानमवलोक्य । ) अस्मिन्नशोकवृक्षमूले तावदास्तामायुष्मान्, यावत्त्वामिन्द्रगुरवे निवेदयितुमन्तरान्वेषी भवामि ।

राजा—यथा भवान्मन्यते । ( इति स्थितः । )

मातलिः—आयुष्मन्, साधयाम्यहम् । ( इति निष्क्रान्तः । )

राजा—( निमित्तं सूचयित्वा । )

मनोरथाय नाशंसे किं बाहो स्पन्दसे वृथा ।
पूर्वावधीरितं श्रेयो दुःखं हि परिवर्तते ॥ १३ ॥

( नेपथ्ये । )

मा क्खु चावलं करेहि । कहं गदो एव्व अत्तणो पकिर्दि । मा खलु चापलं कुरु । कथं गत एवात्मनः प्रकृतिम् ।

राजा—( कर्णं दत्त्वा । ) अभूमिरियमविनयस्य । को नु खल्वेष निषिध्यते । ( शब्दानुसारेणावलोक्य । सविस्मयम् । ) अये, को नु खल्वयमनुबध्यमानस्तपस्विनीभ्यामबालसत्त्वो बालः ।

अर्धपीतस्तनं मातुरामर्दक्लिष्टकेसरम् ।
प्रक्रीडितुं सिंहशिशुं बलात्कारेण कर्षति ॥ १४ ॥

( ततः प्रविशति यथानिर्दिष्टकर्मा तपस्विनीभ्यां बालः । )

बालः—जिम्भ सिङ्घ, दन्ताइं दे गणइस्सं । जृम्भस्व सिंह, दन्ताँस्ते गणयिष्ये ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னாய்! பதிவிரதைகளின் கடமைகளைப் பற்றித் தாட்சாயணி (அதிதி) கேட்க, இருடி பத்தினிகள் சமூகத்தில், அவளுக்கு எடுத்துப் போதித்துக் கொண் டிருக்கிறார் என்றா சொல்கிறாய்?

அரசன் : (காதுகொடுத்து) ஆகா, அப்படியானால் முனிபுங்கவரின் அவகாசம் பார்த்து நிற்கவேண்டியிருக்கிறது.

மாதலி : (அரசனைப் பார்த்து)

7.13 நீடுவாழ்வீர் இந்த அசோக மரத்தினடியில் சிறிது நேரம் தங்கியிருப்பீராக! நான் அதுவரையில் இந்திரன் தந்தைக்குத் தங்கள் வரவைக் கூறச் சமயம் பார்த்து வருகிறேன்.

அரசன் : தாங்கள் விரும்பியபடியே! (நிற்கிறான்)

மாதலி : நீடுவாழ்வீர் நான் போய் வருகிறேன், (செல்லல்)

அரசன் : (நிமித்தமறிந்து) என் விருப்பம் நிறைவேறுமென்று நான் எண்ணவில்லை. இருந்தும் கையே ஏன் துன்பத்தையே உண்டாக்கும்.

(திரைக்குப் பின்னால்) அவ்வளவு முரண்படு பண்ணாதே! என்ன அதற்கிடையில் உன் இயற்கைக் குணத்துக்கு மாறிவிட்டாயா?

அரசன் : (காது கொடுத்து) முரட்டுத்தனத்துக்கு இடம் இது வல் லவே! யாரை இவ்வாறு தடுக்கிறார்கள். (சத்தம் வந்த திசையை நோக்கி ஆச்சரியத்தோடு) ஓ! யாரிந்தச் சிறுவன்; தபச் வினிகள் இருவர் சூழ்ந்துவர, சிறுவர்க் கில்லாத பலம் பொருந்தியவனாய் நிற்கும் இச்சிறுவன் யார்?

7.14 தாயின் மடியிலே பால்குடித்துப் பாதிகூட முடிக்காத சிங்கக்குட்டியை, அதன் பிடரி மயிர் சிலர்க்கப் பலாத்காரமாக இழுத்து விளையாடுகிறானே.

(குறிப்பிட்டவாறு நடித்தவண்ணம் ஒரு சிறுவனும் இரண்டு தாபசிகளும் வருதல்)

சிறுவன் : திறவாயைச் சிங்கமே, உனக்குப் பல்லு எத்தனை யென்று எண்ண வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**प्रथमा—अविणीद, किं णो अपच्चणिव्विसेसाणि सत्ताणि विप्पअरेसि। हन्त, वड्ढइ दे संरम्भो। ठाणे क्खु इसिजणेण सव्वद-मणो त्ति किदणामहेओ सि।** अविनीत, किं नोऽपत्यनिर्विशेषाणि सत्त्वानि विप्रकरोषि। हन्त, वर्धते तव संरम्भः। स्थाने खलु ऋषिजनेन सर्वदमन इति कृतनामधेयोऽसि।

**राजा—किं नु खलु बालेऽस्मिन्नौरस इव पुत्रे स्निह्यति मे मनः। नूनमनपत्यता मां वत्सलयति।**

**द्वितीया—एसा क्खु केसरिणी तुमं लङ्घेदि जइ से पुत्तअं ण मुञ्चेसि।** एषा खलु केसरिणी त्वां लङ्घयिष्यति यदि तस्याः पुत्रकं न मुञ्चसि।

**बालः—(** सस्मितम्। **) अम्हहे, बलिअं क्खु भीदो म्हि। (** इत्यधरं दर्शयति। ) अहो, बलीयः खलु भीतोऽस्मि।

**राजा—**

**महतस्तेजसो बीजं बालोऽयं प्रतिभाति मे।**
**स्फुलिङ्गावस्थया वह्निरेधापेक्षा इव स्थितः॥ १५॥**

**प्रथमा—वच्छ, एदं बालमिइन्दअं मुञ्च। अवरं दे कीलणअं दाइस्सं।** वत्स, एनं बालमृगेन्द्रं मुञ्च। अपरं ते क्रीडनकं दास्यामि।

**बालः—कहिं। देहि णं। (** इति हस्तं प्रसारयति। **)** कुत्र। देह्येतत्।

**राजा—कथं चक्रवर्तिलक्षणमप्यनेन धार्यते। तथा ह्यस्य**

**प्रलोभ्यवस्तुप्रणयप्रसारितो**
**विभाति जालग्रथिताङ्गुलिः करः।**
**अलक्ष्यपत्रान्तरमिद्धरागया**
**नवोषसा भिन्नमिवैकपङ्कजम्॥ १६॥**

**द्वितीया—सुव्वदे, ण सक्को एसो वाआमेत्तेण विरमाविदुं। गच्छ तुमं। ममकेरए उडए मक्कण्डेअस्स इसिकुमारअस्स वण्ण-चित्तिदो मित्तिआमोरओ चिट्ठदि। तं से उवहर।** सुव्रते, न शक्य एष वाचामात्रेण विरमयितुम्। गच्छ त्वम्। मदीय उटजे मार्कण्डेयस्यर्षि-कुमारस्य वर्णचित्रितो मृत्तिकामयूरस्तिष्ठति। तमस्योपहर।

**प्रथमा—तह। (** इति निष्क्रान्ता **)** तथा।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. தாபசி : குறும்புப்பயலே! சொந்தப் பிள்ளைகள் போல நாம் வளர்த்து வரும் மிருகங்களை ஏன் தொந்தரவு செய்கிறாய்? உன் துட்டத்தனம் ஏறிக் கொண்டு வருகிறது. உனக்கு இருடிகள் சர்வதமனன் எல்லா வற்றையும் அடக்கியவன்) என்று இட்ட பெயர் பொருத்த முடையதே.

அரசன் : என்னை என் புதல்வனிடத்துண்டாகக் கூடிய பரிவு, இச்சிறுவனிடத்து எனக்கு உண்டாகிறதே! பிள்ளை யில்லாத தன்மையாற் போலும் மனம் இளகுகிறது.

இ.தாபசி : குட்டியை நீ விடுதலை செய்யாவிட்டால் தாய்ச் சிங்கம் உன்னைக் கட்டாயம் தாக்கும்.

சிறுவன் : (புன்முறுவல், செய்து) ஐயே! எனக்கு மிச்சம் பயம். (கீழதரத்தை ஏளனமாகச் சுழித்துக் காட்டுகிறான்).

அரசன் :7.15 இவன் பெரிய வீரனின் பிறப்புப் போலத் தென்படு கிறான். விறகை எதிர்பார்த்திருக்கும் நெருப்புப் பொறி போலக் காண்கிறான்.

மு.தபாசி : குழந்தாய்! சிங்கக் குட்டியை விட்டு விடு; உனக்கு வேறு விளையாட்டுப் பொருள் தருகிறேன்.

சிறுவன் : எங்கே? தா! (கையை நீட்டுகிறான்)

அரசன் : இவனிடத்துப் பேரரசனுக்குரிய குறிகள் தோன்று கின்றன.

விரும்பிக் கேட்டதும் அப்பொருளைப் பெறுவதற்கு

7.16 இவன் கையை நீட்டியபோது விரல்கள் ஒன்றோடொன்று சேர்ந்து காணப்படுகின்றன. அது ஒளி கொளுவிய கைகறை விரித்த தனிப் பயங்காணம் போல், இதழ் களிடையேயுள்ள வெளிகள் மறைந்து தோற்ற மளிக்கிறது.

இ.தபாசி : சுவிரதை; சொல்வழி கேட்க மாட்டான், போ; எனது குடிசையில் மார்க்கண்டேய இருடிகுமாரனுக்குரிய, நிறந்தீட்டிய களிமண்ணாலான மயில் உண்டு. போய் அதை எடுத்து வந்து இவனுக்குக் கொடு.

மு.தபாசி : அப்படியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

बालः—इमिणा एव्व दाव कीलिस्सं । ( इति तापसीं विलोक्य हसति । ) अनेनैव तावत्क्रीडिष्यामि ।

राजा—स्पृहयामि खलु दुर्ललितायास्मै ।

आलक्ष्यदन्तमुकुलाननिमित्तहासै-
र्व्यक्तवर्णरमणीयवचःप्रवृत्तीन् ।
अङ्काश्रयप्रणयिनस्तनयान्वहन्तो
धन्यास्तदङ्गरजसा मलिनीभवन्ति ॥ १७ ।

तापसी—होदु । ण मं अअं गणेदि । ( पार्श्वमवलोकयति । ) को एत्थ इसिकुमाराणं । ( राजानमवलोक्य । ) भद्दमुह, एहि दाव । मोएहि इमिणा दुम्मोअहत्थग्गाहेण डिम्भलीलाए बाहीअमाणं बालमिइन्दअं । भवतु । न मामयं गणयति । कोऽत्र ऋषिकुमाराणाम् । भद्रमुख, एहि तावत् । मोचयानेन दुर्मोकहस्तग्रहेण डिम्भलीलया बाध्यमानं बालमृगेन्द्रम् ।

राजा—( उपगम्य । सस्मितम् । ) अयि भो महर्षिपुत्र ।

एवमाश्रमविरुद्धवृत्तिना
संयमः किमिति जन्मतस्त्वया ।
सत्त्वसंश्रयसुखोऽपि दूष्यते
कृष्णसर्पशिशुनेव चन्दनम् ॥ १८ ॥

तापसी—भद्दमुह, ण क्खु अअं इसिकुमारओ । भद्रमुख, न खल्वयं ऋषिकुमारः ।

राजा—आकारसदृशं चेष्टितमेवास्य कथयति । स्थानप्रत्ययात्तु वयमेवंतर्किणः । ( यथाभ्यर्थितमनुतिष्ठन्बालस्पर्शमुपलभ्य । आत्मगतम् । )

अनेन कस्यापि कुलाङ्कुरेण
स्पृष्टस्य गात्रेषु सुखं ममैवम् ।
कां निर्वृतिं चेतसि तस्य कुर्या-
द्यस्यायमङ्कात्कृतिनः प्ररूढः ॥ १९ ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன் : அதுவரை இதோடு விளையாடுவேன். (என்று தபஸ்வினியைப் பார்த்துச் சிரிக்கிறான்)

அரசன் : குறும்புமிக்க இச்சிறுவனிடத்து என் மனம் லயித்து விட்டது.

7.17 காரணமின்றி முறுவல் செய்யும் போது, மலர் மொட்டுப் போன்ற பற்கள் சிறிது தோன்ற, தெளிவற்ற சொற்களைச் சொல்லி மழலைபேசும் அழகுடன், மடியில் ஏற வேண்டுமென்று கேட்க வாரியணைத்து மடியில் வைத்ததும் அங்கமெல்லாம் புழுதி சிதறும், மக்களை ஏந்திய நத்தை, பாக்கியம் செய்தவனே!

தாபசி : போகட்டும்; இவன் என் சொல்லிக் கேட்க மாட்டான். (பின்னால் பார்த்த) யாரிங்கே? யாரோ இருடிகுமாரன்? (அரசனைக் கண்டு) நல்லவரே! இங்குவருக! விளையாட்டுப் புத்தியால் இவன் தொந்தரவு செய்யுமிந்தச் சிங்கக் குட்டியை, விடுவிக்க முடியாத இவன் கையிலிருந்து, விடுவிப்பீராக!

அரசன் : (புன் முறுவலோடு) அணுகி) ஓ! பெருமுனிகுமாரனே!

7.18 சந்தன மரத்தைச் சூழ்ந்த கரும்பாம்பு போல, ஆசிரம நியதிக்கு, மாறாக, நீ சிறு வயதிலிருந்தே மிருகங் களைக் காப்பாற்றுவதில் மகிழ்ச்சி கொள்ளும் பொறுமையை ஏன் கைவிட்டு விட்டாய்?

தாபசி : பெரியோய்! இவன் முனிகுமாரனல்லன்.

அரசன் : தோற்றத்துக்கேற்ற இவன் செய்கையே அதைக் காட்டுகிறது. ஆசிரமமென்ற காரணத்தால் அவ்வாறு கூறினேன். (கூறியபடியே செய்து சிறுவனின் மெய் தீண்டப் பெற்றுத் தனக்குள்)

719 யாரோ ஒருவனுடைய குலக்கொழுந்தாகிய இச்சிறு வனைத் தீண்டியதும் பெரிய மகிழ்ச்சியடைகிறேன். அப்படியானால் எவனுடைய உதரத்திலிருந்து இவன் முளைத்தானோ அவனுடல் தீண்டப் பெற்றால் என்ன மகிழ்ச்சியடைவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

तापसी—( उभौ निर्वर्ण्य । ) अच्छरिअं अच्छरिअं । आश्चर्यमाश्चर्यम् ।

राजा—आर्ये, किमिव ।

तापसी—इमस्स बालअस्स दे वि संवादिणी आकिदी त्ति विम्हाविदम्हि । अपरिइदस्य वि दे अप्पडिलोमो संवुत्तो त्ति । अस्य बालकस्य तेऽपि संवादिन्याकृतिरिति विस्मापितास्मि । अपरिचितस्यापि तेऽप्रतिलोमः संवृत्त इति ।

राजा—( बालकमुपलालयन् । ) नचेन्मुनिकुमारोऽयम्, अथ कोऽस्य व्यपदेशः ।

तापसी—पुरुवंसो । पुरुवंशः ।

राजा—( आत्मगतम् । ) कथमेकान्वयो मम । अतः खलु मदनुकारिणमेनमत्रभवती मन्यते । अस्त्येतत्पौरवाणामन्त्यं कुलव्रतम् ।

भवनेषु रसाधिकेषु पूर्वं
क्षितिरक्षार्थमुशान्ति ये निवासम् ।
नियतैकयतिव्रतानि पश्चा-
त्तरुमूलानि गृहीभवन्ति तेषाम् ॥ २० ॥

( प्रकाशम् । ) न पुनरात्मगत्या मानुषाणामेष विषयः ।

तापसी—जह भद्दमुहो भणादि । अच्छरासंबन्धेण इमस्स जणणी एत्थ देवगुरुणो तवोवणे पसूदा । यथा भद्रमुखो भणति । अप्सरःसंबन्धेनास्य जनन्यत्र देवगुरोस्तपोवने प्रसूता ।

राजा—( अपवार्य । ) हन्त, द्वितीयमिदमाशाजननम् । ( प्रकाशम् । ) अथ सा तत्रभवती किमाख्यस्य राजर्षेः पत्नी ।

तापसी—को तस्स धम्मदारपरिच्चाइणो णाम संकीतिदुं चिन्तिस्सदि । कस्तस्य धर्मदारपरित्यागिनो नाम संकीर्तयितुं चिन्तयिष्यति ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபசி : (இருவரையும் பாரத்து) ஆச்சிரியம்! ஆச்சிரியம்!!

அரசன் : அம்மாஎன்னது?

தாபசி : இந்தப் பாலகனுடைய தோற்றமும் உங்களுடைய தோற்றமும் ஒத்திருப்பதைக் கண்டு ஆச்சரிய மடைகிறேன். தங்களுடன் பழக்கமில்லா திருந்தளாதது வியப்புக்குரியதே!

அரசன் : (சிறுவனை அணைத்து) இவன் முனிகுமாரன் அல்லாவிட்டால் இவன் கோத்திரமென்ன?

தாபசி : பூருவமிசத்தவன்.

அரசன் : (தனக்குள்) என்னுடைய குலத்தவனே! ஆதலினாலே தான் இவன் என்னைப் போல இருக்கிறானென்று இத்தபசி எண்ணுகிறாள் போலும். பூருவமிசத்த வருக்குரிய கடைசி விரதம் இதுதான்.

7.20 புலன்களுக்கின் பந்தரும் அரண்மனையிலே உலகத்தைக் காப்பதன் பொருட்டு முதலில் வதிவர். பின்னர் ஒரே விரதமான சந்தியாசத்தை மேற்கொள்ள அவர்கள் மரத்தடிகளையே வீடாகக் கொள்வார்.

(உரக்க) ஆனால் மனிதர் தம்முடைய ஆற்றலால் இங்கே வரமுடியாதே!

தாபசி : தேவரீர் கூறியது சரியே! அப்சரப் பெண்ணொருத்தியின் தொடர்பால் இவனுடைய தாய் இவனை இந்தத் தேவபிதாவின் தபோவனத்திலே பிரசவித்தாள்.

அரசன் : (ஒருபுறம்) இதோ என் நம்பிக்கையைத் தூண்டும் இரண்டாவது காரணம் (உரக்க) இவனுடைய தாயாகிய அம்மங்கை நல்லாளைப் பத்தினியாகப் பெற்ற அரசவிருஷியின் பெயரென்ன?

தாபசி : கட்டிய மனைவியைக் கைவிட்ட அந்த மனிதனின் பெயரைக்கூற யார் தான் விரும்புவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**राजा—** ( स्वगतम् । ) **इयं खलु कथा मामेव लक्ष्यीकरोति । यदि तावदस्य शिशोर्मातरं नामतः पृच्छामि । अथवानार्यः परदारव्यवहारः ।**

( प्रविश्य मृण्मयूरहस्ता । )

**तापसी—सव्वदमण, सउन्दलावण्णं पेक्ख ।** सर्वदमन, शकुन्तलावण्यं प्रेक्षस्व ।

**बालः—**( सदृष्टिक्षेपम् । ) **कहिं वा मे अज्जू ।** कुत्र वा मम माता ।

**उभे—णामसारिस्सेण वञ्चिदो माउवच्छलो ।** नामसादृश्येन वञ्चितो मातृवत्सलः ।

**द्वितीया—वच्छ, इमस्स मित्तिआमोरअस्स रम्मत्तणं देक्ख त्ति भणिदो सि ।** वत्स, अस्य मृत्तिकामयूरस्य रम्यत्वं पश्येति भणितोऽसि ।

**राजा—**( आत्मगतम् । ) **किंवा शकुन्तलेत्यस्य मातुराख्या । सन्ति पुनर्नामधेयसादृश्यानि । अपि नाम मृगतृष्णिकेव नाममात्रप्रस्तावो मे विषादाय कल्पते ।**

**बालः—अज्जुए, रोअदि मे एसो भद्दमोरओ ।** ( इति क्रीडनकमादत्ते । ) मातः, रोचते म एष भद्रमयूरः ।

**प्रथमा—**( विलोक्य सोद्वेगम् । ) **अम्हहे, रक्खाकरण्डअं से मणिबन्धे ण दीसदि ।** अहो, रक्षाकरण्डकमस्य मणिबन्धे न दृश्यते ।

**राजा—अलमलमावेगेन । नन्विदमस्य सिंहशावविमर्दात्परिभ्रष्टम् ।** ( इत्यादातुमिच्छति । )

**उभे—मा क्खु एदं अवलम्बअ । कहं गहिदं णेण** ( इति विस्मयादुरोनिहितहस्ते परस्परमवलोकयतः । ) मा खल्विदमवलम्ब्य । कथं गृहीतमनेन ।

**राजा—किमर्थं प्रतिषिद्धा स्मः ।**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : (தனக்குள்) இந்தக் கதை என்னையே குறிக்கிறது. இப்பொழுது இக்குழந்தையின் தாயுடைய பெயரைப் பற்றிக் கேட்டாலோ; ஆனால் பிறன் மனைவிபெயரைக் கேட்பது ஒழுக்கமன்று.

தாபசி : (களி மண் மயிற் பொம்மையைக் கையிலே கொண்டு) சர்வதமன! ஃழ சகுந்தலாவண்ணியம் பார்.

சிறுவன் : (சுற்றிப் பார்த்து) அம்மா எங்கே நிற்கிறாள்.

தாபசி

இருவரும் : தாயிடத்துள்ள பற்றினால் தாயின் பெயரோடொத்த சொற்களைக் கேட்டு ஏமாந்து விட்டான்.

இ.தாபசி : குழந்தாய்! சகுந்தலாவண்யமென்பது பட்சியின் அழகு, இந்த மயிலின் அழகைப் பார். என்று தான் சொன்னேன்.

அரசன் : (தனக்குள்) என்ன? இவன் தாயின் பெயரும் மாத்திரம் நம்பினால் ஈற்றில் கானல் நீர் போலத் துயரடைய நேருமோ?

சிறுவன் : இந்த நல்லமயில் எனக்கு மிகப் பிடித்தமானது. (என்று பொம்மையை எடுக்கிறான்)

முதற்றாபசி : அந்த ரட்சாபந்தனனத்தை மணிக்கட்டிற் காண வில்லையே!

அரசன் : திகலடைய வேண்டாம். சிங்கச் குட்டியோடு மல்லாடும் போது அதுவிழுந்து விட்டது. (என்று கூறி எடுக்க விரும்புகிறான்.

தாபசிகள்

இருவரும் : எடுக்க வேண்டாம். என்ன எடுத்து விட்டீர்களா? (அச் சரியத்தால் நெஞ்சிற்கையை வைத்து ஒருவரை யொருவர் பார்க்கின்றனர்)

அரசன் : எதற்காகத் தடுத்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**प्रथमा**—सुणादु महाराओ । एसा अवराजिदा णाम ओसही इमस्स जादकम्मसमए भअवदा मारीएण दिण्णा । एदं किल मादापिदरो अप्पाणं च वज्जिअ अवरो भूमिपडिदं ण गेण्हादि । शृणोतु महाराजः । एषापराजिता नामौषधिरस्य जातकर्मसमये भगवता मारीचेन दत्ता । एतां किल मातापितरावात्मानं च वर्जयित्वापरो भूमिपतितां न गृह्णाति ।

**राजा**—अथ गृह्णाति ।

**प्रथमा**—तदो तं सप्पो भविअ दंसइ । ततस्तं सर्पो भूत्वा दशति ।

**राजा**—भवतीभ्यां कदाचिदस्याः प्रत्यक्षीकृता विक्रिया ।

**उभे**—अणेअसो । अनेकशः ।

**राजा**—( सहर्षम् । आत्मगतम् । ) कथमिव संपूर्णमपि मे मनोरथं नाभिनन्दामि । ( इति बालं परिष्वजते । )

**द्वितीया**—सुव्वदे, एहि । इमं वुत्तन्तं णिअमव्वावुडाए सउन्दलाए णिवेदेम्ह । सुव्रते, एहि । इम वृत्तान्तं नियमव्यापृतायै शकुन्तलायै निवेदयावः ।

( इति निष्क्रान्ते । )

**बालः**—मुञ्च मं । जाव अज्जुए सआसं गमिस्सं । मुञ्च माम् । यावन्मातुः साकाशं गमिष्यामि ।

**राजा**—पुत्रक, मया सहैव मातरमभिनन्दिष्यसि ।

**बालः**—मम क्खु तादो दुस्सन्दो । ण तुमं । मम खलु तातो दुष्यन्तः । न त्वम् ।

**राजा**—( सस्मितम् । ) एष विवाद एव प्रत्याययति ।

( ततः प्रविशत्येकवेणीधरा शकुन्तला । )

**शकुन्तला**—विआरकाले वि पकिदित्थं सव्वदमणस्स ओसहिं सुणिअ ण मे आसा आसि अत्तणो भाअहेएसु । अहवा जह साणुमदीए आचक्खिदं तह संभावीअदि एदं । विकारकालेऽपि प्रकृतिस्थां सर्वदमनस्यौषधिं श्रुत्वा न म आशासीदात्मनो भागधेयेषु । अथवा यथा सानुमत्याख्यातं तथा संभाव्यत एतत् ।

**राजा**—( शकुन्तलां विलोक्य । ) अये, सेयमत्रभवती शकुन्तला । यैषा

वसने परिधूसरे वसाना
नियमक्षाममुखी धृतैकवेणिः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்றா பசி : மகா ராசாவே கேட்பீராக! இது அபராசிதா என்ற மூலிகை. மரீசி பகவான் இவனுடைய சாதகருமங் களைச் செய்தபோது கொடுத்தார். இது

சகுந்தலையின் அழகு, அல்லது பட்சியின் அழகு.

அரசன் : அது அவ்வாறு மாறியதைக் கண்டிருக்கிறீர்களா?

இருவரும் : பலமுறை.

அரசன் : (மகிழ்ச்சியுடன் தனக்குள்) இனியென்ன? கடைசியாக என் ஆசை நிறைவேறிவிட்டது. என்று ஏன் மகிழ்ச்சி யடையக் கூடாது? (சிறுவனைத் தழுவல்)

இரண்டாவது தபாசி: சுவிரதை! நியமங்களிலீடுபட்டிருக்கும் சகுந்தலைக்கு இச்சம்பவங்களைத் தெரிவிப்போம் வா. (போகின்றனர்)

சிறுவன் : விடு என்னை! நான் அம்மாவிடம் போகப் போகிறேன்.

அரசன் : மகனே! என்னோடு வா, அம்மாவைக் கண்டு வணங்கு வோம்.

சிறுவன் : என் தந்தை துஷ்யந்தன். நீயில்லை.

அரசன் : (புன்முறுவலோடு) இந்த விவாதமே எனக்கு நம்பிக்கை தருகிறது.

**ஒரே பின்னலாகப் பின்னிய வேணியுடையவளாய்ச் சகுந்தலை வருதல்)**

சகுந்தலை : சர்வதமனனுடைய மூலிகை மாற வேண்டிய காலத் திலும் மாறாமல் அப்படியேயிருந்ததைக் கேள்விப் பட்டதும் எனது அதிட்டத்தில் நம்பிக்கையிழந்து விட்டேன். அல்லது பானுமதி கூறியவாறு நிகழ்ந்து விட்டதோ?

அரசன் : (சகுந்தலையைப் பார்த்து தனக்குள்) ஆ! இவள் சகுந்தலையே தான்! இரண்டு கபில நிற உடைகளை அணிந்து, விரதங்களால் வாடிய முத்துடன் சடையை ஒரே பின்னலாக முடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

अतिनिष्करुणस्य शुद्धशीला
मम दीर्घं विरहव्रतं बिभर्ति ॥ २१ ॥

शकुन्तला—( पश्चात्तापविवर्णं राजानं दृष्ट्वा । ) ण क्खु अज्जउत्तो विअ । तदो को एसो दाणिं किदरक्खामङ्गलं दारअं मे गत्तसंसग्गेण दूसेदि । न खल्वार्यपुत्र इव । ततः क एष इदानीं कृतरक्षामङ्गलं दारकं मे गात्रसंसर्गेण दूषयति ।

बालः—( मातरमुपेत्य । ) अज्जुए, एसो कोवि पुरिसो मं पुत्तेत्ति आलिङ्गदि । मातः, एष कोऽपि पुरुषो मां पुत्र इत्यालिङ्गति ।

राजा—प्रिये, क्रौर्यमपि मे त्वयि प्रयुक्तमनुकूलपरिणामं संवृत्तम् । यदाहमिदानीं त्वया प्रत्यभिज्ञातमात्मानं पश्यामि ।

शकुन्तला—( आत्मगतम् ) हिअअ, समस्सस समस्सस । परिच्चत्तमच्छरेण अणुअम्पिअम्हि देव्वेण । अज्जउत्तो क्खु एसो । हृदय, समाश्वसिहि समाश्वसिहि । परित्यक्तमत्सरेणानुकम्पितास्मि दैवेन । आर्यपुत्रः खल्वेषः ।

राजा—प्रिये,

स्मृतिभिन्नमोहतमसो दिष्ट्या प्रमुखे स्थितासि मे सुमुखि ।
उपरागान्ते शशिनः समुपगता रोहिणी योगम् ॥ २२ ॥

शकुन्तला—जेदु जेदु अज्जउत्तो । ( इत्यर्धोक्ते बाष्पकण्ठी विरमति । ) जयतु जयत्वार्यपुत्रः ।

राजा—सुन्दरि,

बाष्पेण प्रतिषिद्धेऽपि जयशब्दे जितं मया ।
यत्ते दृष्टमसंस्कारं पाटलोष्ठपुटं मुखम् ॥ २३ ॥

बालः—अज्जुए, को एसो । मातः, क एषः ।

शकुन्तला—वच्छ, दे भाअहेआइं पुच्छेहि । वत्स, ते भागधेयानि पृच्छ ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க கொடுமை செய்த என்னைப் பிரிந்து, நீண்ட பிரிவு நோன்பை அனுட்டிக்கும் தூய ஒழுக்கமுடைய இவள், சகுந்தலையே!

சகுந்தலை : (கழிவிரக்கத்தால் வெளிறிய அரசனைப் பார்த்து) இவர் எனது கணவரைப் போலில்லை. இரட்சாமங்கலமான மூலிகையால் காப்பாற்றப்பட்ட என் குழந்தையின் உடலைத் தழுவி மலினமடையச் செய்த இவர் பாரா யிருக்கலாம்.

சிறுவன் : (தாயினிடம் ஆணுகி) அம்மா! யாரிந்த மனிதன்? என்னை "மகனே" என்று சொல்லித் தழுவுகிறார்.

அரசன் : அன்பே! நானுனக்குச் செய்த கொடுமை கூட நல்ல பயனைத் தந்து விட்டது. ஏனெனில் நீ யென்னை அறிந்து கொண்டாயென்பது தெரிகிறது.

சகுந்தலை : (தனக்குள்) மனமே! ஆறுதலாயிரு; ஆறுதலாயிரு, விதிகூடப் பொறுமையை விட்டு என்மீது கருணை காட்டத்தொடங்கியிட்டது. இவர் எனது கணவரே!

அரசன் : அன்பே!

7.22 நினைவினால் மோக இருள் நீங்கி விட்டது. சுந்தரவதனி! விதிவசத்தால் நீ என்முன் நிற்கிறாய். கிரகணத்தின் பின்னர் உரோகிணி சந்திரனோடு கூடிவிட்டது.

சகுந்தலை : வெற்றி! வெற்றி!! (பாதி சொல்லுமுன் கண்ணீர் வாடிய விக்குகிறாள்)

அரசன் : அன்பே! வெற்றி என்ற சொல்லைக் கண்ணீர் விழுங்கி மறைத்துவிட்ட போதிலும், நான்

7.2 வெற்றி பெற்றுவிட்டேன். ஒப்பனை செய்யாத முகத்தில் விளங்கும் கொவ்வைச் செவ்வாயைக் கண்டு விட்டேன்.

சிறுவன் : அம்மா! இவர் யார்?

சகுந்தலை : குழந்தாய் உன் விதியைக் கேள்! (உன் பாகத்தைக் கேள்) (அழுகிறாள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—( शकुन्तलायाः पादयोः प्रणिपत्य । )

सुतनु हृदयात्प्रत्यादेशव्यलीकमपैतु ते
किमपि मनसः संमोहो मे तदा बलवानभूत् ।
प्रबलतमसामेवंप्रायाः शुभेषु प्रवृत्तयः
स्रजमपि शिरस्यन्धः क्षिप्तां धुनोत्यहिशङ्कया ॥ २४ ॥

शकुन्तला—उट्ठेदु अज्जउत्तो । णूणं मे सुअरिअप्पडिबन्धउ पुराकिदं तेसु दिअहेसु परिणाममुहं आसि जेण साणुक्कोसो वि अज्जउत्तो मइ विरसो संवुत्तो । उत्तिष्ठत्वार्यपुत्रः । नूनं मे सुचरितप्रतिबन्धकं पुराकृतं तेषु दिवसेषु परिणाममुखमासीद्येन सानुक्रोशोऽप्यार्यपुत्रो मयि विरसः संवृत्तः ।

( राजोत्तिष्ठति । )

शकुन्तला—अह कहं अज्जउत्तेण सुमरिदो दुक्खभाई अअं जणो । अथ कथमार्यपुत्रेण स्मृतो दुःखभाग्ययं जनः ।

राजा—उद्धृतविषादशल्यः कथयिष्यामि ।

मोहान्मया सुतनु पूर्वमुपेक्षितस्ते
यो बाष्पबिन्दुरधरं परिबाधमानः ।
तं तावदाकुटिलपक्ष्मविलग्नमद्य
बाष्पं प्रमृज्य विगतानुशयो भवेयम् ॥ २५ ॥

( इति यथोक्तमनुतिष्ठति । )

शकुन्तला—( नाममुद्रां दृष्ट्वा । ) अज्जउत्त, एदं तं अङ्गुलीअअं । आर्यपुत्र, एतत्तदङ्गुलीयकम् ।

राजा—अस्मादङ्गुलीयोपलम्भात्खलु स्मृतिरुपलब्धा ।

शकुन्तला—विसमं किदं णेण जं तदा अज्जउत्तस्स पच्चाअकाले दुल्लहं आसि । विषमं कृतमनेन यत्तदार्यपुत्रस्य प्रत्ययकाले दुर्लभमासीत् ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : மெல்லியலே! உன்னை நான் தள்ளிவிட்ட

7.24 துன்பம் நீங்கட்டும் அந்நேரத்தில் என் மனத்தை ஒரு மோக இருள் ஆட்கொண்டு விட்டது. பேரிருள் சூழ்ந்த சித்த விருத்தியுடையவர் நல்ல வற்றைக் கூட இவ்வாறே பெரும்பாலும் காண்பர். குருடன் தலையிற் பூமாலையைச் சூட்டினாலும் பாம்பென்று பயந்து அதை எறிந்து விடுவான். (அவள் பாதத்தில் விழுகிறான்)

சகுந்தலை : எழுந்திருங்கள். எழுந்திருங்கள! என் பிரபோ, முற்பிறவியிற் செய்த தீவினைப் பயன் அந்நாளில் என் புண்ணியப்பலனைத் தடுத்து நின்றது. போலும். அதனாலே தான் கருணை மிகுந்த தாங்கள் என்னிடம் வெறுப்புக் கொண்டீர்கள். (அரசன் எழுதல்) துயரமே கதியாயிருந்த இவளை எம்பெருமான் எவ்வாறு நினைவு கொண்டீர்கள்?

அரசன் : துயரென்ற அம்பை இழுத்து எடுத்தபின் சொல்லுகின்றேன்.

7.25 மெல்லியலே! சற்றே வளைந்த கண்ணிமையில் இப்போது தொங்கும் அந்தக் கண்ணீர்த் துளி முன்னொரு நாள் உன் கீழதரத்தை நலித்து நிற்க, நான் என் மோகத்தாலதை அலட்சியஞ் செய்துவிட்டேன். அதைத் துடைத்து என் துயரையும் துடைப்பேன். (சொன்னபடியே செய்கிறான்)

சகுந்தலை : (கணையாழியைக் கண்டு) பெருமானே! இது தான் அந்தக் கணையாழி!

அரசன் : இந்தக் கணையாழியைப் பெற்றதாலே தான் என் நினைவையும் மறுபடி பெற்றேன்.

சகுந்தலை : என் கணவருக்கு நிதர்சனப்படுத்தும் வேளையில் இந்தக் கணையாழி குறும்பு செய்து, காணாமற் போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—तेन ह्यृतुसमवायचिह्नं प्रतिपद्यतां लता कुसुमम् ।

शकुन्तला—ण से विस्ससामि । अज्जउत्तो एव्वं णं धारेदु ।
नास्या विश्वसिमि । आर्यपुत्र एवैतद्धारयतु ।

( ततः प्रविशति मातलिः । )

मातलिः—दिष्ट्या धर्मपत्नीसमागमेन पुत्रमुखदर्शनेन चायुष्मान् वर्धते ।

राजा—अभूत्संपादितस्वादुफलो मे मनोरथः । मातले, न खलु विदितोऽयमाखण्डलेन वृत्तान्तः स्यात् ।

मातलिः—( सस्मितम् । ) किमीश्वराणां परोक्षम् । एत्वायुष्मान् । भगवान्मारीचस्ते दर्शनं वितरति ।

राजा—शकुन्तले, अवलम्ब्यतां पुत्रः । त्वां पुरस्कृत्य भगवन्तं द्रष्टुमिच्छामि ।

शकुन्तला—हिरिआमि अज्जउत्तेण सह गुरुसमीवं गन्तुं ।
जिह्रेम्यार्यपुत्रेण सह गुरुसमीपं गन्तुम् ।

राजा—अप्याचरितव्यमभ्युदयकालेषु । एह्येहि ।

( सर्वे परिक्रामन्ति । )

( ततः प्रविशत्यदित्या सार्धमासनस्थो मारीचः । )

मारीचः—( राजानमवलोक्य । ) दाक्षायणि,

पुत्रस्य ते रणशिरस्ययमग्रयायी
दुष्यन्त इत्यभिहितो भुवनस्य भर्ता ।
चापेन यस्य विनिवर्तितकर्म जातं
तत्कोटिमत्कुलिशमाभरणं मघोनः ॥ २६ ॥

अदितिः—संभावणीआणुभावा से आकिदि । संभावनीयानुभावास्याकृतिः ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் : வசந்தகாலம் வந்துவிட்டதென்பதற்கறிகுறியாக, கொடி தன் மலரோடு சேரட்டும்.

சகுந்தலை : வேண்டாம், எனக்கு அதில் நம்பிக்கையில்லை. எம்பெருமானே அதை அணிந்து கொள்ளட்டும்

(மாதலி வருகிறான்)

மாதலி : நீடுவாழ்வீர். தரும பத்தினியை அடைந்ததும் புதல்வனைக் கண்டதும் நல்ல அதிஷ்டமே!

அரசன் : எனது மனோரதம் இனிய பழத்தைப் பெற்றுவிட்டது. மாதலி! இந்த நிகழ்ச்சிகள் இந்திரனுக்குத் தெரியாமலிராவென) பெரியோர்க்கு என்ன தான் மறைபொருள். நீடுவாழ்வீர் வருக! பகவான் மரீசி தங்களுக்குத் தரிசனம் தரம் ஆயத்தமாயிருக்கிறார்.

அரசன் : சகுந்தலை! புதல்வனைப் பிடி, நீ முன்னுக்குச் செல், உன்னோடு கூடவே சுவாமியைக் காண விரும்பு கிறேன்.

சகுந்தலை : எம்பெருமானோடு கூடச் சென்று சுவாமியைக் காண வெட்கப்படுகிறேன்.

அரசன் : செல்வம் மிகுங்காலத்திலே இதையுந் தாங்கிக் கொள்ள வேண்டியது தான்.

வருக! வருக!!

(எல்லாரும் நடக்கிறார்கள்)

மரீசி : (அரசனைப் பார்த்து) தாட்சாயணி! உன் மகனுடைய போரிலெல்லாம் முன்னாற் செல்லும் துஷ்யந்தன் இவன் உலகத்துக்கு அரசன். தன் வேலையை முற்றுவித்துக் கிடக்கும் இவனுடைய வில்லு இருப்பதால், இந்திரனுடைய முனைகொண்ட வச்சி ராயுதம் வெறும் ஆபரணமாகவே விளங்குகிறது.

அதிதி : இவன் தோற்றமே அதைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

मातलिः—आयुष्मन्, एतौ पुत्रप्रीतिपिशुनेन चक्षुषा दिवौकसां पितरावायुष्मन्तमवलोकयतः । तावुपसर्प ।

राजा—मातले एतौ

प्राहुर्द्वादशधा स्थितस्य मुनयो यत्तेजसः कारणं
भर्तारं भुवनत्रयस्य सुषुवे यद्यज्ञभागेश्वरम् ।
यस्मिन्नात्मभवः परोऽपि पुरुषश्चक्रे भवायास्पदं
द्वन्द्वं दक्षमरीचिसंभवमिदं तत्स्रष्टुरेकान्तरम् ॥ २७ ॥

मातलिः—अथ किम् ।

राजा—( उपगम्य । ) उभाभ्यामपि वासवानुयोज्यो दुष्यन्तः प्रणमति ।

मारीचः—वत्स, चिरं जीव । पृथिवीं पालय ।

अदितिः—वच्छ अप्पडिरहो होहि । वत्स अप्रतिरथो भव ।

शकुन्तला—दारअसहिदा वो पादवन्दणं करेमि । दारकसहिता वां पादवन्दनं करोमि ।

मारीचः—वत्से,

आखण्डलसमो भर्ता जयन्तप्रतिमः सुतः ।
आशीरन्या न ते योग्या पौलोमीसदृशी भव ॥ २८ ॥

अदितिः—जादे, भत्तुणो अभिमदा होहि । अवस्सं दीहाऊ वच्छओ उहअकुलणन्दणो होदु । उवविसह । जाते, भर्तुरभिमता भव । अवश्यं दीर्घायुर्वत्स उभयकुलनन्दनो भवतु । उपविशत ।

( सर्वे प्रजापतिमभित उपविशन्ति । )

मारीचः—( एकैकं निर्दिशन् । )

दिष्ट्या शकुन्तला साध्वी सदपत्यमिदं भवान् ।
श्रद्धा वित्तं विधिश्चेति त्रितयं तत्समागतम् ॥ २९ ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவி : நீடுவாழ்வீர்! இதோ தேவர்க்குத் தாய் தந்தையரான இவர்கள், பதல்வனைப் பார்ப்பதுபோலத் தங்கள் மீது கண்ணோட்டஞ் செலுத்துகின்றனர். அணுகுக.

அரசன் : மாதலி!

7.27 சூரியனின் பன்னிரண்டு உருவங்களில் காணப்படும் ஒளிக்கு மூலகாரணமென்று முனிவர் கூறும் சோடிகள் இவர்கள் தாமா? தட்சனுக்கு மகளாகவும், மாரீசிக்கு மகனாகவும் பிறந்த தம்பதிகள் இவர்கள் தாமா? பிரம் மாவுக்கு ஒரு தலை முறைக்குப் பிந்தியவர்கள். இவர்கள் தாமா?

மூன்று உலகங்களுக்கு மீசனும், அவிப்பாகத்தை யேற்கும் முதன்மையுடையவனுமாகிய இந்திரனின் இருபெருங்குரவர் இவர்கள் தாமோ? சுயம்புவான பிரமாகவுக்கும்,

மேலான விஷ்ணு, தாம் பிறப்பதற்கு இடமாய் ஏற்றுக் கொண்ட தாய் தந்தையர் இவர் தாமோ?

மாதலி : வேறு யார்?

அரசன் : (முன் வந்து இந்திரன் சேவகனான துஷ்யந்தன் தங்களி ருவர்க்கும் வணக்கம் செலுத்துகிறான்.

மரீசி : குழந்தாய்! சிரஞ்சீவியாய் உலகைக் காப்பாயாக!

அதிதி : குழந்தாய்! இணையற்ற வீரனாக விளங்குவாயாக!

சகுந்தலை : குழந்தையோடு தங்கள் பாதங்களை வணங்குகிறேன்.

மரீசி : குழந்தாய்!

7.28 உன் கணவன் இந்திரனுக்கு ஒப்பாவான். உன் மகன் சயந்தன். வேறு வகையான வாழ்த்து உனக்கு வேண் டாம். நீ இந்திரன் மனைவி பௌலோமி போல விளங்குவாய்!

அதிதி : குழந்தாய்! கணவன் மதிப்பைப் பெறுவாயாக! சிரஞ் சீவியான இக்குழந்தை இரு குலத்துக்கும் மகிழ்ச் சியைத் தருபவனாய் விளங்குவானாக! இரு.

**(எல்லோரும் பிரசாபதியைச் சுற்றி இருக்கிறார்கள்)**

மரீசி : (ஒவ்வொருவரையுஞ் சுட்டிக் காட்டி)

7.29 நற்குணம் வாய்ந்த சகுந்தலை இந்நற் புதல்வன், நீங்கள் ஆகிய இம்மூன்றுபேரும் சிரத்தை, செல்வம், விதி என்ற மூன்று உருவத்தில் இங்கு அதிட்ட வசமாய்க் கூடி யுள்ளீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राजा—भगवन्, प्रागभिप्रेतसिद्धिः। पश्चाद्दर्शनम्। अतोऽपूर्वः खलु वोऽनुग्रहः। कुतः।

उदेति पूर्वं कुसुमं ततः फलं
घनोदयः प्राक्तदनन्तरं पयः।
निमित्तनैमित्तिकयोरयं क्रम-
स्तव प्रसादस्य पुरस्तु संपदः॥ ३०॥

मातलिः—एवं विधातारः प्रसीदन्ति।

राजा—भगवन्, इमामाज्ञाकरीं वो गान्धर्वेण विवाहविधिनोपयम्य कस्यचित्कालस्य बन्धुभिरानीतां स्मृतिशैथिल्यात्प्रत्यादिशन्नपराद्धोऽस्मि तत्रभवतो युष्मत्सगोत्रस्य कण्वस्य। पश्चादङ्गुलीयकदर्शनादूढपूर्वां तद्दुहितरमवगतोऽहम्। तच्चित्रमिव मे प्रतिभाति।

यथा गजो नेति समक्षरूपे
तस्मिन्नपक्रामति संशयः स्यात्।
पदानि दृष्ट्वा तु भवत्प्रतीति-
स्तथाविधो मे मनसो विकारः॥ ३१॥

मारीचः—वत्स, अलमात्मापराधशङ्कया। संमोहोऽपि त्वय्यनुपपन्नः। श्रूयताम्।

राजा—अवहितोऽस्मि।

मारीचः—यदैवाप्सरस्तीर्थावतरणात्प्रत्यक्षवैक्लव्यां शकुन्तलामादाय मेनका दाक्षायणीमुपगता तदैव ध्यानादवगतोऽस्मि दुर्वाससः



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் 7.30 : முதலில் நினைத்த கருமங் கைகூடியயற்று. பின்னர் தங்கள் தரிசனம் கிடைத்தது. எனவே தங்களருள் உண்மையில் அபூர்வமானதே! ஏனெனில்:

முதலில் மலர் : பின்னர் பழம் முதலில் மேகங்களின் எழுச்சி; பின்னர் மழையின் வீழ்ச்சி, காரணகாரியங்களின் முறை இதுவே. ஆனால் தேவரீருடைய அருள் கிடைக்கு முன்னரே சிறப்புப் பெற்று விட்டேன்.

மாதலி : வேதாக்களிவ்வாறே அருள் புரிவர்.

அரசன் : தேவரீர்! என் சொற்படி நடக்கும் இவளைக் காந்தருவ முறைப்படி மணஞ் செய்து, பின்னர் நினைவிழந்த மையால் இவளை இவள் சுற்றத்தவர் கொண்டு வந்த போதும் தள்ளி விட்டேன். அதனால் எம்பிரானுடைய பந்துவான கண்ணுவ முனிவருக்குத் தவறிழைத்து விட்டேன். பின்னர் கணையாழியைக் கண்டதும் முன், இக்குமாரியை மணந்தேனென உணர்ந்து கொண்டேன். இது விசித்திரமான தாயிருக்கிறது.

7.31 கண்முன் தெரியும் போது இது யானையன்றென எண்ணினேன் பின்னர் அதுபோன பின் ஐயமுண்டாகி அடிச்சுவட்டைப் பார்த்து உறுதி ஏற்படுவது போலவோ என் மனத்திலும் மாற்றமுண்டானது.

மரீசி : அப்சர தீர்த்தக் கரையிலிருந்து, மேனகை, துயரமுற்ற சகுந்தலையை அழைத்துக் கொண்டு தாட்சாயணியிடம் வந்த பொழுதே, உனது இத்தருமபத்தினியைத் துவாச முனிவரின் சாபத்தினாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

शापादियं तपस्विनी सहधर्मचारिणी त्वया प्रत्यादिष्टा नान्यथेति। स चायमङ्गुलीयकदर्शनावसानः।

राजा—( सोच्छ्वासम्। ) एष वचनीयान्मुक्तोऽस्मि।

शकुन्तला—( स्वगतम्। ) दिट्ठिआ अकारणपच्चादेसी ण अज्जउत्तो। ण हु सत्तं अत्ताणं सुमरेमि। अहवा पत्तो मए स हि सावो विरहसुण्णहिअआए ण विदिदो। अदो सहीहिं संदिट्ठम्हि भत्तुणो अङ्गुलीअअं दंसइदव्वं त्ति। दिष्टयाकारणप्रत्यादेशी नार्यपुत्रः। न खलु शप्तमात्मानं स्मरामि। अथवा प्राप्तो मया स हि शापो विरहशून्यहृदयया न विदितः। अतः सखीभ्यां संदिष्टास्मि भर्तुरङ्गुलीयकं दर्शयितव्यमिति।

मारीचः—वत्से, चरितार्थासि। सहधर्मचारिणं प्रति न त्वया मन्युः कार्यः। पश्य।

शापादसि प्रतिहता स्मृतिरोधरूक्षे
भर्तर्यपेततमसि प्रभुता तवैव।
छाया न मूर्च्छति मलोपहतप्रसादे
शुद्धे तु दर्पणतले सुलभावकाशा॥ ३२॥

राजा—यथाह भगवान्।

मारीचः—वत्स, कच्चिदभिनन्दितस्त्वया विधिवदस्माभिरनुष्ठितजातकर्मा पुत्र एष शाकुन्तलेयः।

राजा—भगवन्, अत्र खलु मे वंशप्रतिष्ठा। बालं हस्तेन गृह्णाति।

मारीचः—तथा भाविनमेनं चक्रवर्तिनमवगच्छतु भवान्। पश्य।

रथेनानुद्धातस्तिमितगतिना तीर्णजलधिः
पुरा सप्तद्वीपां जयति वसुधामप्रतिरथः।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் நீ தள்ளிவிட்டாய் என்பதைத் தியானத்தால் அறிந்து கொண்டேன் அதுவும் கணையாழியைக் கண்டதும் தீர்ந்து விட்டது.

அரசன் : (பெருமூச்சு விட்டு) பழியிலிருந்து நீங்கிவிட்டேன்.

சகுந்தலை : (தனக்குள்) காரணமின்றி என் தலைவர் என்னைக் கைவிடவில்லையென்பது மகிழ்ச்சிக்குரியதே. சாபம் எனக்கு நினைவில்லை. ஒருவேளை சாபங் கிடைத்திருந்த போதிலும் நான் தலைவரைப் பிரிந்த துயரினால் அறியாதிருந்திருப்பேன். கணையாழியைக் கணவருக்குக் காட்டுமாறு தோழிகள் கூறியது இதனாற்றான் போலும்.

மரீசி : குழந்தாய்! நடந்தவற்றை அறிந்து விட்டாய். எனவே உன் கணவனிடம் கோபங் காட்டாதே பார்.

7.32 சாபத்தினால் நீ கைவிடப்பட்டாய்; அவனும் நினைவிழந்தமையால் உனக்குக் கொடுமை செய்தான். இன்று இருள் நீங்கிய உன் கணவன் மனதில் நீயே ஆட்சி புரிவாய். களங்கம் படிந்த கண்ணாடியில் நிழல் தெரிவதில்லை. களங்கமற்றதானால், அதில் சாயல் நன்றாகத் தெரியும்.

அரசன் : குழந்தாய்! சகுந்தலையிடத்து பிறந்த உன் புதல்வனுக்கு விதிப்படி சாதகர்மஞ் செய்தோம் அவனை நீ வரவேற்றாயா?

அரசன் : அவனே என் கலத்துக்கு ஆதாரம் (சிறுவனைக் கையால் தூக்குகிறான்)

மரீசி : அவனே சக்கரவர்த்தியென்பதை அறிவாயாக!

7.33 குலுங்காது செல்லும் தேர்மீது ஊர்ந்து, கடலைக் கடந்து, ஏழு சீனுகளைக் கொண்ட இவ்வுலகை வெற்றி கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

इहायं सत्त्वानां प्रसभदमनात्सर्वदमनः
पुनर्यास्यत्याख्यां भरत इति लोकस्य भरणात् ॥ ३३ ॥

राजा—भगवता कृतसंस्कारे सर्वमस्मिन्वयमाशास्महे ।

अदितिः—भअवं, इमाए दुहिदुमणोरहसंपत्तीए कण्णो वि दाव सुदवित्थारो करीअदु । दुहिदुवच्छला मेणआ इह एव्व उपचरन्ती चिट्ठदि । भगवन् अनया दुहितृमनोरथसंपत्त्या कण्वोऽपि तावच्छ्रुतविस्तारः क्रियताम् । दुहितृवत्सला मेनाकेहैवोपचरन्ती तिष्ठति ।

शकुन्तला—( आत्मगतम् । ) मणोरहो क्खु मे भणिदो भअवदीए । मनोरथः खलु मे भणितो भगवत्या ।

मारीचः—तपःप्रभावात्प्रत्यक्षं सर्वमेव तत्रभवतः ।

राजाः—अतः खलु मम नातिक्रुद्धो मुनिः ।

मारीचः—तथाप्यसौ प्रियमस्माभिः प्रष्टव्यः । कः कोऽत्र भोः ।

( प्रविश्य । )

शिष्यः—भगवन् , अयमस्मि ।

मारीचः—गालव, इदानीमेव विहायसा गत्वा मम वचनात्तत्रभवते कण्वाय प्रियमावेदय । यथा पुत्रवती शकुन्तला तच्छापनिवृत्तौ स्मृतिमता दुष्यन्तेन प्रतिगृहीतेति ।

शिष्यः—यदाज्ञापयति भगवान् । ( इति निष्क्रान्तः । )

मारीचः—वत्स, त्वमपि स्वापत्यदारसहितः सख्युराखण्डलस्य रथमारुह्य ते राजधानीं प्रतिष्ठस्व ।

राजा—यदाज्ञापयति भगवान् ।



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையற்ற வீரனாவான். மிருகங்களை அடக்கி ஆள்வதால் சர்வதமனன் என்ற பெயரைப் பெற்ற இவன் உலகத்தைத் தாங்குவதால் இனி பரதன் எனப் பெயர் பெறுவான்.

அரசன் : தாங்களே சாதகர்மங்களைச் செய்த இச்சிறுவனிடத்தில் இவையெல்லாம் உண்டாவதை எதிர்பார்க்கலாம்.

அதிதி : எம்பெருமான்! தனது புதல்வியின் மனோரதங்கள் நிறைவேறியதைக் கண்ணுவ முனிவர்க்கும் அறிவிக்க வேண்டும். தன் மகள் மீது நிறைந்த அன்புள்ள மேனகையும் பணிவிடைசெய்து கொண்டு இங்கேயே நிற்கிறாள்.

சகுந்தலை : (தனக்குள்) என் விருப்பத்தையே தவழுதாட்டி சொல்லி விட்டாள்.

மரீசி : தவத்தின் மகிமையால் அவர் இதை யெல்லாம் அறிந்திருப்பார்.

அரசன் : அதனாலே தான் முனிவர் என் மீது கோபங் கொள்ளவி ல்லை.

மரீசி : இருந்தும் இந்த மங்களமான செய்தியை அவருக்கு அறிவித்துவிட வேண்டும். யாரங்கே?

சீடன் : (வருதல்) எம்பெருமானே!

மரீசி : காவல்! ஆகாய மார்க்கமாக இதோ சென்று கண்ணுவ முனிவர்க்கு இந்நற் செய்தியை நான் சொன்னதாக "சகுந்தலையும் மகனும். சாபம் முடிந்தமை காரணமாக நினைவு வரப் பெற்ற துஷ்யந்தனால் ஏற்றுக் கொள்ளப்பட்டனர்"! என்று அறிவி.

சீடன் : எம்பிரான் கட்டளைப்படியே! (செல்கிறான்)

மரீசி : மகனே! நீயும் உன் குழந்தையுடனும், மனைவியுடனும், உன் நண்பனான இந்திரனுடைய தேரிலேறி இராசதானிக்குச் செல்வீராக!

அரசன் : சுவாமியின் கட்டளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

मारीचः—अपि च ।

तव भवतु बिडौजाः प्राज्यवृष्टिः प्रजासु
त्वमपि विततयज्ञः वज्रिणं प्रीणयस्व ।
युगशतपरिवर्तानेवमन्योन्यकृत्यै-
र्नयतमुभयलोकानुग्रहश्लाघनीयैः ॥ ३४ ॥

राजा—भगवन् , यथाशक्ति श्रेयसे यतिष्ये ।

मारीचः—वत्स, किं ते भूयः प्रियमुपकरोमि ।

राजा—अतः परमपि प्रियमस्ति । यदिह भगवान्प्रियं कर्तुमिच्छति तर्हीदमस्तु । ( भरतवाक्यम् । )

प्रवर्ततां प्रकृतीहिताय पार्थिवः
सरस्वती श्रुतमहतां महीयताम् ।
ममापि च क्षपयत नीललोहितः
पुनर्भवं परिगतशक्तिरात्मभूः ॥ ३५ ॥

( इति निष्क्रान्ताः सर्वे )

सप्तमोऽङ्कः ।

समाप्तमिदमभिज्ञानशाकुन्तलं नाम नाटकम् ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரீசி : இந்திரன் உன் குடிகளுக்கு வழாது மழை தருவானாக! நீயும் வேள்வியால் விண்ணவரை மகிழ்விப்பாயாக! இவ்வாறு இரு உலகங்களும் பரஸ்பரம் செய்து கொள்ளும் புகழ் மிக்க நன்மைகளால் ஆயிரமாயிர மாண்டுகள் கழிவதாக!

அரசன் : எம்பெருமான்! இப்பெருஞ் சிறப்பை அடைய என்னாலான வரை முயல்வேன்.

மரீசி : மகனே!வேறென்ன வேண்டுஞ் சொல்?

அரசன் : இதிலும் மேலான என்ன வேண்டியிருக்கிற. இருந்தும் எம்பிரான் அருள் செய்ய விரும்புவதால் இது கை கூடுவதாக! (பரத வாக்கியம்) குடிகளின் நன்மைக்கு அரசன் முயல்வானாக!! வேதங்களையறிந்தாரின் பேச்சுக்கு மகிமையுடாவதாக!

தான்றோன்றியாய் எங்கும் நீக்கமற நிறைந்த நலலோகிதனான சிவபெருமான் என் பிறவிக்கு முடிவு செய்வாராக!!!

**ஏழாம் அங்கம் முற்றும்.**

**அபிக்ஞான சாகுந்தலமென்ற இந்நாடகமும் முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிக்ஞானசாகுந்தலம் நாடகம் எனும் இந்நூல் சம்ஸ்கிருத இலக்கிய மூலத்தையும் அதற்கு ஏற்ப ஒரே பார்வையில் தமிழ் மொழி பெயர்ப்பு வடிவத்தையும் தருவதற்கு முயற்சிப்பதாக அமைந்துள்ளது. நவாலியூர் சோ. நடராஜன் அவர்களது மொழிப்பெயர்ப்பைத் தழுவியிருந்தாலும் மூல நூலின் பாட பேதங்களும் மொழிபெயர்ப்பும் பல இடங்களில் மாறுபாடுகளையும் மாற்றங்களையும் கொண்டமைந்துள்ளன. அவ்விதம் இல்லாது ஏற்புடைய தன்மையில் மூலநூல் வடிவத்தை தமிழில் பொருளுணரும் தன்மையில் வெளிப்படுத்தமுற்படுகின்றது. அவ்வகையில் இந்நூலுக்கான மூலநூலாக C.R.Devadhar அவர்களது பதிப்பினை அடிப்படையாகக் கொண்டு அம்மூலத்தை அவ்விதமே கொள்வதோடு அதற்கான தமிழ் மொழிபெயர்ப்பும் இடம் பெறுவதாக அமைகின்றது.



ISBN 978-955-8775-15-8

Guru Printers - Thirunelvely. 021 222 8266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org